# கோசலை நாயகன்

## ( கம்ப ராமாயணம் )

ஆசிரியர் :

வித்துவான்

M. நாராயணவேலுப் பிள்ளை

ஓய்வுபெற்ற தமிழாசிரியர்

ஸ்ரீ இந்து

பப்ளிகேஷன்ஸ்

உ, முத்துக் கிருஷ்ணன் தெரு,

த.பை.எண்-1040, பாண்டிபஜார்,

தியாகராய நகர், சென்னை-600017.

தொலை பேசி : 88 19 02


முதற் பதிப்பு : ஜூலை, 1992 (170-25-7-92)
உரிமை : ஆசிரியருக்கு
அச்சிட்ட பிரதிகள் : 1000

விலை : ரூ. 24-00

---

இந்நூல் திருமலை திருப்பதி தேவஸ்தானத் தாரின் பொருளுதவியைக் கொண்டு அச்சிடப் பட்டது.

---



நன்மைகள் விளைய
நன்மைகள் செய்வோம்.
நமக்கென உள்ளதைப்
பிறர்க்கும் கொடுப்போம்.

—நல்வாக்கு.

---

அச்சிட்டோர் :

கவிதா அச்சகம்,
10, பிடாரியார் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.

# முன்னுரை

தமிழ் நூல்களுள் கம்ப ராமாயணம் தலைசிறந்து விளங்குகிறது. கம்பர் காவியத் தலைவனாகிய இராமனைக் 'கோசலை நாடுடை வள்ளல்' எனப் போற்றுகின்றார். ஆகவே நாமும் இந்நூலுக்குக் ''கோசலை நாயகன்'' எனப் பெயரிட்டு மகிழ்வோமாக.

இராமாயணமும், மகாபாரதமும் உயர்ந்த இதிகாசங்கள். உலக மகா காவியங்களுள் இராமாயணத்தைப் போல் உள்ளம் கவரும் காவியம் வேறு ஒன்றும் இல்லை. வால்மீகி முனிவர் எல்லாருடைய உள்ளத்தையும் செவியையும் எக்காலத்தும் கொள்ளை கொள்ளும்படி இராமாயணத்தை வடமொழியில் தீட்டியுள்ளார்.

வால்மீகி இராமாயணம் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கம்பர் அதைத் தமிழில் 10,500 விருத்தப் பாக்களாகப் பாடியுள்ளார். ஆனாலும் அது வழி நூலாகத் தோன்றாமல் முதல் நூலாகிய கலை ஓவியமாகவே திகழ்கிறது.

கம்பராமாயணத்தைத் தழுவி இந்நூல் ''கோசலை நாயகன்'' என்னும் பெயரில் எளிய இனிய தமிழில் சுவைபட எழுதப்பட்டுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரின் பொருளுதவி பெற்று இந்நூல் வெளியிடப்படுகிறது. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந் நூலை அனைவரும் படித்து இராமபிரானுடைய அருளுக்குப் பாத்திரம் ஆவார்களாக! திருவேங்கடவன் திருவடி வாழ்க.

காஞ்சிபுரம்
29-5-91

M. நாராயணவேலுப் பிள்ளை
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | நூல் ஆசிரியர் வரலாறு | 5 |
| 1. | பால காண்டம் | 12 |
| 2. | அயோத்தியா காண்டம் | 36 |
| 3. | ஆரண்ய காண்டம் | 63 |
| 4. | கிஷ்கிந்தா காண்டம் | 87 |
| 5. | சுந்தர காண்டம் | 110 |
| 6. | யுத்த காண்டம் | 134 |


## இராமாயணப் பாத்திரங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | இராம பிரான் | (கதா நாயகன்) | 164 |
| 2. | சீதா பிராட்டி | (கதா நாயகி) | 175 |
| 3. | இலக்குவன் | (துணைப் பாத்திரம்) | 184 |
| 4. | ஆஞ்சநேயர் | (சிறிய திருவடி) | 189 |
| 5. | இராவணன் | (எதிர் முகம்) | 196 |
| 6. | இந்திரஜித்து | (துணைப் பாத்திரம்) | 202 |
| 7. | அகலிகை | (துணைப் பாத்திரம்) | 208 |

# நூல் ஆசிரியர் வரலாறு

## கம்பர்

உலக மகா காவியங்களுள் இராமாயணம் போல் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் காவியம் வேறு ஒன்றுமில்லை. இதற்கு முக்கிய காரணம் ஒருபால் காவிய தலைவனும், மற்றொரு பால் அக்காவியம் இயற்றிய புலவரும் ஆவர். மக்களுக்கு இருக்க வேண்டும் எல்லா நலன்களும் பெருமைகளும் திரண்ட ஓர் உருவமே காவியத் தலைவனாகிய இராமபிரான். அவனிடம் மனிதத் தன்மை மட்டுமின்றித் தெய்வத் தன்மையும் உள்ளது. காவியம் என்றும் அழியாமல் நிலைபெறுவதற்கு இராமன் எங்ஙனம் இன்றியமையாதவனோ அங்ஙனமே வால்மீகியாரும் இன்றியமையாதவர் ஆவார்.

வடமொழிப் புலவர்களுள் மேம்பட்ட வால்மீகியார் எல்லோருடைய உள்ளத்தையும் செவியையும் எக்காலத்தும் கொள்ளை கொள்ளும்படி எளிய இனிய கம்பீரமான நடையில் இராம கதையைப் பொறித்துள்ளார். இக் காவியம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டு, பக்தி சிரத்தையோடு பாராயாணம் செய்யப்பட்டு வருகிறது.

துளசிதாசரும் கம்பரும் வடமொழி இராமாயணத்தை மொழி பெயர்க்குங்கால் பிற நூல்களில் காணாத பல புதுமையான கருத்துக்களைக் காவியத்துள் புகுத்தியிருக் கின்றனர். இவர்களுடைய மொழிபெயர்ப்பு ''மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' உடைய வழி நூலாகத் தோன்றாமல் முதல் நூலாகிய கலை ஓவியமாகவே திகழ்

கிறது. வால்மீகியார் ஒரு முனிவர். இயற்கைக் காட்சிகள் நிறைந்த காடுகளில் திளைத்தவர். எனவே இயற்கைப் பொருள்கள், மலைகள், ஆறுகள், வனப்பு மிகுந்த இடங்கள் ஆகியவற்றைப் பற்றிய அவருடைய வருணனைகள் மிகவும் பாராட்டுதற்குரியன.

கம்பர் நாட்டில் வளர்ந்தவர். எனவே நாடுகளைப் பற்றியும் அவற்றின் ஆட்சியைப் பற்றியும் அவற்றில் வாழ்ந்த மக்களின் இன்ப வாழ்க்கையைப் பற்றியும் வருணிப்பதில் அவர் ஒப்புயர்வற்றவரானார்.

தமிழ் நூல்களுள் கம்ப இராமாயணம் தலை சிறந்து விளங்குவதால் அதன் ஆசிரியருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்ற சிறந்த பட்டப் பெயர் ஏற்படலாயிற்று, திருவள்ளுவர், திருத்தக்க தேவர், இளங்கோவடிகள் போன்ற நூலாசிரியர்கள் இயற்றிய நூல்களால் தமிழ் மொழி வளமும் பெருமையும் அடைந்தது. கம்ப இராமாயணம் பாடப்பட்ட பிறகே அம்மொழி பெருமையின் உச்சியை எட்டியது.

காவியப் பண்பிலும் கவிதைச் சிறப்பிலும் கம்ப இராமாயணம் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெரு நூலாகும். பல்வேறு மொழிகளின் காவியங்களையெல்லாம், பயின்ற காலஞ்சென்ற வ. வே. சு. அய்யர் அவர்கள் அவற்றைச் சீர் தூக்கிப் பார்த்துக் கம்ப இராமாயணம் தலைசிறந்த காவியங்களுள் ஒன்றாக வைத்து எண்ணும் மதிப்பு உடையது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்.

கம்பர் காலத்தில் இராம காதை மக்களிடையே பெரிதும் வழங்கி வந்தது. வால்மீகி இராமாயணம் வட மொழியில் இயன்றது. ஆதலால் அதைத் தென் இந்தியாவில் ஒரு சிலரே அறிந்திருக்க முடியும். தொல்காப்பியம் போன்ற நூல்களின் உரைகளில் வரும் எடுத்துக்காட்டுகளால் கம்பர் காலத்துக்கு முன்பே பல்வேறு ஆசிரியர்கள் இராமாயணத்தைத் தமிழில் இயற்றினார்கள். ஆனால்

அவை முழுவதும் கிடைக்கவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில பாடல்களே கிடைக்கின்றன. கம்பர் காலத்திலேயே அந்த நூல்கள் எல்லாம் மறைந்து போயின.

கம்பர் ஓர் இராம பக்தர். ஆழ்வார்களின் அடித் தொண்டர். இராமாயணத்தைத் தமிழில் இயற்ற வேண்டும் என்று அவருடைய உள்ளம் நெடு நாட்களாக அவரைத் தூண்டி வந்தது. தமிழ் மக்களும் இராமாயணத் தைத் தமிழில் படித்து இன்புற விரும்பினர். எனவே கம்பர் தம்முடைய உள்ளத்தையும் பிறருடைய கருத்தை யும் இன்புறுத்த வேண்டி இராமாயணத்தைத் தமிழில் பாடினார். தம்முடைய நூலுக்கு ஆதி கவியான வால்மீகியார் இயற்றிய இராமாயணமே முதல் நூலென்று உடன்படுகிறார்.

ஆனால் முதல் நூல் கருத்தோடு இன்றியமையாத தம்முடைய தமிழ்நாட்டு நாகரிகமும், பிறவும் கலந்தும், வேண்டாதனவற்றை நீக்கியும், செப்பம் செய்து, கம்பர் காவியம் இயற்றியது அவருடைய பேரறிவை உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு கூட்டியும் குறைத்தும் திருத்தி அமைத்தது அந்நூலை ஒரு சிறந்த முதல் நூலாகவே செய்து விட்டது. முதல் நூலிலிருந்து மாறுபடும் இடங் களிலும், இவர் முதல் நூலில் உள்ள கதையிலிருந்து மாறு படவில்லை புதுக் கருத்துக்களையும் கற்பனைகளையும் மிக்க துணிவுடன் தம் நூலில் ஆண்டுள்ளார்.

கம்பர் இராமர், வால்மீகி இராமரைவிட வேறு பட்டவர். வால்மீகி இராமர் சர்வ லட்சண சம்பன்னரான ஒரு தலைமகனார். கம்ப இராமர் தெய்வீகமும் நிறைந்த ஒருவர். கம்பருக்கு அகலிகையும் மாசிலாக்கற்புடையவள். கும்பகர்ணன் போன்ற அரக்கர்களையும் மக்கள் தன்மை உடையவர்களாகக் கம்பர் நமக்குச் சித்திரித்துக் காட்டு கிறார், அவர்களும் கூட தம்முடைய பரிவிற்கும் பாராட்

டிற்கும் உரிமை உடையவர்கள் ஆகின்றனர். விபீஷணன் அவர் கருத்திற்குத் தன்னலமுடையவனாகத் தோன்ற வில்லை. அறவேட்கை உடையவனாகத் தோன்று கிறான். சுயம்வர மணத்தை அறியாதவர்களான தமிழர் வழக்கத்திற்கு ஏற்ப இராமனையும் சீதையையும் சுயம் வரத்திற்கு முன்பே ஒருவரை யொருவர் காணுமாறு கம்பர் செய்கிறார்.

யுத்த காண்டத்தில் வரும் மாயா ஜனகப் படலமும் இரணியன் வதைப் படலமும் கம்பருடைய நவீனப் படைப்புகள். முதல் நூலில் காணப்படாதவை. அவை கம்பராமாயணத்தில் சுவையுடைய சிறந்த பகுதிகளாக யாவராலும் பாராட்டப் பெறுகின்றன.

கம்பர் உவச்ச மரபினைச் சேர்ந்தவரென்றும் காளிகா தேவியிடமிருந்து ஆசு கவி பாடும் பேரறிவு பெற்றவர் என்றும் வழங்குவர். அவர் வறியவர். அங்ஙனமிருந்தும் அவருடைய பேரறிவு அவரை யாவரும் அறிந்து போற்று மாறு செய்துவிட்டது. திருவெண்ணெய் நல்லூர்ப் பெருஞ்செல்வரான சடையப்ப வள்ளல் அவரை அன்போடும் ஆதரவோடும் காப்பாற்றி வந்தார். ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்யபிரபந்தங்கள் அவரை தம் வசப்படுத்தி விட்டன.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாரிடம் கம்பருக்குத் தனிப் பட்ட பயபக்தியுண்டு. அவர் மீது சடகோபர் அந்தாதி என்ற ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். கம்பர் வடமொழி யையும் நன்கு பயின்றவர். அவர் நூலை அறிவதற்கு விரிவுரைகள் வேண்டா கம்பர் பாடல்களைப் பாடு வதற்குச் சொற்களுக்காகத் தயங்கி நின்றார் இல்லை. ''யானே முன், யானே முன்'' என்று ஒவ்வொரு சொல்லும் ஏற்ற இடத்தில் வந்து பொருந்தி அவருடைய கருத்தை மிக எளிதில் நிறைவேற்றியது.

கம்பர் சொற்களைக் கொண்டு விநோதம் செய்யும் ஓர் இந்திர ஜாலக்காரர், கம்ப இராமாயணம் கி.பி. 887

-இல் திருவரங்கம் கோயிலில் அரங்கேற்றம் செய்யப் பட்டது. (ஆராய்ச்சியாளர்களுள் ஒரு சிலர் கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று கூறுவர்.) கீர்த்திமிக்க வைணவ ஆசாரியர் நாத முனிகள் அது போழ்து தலைமை பூண்டார். கம்பர் தாம் பாடிய பாடல்களைப் படித்து விரிவுரை நிகழ்த்தியபோது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக் கான தமிழ்ப் புலவர்கள் வந்திருந்து சித்திரப் பாவை போல் அவர் உரையைக் கவனித்துக் கேட்கலாயினர்.

அது போழ்து நிகழ்ந்ததாக ஒரு வரலாறு வழங்குவ துண்டு. இரணியன் வதைப் படலத்திலிருந்து,

''திசைதிறந்(து) அண்டங் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம்''

என்ற அடியைக் கம்பர் வாசித்த போது, கோயில் கோபுரத்தின் மேலிருந்த நரசிம்ம சுவாமி உருவம் அம் மண்டபம் முழுவதும் எதிரொலி உண்டாகுமாறு சிரித்த தோடு நில்லாமல் கம்பருடைய பேரறிவு உடைமையைப் போற்றுவதாகத் தன் தலையையும் ஆட்டியது என்பர்.

இரணிய வதைப் படலம் வால்மீகி இராமாயணத்தில் இல்லை. கதைக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. கதையின் தொடர்ச்சிக்கு யாதோர் ஊறுபாடும் நேராத வாறு அதனை அறவே நீக்கிவிடலாம். கம்பர் விபீஷணனை கொண்டு இக்கதையை இராவணனுக்குக் கூறுமாறு செய்கிறார். கம்ப இராமாயணமாகிய ஒரு நவரத்ன மாலையில் முடி மணியாக விளங்குவது இப்படலம். கம்ப இராமாயணத்தில் துறை போயவரெல்லாம் இப் படலத்தில் கம்பர் தம் அறிவுத் திறன் முழுவதையும் கையாண்டிருக்கிறார் என்று கூறுகின்றனர்.

கம்பர் நரசிம்ம சுவாமி உபாசகர். கம்பத்திலிருந்து தோன்றியதால் நரசிம்ம சுவாமிக்குக் கம்பர் என்ற பெயர்

பொருந்துவதாம். உபாசனையின் சிறப்பால் நரசிம்ம சுவாமியின் பெயரையிட்டுக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் என்று பெயர் வழங்கப் பெற்றார். அந்த உபாசனையே யுத்த காண்டத்தில் இரணியன் வதைப்படலத்தை நிலை பெறுத்தியது என்பது இப்போது நன்கு விளங்கும்.

கம்பர் தம்முடைய மனக்கண்முன் குறை சிறிது மில்லாத திருந்திய நாட்டையும், அரசையும், அரசாங் கத்தையும் அமைத்து அவ்வித நாடும் அரசும் அரசாங்கமும் நடைமுறையில் இருக்க முடியும் என்ற எண்ணத்தில் அழுந்தி நின்றவர். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சான்றவர். தீர்க்க தரசியாய் வாழ்ந்து வந்தவர்.

அவர் கோசல நாட்டைப் பற்றி விவரித்துக் கூறுங் கால் தம் மனக் கண்ணிற்கு முன்பு காவிரியையும் அது பாயும் சோழ நாட்டையும் காண்கின்றார். மக்களுடைய அறவாழ்க்கை அவர்களுடைய சுவையுணர்ச்சியை அடிப் படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. கோசல நாட்டு அழகிய நங்கையர்கள் எல்லாம் எல்லாக் கலை களிலும் துறை போயவர்களாக உணர்த்தப் பெறு கின்றனர். அயோத்தி மாநகரில் இரத்தலும் ஒறுத்தலும் இல்லை. ஆண்டுக் குற்றம் ஒன்றுமே நிகழ்வதில்லை யாகையால் தண்டித்தலுக்கும் இடம் ஏற்படுவதில்லை. இரப்போர் இன்மையால் ஈவோர் இல்லை.

"வண்மை யில்லையோர் வறுமை இன்மையால்" என்று கம்பர் கூறுகின்றார். ஆண்டு எல்லோரும் எல்லாப் பொருளும் இயற்கையாகவே பெற்றுள்ளனர். எனவே ஒன்றுமில்லாதவர் ஒருவருமில்லை. இல்லாதவர் என்ற சொல்லே இல்லையாகையால் உடையவர்கள் என்ற சொல் நிகழ்வதற்கும் இடமில்லை. அவருடைய சம உரிமைப் பண்பு பகைமையாலோ பலாத்காரத்தாலோ நிலைபெறாமல் தூய சகோதரப் பான்மை ஆகிய அற உணர்ச்சியில் நிலைபெற்றது. அயோத்தியில் யாவரும் கல்வியறிவு உடையவர்களாகவே இருந்தபடியால் ஒரு

வராவது அறிவில்லாதவரென்று சொல்வதற்கில்லை. கம்பர் தம்முடைய சமூகத்தைக் கேவலம் பொருளில் மாத்திரமின்றி, கல்வி, வாய்மை ஆகிய இவற்றிலும் சம உரிமைப் பண்பைக் கொண்டு எழுப்புகிறார்.

இன்றைய உலகில் அரசுகளும் அரசாங்கங்களும் ஏதோ ஒருவகையான பலாத்காரத்தைத் துணையாகக் கொண்டு தம்முடைய அதிகாரத்தால் நாடுகளை ஆளுகின்றன. ஆனால் கம்பர் கருத்துப்படி அரசுகள் ஆளுவதற்காக ஏற்பட்டனவல்ல. குடிகளுக்குத் தொண்டு புரியவே ஏற்பட்டன. அவை யாவருக்கும் தொண்டு புரிவன. ஆதலால் அவற்றினிடத்தில் குடிகளுக்குப் பய பக்தியும் பணிவும் உண்டாகின்றன.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'', ''அன்பே கடவுள்'' என்பன அரசுகள் மேற்கொள்ளும் பொன் மொழிகள். ஒரு மைந்தன் தன்னுடைய பெற்றோர்க்குப் பணிபுரிதல் போலவும், ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பது போலவும், அறிவு கல்விக்குத் துணை நிற்பது போலவும், ஓர் அரசன் குடிகளுக்குப் பணிபுரிந்தும் காத்தும் துணைநின்றும் நாட்டை ஆளவேண்டும். குடிகளுடைய உரிமைக்கும், அரசருடைய உரிமைக்கும் முரண்பாடு நிகழ்தலாகாது. அரசன் ஒவ்வோர் உயிரையும் தன்னுயிர் போல் பாவித்தல் வேண்டும். அரசன் உடலாகக் குடிமக்களெல்லாம் உயிராக அவனுடலில் அமைதியுடன் வாழ்தல் வேண்டும். இவையெல்லாம் இலக்கணங்களால் நிறைவுடைய ஓர் அரசனின் இயல்புகள் என்பது கம்பருடைய கருத்து என்று சுருங்கக் கூறலாம்.

கம்பர் இராம கதையைத் துணையாகக் கொண்டு தம்முடைய பேரறிவின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளார். எனவே அவர் நூலைக் கலைக்கண் கொண்டு நோக்கி, கலையழகில் ஈடுபட்டு, அதனைப் பாராட்டுவோமாக.

# 1. பால காண்டம்

## நூல் எழுந்த வரலாறு

ஒரு நாள் வால்மீகி முனிவரின் ஆசிரமத்திற்கு நாரத முனிவர் வந்தார். வால்மீகி அவரை உபசரித்து வணங்கி, "சுவாமி! இவ்வுலகில் வீரர்களுள் எல்லா நற்குணங்களும், அறிவும் பெற்ற உத்தம புருஷன் யார்?" என்று கேட்டார்.

வால்மீகியின் கருத்தை அறிந்த நாரதர், "சூரிய வம்சத்தில் பிறந்த இராமன் (கோசலை நாயகன்) அயோத்தியில் அரசு புரிந்து வருகிறான். நீர் கேட்கும் உத்தம வீரன் அவன்தான்!" என்றார். இப்படிச் சொல்லி விட்டு இராம சரிதத்தைச் சுருக்கமாக விளக்கிக் கூறினார். இதைக் கேட்டு வால்மீகி மிகவும் மகிழ்ந்தார். நாரதர் விடைபெற்றுச் சென்ற பிறகும் அதைப் பற்றியே தியானித்துக் கொண்டிருந்தார்.

நான்முகக் கடவுள் வால்மீகி முன் தோன்றி, "முனிபுங்கவரே! கவலை வேண்டாம். இராம காதையைப் பாடி உலகத்துககு உதவும் திறமையை உமக்கு வரமாகத் தந்தேன்" என்று சொல்லி மறைந்தார். இந்தப் புண்ணிய கதையை வால்மீகி முனிவர் ஒப்பற்ற மதுரமான முறையில் பாடி உலகத்துக்குத் தந்தார்.

வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் மொழி பெயர்த்து 10,500 விருத்தப் பாக்களாகப் பாடியுள்ளார். வால்மீகி முனிவர் பாடிய நூல் அகவற்பா முறையில் (Blank—verse) அமைந்தது, கம்ப

ராமாயணம் எதுகையும் மோனையும் சந்தமும் கலந்து செவிக்கு இன்பமாயும் (lyric) நடனச்சுவையும் கலந்து உள்ளது.

### அவதார காரணம்

தேவர்கள் பிரமனிடம் சென்று, ''பகவானே! உம்முடைய வரத்தைப் பெற்றுக்கொண்டு இராவணன் என்ற அரக்கன் எங்களுக்கு மிகுந்த துன்பம் தந்து வருகிறான். அவனை நாங்கள் அடக்கவோ கொல்லவோ முடியவில்லை. அவனை அடக்க ஒரு வழி சொல்லுங்கள்'' என்று வேண்டி நின்றனர்.

இதைக் கேட்ட பிரமன் அவர்களை அழைத்துக் கொண்டு திருமாலிடம் சென்றார். தேவர்கள் அனைவரும் திருமாலை வணங்கி, ''லோகநாதனே! இராவணன் உலகத்தை இம்சை செய்கிறான். அதைப் பொறுக்க முடியவில்லை. ஆகவே தாங்கள் அருள் கூர்ந்து பூமியில் அவதாரம் செய்து அவனை அழிக்க வேண்டும்!'' என்று சரணடைந்தனர்.

நாராயணனும் அப்படியே ஒப்புக்கொண்டு, ''பூவுலகில் புத்திரபாக்கியத்துக்காக யாகம் செய்யும் தசரதனுக்கு நான்கு குமாரர்களாக நான் அவதரித்து, இராவணனைக் கொன்று உங்களுக்கு விடுதலை அளிக்கிறேன்'' என்றார். அவ்வாறே தசரதனுடைய மூன்று மனைவியரின் வயிற்றில் கர்ப்பவாசம் செய்யத் திருவுளம் கொண்டார்.

### தசரதன்

கோசல நாடு கங்கைக்கு வடக்கே சரயுநதி பாயும் வளமான பிரதேசம். அந்த நாட்டின் தலைநகரம் அயோத்தி. மனு என்னும் புகழ்பெற்ற சூரிய குல மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம். தசரதச் சக்கரவர்த்தி இந்த அயோத்தி நகரத்திலிருந்து கொண்டு ஆட்சி செய்து வந்தான்.

தசரதன் தேவர்களுக்காக யுத்தம் செய்தவன். மூன்று உலகங்களிலும் புகழ்பெற்ற அரசன். சரயுநதி, கோசல நாடு, அயோத்தி நகர், தசரதன் ஆட்சிமுறை இவை பற்றிக் கம்பர் மிகவும் விரிவாகவும் சுவைபடவும் பல பாடல்களைப் பாடிச் செல்கின்றார். அவைகளுள் சில வற்றை இங்கே காண்போம்.

## சரயுநதி

மேகம் கடலிடைத் தோன்றி, பின்னர் மழையாக மாறி, கடைசியில் கடலில் கலக்கிறது. மறுபடி மேகமாக மாறுகிறது. இது மேகத்தின் செயல். மக்கள் பிறந்து பிறந்து இறப்பவர்கள். அப்படி இறந்தவர்கள் மறுபடியும் பிறக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. அதாவது உடலிடைப் புகுந்த உயிர், அதில் தங்கிக் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அதைவிட்டு நீங்குகிறது. மறுபடியும் வேறு உடலில் சென்று புகுகிறது. இவ்வுண்மையைக் கம்பர் தம் கவியில் திறம்படக் கூறுகின்றார்.

மலையிலிருந்து ஆறுதோன்றி ஓடிவருகிறது. வருகின்ற போது அது செய்யும் செயல்கள் பல. சோலைகள் சண்பகக் காடுகள், பொய்கைகள், புது மணல் தடங்கள், குருக்கத்திக் கொடியை வேலியாக உடைய பூகவனம், வயல்கள் ஆகிய இடங்களில் ஆறு சென்று பாய்கிறது. ஆறு ஒரே இடத்தில் நிலையாகத் தங்காமல் ஆங்காங்குப் பாய்ந்து கொண்டே செல்கிறது. ஆற்றைக் கொண்டு உணர்த்தும் அறிவுரை மிக நுட்பமானது. உயிர் உடல் தோறும் தங்கிச் செல்லுமாறு போல, ஆறும் பல இடங்களில் பாய்ந்து செல்கின்றது என்ற அறிவுரையை இப்பாடலில் காணலாம்.

## கோசல நாடு

கோசல நாடு நீர்வளம் நிலவளம் மிக்கது. நெல், கரும்பு, வாழை, கமுகு போன்ற பயிர்கள் செழித்து வளர்

கின்றன. இந்த இயற்கைச் சூழலை ஒரு நடனக் காட்சியாக நமக்குக் காட்டுகிறார் கம்பர்.

நல்ல வயல்வெளி; வயல்களில் நீர் நிறைந்திருக்கிறது. நீரில் பூக்கள் மலர்ந்துள்ளன. பூக்களில் உள்ள தேனை உண்டு வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. வானத்தில் மேகங்கள் ஒன்று சேர்ந்து இடிக்கின்றன. இக்காட்சியைக் கண்ட மயில்கள் ஆடுகின்றன. தாமரைப் பூக்கள் செந்நிறத்தோடும் வெண்ணிறத் தோடும் மலர்கின்றன. நீர் அதிகமாக உள்ளதால் நீரில் அலைகள் வீசுகின்றன. இது மருத நிலத்தில் காணும் காட்சி. இதைப் பார்த்த கம்பர் நம்மை அவ்விடத்திற்கு அழைத்துச் சென்று, "இக்காட்சியைப் பாருங்கள். இதைவிடச் சிறந்த நாடகத்தை உங்களால் பார்க்க முடியுமா?" என்கிறார். இக் காட்சியை நாடகமாக்கிய அவர் திறமை வியக்கத் தக்கதே.

நாடகத்தில் கண்ட காட்சியையும் இக்காட்சியையும் ஒப்பு நோக்கின் இதுபுலனாகும். நாடகத்தில் பெண்களைக் கண்டோம். இங்கே மயிலைக் காண்கிறோம். பெண்களின் நடனப்பகுதி இங்கு மயிலின் ஆட்டத்திற்கு அமைந்துள்ளது. விளக்கு எரிந்ததைப் பார்த்தோம். செந்தாமரை வர்ண விளக்குப் போலவும், வெண்தாமரை சாதாரண விளக்குப் போலவும் காட்சியளிக்கின்றன. மேகங்கள் இடித்தல் மத்தளம் கொட்டுவது போல உள்ளது. மக்கள் பார்த்துக் கொண்டிருப்பது போலக் கண்ணுக்கு உவமையாகும் குவளைப்பூ விழித்து நோக்குகிறது. திரை வேண்டுமல்லவா? அத்திரையை நீர்த்திரைகள் ஒத்திருக்கின்றன. மதுரகீதம் வண்டின் ரீங்காரத்தில் உள்ளது. இதைச் சிறப்பிப்பது போல் மருதராணி வீற்றிருக்கின்றாள் என்று கம்பர் உணர்த்தும் முறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

## அயோத்தி நகர்

கம்பன் காவியத்தில் மூன்று பெரு நகரங்கள் காட்டப் படுகின்றன. இறைவனே மானுடனாகத் தோன்றிய காலத்து அவனுக்கே பிறப்பிடமாய் அமைந்த புண்ணிய பூமியாம் அயோத்தி. மிதிலையர் கோன் மாமகளாய் வந்தடைந்த மலர்மகளை மடியிலேந்தி விளையாடிய மிதிலை. இன்னல்செய் இராவணன் இகல்புரிந்து ஈட்டிய இறுமாப்பின் அடையாளமாம் இலங்காபுரி.

இம் முப்பெருநகரங்களும் முழு முதற் கடவுள் இராமனால் மிதிக்கப்படுகின்றன. அறவாழ்வின் அடிப் படையில் அயோத்தி நகரின் பெருமை முழுவதும் பொறிக் கப்பட்டுள்ளது. காவிய மரபை ஒட்டியும், கவிநயம் தோன்றவும் வருணனைகள் பல உள்ளன. இதுபோன்ற நகரொன்றைக் காணவேண்டுமென்ற ஆவலில்தான் இமையோர் இமைக்காமல் திரிகின்றனர் என்று கூறுகின் றார்.

மதிலின் உயர்ச்சியைக் கூற வந்தவர், அது யாவராலும் உணர முடியாத வேதத்தைப் போன்றதென்றும், விண்ணு லகத்தை எட்டியிருப்பதால் தேவரை ஒக்குமெனவும், ஐம்பொறிகளையும் அடக்கிய செயலால் முனிவரைப் போன்றதென்றும், காவலில் துர்க்கையையும், சூலத்தால் காளியையும் ஒக்குமென்றும், இவை எல்லாவற்றையும் ஒத்திருக்கும் பெருமையால் ஈசன் போன்றதென்றும் கூறுகின்றார்.

தனி மனைகள் அல்லாத பொதுக்கட்டிடங்கள் நான் கைக் கூறுகின்றார். அவையாவன : 1. தசரத சக்கர வர்த்திக்குச் சிற்றரசர் கப்பம் கொண்டுவந்து செலுத்தும் மண்டபம். 2. அன்னம் போல் நடை பயிலும் மாதர்கள் நடனமாடும் மண்டபம் 3. அருமறை வேதியர்கள் வேதம் ஓதும் மண்டபம் 4. அறிவுநலம் சான்ற புலவர் பெரு மக்கள் சொற்பெருக்காற்றும் பட்டி மண்டபங்கள்.

எனவே வருவாய், கலை, வேதம், கல்வி இவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார் கம்பர்.

## அரசியல்

தசரதனைப் பேரரசனாகவும் கணவனாகவும் தந்தையாகவும் கம்பர் நமக்குக் காட்டுகிறார். அரச குடும்பத்தில் பிறந்த காரணத்தால் மட்டும் அரசனாகி விடுதல் தவறு. அரசனாவதற்கு உரிய இயல்புகள் அவனிடம் பொருந்தியிருத்தல் வேண்டும். அவற்றுள் தலையாயது கல்வியாகும். தசரதன் நன்கு கற்றறிந்தவன்.

அன்பு காட்டுவதில் தாயைப் போலவும், நலம் பயப்பதில் தவத்தைப் போலவும், முன்னின்று நற்கதி அமைத்துத் தரும் தன்மையில் சிறந்த மகனைப் போலவும் நுட்பமான அறிவைப் போலவும், எவர்க்கும் அவன் பயன் பட்டான் என்று கம்பர் தசரதனின் உணர்வைக் காட்டுகிறார்.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்பது பழைய வழக்கு. அதாவது உலகம் மன்னனை உயிராகக் கருதியது. ஆனால் கம்பர் தசரதனை உடம்பாகவும், நாட்டு மக்களை உயிராகவும் கூறுகின்றார். அவன் சிங்கம் போன்ற வலிமை உடையவன். உலகத்து உயிர்களைத் தன்னுயிர் போலப் பாதுகாத்து வருவதால் உயிர்கள் எல்லாம் வாழ்கின்ற உடம்பாகத் தசரதன் ஆயினான் என்பது கம்பர் கருத்து.

நாட்டில் திடீர் என்று எழும் புரட்சியோ, பகையோ, எங்கும் இல்லாமையால் போர்த்தினவு பெற்ற தோளினனாக இருந்தான். அவனை எதிர்ப்பவர் எவரும் இல்லை; எனினும் வையகம் முழுவதையும் வறிஞன் ஓம்பும் வயலைப் போலக் காத்து இனிது அரசு செய்ததாகக் கூறுகின்றார்.

பகை இல்லாத போதும் அவன் நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்து காப்பாற்றினான் என்று கூறப் படுகின்றது. நிலத்தைக் காப்பது என்பது எளிய செயல் அன்று அவ்வப்போது சென்று கவனித்தால் தான் நிலம் தக்க பலனைக் கொடுக்கும். இல்லாவிட்டால் நிலம் அவனோடு ஊடிவிடும். வறியவனுக்கு இருப்பது ஒரே நிலம். அதனை அவன் வைத்துக் காப்பது போல நாட்டு மக்களின் நலன்களைத் தசரதன் பேணினன் என்பதாம்.

## புத்திர பேறு

தசரதனுக்குக் கௌசலை, சுமித்திரை, கைகேயி என மூன்று மனைவியர் இருந்தனர். ஆண்டுகள் பல கழிந்தன. புத்திர பாக்கியம் இல்லாத குறை மன்னனை வாட்டியது. அசுவமேத யாகமும் புத்திர காமேஷ்டி யாகமும் செய்வித் தால் மக்கட் பேறு உண்டாகும் என்று குல குரு கூறினார். ரிஷ்ய சிருங்கரைத் தருவித்து அவர் தலைமையில் வேள் வியை நடத்தத் தீர்மானித்தார்கள். ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

வேள்வி யென்றால் சாமான்யமல்ல; ஆயிரக்கணக் கானவர்கள் கூடுவார்கள். யாக காரியங்களைச் செய்யும் வைதிகர்கள் கூடுவர். வருபவர் அனைவர்க்கும் உண வளித்து உபசரித்துத்தான தருமங்களைச் செய்யவேண்டும். ஆட்டம், சங்கீதம், வேடிக்கை முதலிய கேளிக்கைகள் நடைபெறும்.

எல்லாக் காரியங்களும் சரியாகவும் மும்முரமாகவும் நடத்தப்பட்டன. யாகக் குதிரையும் அதனுடன் ஒரு வீரப்படையும் பல நாடுகள் சுற்றிவரும்படி அனுப்பப் பட்டன. ஒரு வருஷம் கழித்து, எந்த இடையூறும் இல்லாமல் யாகக் குதிரையும் குதிரையை அழைத்துச் சென்ற வீரர்களும் வெற்றிக் கொண்டாட்டத்துடன் நகருக்குத் திரும்பி வந்தார்கள்.

அதன்மேல் யாகத்தை சாஸ்திரப்படி செய்ய ஆரம்பித்தார்கள். ரிஷ்ய சிருங்கர் வேள்வித் தீயில் ஆகுதியிட்டார். ஓம குண்டத்திலிருந்து ஒரு பெரிய உருவம் மிகப் பிரகாசத்துடன் தோன்றியது. அது தன் இரு கைகளாலும் ஒரு திவ்விய தங்கப் பாத்திரத்தை ஏந்தி நின்றது. உரத்த குரலில், ''தசரத மகாராஜனே! உன்னுடைய பிரார்த்தனையை ஒப்புக் கொண்டு தேவர்கள் இந்தப்பாயசத்தை உன் மனைவியர்களுக்கென்று அனுப்பியிருக்கிறார்கள். உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும், இதைப் பெற்றுக்கொண்டு உன் பத்தினிகளுக்குத் தருவாயாக; மங்களம்'' என்றது.

தசரதன் மகிழ்ந்து பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டான். தீயில் தோன்றிய புருஷனும் மறைந்தான். தசரதன் அந்தப்புரம் சென்று தன் மனைவியரைப் பார்த்து, ''தேவர்களின் பிரசாதம் இதோ உள்ளது. இதை நீங்கள் அருந்திப் புத்திரப் பேற்றை அடையுங்கள்'' என்றான்.

பாயசத்தில் பாதியைக் கௌசலையும், மீதியை மற்ற இருவரும் அருந்தினர். மூன்று மனைவியரும் கர்ப்பம் தரித்தார்கள். காலக்கிரமத்தில் கௌசலை இராமனைப் பெற்றாள். அடுத்தபடி கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திரை இலக்குவனையும் சத்ருக்னனையும் பெற்றாள். இவர்கள் இரட்டையர்கள். நால்வரும் அரச குமாரர்களுக்குரிய எல்லாப் பயிற்சிகளும் பெற்றனர். குழந்தைப் பருவத்திலிருந்தே இராமனும் இலக்குவனும் இணைந்தே வளர்ந்தனர். அதேபோல் பரதனும் சத்ருக்னனும் சேர்ந்து பழகினர். மக்கள் நால்வரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தனர். மன்னன் பெருமகிழ்ச்சி கொண்டான்.

### விசுவாமித்திரர்

விசுவாமித்திர முனிவர் ஓர் அரசனாக இருந்து, பிறகு தவஞ்செய்து முனிவரானார். தவத்திலும் வெகு பாடு

பட்டு வெற்றி பெற்றவர். சாபத்தால் வருந்திய திரிசங்கு வின் பேரில் கருணை கொண்டு முன்னொரு காலத்தில் புதியதொரு பிரபஞ்சத்தை உண்டாக்கியவர். வசிஷ்டர் வாயினால் பிரம்ம ரிஷி எனப்பெயர் பெற்றவர். அரிச்சந்திரனைப் பொய்யன் என நிரூபிக்க வேண்டிப் பல முயற்சிகளைச் செய்தவர்.

## தசரதன் கொலுமண்டபம்

ஒரு நாள் தசரதன் தன்னுடைய மந்திரிகளுடன் உட்கார்ந்து குமாரர்களுக்கு விவாகம் செய்வதைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தான். காவலர்கள் ஓடி வந்து, விசுவாமித்திர முனிவர் தங்களைக் காண வருகிறார்'' என்றார்கள். உடனே தசரதன் பயபக்தியுடன் ஆசனத்தை விட்டெழுந்து, எதிர் கொண்டு சென்று, முனிவரை முறைப்படி வரவேற்றான். ஆசனத்தில் அமரச் செய்தான்.

''இன்றே நான் தன்யன் ஆனேன். தாங்கள் இங்கு எழுந்தருளியது என் முன்னோர் செய்த தவப்பயனே! என்னால் என்ன காரியம் ஆகவேண்டும்? சொல்லுங்கள்; செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று பலவாறு புகழ்ந்தான்.

தசரதன் சொல்லைக் கேட்டு முனிவர் அகங்குளிர்ந் தார். ''அரசனே! நீ இட்சுவாகு குலத்தில் பிறந்தவன். வசிஷ்ட முனிவரைக் குருவாகப் பெற்றுள்ளாய். நான் வந்த காரியத்தைக் கூறுகிறேன்; கேள். நான் ஒரு வேள்வி நடத்துகிறேன். ஆரம்பித்து முடியும் தறுவாயில் மாரீசன், சுபாகு என்ற இரண்டு அரக்கர்களும் அதைக் கெடுத்து வருகிறார்கள்.

''சாபம் கொடுத்து நானும் மற்ற முனிவர்களும் அவர் களை அழிக்க முடியும். நியமமும் தவமும் கெடும். மாமிசமும ரத்தமும் யாக வேதிகையில் எறிந்து வேள்வி

நடைபெறாமல் செய்கிறார்கள். உன்னுடைய மூத்த குமாரனான இராமனை என்னுடன் அனுப்பி வைப்பாய் ஆனால் எங்களுடைய கஷ்டம் நீங்கும். அவனுடைய வீரமும் பலமும் வளர்வதற்கு ஏதுவாகும். இது நிச்சயம். இராஜ குமாரனைச் சில நாட்களுக்கு என்னிடம் ஒப்பு விப்பாயாக'' என்றார், விசுவாமித்திரர்.

முனிவர் சபைக்கு வந்தபோது மகிழ்ந்த அரசன், இதைக் கேட்டதும் மிகுந்த பயமும் கவலையும் உண்டாகி நடுங்கினான். முனிவருடைய பெரும் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே! இதற்கு என் செய்வது? என்று ஒன்றும் தோன்றாமல் திகைத்தான். பின்னர் சிறிது மனந் தேறிப் பேசலானான்.

''தவமிருந்து பெற்ற என் அருமை இராமனை விட்டுப் பிரிந்தால் என் உயிர் போய்விடும். வேண்டுமானால் நான் சேனையுடன் வருவேன்'' என்று கெஞ்சினான்.

''கேட்டதைத் தருகிறேன் என்று முதலில் வாக்களித்தாய். இப்போது தயங்குகிறாய். இது இட்சுவாகு குலத்துக்கு இழுக்காகும். இது உன் முடிவாயின் நான் போய் வருகிறேன்'' என்று கோபமாகக் கூறினார் விசுவாமித்திரர்.

முனிவருடைய கோபத்தைக் கண்டு அனைவரும் நடுங்கினர். வசிஷ்டர் அரசனை நோக்கிச் சமாதானமாகக் கூறலானார் : ''தருமமே உருவாய் அமைந்த நீ சொன்ன சொல்லைத் தவறக்கூடாது. இராமனை முனிவருடன் அனுப்புவாயாக. இலக்குவனும் உடன் செல்லட்டும். யுத்தப் பயிற்சி பெற்றுத் திரும்புவார்கள். விசுவாமித்திரருடைய வல்லமை உனக்குத் தெரியாது. தவமே ஓர் உருவமானவர். வீரர்களுள் வீரர். இவருக்குத் தெரியாத அஸ்திரமில்லை. உன் குமாரனுடைய நன்மைக்காகவே அவர் வந்துள்ளார். தயங்காமல் இராமனை அவருடன் அனுப்புவாயாக!'' என்றார் வசிஷ்டர்.

வசிஷ்டர் இவ்வாறு கூறியதைக் கேட்டுத் தசரதன் தெளிவு பெற்றான். இராமனையும் இலக்குவனையும் முனிவருடன் அனுப்புவதென முடிவு செய்தான். இருவரும் முனிவர் முன் வந்து நின்றனர். தாய் தந்தையரும் வசிஷ்டரும் வழியனுப்பி வைத்தார்கள். அச்சமயம் சுகமாகக் காற்று வீசிற்று. பூமாரி பொழிந்தது. அசரீரி ஒலித்தது. கையில் வில் பிடித்து, வாலிபர் இருவரும் முனிவரைப் பின் தொடர்ந்தனர்.

வெற்றிவாள் இடுப்பில் தொங்க, குன்றைப் போன்ற தோள்களின்மேல் ஒரு பக்கம் வில்லும் ஒரு பக்கம் தூணியும் மத்தியில் கம்பீரமாக நிற்கும் தலையுமாக முத்தலை நாகங்கள் படமெடுத்துச் செல்வதுபோல் ராஜ குமாரர்கள் காட்சி தந்தார்கள் என்று வால்மீகி முனிவர் பாடி மகிழ்கிறார்.

## தாடகை

அன்றிரவு சரயு நதிக்கரையில் முனிவரும் ராஜ குமாரர்களும் தரையில் படுத்து உறங்கினர். படுப்பதற்கு முன் முனிவர் அவர்களுக்குப் பலம், அதிபலம் என்ற இரண்டு மந்திரங்களை உபதேசித்தார்.

மறுநாட் காலை எழுந்து புறப்பட்டுப்போய் அங்க தேசத்தில் காமாசிரமத்தை அடைந்தார்கள். இராம இலக்குவர்களை முனிவர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்றிரவு அந்த முனிவர்களுடைய அதிதி களாகத் தங்கியிருந்தனர். மறுநாட் காலையில் நித்திய கர்மங்களை முடித்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றனர். ஓடத்தில் ஏறிக் கங்கையைக் கடந்தனர். அந்த இடம் சரயு கங்கையோடு கலக்கும் புண்ணிய ஸ்தலம் அங்கு வழிபாடுகளைச் செய்தனர்.

அதன் பிறகு அவர்கள் தாடகா வனம் வந்து சேர்ந் தனர். ''உனக்கு மங்களம் உண்டாவதாக! தாடகைக்குப்

பயந்து இங்கே யாரும் வருவதில்லை. அவள் மிகுந்த பலசாலி. அவளுடைய இம்சையைப் போக்கவே உன்னை அழைத்து வந்தேன். அந்த அரக்கி உன்னால் கொல்லப் படுவாள்'' என்றார் முனிவர்.

''அகஸ்தியர் சாபத்திற்கு ஆளான தாடகையும் அவளுடைய மகன் மாரீசனும் இங்குள்ள மக்களை இம்சித்து வருகிறார்கள். பெண்ணைக் கொல்வது க்ஷத்திரிய தருமத்திற்கு விரோதம் என்று தயங்க வேண்டாம். இவள் மிகக் குரூரமான அரக்கி. மிருகங் களைக் கொல்வதுபோல் இந்த அரக்கியைக் கொல்வது நியாயமேயாகும். ஆகையால் நீ தயங்க வேண்டிய தில்லை'' என்றார் விசுவாமித்திரர்.

''குருவே! தங்கள் கட்டளைப்படியே நடப்பேன்'' என்று கூறி, இராமன் கோதண்டத்தை வளைத்து, நாணேற்றித் தோள்வரை இழுத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி வனம் முழுவதும் கேட்டது. எதிரொலியும் கிளம்பிற்று. வனத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் நடுங்கின. இந்தச் சப்தத்தைக் கேட்டுத் தாடகை ஓடி வந்தாள். இங்குமங்கும் சஞ்சரித்துக் கல்மாரி பொழிந் தாள். இராம இலக்குவர்கள் தங்கள் அம்புகளைக் கொண்டு கல்மாரியைத் தடுத்து வந்தனர்.

யுத்தம் நிற்கவில்லை. உடனே முனிவர், ''மாலை நேரம் வந்துவிட்டது. இருட்டி விட்டால் அரக்கியின் பலம் அதிகமாகிவிடும். தாமதம் செய்யலாகாது'' என்று எச்சரிக்கை செய்தார். உடனே இராமன் ஒரு கொல்லும் அம்பை எய்தான். அது அரக்கியின் மார்பைத் துளைத்தது. அவள் உயிரற்றுப் பூமியில் சாய்ந்தாள்.

தேவர்கள் ஆரவாரம் செய்தனர். முனிவர் அக மகிழ்ந்து இராமனை ஆசீர்வதித்தார். அன்றிரவு மூவரும் அங்குத் தங்கினர். மறுநாட் காலையில் அனுஷ்டானங் களை முடித்துக் கொண்டு விசுவாமித்திரருடைய ஆசிரமத் திற்குச் சென்றார்கள்.

## வேள்வி காத்தது

விசுவாமித்திரர், "அப்பனே! உனக்கு மங்களம் உண்டாகுக! நீ செய்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். இப்போது உனக்கு அஸ்திர உபதேசம் செய்கிறேன். பெற்றுக் கொள்" என்று சொல்லி முறைப்படி இராமபிரானுக்குத் தம் தவத்தினால் பெற்ற சகல திவ்ய அஸ்திரங்களையும் உபதேசித்தார். இராமன் அவற்றையெல்லாம் தம்பி இலக்குவனுக்கு உபதேசித்தான்.

அரச குமாரர்களுடன் விசுவாமித்திரர் வந்து விட்டதைக் கண்ட முனிவர்கள் மிக மகிழ்ந்தனர். வணங்கி வரவேற்றனர். இராஜ குமாரர்களுக்கும் முறைப்படி அதிதி பூஜை செய்தனர். விசுவாமித்திரர் ஆறு நாட்கள் மௌன விரதமிருந்தார். அந்த ஆறு நாட்களும் இராம இலக்குவர்கள் வில்லும் கையுமாக இரவும் பகலும் யாகத்தைக் காத்து வந்தார்கள். "கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்" என்று கம்பர் பாடுகிறார்.

ஆறாம் நாட் காலையில் அக்கினி குண்டத்திலிருந்து நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. ஆகாயத்தில் ஒரு பெரும் கர்ஜனை கேட்டது. இராமன் பார்த்தான். மாரீசனும் சுபாகுவும் அவர்கள் பரிவாரமும், மாமிசமும் ரத்தமும் கொண்டு யாகத்தைக் கெடுக்க ஆயத்தமாக நின்றனர். உடனே இராமன் மானவ அஸ்திரத்தை எடுத்து மாரீசனைத் தாக்கினான். அது அவனைக் கடற் கரைவரை துரத்திச் சென்றது.

பிறகு ஆக்னேயாஸ்திரம் விட்டான். அது சுபாகுவைத் தாக்கியது. அவன் மாண்டு விழுந்தான். பிறகு வேறு அம்புகளைச் செலுத்தி அரக்கர் கூட்டத்தை இருவரும் அழித்தனர். இவ்வாறு அரக்கர்கள் வீழ்த்தப்பட்டனர். முனிவர்களின் யாக காரியம் செவ்வனே முடிவுற்றது.

விசுவாமித்திரர் மகிழ்ச்சி அடைந்தார். இராஜகுமாரர்களை மனமார வாழ்த்தினார்.

அழைத்து வந்த காரியம் செவ்வனே நிறைவேறிவிட்டதால் அடுத்துச் செய்ய வேண்டிய வேலையைப் பற்றிச் சிந்தித்தார். அதுவே சீதா கல்யாணம். முனிவர்கள் இராமனைப் பார்த்து, "நாங்கள் மிதிலைக்குப் போவதாக இருக்கிறோம். கர்ம வீரராகிய ஜனக மகாராஜா ஒரு யாகம் செய்யப் போகிறார். அற்புதவில்லை நீங்களும் தரிசிக்கலாம்" என்றனர். விசுவாமித்திரர் அரச குமாரர்களை மிதிலைக்கு அழைத்துச் சென்றார்.

## ஜனகர்

விதேக மன்னரான ஜனகர் மிகவும் நல்ல முறையில் தம் தேசத்தை ஆண்டு வந்தார். இவர் தசரதச் சக்கரவர்த்தியின் ஆப்த நண்பர். ஜனகர் ஒரு ராஜரிஷி; சூரர். எல்லா சாஸ்திரங்களையும் நன்றாகக் கற்றவர். வேத வேதாந்தங்களில் நிபுணர்; நியமம் காத்தவர்; பிரம்ம ஞானி; அவதார தேவி சீதையை மகளாகப் பெறத் தகுதி கொண்ட மகான்.

ஒரு சமயம் ஜனக மகாராஜா யாகம் செய்வதற்காக இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதைத் தாமே கலப்பை பிடித்து உழுதார். மண்ணில் ஒரு திவ்விய ரூபமான பெண் குழந்தையைக் கண்டார். ஜனகருக்குக் குழந்தையில்லை. தரையில் புரண்டு உடலெல்லாம் மண்ணாய்க் கிடந்த அக்குழந்தையைப் பூமாதேவியே தந்த வரம் என்று மகிழ்ச்சியாய்க் கையில் எடுத்துக்கொண்டு, தம் மனைவியிடம் சென்று, "இதோ நமக்குக் கிடைத்த பெருந்தனம். யாக பூமியில் இவளை அடைந்தேன். இவளே நம்முடைய சந்தானம்!" என்று மனைவி கையில் கொடுத்தார். அவளும் அக்குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தாள்.

பூமாதேவியே சீதையாக வெளிப்பட்டு ஜனகருடைய கலப்பைக் கொழு முகத்தில் தோன்றினாள். கடலைக்

கண்டந்தபோது அமுதத்தோடு எழுந்த ஸ்ரீதேவியும் சீதையின் அழகைக் கண்டு வியந்து தொழுவாள் என்று கம்பர் பாடுகிறார்.

தெய்வீகக் குழந்தையான சீதையை மிகவும் அன்போடு ஜனகரும் அவர் மனைவியும் வளர்த்தார்கள். விவாகத்திற்குரிய காலம் வந்தது. இவளை விட்டுப் பிரிய வேண்டுமே என்று ஜனகர் துக்கப்பட்டார். அரசர்கள் பலர் வந்து கேட்டார்கள். ஆனால் அவர்களுள் யாரும் சீதையைப் பெறும் தகுதியுடையவராக அவருக்குத் தோன்றவில்லை.

இந்த நிலையில் ஜனகர் ஒரு நாள் நிச்சயித்தார். முன்னொரு சமயம் மகாயாகம் செய்த காலத்தில் வருணன் ஜனகருடைய யாகத்தைப் போற்றி, ருத்திர வில்லையும் (சிவ தனுசு) இரண்டு அம்பறாத் தூணிகளையும் ஜனகருக்குத் தந்தான். அந்த வில் மிகப் பழைய தெய்வீக வில். அதைச் சாமான்ய மக்கள் கையால் அசைக்கக்கூட முடியாது. எடுத்து வளைத்து நாண் ஏற்றுவதைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். முடியாத காரியம். ஜனகன் அரசர்களுக்கெல்லாம் தெரியப்படுத்தினார்.

''என்னிடமிருக்கும் இந்தச் சிவ தனுசை எந்த அரசகுமாரன் வளைத்து நாண் பூட்டுகிறானோ அவனுக்கு என் மகள் சீதையைத் தருவேன். இதுவே என் மகளுடைய சுயம்வர நிபந்தனை.''

சீதையின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டுப் பல அரசகுமாரர்கள் வந்து வில்லைப் பார்த்துவிட்டு, ஒன்றும் செய்ய முடியாமல் திரும்பி விட்டார்கள்.

## அகலிகை

முனிவர்கள் மிதிலை நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஓர் ஆசிரமத்தைக் கண்

டார்கள். இராமன், ''இந்த ஆசிரமத்தில் முனிவர்கள் யாரையும் காணோம்; வெறிச்சோடிக் கிடக்கிறதே; இதற்கு என்ன காரணம்?'' என்று வினவினான்.

விசுவாமித்திரர் கூறலுற்றார்: ''இது கௌதம முனிவரின் ஆசிரமம். நீண்ட காலம் அவரும் அவரது மனைவி அகலிகையும் இங்கே வசித்து வந்தனர். சுமுகமாகவே வாழ்க்கை நடந்து வந்தது. ஒருநாள் இந்திரன், ஆசிரமத்தில் முனிவர் இல்லாத சமயம் பார்த்து கௌதமரைப்போல வேடம் தரித்துக்கொண்டு ஆசிரமத்துள் புகுந்தான். இருவரும் இன்பம் நுகர்ந்தனர்.

வெளியில் சென்றிருந்த கௌதமர் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார். அவரைக் கண்டதும் இந்திரன் நடுங்கினான். வணங்கி நின்றான். ''மூடனே! என் வேஷத்தைத் தரித்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்து தகாததைச் செய்தாய். நீ நபும்சகனாய்ப் போவாய்!'' என்று சாபங் கொடுத்தார். அக்கணமே இந்திரன் தன் ஆண்மை அங்கத்தை இழந்தான். தேவர்கள் பரிதபித்தார்கள்.

முனிவர் தம் மனைவிக்கும் சாபம் கொடுத்தார். ''அகலிகையே, நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக எந்தவித ஆகாரமும் இன்றிச் சாம்பல் மேல் படுத்து யார் கண்ணுக்கும் தென்படாமல் மறைந்து வசிப்பாயாக. பல காலம் கழித்து இவ்விடம் தசரதன் மகன் ஒருநாள் வருவான். அவன் கால் பட்டதும் உன் சாபம் நீங்கும். நீ அவனை அதிதியாக வரவேற்று உபசரிப்பாய். அப்போது உன்னுடைய இயற்கைக் குணத்தையும் காந்தியையும் மறுபடியும் அடைந்து என்னுடன் வாழ்வாய்.''

இவ்வாறு சொல்லிவிட்டுக் கௌதமர், நெறி தவறிய மனைவியை விட்டு விலகி, இமயமலை சென்றுவிட்டார். அங்கே தவமிருக்கிறார். வா, நாம் ஆசிரமத்துள் செல்வோம்'' என்று முனிவர் சொன்னார்.

அவ்வாறே ஆசிரமத்துள் சென்றனர். இராமன் கால்பட்டதும் அகலிகையின் சாபம் தீர்ந்தது. அகலிகை பெண் உருப்பெற்று நின்றாள். இராமனும் இலக்குவனும் முனி பத்தினியின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். அகலிகை அவர்களை உபசரித்தாள். கௌதமர் அச்சமயம் அங்கே வந்து சேர்ந்தார்.

இது வால்மீகி இராமாயணத்தில் உள்ள அகலிகை கதை. கம்பர் இதைச் சிற்சில மாறுதல்களுடன் கூறியுள்ளார். தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களுக்கேற்பக் கூறியுள்ளார் என்று கொள்வோமாக. பிறன்மனை நயத்தல் மகாபாதகம் என்பதையும் ஐந்தவித்தான் ஆற்றலையும் வள்ளுவரும் கூறியுள்ளார்,

''தாடகைப் போரில் உன் கைவண்ணம் கண்டேன், இங்கே உன் கால்வண்ணம் கண்டேன்'' என்று இராமனை விசுவாமித்திரர் மகிழ்ந்து பாராட்டினார். பின்னர் மிதிலை நோக்கிச் சென்றனர்.

## ஜானகி

ஜனகன் மகள் ஜானகி விதேக நாட்டில் பிறந்தமையால் வைதேகி என்றும், மிதிலை நகரத்தில் பிறந்தமையால் மைதிலி என்றும் வேறு பெயர்களையுடையவள். இவளது இயற்பெயர் சீதை என்பது. அவளது திருமணத்திற்கு நிபந்தனையாக இருந்ததுதான் சிவதனுசு. பூமியில் சிறந்த அறத்தை நிலைநாட்டுவதற்கு இராமன் தோன்றினான். அங்ஙனம் அறத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாக அமைந்தவள்தான் சீதா பிராட்டி.

பிராட்டி, கற்பினுக்கு அரசியாய் விளங்கினாள். பெண்மையைக் காத்தாள். அழகினுக்கு அழகு செய்தாள். அருள்நிறை செல்வியாய்த் தருமம் தாங்கினாள். புகழின் வாழ்க்கை வாழ்ந்தாள். இத்தகைய ஓர் இலட்சியப்

பெண்ணாக அவள் நமக்குக் காட்சி தருகின்றாள். சீதா பிராட்டியின் வாழ்க்கை மங்கையர்க்கு ஓர் எடுத்துக் காட்டு.

## மிதிலைக் காட்சி

மிதிலையில் ஜனக மகாராஜனுடைய யாகத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மிதிலா நகரம் அழகாக அலங்கரிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலிருந்து முனிவர்களும், அந்தணர்களும் வந்த வண்ணமிருந்தனர். விசுவாமித்திரர், இராமன், இலக்குவன் மூவரும் மிதிலை நகருக்குள் நுழைந்தனர்.

''குற்றமற்ற தாமரை மலரைவிட்டு நீங்கி, யான் செய்த தவற்றின் பயனாக, இங்குத் திருமகள் வந்து பிறந் திருக்கிறாள் என்று அழகிய பெரிய மணிகள் கட்டப்பட்ட கொடிகளாகிய கைகளை நீட்டி, அந்தக் காவலையுடைய மிதிலை நகரம் செம்மையான கண்களையுடைய இராமனை விரைந்து வருக'' என்று அழைப்பது போல உள்ளது என்று கம்பர் கூறுகின்றார்.

காற்றினால் கொடிகள் அசைந்து ஆடுகின்றன. மிதிலை நகரம் தன் கைகளை நீட்டி இராமனை வரவேற் கின்றது என்று கவிகூறும் தற்குறிப்பேற்ற அணி படித்து இன்புறற்குரியது.

விசுவாமித்திரருக்கும் ராஜகுமாரர்களுக்கும் தகுந்த விடுதி ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே அவர்கள் தங்கி னார்கள். ஜனகருடைய புரோகிதரான சதானந்தர் விசுவாமித்திர முனிவரை எதிர்கொண்டு உபசரித்தார். பிறகு ஜனகரே நேரில் வந்தார்.

''இந்த வாலிபர்கள் யார்? தேர்ச்சியடைந்த வீரர் களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் யாருடைய மக்கள்?'' என்று ஜனகர் கேட்டார். ''இவர்கள் தசரதச்

சக்கரவர்த்தியின் குமாரர்கள். என்னுடைய யாகத்தைக் காத்தார்கள். அரக்கர்களை அழித்தார்கள். தாங்கள் அனுமதித்தால் சிவ தனுசையும் பார்க்க வந்திருக்கி றார்கள்!'' என்று விசுவாமித்திரர் கூறினார். ஜனகர் மகிழ்ச்சியடைந்தார்.

### சிவ தனுசு

''வில்லைப் பார்க்கலாம். வில்லை வளைத்து நாண் ஏற்றினால் என் மகளையும் அடையலாம். இந்த வில்லைப் பார்த்து அசைக்கவும் முடியாதென்று திரும்பிச் சென்ற அரசர்கள் பலர். என் மகள் சீதையைச் சக்கரவர்த்தித் திருமகன் அடைந்தானாகில் நான் மகிழ்வேன்'' என்றார் ஜனகர். வில்லை எடுத்து வரும்படி ஏவினார்.

வில் ஓர் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தது. அந்தப் பெட்டியை எட்டுச் சக்கரங்கள் கொண்ட ஒரு வண்டியில் ஏற்றி இழுத்து வந்தார்கள். ''இதோ, நானும் என் முன்னோரும் பூசித்த மகாதேவனுடைய வில். இதைப் பல இளவரசர்கள் வந்து பார்த்துவிட்டு நாண் ஏற்ற முடியாமல் சென்றனர். தசரத குமாரனும் பார்க்க லாம்'' என்றார் ஜனகர்.

விசுவாமித்திரர் இராமனைப் பார்த்து, ''பெட்டி யைத் திறந்து வில்லைப் பார்'' என்றார். சபையிலிருந்த அனைவரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். முனிவர் களும் மன்னனும், ''மங்களம் உண்டாகுக'' என்று வாழ்த்தினர்.

ஒரு பூமாலையை எடுப்பது போல் அவ்வில்லை விளை யாட்டாக எடுத்தான் இராமன். எடுத்து நிறுத்தித் தன் கால் கட்டை விரலால் தாக்குக் கொடுத்து வில்லை வளைத்து நாண் ஏற்றினான். பிறச் நாணைப் பிடித்துக் காது வரையில் இழுத்தான். நாணை இழுத்த வேகத்தில் வில் வளைந்து திடீர் என்று இடியோசையுடன் முறிந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

''சீதையை இராமனுக்குத் தந்தேன்'' என்றார் ஜனகர். மிக விரைந்து செல்லும் தூதர்களை அயோத்திக்கு அனுப்பித் தசரத மகாராஜனை அழைத்து வரச் செய்தார்.

## திருமணம்

அவ்வாறே தூதுவர்கள் அயோதிக்குச் சென்று தசரதச் சக்கரவர்த்தியிடம் இம்மங்கலச் செய்தியைத் தெரிவித்தனர். மன்னர் பரவசமடைந்தான். அடுத்த நாளே தசரதன் பரிவாரத்துடன் மிதிலைக்குப் புறப் பட்டான். தசரதன் மிதிலை வந்து சேர்ந்ததும் ஜனகர் கோலாகலமாக வரவேற்று உபசரித்தார். ''யாகம் சீக்கி ரத்தில் முடிந்துவிடும். "அது முடிந்தவுடனே இந்த விவா கத்தை நடத்தி விடலாமல்லவா?'' என்று தசரதனுடைய சம்மதத்தைக் கேட்டார் ஜனகர். ''அவ்வாறே செய்ய லாம்'' என்று தசரதன் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பெண்ணை நீர் வார்த்துக் கொடுக்கும்போது, ''இதோ என் மகள் சீதை, மகனே! நீ செல்லும் தரும நெறியில் இவள் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக் கொள்வாய். மங்களம் ஆகுக! கற்பைக் காத்து மிக பாக்கியவதியாக உன் நிழலைப்போல் உன்னைப் பற்றி நிற்பாள். எப்போதும் விட்டுப் பிரிய மாட்டாள்!'' என்று ஜனகர் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

சீதையும் சக்கரவர்த்தித் திருமகனும் பழைய பாற்கடல் காதலர்கள் அல்லவா? பிரிந்தவர்கள் மறுபடியும் ஒன்று கூடிப் பெரு மகிழ் வெய்தினர். இது வால்மீகி காட்டிய திருமண நிகழ்ச்சி.

வால்மீகத்தில் இல்லாத மிதிலைக் காட்சி படலம் கம்பரால் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்குக்

காரணம் தமிழ் அகப்பொருள் இலக்கணம் ஆகும். உள்ளப்புணர்ச்சி உண்டான பிறகே கற்பு மணம் நடத்தல் தமிழ் முறை ஆதலின், இராமன்—சீதை மணத்தைத் தமிழ் முறையில் அமைத்துக் காட்டல் தக்கது என்றெண்ணிய கம்பர் இப்பகுதியைப் புதிதாகச் சேர்த்தார். காட்சி, ஐயம், தெளிதல் என்ற படிகள் அங்கு விளக்கப்பட்டுள்ளன. அன்றிரவு இருவரும் தத்தம் இடங்களில் தனித்திருந்து மாரன் மலர்க்கணைக்கு இலக்காகி மயங்கி நின்றனர், பிறகு மணமுடித்து மகிழ்கின்றனர். இந்நிலைகள் அனைத்தையும் கம்பர் பெருமான் தமது மிதிலைக் காட்சிப் படலத்தில் அழகாக அமைத்துப் பாடியுள்ளார். இவ்வாறு மூல நூலுக்கு மாறுபட்ட கருத்துக்கள் ஆங்காங்கு கூறப்பெறும்.

ஜனகர் மணப்பந்தலில் சீதையை இராமனுக்குத் தாரை வார்த்துத் தருதல், மணமக்கள் தீ வலம் வருதல், கரம் பற்றுதல், மன்னர்களும் முனிவர்களும் மணமக்களை வாழ்த்துதல் போன்ற நிகழ்ச்சிகள் வர்ணிக்கப்படுகின்றன. விருந்துபசாரங்கள் மற்றும் கேளிக்கைகள் ஆடம்பரமாக நடைபெற்றன. மணமக்கள் அழகினை மக்கள் கண்டு களித்தனர்.

விசுவாமித்திரர் அயோத்தியில் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அரச குமாரர்களை மிதிலையில் தசரதனிடம் ஒப்புவித்தார். திருமணம் முடிந்த பின்னர் இரண்டு அரசர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு இமய மலைக்குச் சென்றார். தசரதன் தன் பரிவாரங்களுடன் அயோத்திக்குத் திரும்பினான்.

### பரசுராமன்

வழியில் ஓரிடத்தில் திடீரென்று அபசகுனங்கள் தென்பட்டன. கவலைப்பட்ட தசரதன் காரணம் என்ன என்று குலகுரு வசிஷ்டரைக் கேட்டான். "கெட்ட

நிமித்தங்களாக இருப்பினும் பயத்துக்குக் காரண மில்லை!'' என்றார் அவர்.

பயங்கரமான காற்று வீசிற்று: மரங்கள் ஒடிந்து விழுந்தன. பூமி அதிர்ந்தது. புழுதி கிளம்பியது. திக்கு கள் இருண்டன. அனைவரும் நடுங்கினர். காரணம் தெரிந்தது. க்ஷத்திரியர் கூட்டத்துக்கே யமனாக அவதரித்த பரசுராமர் வந்து நின்றார்.

தோளில் வில்லும் கோடரியும் கையில் அம்புமாக ருத்திரனைப்போல் காணப்பட்டார். தலையில் சடை முடி; முகம் காலாக்கினி போலப் பிரகாசித்தது. ஜமதக் கினியின் குமாரர் பரசுராமர் எங்கே சென்றாலும் பூகம்பமும் பெருங்காற்றும் முன் செல்லும். அரசர் குலம் அஞ்சி நடுங்கும். கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் மன்னன் தன் தந்தையைக் கொன்றுவிட்டதால் பரசு ராமர் அரச குலத்தை அழிக்கும் பணியில் ஈடுபட்டார்.

பரசுராமர் தசரத ராமனைப் பார்த்து, ''தசரதன் மகனே! உன் வீரச் செயல்களைப் பற்றிக் கேள்விப் பட்டேன். ஜனகர் சபையில் சிவ தனுசை நீ வளைத்ததும், அது ஒடிந்ததும் பற்றிக் கேள்விப்பட்டேன். இதோ என்னிடம் இருக்கும் வில் அதற்குச் சமமானது. என் தந்தை ஜமதக்கினி அடைந்த விஷ்ணு தனுசு. இதை வளைத்து நாண் ஏற்றுவாய். பாணமும் தருகிறேன். அதைச் செய்வாயாகில் • நாம் இருவரும் யுத்தம் செய்வோம்'' என்றார்.

இதைக் கண்டு தசரதன் பெருந்திகிலடைந்தான். பரசு ராமரிடம் வினயமாகப் பேசலானான். ''நீர் பிராமணர், அரசர் குலத்தின் மீதிருந்த ஆத்திரம் தணிந்து விட்ட தல்லவா? தவத்தில் ஈடுபட்டிருந்திரே! என் குமரன் சிறுவன். நீர் அவனுடனா யுத்தம் செய்யப் போகிறீர்? அபயம் தருவீராக. நீர் அவனை அழித்து விட்டால் நாங் களும் அவனுடனே மடிந்து போவோம்!'' என்று பலவாறு

வேண்டி நின்றான் தசரதன். அவன் சொல்லுக்குப் பரசுராமர் செவி சாய்க்கவே இல்லை.

பரசுராமர் உரத்த குரலில் பேசியதையும் தன் தந்தை அவரிடம் வேண்டிக் கொள்வதையும் பார்த்த இராமச் சந்திரன் அடக்கமும் கம்பீரமும் கலந்த குரலில், "ஜமதக் கினி புத்திரரே! உன் தந்தையைக் கார்த்தவீரியார்ச்சுனன் கொன்றான் என்பதற்காக அரசர் குலத்தைப் பழி வாங்கினீர். அதை நான் தடுக்கவில்லை. ஆனால், மற்ற மன்னர்களைப்போல் என்னை நீர் அடக்க முடியாது. தயவு செய்து வில்லைக் கொடும்" என்று சொல்லி, விஷ்ணு தனுசையும் அம்பையும் வாங்கினான். வில்லை வளைத்து, அம்பை வைத்து, நாணை இழுத்தான்.

"பிராமணரே! இப்போது என்ன செய்யப் போகிறீர்? இந்த அம்புக்கு இலக்கு யாது? என்றான் இராகவன். இரண்டு அவதார மூர்த்திகளும் நேருக்கு நேர் நின்று போரிடப் போவதைப் பார்க்க, தேவ கந்தர்வ யட்ச கணங்கள் ஆகாயத்தில் வந்து நின்றார்கள்.

காகுத்தன் வில்லை வளைத்ததும் பரசுராமருடைய தேஜஸ் வாடியது. அவருடைய அவதார மகிமை உடனே மறைந்தது. "உன் பிரபாவத்தைக் கண்டேன். நீ என்னைக் கர்வ பங்கம் செய்ததில் எனக்கு வருத்தம் இல்லை. நீ யார் என்பதை அறிந்தேன். என் தவ மனைத்தும் உனதாகக்கடவது. காசிபருக்கு நான் கொடுத்துவிட்ட பூமியில் நான் இரவில் தங்கக்கூடாது. ஆனபடியால் சூரிய அஸ்தமனத்திற்குள் மகேந்திர மலைக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்கு அனுமதிப் பாயாக. உன் கையிலிருக்கும் அம்புக்கு என்னுடைய தவத்தின் பயன் முழுவதும் இரையாகக் கடவது!" என்று சொல்லிவிட்டுச் சக்கரவர்த்தித் திருமகனை வலம் வந்து தாம் வந்த வழியே திரும்பினார் பரசுராமர்.

இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். தசரத இராமனும் பரசுராமனும் திருமாலின் அம்சங்களே,

அப்படியிருக்க இவர்கள் ஒருவருக்கொருவர் பலப்பரீட்சை செய்யலாமா? என்று தோன்றும். இவர்கள் சம காலத்தவர்களே. ஒருவர் மற்றவருடைய புகழை உலகிற்கு எடுத்துக்காட்டவே செய்கிறார்கள். மன்னர்களுடைய அடாத செயல்களை அழிக்கவே பரசுராமர் தோன்றினார் அதேபோல் அரக்கர்களுடைய கொடுமைகளைப் போக்கி அறத்தை நிலைநாட்டத் தசரத ராமன் தோன்றினார் எனக் கொள்க.

அதேபோல் அடுத்த யுகத்தில் திருமால் பலராமராகவும் கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்திருக்கிறார். ஒருவர் மற்றவர்க்கு ஆதரவாகவே செயல்பட்டிருக்கிறார். பலராமர் கள்ளங்கபடமற்றவர். வெள்ளை உள்ளம் படைத்தவர். கிருஷ்ணனோ முற்றும் மாறுபட்டவர். அறத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணத்தைச் சாதிக்க அறத்திற்கு மாறுபட்ட வழிகளையும் கையாளுகிறார். அந்தந்த அவதாரத்தின் பண்பு விளக்கப்பட்டுள்ளது என்று கொள்ள வேண்டும்.

## வரவேற்பு

சக்கரவர்த்தியும் இராஜகுமாரர்களும் திரும்பி வருவதை அறிந்து அயோத்தி நகரத்தவரின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடிற்று. நகரைச் சிறப்பாக அலங்கரித்தனர். மேளதாளங்களுடன் கோலாகலமாய் மணமக்களை வரவேற்று உபசரித்தனர். அயோத்தி நகரம் தேவலோகத்தைப்போல் காட்சியளித்தது.

# 2. அயோத்தியா காண்டம்

## இளவரசுப் பட்டம்

இராமனும் சீதையும் மிகவும் மகிழ்ச்சியாக அயோத்தியில் ஒரு குறையுமின்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் அன்போடு காலங் கழித்தனர். சுகம் அனுபவித்தனர். அயோத்தியா காண்டத்தைக் கூறப் புகுந்த கம்பர் இறைவணக்கமாகக் கூறிய பாடலின் கருத்து வருமாறு:

உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள், கோபதாபங்கள் எல்லாவற்றையும் பகவானும் தாயாரும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள். தன்னுடைய ஊன் உயர் உணர்வில் மற்ற மக்களைப் போல் துன்பப்பட்டு இமையோர் இடுக்கண் காத்த இராமபிரான் எதிலும் உள்ளும் புறமும் உள்ள லோக நாதனே. அதாவது மந்தரை, கைகேயி ஆகிய இவர்களின் சூழ்ச்சியினால் அரச பதவியைத் துறந்து வனம் மற்றும் கடல்களைக் கடந்து தேவர்களின் துயர் தீர்த்த—வீரக் கழலையணிந்த-இராமபிரானை வணங்குவோமாக என்பதாம்.

நான்கு மக்களிடமும் அன்புடையவன் தசரதன். ஆயினும் இராமனிடத்தில் அதிகப் பிரியமுடையவன். தகுந்த இராஜலட்சணமும் பலமும் பொருந்தியவன் என்பதும் ஒரு காரணம். கோசலையும் இராமனை மகனாகப் பெற்றதில் பெருமிதங் கொண்டிருந்தாள். இராமனுடைய குணாதிசயங்களைப் பல சுலோகங்களில் புகழ்கிறார் வால்மீகி.

திருமேனி யழகு, பராக்கிரமம், உள்ளத்தூய்மை, சீலம், இரக்கம், இன்சொல், சாந்தம், நிறைகுணம், அபூர்வ தேகபலம், நோயற்ற உடல், ராஜ்ய பரிபாலனம் செய்வ தற்கேற்ற நீதி சாஸ்திரப் பயிற்சி இவைகளைக் கண்டு, மக்கள் இராமனைப் பெரிதும் விரும்பினர். தசரதன் இதை அறிந்தான். தனது வயது முதிர்ச்சியைக் கருதி இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி, இராஜ்ய பாரத்தை அவனிடம் ஒப்புவிக்க எண்ணங்கொண்டான். இதைப்பற்றி ஆலோசிக்க, சபையைக் கூட்டினான் மன்னன்.

## மந்திராலோசனை

அறிஞர்கள் வந்து அவரவர் ஆசனத்தில் அமர்ந்தனர். தசரதன் எழுந்து, ''என் முன்னோர்களைப் போலவே இதுவரையில் குடிமக்களின் நலங்கருதி ஆட்சி செய்து வந்தேன். இப்போது என் உடல் மூப்பினால் தளர்ந்து போயிருக்கிறது. என் மூத்த மகனை இளவரசனாக நிய மித்து, இராஜ்ய பாரத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, நான் ஓய்வு பெற விரும்புகிறேன். எஞ்சியுள்ள என் வாழ்நாளை வனத்தில் கழிக்க எண்ணியுள்ளேன். உங் களுடைய கருத்து யாதோ?'' என்றான்.

சபையில் மகிழ்ச்சி ஆரவாரம் கிளம்பியது. ''அப் படியே செய்வீர்!'' என்றனர். ஏகோபித்து ஆமோதித் தனர். அரசனுடைய உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கிற்று. ''யுவராஜ்ய பட்டாபிஷேகம் உரியபடி நடைபெறும்'' என்றான் அரசன்.

வசிஷ்டர், வாமதேவர் முதலிய பெரியோர்களை அழைத்து, ''இது சித்திரை மாதம்; மங்களகரமான காலம்; செடி கொடிகள் பூத்து அழகாக விளங்கும் பருவம்; முடி சூட்டுதலுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள்'' என்றான் மன்னன். மக்களிடையே மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிற்று.

சுமந்திரன் இராமனை அழைத்து வந்தான். முடி சூட்டு விழா பற்றித் தந்தை கூறியவுடன், "தங்கள் ஆணைப்படி நடக்க நான் கடமைப்பட்டவன்!" என்றான் தனயன். அரசன் ஆசீர்வதித்தான். இராமன் தன் இருப்பிடம் செல்லுங்கால் வழியில் இலக்குவனிடம் மகிழ்ச்சியைத் தெரிவித்தான். தன் தாயிடம் சென்று அவளுடைய வாழ்த்தையும் பெற்றான். பிறகு இரு தாய்மார்களையும் வணங்கி விடைபெற்றுச் சீதையை அழைத்துக்கொண்டு தன் இல்லத்துக்குச் சென்றான்.

நகரவாசிகள் நகரத்தையும் தங்கள் வீடுகளையும் அலங்கரித்தனர். நகரம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. மறுநாட் காலை முடிசூட்டு விழா நடைபெறப் போவதை முன்னிட்டுச் சந்தோஷமும் பரபரப்பும் நிலவின. எங்கு பார்த்தாலும் மங்கள வாத்தியமும் கோஷங்களுமாக இருந்தன.

இராமனும் சீதையும் உபவாசம் இருந்தனர். ஓமம் வளர்த்து, தரையில் புல் பரப்பி, அன்றிரவு படுத்தார்கள். அதிகாலையில் மங்கள வாழ்த்தியங்கள் முழங்க இருவரும் எழுந்து தங்கள் காலைக் கடன்களை முடித்தனர்.

## மந்தரை

கைகேயியின் முதிய தோழி மந்தரை. இவளுக்கு முதுகு வளைந்திருந்தமையின் இவளை எல்லோரும் கூனி என்று அழைக்கலாயினர். சிறுவயதில் இராமன் வில்லில் மண் உருண்டையை வைத்து அவள் மீது வீசி, அவள் கொண்டு வரும் நீர்க்குடத்தை விழச்செய்து எல்லோரும் நகைக்கு மாறு செய்வது வழக்கம். மந்தரை அதை நினைத்துப் பழி வாங்கும் தருணத்தை எதிர்பார்த்திருந்தாள். இக் காவியத்தில் இவள் முதல் எதிர்முகம். (villain). இவள் செய்த சூழ்ச்சியே காவியத்தின் போக்கை மாற்றி அமைத்தது. சூர்ப்பனகை இரண்டாவது எதிர்முகம். இராவணன் மூன்றாவது எதிர்முகம்.

இவள் கைகேயிக்குத் தூரத்து உறவு. அதனால் நெருங்கிப் பழகும் உரிமையும் உடையவள். நகரம் விழாக் கோலம் கொண்டிருப்பதைக்கண்டு, மந்தரை, அந்தப்புர வேலைக்காரியை விசாரித்தாள். அவள், ''உனக்குத் தெரியாதா? நம் இராமச்சந்திரனுக்கு நாளைக் காலை யுவராஜ பட்டாபிஷேகம்!'' என்றாள். இதைக் கேட்டதும் மந்தரைக்கு அடங்காத கோபம் மேலிட்டது. கைகேயியின் அறைக்குச் சென்றாள். அப்போது கைகேயி படுத்திருந்தாள்.

''மூடப்பெண்ணே! எழுந்திரு. தலைக்கு மேல் பெரிய வெள்ளம் வருகிறது. நீ மோசம் போனாய். இன்னும் தூங்குகிறாயே!'' என்றாள். கைகேயி துயிலெழுந்து, ''மந்தரை, உனக்கு என்ன கஷ்டம்? ஏன் இப்படிப் பதறுகிறாய்'' என்று நிதானமாய்க் கேட்டாள்.

மந்தரை சாதுர்யமாகப் பேச ஆரம்பித்தாள். ''நீ அப்பாவிப் பெண்ணாய் இருக்கிறாயே! உன் புருஷன் உன்னிடம் நயமாகப் பேசி உன்னை ஏமாற்றிவிட்டான். வஞ்சனைக்காரன். பரதனை மாமன் வீட்டுக்கு அனுப்பி விட்டு, இங்கு அவசரம் அவசரமாக இராமனுக்கு முடி சூட்டப் போகிறான். நாளைக்கே எல்லாம் முடியப் போகிறது. நீ அழிந்தாய். உன்னைச் சேர்ந்தவர்களும் அழிந்தார்கள்'' என்று அடுக்கிக்கொண்டே போனாள்.

''என் குமாரன் இராமனுக்கு முடிசூட்டு விழா என்ற நற்செய்தியைச் சொன்னாய் மந்தரா! மிக்க மகிழ்ச்சி. இதைப் பெற்றுக்கொள்!'' என்று தன் கழுத்திலிருந்த மாலையை எடுத்து மந்தரைக்குக் கொடுத்தாள்.

கைகேயி, நல்ல உள்ளம் படைத்தவள். நல்ல பண்பாடு உடையவள். இதைக் கண்டு மந்தரைக்குத் துக்கம் அதிகரித்தது. கைகேயி தந்த மாலையை வீசி எறிந்தாள். ''பைத்தியகாரி, வெள்ளம் தலைக்கு மேல் வந்துவிட்டது. நீ சிரித்து மகிழ்கின்றாய். உன் மதியை நான் என்ன

வென்று செல்வேன்? கோசலை பாக்கியவதியானாள். அவளுக்கு நீ வேலைக்காரியாகப் போகிறாய். உன் மகன் பரதனும் இராமனுக்கு வேலைக்காரன்தான்'' என்று மந்தரை அடுக்கிக்கொண்டே போனாள்.

கைகேயி இவைகளைக் கேட்ட பின்பும் மனம் மாறினாள் அல்லாள். யதார்த்தமாகவே கேட்டாள். ''மந்தரை, ஏன் இவ்வாறு பயப்படுகிறாய்? இராமனுடைய குணம் உனக்குத் தெரியாதா? அவன் தருமமே வடிவம் கொண்டவன் அல்லவா? அவன் மூத்தவன். இராஜ்யம் அடைகிறான். அவனுக்குப் பிறகு பரதன் அடையப் போகிறான். நீ அவனைப் பற்றிப் பயப்படுவது சரியே அல்ல!'' என்று சொல்லி மந்தரையின் பயத்தைத் தணிக்க முயன்றாள்.

''உன் மூளை ஏன் இப்படிக் கெட்டுப் போயிற்று? இராமன் சிம்மாசனம் ஏறினால் பரதனுடைய அரசவாழ்வு அதோடு முடிந்தது. அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியார் அல்லவா ஆளப் போகிறார்கள். உன் மகனுக்கு வாழ்வு ஏது? இது உனக்குத் தெரியவில்லையே! நான் என்ன செய்வேன்?'' என்றாள் மந்தரை.

கைகேயியின் உள்ளத்தில் பயம் புகுந்து கொண்டது. மந்தரையின் துராலோசனை வேலைசெய்ய ஆரம்பித்தது. அதுவரையில் இராமனைத் தன் வயிற்றில் பிறந்த குழந்தையாகவே பாவித்து வந்த கைகேயி, இப்போது மந்தரையின் உபதேச வலையில் சிக்கிக் கெட்டுப் போனாள். ''இதற்கு என்ன செய்யலாம் சொல்'' என்று மந்தரையிடம் சரணடைந்தாள்.

''சம்பரா சூர யுத்தத்தில் நீ உன் கணவன் உயிரைக் காப்பாற்றினாய் அல்லவா? அப்போது அவன் உனக்கு இரண்டு வரங்களைக் கொடுத்தான் அல்லவா? அவைகளை இப்போது கேள். முதல் வரத்தால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய். இரண்டாவது வரத்தால் இராமனைப்

பதினான்கு வருடம் காட்டுக்கு அனுப்பு-போய்த் தரையில் படுத்துக்கொள். பழைய துணியை உடுத்திக் கொள், அரசன் வரும்போது பேச வேண்டாம். கண் எடுத்துப் பார்க்க வேண்டாம். உன் துயரத்தை அவன் சகிக்க மாட்டான். நம்முடைய காரியம் வெற்றியுடன் முடியும்'' என்றாள் மந்தரை. பாப எண்ணம் நன்றாகப் புகுந்து விட்டது. கைகேயியினுடைய சுபாவம் முற்றிலும் மாறிப் போயிற்று.

## கைகேயி

சபையில் காரியங்களை யெல்லாம் முடித்துவிட்டுத் தசரதன் கைகேயியின் மாளிகைக்கு வந்தான். கைகேயி யைக் காணவில்லை. அரசன் கொஞ்சம் திகைத்தான். காவல் பெண்ணைக் கேட்டான். அவள் கைகூப்பி, ''சுவாமி! தேவியார் மிகக் கோபங்கொண்டு உள்ளே போய்விட்டார்கள்'' என்றாள். உள்ளே சென்றான்.

எதிர்பாராத விபரீதக் காட்சியைக் கண்டான். கைகேயி அரசனைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. அரசன் தரையில் உட்கார்ந்து அவள் தலையை மெதுவாகத் தூக்கித் தன் மடியின் மேல் வைத்துத் தடவிக் கொடுத்தான். ''உனக்கென்ன வாயிற்று?'' என்று விசாரித்தான். கைகேயி பேசவில்லை. உனக்கென்ன வேண்டும்? கேள்; தருகிறேன்!'' என்றான். கைகேயி எழுந்து உட்கார்ந்து பேசலானாள்.

''அரசனே! சம்பராசூர யுத்தத்தில் நீங்கள் கொடுப் பதாகச் சொன்ன இரண்டு வரங்களும் எனக்கு இப்போது வேண்டும். இப்போது செய்துள்ள ஏற்பாட்டைக் கொண்டு பரதனுக்கு முடிசூட்டுவீராக. இது முதல் வரம். உம்முடைய மகன் இராமனைப் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யும்படி தண்டகாரண்யம் அனுப்புவீர். இது இரண்டாவது வரம். சொன்னபடி செய்வீராக'' என்றாள்.

மன்னன் இக்கொடுஞ் சொற்களைக் கேட்டதும் மயக்க முற்றான். சற்றுநேரம் கழித்து மனம் தெளிந்தான். கெஞ்சினான். ''இராமனைக் காட்டுக்குப் போ என்று எப்படிச் சொல்வேன்? வேறு ஏதாவது கேள். என்னை எமனிடம் அனுப்பாதே. கைகூப்பித் தொழுகிறேன். உன் இரு பாதங்களையும் பிடித்து வேண்டிக் கொள்கிறேன். சரணம்! சரணம்! இராமனைக் காப்பாற்றுவாயாக. அதர்மத்தைச் செய்யச் சொல்லாதே'' என்றான் தசரதன்.

கைகேயி தன் பிடிவாதத்தைத் தளர்த்தவேயில்லை. மன்னன் கீழே விழுந்தான். ''அப்படியானால் பாவி! இராமன் வனம் போவான். நான் சாவேன். நீ எனக்கும் என் குலத்துக்கும் பகையாகி உன் விருப்பத்தையடைந்து என்ன சுகம் அடைய வேண்டுமோ அதை அடைவாயாக'' என்றான் தசரதன். இவ்வாறு சொல்லிவிட்டு மூர்ச்சையானான்.

பொழுது விடிந்தது. முகூர்த்த காலம் நெருங்கியது. வசிஷ்டரும் முனிவர்களும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். ஆரவாரம் அதிகமாயிற்று. மங்கள வாத்தியங்கள் முழங்கின. சுமந்திரன் அரசனைக் காணச் சென்றான். அச்சமயம் அரசன் மயக்க நிலையில் இருந்தான். அரசனுக்குப் பதிலாகக் கைகேயி சுமந்திரனிடம் சொன்னாள்.

''சுமந்திரரே நீர் சென்று இராமனை அழைத்து வாரும்'' என்றாள். அதன்படி சுமந்திரன் சென்று இராமனை அழைத்து வந்தான். யாருக்கும் விஷயம் விளங்கவில்லை. தந்தையின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். பிறகு கைகேயியையும் வணங்கினான். தந்தை இருந்த நிலையைக் கண்டு இராமன் வியப்பும் பயமும் அடைந்தான். கைகேயி பேசலானாள்.

''பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும், இன்றே நீ இராஜ்யத்தை விட்டு விலகித் தண்ட

காரணியம் போக வேண்டும் என்றும், இந்த இரண்டு வரங்களையும் அரசனிடம் அடைந்திருக்கிறேன். உன்னுடைய பிரதிக்ஞையையும் தந்தையின் சத்தியத்தையும் காப்பாற்றுவாயாக'' என்றாள் கைகேயி.

''அப்படியா தாயே! அரசனுடைய பிரதிக்ஞை நிறைவேறும்படி சடையும் மரவுரியும் தரித்து இன்றைக்கே வனம் செல்கின்றேன்!'' என்றான். இராமன் துரிதமாக அவ்விடத்தை விட்டு வெளியே சென்றான். வெளியே இருந்த இலக்குவன் கண்கள் சிவந்து மகாகோபத்துடன் இராமன் பின் சென்றான்.

கௌசல்யையிடம் விடைபெற்றுச் செல்ல அவள் இருப்பிடம் சென்றான் இராமன். நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன்னான். இதைக் கேட்டுக் கோசலை தரையில் விழுந்தாள். இதைக் கண்டு இலட்சுமணன் கடுங்கோபங் கொண்டான். இராமன் இலக்குவனைச் சாந்தப்படுத்தி, பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்வது தான் சிறந்த தருமம், என்று ஆறுதல் கூறினான்.

கோசலையிடமும், சுமித்திரையிடமும் விடைபெற்றுக் கொண்டான். பிறகு சீதையிருக்குமிடம் சென்றான். தேரும் சாமரங்களும் இன்றி இராமன் தனியாகத் திரும்பி வருவதைச் சீதை பார்த்தாள். ''என்ன விஷயம், ஒரு மாதிரி இருக்கிறீர்களே!'' என்று கேட்டாள்.

இராமன் நடந்தவற்றைச் சுருக்கமாய்ச் சொன்னான். ''வைதேகி! நீ என்னை விட்டுப் பிரிந்து இவ்விடம் தனியாக இருப்பதில் உனக்கு ஏற்படக் கூடிய துக்கம் எனக்குத் தெரியும். ஆயினும் தருமத்தை நீ நன்றாக அறிவாய். நான் இன்றே வனம் போக வேண்டும். தைரியமாய் இரு'' என்றான் இராமன்.

இதைக் கேட்ட சீதைக்குப் பெருங்கோபம் உண்டாயிற்று. அன்பு கோபமாக மாறியது. ''நன்றாகப் பேசினீர்! தருமம் அறிந்த இராஜகுமாரரே! மனைவி

வேறு, புருஷன் வேறு என்பதை இன்றுதான் உங்கள் பேச்சில் அறிந்தேன். இராமச்சந்திரன் வனம் போக வேண்டியதானால் அந்த ஆணை சீதைக்கும்தான். பிடி வாதம் செய்கிறேன் என்று கோபம் கொள்ள வேண்டாம். வனத்தில் உம்முடன் நானும் இருந்து சந்தோஷமாகக் காலம் கழிப்பேன். என்னைத் தனியாக விட்டுச் சென்றால் என் மரணம் நிச்சயம். என்னை அழைத்துப் போக வேண்டும். என் மேல் இரக்கம் கொள்வீர். என்னை நிர்க்கதியாக்க வேண்டாம்!'' என்று வேண்டினாள் சீதை.

இராமன் காட்டில் ஏற்படும் பயம், கஷ்டம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறி, ''நீ என்னுடன் காட்டுக்கு வருவது தகாது'' என்றான். சீதையின் கண்களில் நீர் பெருகிற்று. ''என்னைத் தடுக்காதீர்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

### மரவுரி தரித்தல்

இராமனுடன் சீதையும் வனம் போவது என்று நிச்சயமாகிவிட்டது. ஏழை அந்தணர்களுக்குத் தான தருமங்களைச் செய்துவிட்டு வன வாசத்திற்குத் தயாராகி விட்டாள் சீதை. இலட்சுமணனும் தமையனுக்குச் சகாயமாக வனம் போகத் தீர்மானித்து இராமனுடைய சம்மதமும் பெற்றான். மூவரும், வீதி வழியே நடந்து செல்வதை மக்கள் கண்டு வருந்தினர். மூவரும் தந்தையிடம் விடைபெறச் சென்றனர். இவர்களைக் கண்டதும் மன்னன் மூர்ச்சையானான். சற்று நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்தது.

''தயவு செய்து மரவுரியைக் கொண்டுவரச் சொல்லுக. மண் வெட்டியும் கொண்டுவரச் சொல்லுக. அவை போதும்'' என்றான் இராமன். கைகேயி ஓடிப் போய்த் தயாராக வைத்திருந்த மரவுரியைக் கொண்டு வந்து இராமனிடம் கொடுத்தாள். மூவரும் மரவுரியை

உடுத்திக் கொண்டனர். அருகிலிருந்தோர் 'கோ'வெனக் கதறினர். தசரதன் இதைக் கண்டு நினைவு இழந்தான். கடைசியாக மூவரும் தசரதனைக் கண்டு வருந்தியவாறே அங்கிருந்து அகன்றனர்.

## வனம் செல்லுதல்

குமாரன் மரவுரி தரித்துக் கடைசியாகப் பேசியதைக் கேட்டு அரசன் மனமுடைந்து படுக்கையில் கிடந்தான். பிரிவுத் துன்பம் அவனை வருத்தியது. பிறகு தெளிந்து, "சுமந்திரனே! ரதம் கொண்டு வந்து குழந்தைகளையும் ஜானகியையும் ஏற்றிக் கொண்டு இராஜ்யத்து எல்லை வரையில் போ!" என்றான். இலட்சுமணன் சுமத்திரையை வணங்கினான். "குழந்தாய், இராமனைக் காப்பது உன் கடமை. தம்பிக்கு அண்ணன் குருவும் அரசனுமாவான். இது நம் குல தருமம். போய் வருவாய். காட்டில் இராமனே உனக்குத் தந்தை. ஜானகியே தாய். இதை அறிவாய். வனத்தை அயோத்தியாகவே பாவிப் பாய். சந்தோஷமாகவே போய்வா, அன்புக்குரிய மகனே!" என்றாள்.

"சக்கரவர்த்தித் திருமகனே! இரதத்தில் ஏறுவாய். புகழின் சிகரமே! உனக்கு மங்களம். பதினான்கு வருஷம் இப்போதிருந்தே ஆரம்பமாகி விட்டது இராஜகுமாரா!" என்றான் சுமந்திரன். சீதை மகிழ்ச்சியுடன் தேரில் ஏறினாள். இரு சகோதரர்களுடைய கவசங்களும் ஆயுதங் களும், கிழங்கு வெட்டும் குத்தாலியும் கூடையும் தேரில் வைக்கப்பட்டன. இராம லட்சுமணர்களும் ஏறினார்கள். சுமந்திரன் தேரை ஓட்டினான்.

இரதத்தைத் தொடர்ந்து நகர மக்கள் துயரத்துடன் சென்றனர். இவர்களைச் சமாளித்துக் கொண்டு சுமந்திரன் இரதத்தை அயோத்தியை விட்டு வெளியே செலுத்தினான். நகரம் துக்கத்தில் மூழ்கிற்று. ஒவ்வொரு

வீட்டிலும் கண்ணீரும் உபவாசமும் நிந்தனையுமாக இருந்தன.

இராமனுடைய தேருடன் கூடவே நகரத்து மக்கள் பெருங்கூட்டமாகத் தொடர்ந்து சென்றார்கள். இராமன் இரதத்தை நிறுத்தி நகர மக்களுக்குப் புத்திமதியும் நல்ல வார்த்தையும் சொன்னான்.

தமசாநதி குறுக்கே தடுத்தது. தேர் நின்றது. சுமந்திரன் குதிரைகளை அவிழ்த்துத் தண்ணீர் காட்டி, புல் மேய விட்டான். பிறகு நதியில் மாலை வந்தனங்கள் செய்துவிட்டு இராமன், "இன்று உபவாசமிருக்கலாம். இது நம்முடைய வனவாச ஆரம்ப இரவு" என்றான். இராமனுக்கும் சீதைக்கும் படுப்பதற்குப் புல் பரப்பி அமைத்துக் கொடுத்துவிட்டு, இலட்சுமணன் சுமந்திரனுடன் பேசிக் கொண்டே இரவைக் கழித்தான். தூங்கவில்லை.

மறுநாட் காலை ஆற்றைக் கடந்து சென்றார்கள். தேர் அயோத்திக்குத் திரும்பியது போலப் போக்குக் காட்டி மூவரும் தெற்கு முகமாகச் சென்றார்கள்.

**கங்கைக் கரை**

தமசா நதிக்கரையில் படுத்துறங்கின அயோத்தி நகர மக்கள் காலையில் எழுந்து பார்த்தனர். தேர் அயோத்திக்குத் திரும்பி விட்டது என்று கருதி அவர்களும் நகரத்திற்குத் திரும்பினர். இராமனை இழந்த அயோத்தி நகரம் பொலிவிழந்து காணப்பட்டது. மக்கள் துயரக் கடலில் ஆழ்ந்தனர்.

விடிவதற்கு முன்பே புறப்பட்ட தேர் வனத்தில் வெகுதூரம் சென்று கோசல நாட்டுத் தெற்கு எல்லைக்கு வந்து சேர்ந்தது. தேர் கங்கை நதிக்கரையை அடைந்தது. அன்றிரவு அங்குத் தங்கினார்கள். குதிரைகளை அவிழ்த்து விட்டு அனைவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்

தனர். அந்தப் பிரதேசத்திற்கு இராமன் வருவான் என்று கேள்விப்பட்டுக் குகன் தன் பரிவாரங்களுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

## குகன்

குகன் வேடர் தலைவன். அவன் 'சிருங்கிபேரம்' என்னும் நகரத்தை ஆண்டு வந்தான். குகன் என்னும் பெயர் முருகனைக் குறிக்கும். இவன் கங்கையில் ஓடம் ஓட்டுகிறவன். மீன் பிடிப்பவன். ஆயினும் அற்றம் நீத்த மனத்தினன். அன்பினன். தூயவன்; தாயின் நல்லான். இராமன் கங்கைக் கரைக்கு வந்தபோது மீனும் தேனும் கொண்டு வந்து சமர்ப்பித்தான். அவைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். இராமன் அவைகளை ஏற்றுக்கொண்டு உட்காரச் சொல்லியும் உட்காராமல் நின்று கொண்டிருந்தான். போய்விட்டு மறுநாள் வரச் சொல்லியும் போகான்.

குகனுடைய உபசாரத்தைக் கண்டு இராமன் மகிழ்ந்தான். "நீ இங்கேயே தங்கி விடு. ஒரு குறைவும் இராது" என்று குகன் மன்றாடினான். இராமன் அவனை இறுகத் தழுவி, "அப்பனே! உன் அன்பு எனக்குத் தெரியும். நான் வனவாசம் செய்ய வந்திருக்கிறேன். இங்கேயே நிரந்தரமாகத் தங்கக் கூடாது" என்று சமாதானம் சொன்னான்.

அன்று மரத்தடியில் இராமனும் சீதையும் தங்கினார்கள். இலக்குவன், குகன், சுமந்திரன் ஆகிய மூவரும் தூங்காமல் பேசிக்கொண்டே இரவைக் கழித்தனர். அதிகாலையில் இராமன் எழுந்து இலக்குவனிடம் கூறினான்: "நதியைத் தாண்டிப் போகவேண்டும். குகனுக்குச் சொல்லி, நதியைக் கடப்பதற்குப் பெரிய ஓடம் ஏற்பாடு செய்யும்படி சொல்" என்றான்.

அவ்வாறே பெரிய ஓடம் சித்தம் செய்யப்பட்டது. ஆயுதபாணிகளாக இராமன், இலக்குவன், சீதை ஆகிய

மூவரும் நதியை நோக்கி நடந்தனர். இராமன், "சுமந்திரரே! அயோத்திக்குத் திரும்பிச் செல்வீர். அரசன் பக்கத்திலேயே இருந்து அவரை நன்றாகப் பாதுகாத்து வருவீர்" என்றான். குழந்தை போல் சுமந்திரர் உரக்க அழுதார். இராமன் ஆறுதல் வார்த்தைகளைக் கூறினான்.

குகனுக்கும் சமாதானம் சொன்னார்கள். தங்கள் தலைமயிரை அவ்விடத்தில் ஆலமரத்துப் பாலால் ஜடையாகச் செய்து முடித்துக் கொண்டார்கள். மூவரும் ஓடத்தில் ஏறிக்கொண்டார்கள். ஓடக்காரர்கள் ஓடத்தைக் கங்கையில் வேகமாகச் செலுத்தினர்கள். நடு ஆற்றில் சீதை, பாகீரதியைத் தியானித்து, "தேவி, எங்களுடைய விரதத்தை முடித்து மறுபடியும் உன்னைக் கடந்து க்ஷேமமாக ஊர் திரும்ப அருள்வாயாக!" என்று நமஸ்கரித்தாள். பிறகு பேசிக்கொண்டே கங்கையைக் கடந்து அக்கரை அடைந்தார்கள். வேறு துணையின்றி இம்மூவரும் அங்கு தனித்து நின்றனர்..

கங்கையின் தென்கரையில் இராமன் அடிக்கடி மனித சுபாவம் தலையெடுத்துத் துக்கப்படலானான். இதுவே இராமாயணத்தின் அழகு. சர்வ வல்லமை பொருந்திய ஈஸ்வரன், ஈஸ்வரனாகவே இருந்து எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டால், பிறகு அவதாரம் எதற்கு? சாமான்ய தருமத்தை நிலைநாட்ட முடியுமா? ஆதி அவதாரங்களுக்கும் பிந்திய அவதாரங்களுக்கும் பேதம் இதுதான். இராமாவதாரத்தில் மனுஷ சுபாவத்தின் போக்கும் அதனுடன் சாதாரண தருமத்தின் விளக்கமும் சேர்ந்தே வரும்.

இராமன் துக்கப்பட்டுப் பேசியபோது, இலட்சுமணன் இராமனுக்குத் தைரியம் சொல்லித் தேற்றினான். மறுநாள் பரத்வாஜ ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்கள். அவருடைய யோசனையின் பேரில் சித்திரகூடம் சென்றார்கள்.

**சித்திரகூடம்**

முனிவர் சொல்லியபடி காளிந்தியாற்றைக் கடப்பதற்கு ஒரு தெப்பம் கட்டினார்கள். ஆற்றைக் கடந்து சென்றபோது சீதை முன்போலவே வேண்டிக் கொண்டாள். இவ்வாறே வேறுசில சிற்றாறுகளையும் கடந்து சென்றார்கள். சீதை வழியில், "இது என்ன மரம்? இது என்ன மலர்?" என்று கேட்டுக்கொண்டே சென்றாள். அவள் கேட்கும் கேள்விகட்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே மகிழ்ச்சியாக அழைத்துச் சென்றார்கள்.

கிழங்கு, பழம் இவைகளை உணவாகக் கொண்டார்கள். க்ஷத்திரியர்களின் ஆசாரப்படி மாமிச ஆகாரத்தில் குற்றமில்லை. காலத்துக்கும் குலவழக்கத்துக்கும் ஏற்றபடி உடலைப் பாதுகாப்பதற்காக எந்த உணவும் தக்கவழியில் சம்பாதித்து, பூஜையில் வைத்து, அளவுக்கு மிஞ்சாமல் உண்பதில் யாதொரு தவறும் இல்லையென்பது பொது தர்மம்.

இலட்சுமணன் வனவாச காலம் முழுவதும் சாப்பிடாமலும் தூங்காமலும் விரதம் காத்தான் என்ற கதை வால்மீகி இராமாயணத்தில் இல்லை. மறுநாள் காலை ஜபதபங்களை முடித்துக்கொண்டு வழி நடந்தார்கள். இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தார்கள். சித்திர கூடமலை தென்பட்டது.

"இந்த மலைப்பிரதேசத்தின் அழகு பார்க்கப் பார்க்க வளர்ந்து கொண்டே போகிறது. கிழங்குகளும் பழங்களும் நிறைந்த வனமாக இது இருக்கிறது. நீர் சுத்தமாகவும் ருசியாகவும் இருக்கிறது. முனிவர்களும் ஆசிரவாசிகளும் இருக்கும் இந்த வனத்தில் நாமும் சந்தோஷமாக இருக்கலாம்" என்றான் இராமன்.

பிறகு வசிப்பதற்கு ஆசிரமம் கட்டத் தீர்மானித்தார்கள். இலக்குவன் சமர்த்தன், எல்லா வசதிகளோடும் கூடிய குடிசையைக் கட்டி முடித்தான். சாளரங்கள்,

கதவுகள் பொருத்தப்பட்டன. அழகான உறைவிடம் அமைந்தது. சித்திரகூட மலைப் பிரதேசத்தில் மால்யவதி நதிக்கரையில் அமைந்த இந்த ஆசிரமத்தில் மூவரும் வசித்து வந்தனர். துக்கத்தை மறந்து மகிழ்ச்சியாகக் காலங்கழித்து வந்தார்கள்.

## அயோத்தியில்

சுமந்திரன் திரும்பிச் சென்று தசரதனிடம் இராமன் கூறியவற்றைக் கூறினான். தசரதன் ஒன்றும் பேசவில்லை. கோசலைக்கும் சுமித்திரைக்கும் சுமந்திரன் ஆறுதல் கூறினான்.

தசரதன் முன்பொரு சமயம் வேட்டையாடச் சென்ற போது ஒரு ரிஷி குமாரன் மீது தவறுதலாய் அம்பெய்து விட்டான். சிறுவன் மாண்ட செய்தி கேட்டு, பெற்றோர்கள், "எங்களுக்கு நீ விளைத்த துக்கம், அரசே! நீயும் அனுபவிப்பாய். புத்திர சோகத்தால் நீயும் மாள்வாய்" என்று சொல்லிவிட்டு மாண்டனர். அந்தச் சாபம் இப்போது பலித்தது. இராமன் வனம் சென்றான் என்ற பிரிவுத் துன்பத்தால் அன்றிரவே அரசன் உயிர் நீத்தான்.

அரண்மனை துக்கத்தில் மூழ்கியது. சக்கரவர்த்தியின் மனைவிகள் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு துக்கம் தாங்காமல் அழுதார்கள். உத்திரகிரியைகளை நடத்த அரசனுடைய புதல்வர்கள் யாரும் பக்கத்தில் இல்லை. பரதனுக்குச் சொல்லியனுப்ப முடிவாயிற்று. அவன் வந்து சேரும் வரையில் தேகம் கெடாமல் இருக்க, ஏற்பாடுகள் செய்தார்கள். எண்ணெய்க் கொப்பரையில் கிடத்தினார்கள்.

அயோத்தியில் நடந்த துக்கச் செய்திகள் எதையும் அறிவிக்காமல் பரதனை அழைத்துவரத் தூதுவர்களைப் போக்கினார்கள். கேகய ராஜாவின் தலை நகரான இராஜக் கிரகம் போய்ச் சேர்ந்தார்கள். உண்மையை

மறைத்துப் பேசினார்கள். கேகய மன்னன் பரதனையும் சத்துருக்கனையும் பெரும் பரிவாரத்துடன் அனுப்பி வைத்தான். தேர்கள் வேகமாக அயோத்தியை நோக்கிச் சென்றன. எட்டாவது நாள் காலையில் அயோத்தி நகரம் வந்து சேர்ந்தார்கள்.

## பரதன்

பரதன், கைகேயியின் மைந்தன். திருமாலின் (சுதர்சனம்) சக்கர அம்சமாய்த் தோன்றியவன். இராம பக்தன். 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா' என்று குகனால் பாராட்டப்பட்டவன். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் இவனைப் 'பரதாழ்வார்' என்றே போற்றுகிறார்கள்.

நகரம் களையிழந்து காணப்பட்டது. மங்கள வாத்தியங்கள் ஏதும் முழங்கவில்லை. "கெட்ட சகுனங்கள் தோன்றுகின்றனவே! காரணம் யாது?" என்றான். தசரதனுடைய மாளிகைக்குள் பிரவேசித்தான். அங்கே தசரதனைக் காணவில்லை. கவலை இன்னும் அதிகரித்தது. கைகேயியைக் கண்டு வணங்கினான். அவள் மிகவும் பரிவுடன் விசாரித்தாள். இராஜ்யாதி ஆசையால் மகனுக்காகத் தான் தேடித் தந்த செல்வத்தைப் பற்றிக் கூறலானாள்.

தந்தை இறந்த செய்தியைக் கேட்டதும் ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று கவலையும் அழுகையும் கோபமும் கொண்டான். அழுதான்; புரண்டான்; புலம்பினான்; அலறினான். பரதனைச் சமாதானப்படுத்தக் கைகேயி எவ்வளவோ முயன்றும் பயனில்லை.

பரதனுக்குக் கைகேயி செய்த சூழ்ச்சி தெரிந்தது. பெரிய அநியாயம் நடந்து விட்டது என்று தாயை நிந்தித்தான். "என்ன காரியம் செய்து விட்டாய்? தகப்பனையும் அண்ணனையும் இழந்துவிட்ட பிறகு

எனக்கு இராஜ்யாதிகாரம் என்ன வேண்டியிருக்கிறது? தந்தையை உயிர் மாளவைத்து, இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு, என்னை அரசு புரியச் சொல்லுகிறாயே? இது நியாயமா?''

பொறுக்க முடியாத கோபாவேசத்தில் எழுந்து தாயைப் பார்த்து உரத்த குரலில் மீண்டும் பரதன் பேசலானான்: ''நீ கொடியவள்; இந்தக் குலத்தைப் பாழாக்கி விட்டாய். நீ நரகமே அடைவாய். புருஷனைக் கொன்ற கொலை பாதகியே! உனக்கும் எனக்கும் இனிப் பந்தம் அறுந்து விட்டது.''

கைகேயியினுடைய மனக்கோட்டை அழிந்தது. தன்னுடைய ஆசை ஒரு விநாடியில் புதைந்து போனதைக் கண்டாள். கீழே விழுந்து பரதவித்தாள்.

கௌசல்யையும் சுமத்திரையையும் பரதன் வணங்கி நடந்து போனதைப் பற்றி வருந்தினான். இறந்துபோன மன்னனுக்கு வழக்கப்படி செய்ய வேண்டிய உத்தரகிரியைகளைக் கிரமமாகச் செய்து முடித்தார்கள். ஆறாத துக்கத்தில் மூழ்கிய பரதசத்ருக்னர்களை வசிஷ்டர் முதலான அறிஞர்கள் சமாதானப்படுத்தினார்கள்.

மன்னன் இறந்த பதினான்காவது நாள் பரதனைப் பார்த்து, ''நம்முடைய மன்னன் சுவர்க்கம் சென்று விட்டான். இராம இலக்குவர்கள் வனம் சென்று விட்டார்கள். ராஜ்ய பாரத்தை ஏற்று அரசனாக விளங்குவீராக, எங்களைக் காப்பாற்றுவீர்களாக!'' என்றார்கள்.

இதைக் கேட்ட பரதன், ''மூத்தவன் இருக்க இளையவன் முடிசூட்டிக் கொள்வதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். இராமலட்சுமணர்களை அயோத்திக்கு அழைத்து வரப்போகிறேன். நான் முடிசூடிக் கொள்ள மாட்டேன். இது என் பிரதிக்ஞை (சபதம்)!'' என்றான்.

பெரும்படை பரிவாரத்தோடு பரதன் வனம் சென்று இராமனைச் சந்திக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டன.

## குகனுடைய சந்தேகம்

கங்கையின் வடகரையில் என்றும் காணாத கோலா கலம். ஒரு பெரும் படை வந்து நதிக்கரையில் தங்கியிருப் பதாகத் தெரிந்தது. குகன் பார்த்தான். பரதன் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு வந்து இருக்கிறான். நாட்டைக் கைப்பற்றியதோடு அல்லாமல் இராமனைக் கொல்லவும் வந்திருக்கிறான் என்று சந்தேகித்து, குகன் ஒரு படகிலேறிப் பரதனைச் சந்திக்கச் சென்றான். நதியைத் தாண்டி வந்து பரதனை வணங்கினான்.

பரதன் குகனைப் பார்த்து, "நான் இராமன் இருக்கும் இடம் போக வேண்டும். பாரத்வாஜ ஆசிரமம் எங்கே இருக்கிறது? அதற்கு வழி எப்படி?" என்று கேட்டான். "அப்படியே செய்வோம். இவ்வளவு பெருஞ்சேனை எதற்கு?" என்று குகன் வினயமாய்க் கேட்டான்.

"குகனே, நீ சந்தேகப்பட வேண்டாம். தகப்பனை இழந்த எனக்கு இராமனே தந்தையாவான். அவனை எப்படியாவது வேண்டிக் கொண்டு அயோத்திக்கு அழைத்துப் போக வந்திருக்கிறேன்!" என்றான் பரதன்.

குகன் பரதனுடைய பெருந்துக்கத்தையும் இராம னிடம் உள்ள விசுவாசத்தையும் கண்டு, "ஐயனே! உம்மைப் போன்ற மகான் உலகத்தில் வேறு எவரும் இல்லை. தங்களுடைய புகழ் உலகத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும்!" என்றான். இரவாயிற்று. பரத னுடைய சேனைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான் குகன். அனைவரும் படுத்துறங்கினர். பரதனும் குகனும் கங்கைக் கரையில் சந்தித்துத் துயரத்தைப் பங்கிட்டுக் கொண்டது ஆழ்வார்களும் பக்தர்களும் மிகவும் அனுப விக்கும் கட்டம்.

மறுநாட் காலை எல்லாரும் கங்கையைக் கடந்து பாரத்வாஜ முனிவருடைய ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

## பாரத்வாஜ ஆசிரமம்

பாரத்வாஜ முனிவரைப் பரதன் வணங்கினான். குகன் சந்தேகப் பட்டதைப் போலவே முனிவரும் சந்தேகக் கண் கொண்டே பேசுகிறார். பரதன் கண்களில் நீர் பெருக, ''ஐயோ, நான் செத்தேன்! தாங்களே என்னைச் சந்தேகித்து விட்டீர்களே! இராமனை அழைத்துப் போகவே வந்திருக்கிறேன். என்னை இப்படிச் சோதிக்காதீர்கள்!'' என்று பரதன் அழுதான்.

அதன்மேல் பாரத்வாஜர், ''பரதனே! உன் உள்ளத் தூய்மையை அறிந்தேன். ரகு வம்சத்தில் பிறந்தவன் அல்லவா? இராமன் சித்திரக்கூட மலையில் இருக்கிறான். இங்கு ஒருநாள் தங்கிச்செல்லுங்கள்!'' என்றார். பரதனும் அதற்கு ஒப்புக்கொண்டான். அற்புதமான நிகழ்ச்சி நடந்தது. சிறப்பான அதிதி பூஜை செய்தார். தேவர்களின் துணைகொண்டு எல்லாருக்கும் தகுந்த விடுதிகள், நீராடும் வசதிகள், சந்தனம், புஷ்பம், அன்னபானாதிகள், பணியாரவகைகள், தேவமாதர்களின் நடனக்கச்சேரி, கந்தர்வகானம் எல்லாம் சிறப்பாக இருந்தன. எல்லாரும் மெய்ம்மறந்து அனுபவித்தார்கள். இரவு அங்கு எல்லாரும் நித்திரையில் ஆழ்ந்தார்கள்.

## சித்திரக்கூடம்

மறுநாட் காலை பரத்வாஜ முனிவர், ''இவ்விடத்திலிருந்து இரண்டரை யோசனை தூரத்தில் மந்தாகினி நதி ஓடுகிறது. அதன் கரையில் ஜன சஞ்சாரமற்ற பெரிய காடு இருக்கிறது. தெற்கே சித்திரக்கூட மலை இருக்கிறது. மலையை யடுத்துள்ள வனத்தில் ஒரு பர்ண

சாலையில் இராமனும் இலட்சுமணனும் சீதையும் வசித்து வருகிறார்கள்'' என்று சொல்லி, அங்கே போகும் வழியையும் விளக்கிச் சொன்னார்.

அதன் பின்னர் கோசலை, சுமத்திரை, கைகேயி மூவரும் முனிவரை வணங்கி, விடைபெற்றுக் கொண்டனர். பரதனும் பரிவாரமும் முனிவர் காட்டிய வழியே சென்றனர். சித்திரக்கூட மலை தெரிந்தது. ஓரிடத்தில் புகை தெரிந்தது. அதுவே இராமபிரான் ஆசிரமம் என்று யூகித்தனர். பரிவாரத்தை அங்கேயே நிறுத்திவிட்டுச் சுமந்திரன், வசிஷ்டர், பரதன் ஆகிய மூவர் மட்டுமே புகையை நோக்கிச் சென்றார்கள்.

மலையின் கம்பீரமும், வனத்தின் அழகும், பட்சிகளின் மதுரமான பாட்டும் விளையாட்டும் இராமனது உள்ளத்தைக் கவர்ந்தன. ஊரையும் உறவினரையும் விட்டுப் பிரிந்த துயரத்தை ஒருவாறு மறந்திருந்தான். இவ்வாறு தன் துக்கத்தை அகற்றியும் சீதைக்கு அவைகளைக் காண்பித்து உற்சாகம் ஊட்டியும் சபதத்தை நிறைவேற்றியும் வந்தான் இராமன்.

இராமன் ஜானகியுடனும் தம்பி லட்சுமணனுடனும் ஆற்றங்கரையிலும் மலையிலும் வனத்திலும் சஞ்சரித்துக் கொண்டு மகிழ்ச்சியாய்க் காலங் கழித்து வந்தான். மலைச் சாரலில் ஓர் இடத்தில் நிம்மதியாக உட்கார்ந்திருந்தார்கள். திடீரென்று தூரத்தில் தூசு கிளம்பி ஆகாயமளாவி நின்றது. பேரொலியும் கேட்டது. வனவிலங்குகள் இங்கு மங்கும் ஓடின.

இலட்சுமணன் ஓர் உயர்ந்த ஆச்சா மரத்தின் மேல் ஏறிப் பார்த்தான். ''அண்ணா! ஒரு பெருஞ்சேனை நம்மை நோக்கி வருகிறது, யுத்தத்திற்கு ஆயத்தமாவோம்!'' என்றான்.

''அண்ணா, இராஜ்யத்தைப் பெற்றதோடு நில்லாமல், பரதன் நம்மை எதிர்த்துக் கொல்லவும் வருகிறான்.

தேரில் திரு ஆத்திக் கொடி பறக்கிறது. அவனை விடப் போவதில்லை. நமமை எதிர்த்து வரும் இவனைக் கொல்வதே தருமமாகும்.'' இவ்வாறு இலட்சுமணன் கோபத்தில் தன்னையும் மறந்து பேசினான்.

**சந்திப்பு**

''நீ வெற்றி வீரன். பரதனுடைய பெருஞ்சேனையை நாசமாக்கி விடுவாய். அதில் சந்தேகமில்லை. ஆனால் நான் சொல்வதைக் கேள். பரதன் இப்போது இங்கே ஏன் வருகிறான் என்பதை நான் அறிவேன். அவன் என்னைவும் தருமம் தவறாதவன்!'' என்று இராமன் தம்பியைச் சாந்தப்படுத்தினான்.

புல் தரையில் உட்கார்ந்திருந்த இராமனைக் கண்டதும் பரதன் அண்ணன் இருந்த இடம் நோக்கி ஓடினான். ''அண்ணா'' என்று கதறிக் கொண்டு இராமன் காலடியில் விழுந்தான்; விம்மியழுதான். இதற்குள் சுமந்திரனும் குகனும் ஓடி வந்தார்கள். சடையும் மரவுரியும் தரித்துத் தன் முன் கைகூப்பிய வண்ணம் தரையில் விழுந்து கிடந்த பரதனைப் பார்த்தான் இராமன்.

பரதனை வாரியணைத்து, உச்சி மோந்து, மடியின் மேல் உட்கார வைதது, ''குழந்தாய்! தந்தையைத் தனியே விட்டு விட்டு வரலாமா? மிகவும் இளைத்து இருக்கிறாயே!'' என்று இராமன் விசாரித்தான். பரதன் பேச்சிழந்து கிடந்தான்.

சற்று நேரம் கழித்துப் பரதன் பேசலானான்: ''தந்தை சுவர்க்க லோகம் புகுந்தார். தங்கள் பிரிவைத் தாங்க மாட்டாமல் உயிர் நீத்தார். வருந்தாதே எழுந்து தம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கிரியைக் கடனைத் தீர்ப்பாயாக. நானும் சத்துருக்கனனும் செய்தாயிற்று. நீ விடவேண்டிய எள்ளும் நீருமே அவருக்குச் சாந்தி தரும்'' என்று கூறினான்.

தந்தை இறந்தார் என்ற சொல்லைக் கேட்டதும் இராமன் மயங்கி விழுந்தான். கதறினான். வாய் விட்டு அழுதான். அந்த அவல நிலையைக் கம்பர் பல பாடல்கள் மூலம் நமக்குக் காட்டுகின்றார்.

அரச குமாரர்களும் சீதையும் சுமந்திரனுடன் ஆற்றுக்குச் சென்றார்கள். நீராடி நீர்க்கடன் இறுத்தனர். சடங்குகளைச் செய்துவிட்டுப் பர்ணசாலைக்குத் திரும்பினர். பெருங்குரலில் அழுதனர். தந்தையின் மறைவைக் குறித்து இவர்கள் துயரக்கடலில் மூழ்கியிருந்தார்கள். ஆனால் பரிவாரம் இராமனைக் கண்டு மகிழ்ந்திருந்தது.

பரதன் இராமனுடைய பாதங்களை இறுகப் பற்றிக் கொண்டு கூறலானான்: ''அண்ணா! தந்தை மேலுலகம் போய்விட்டார். நீ அரச பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும மறுக்கக்கூடாது. நாங்கள் அனைவரும் வேண்டிக்கொள்கிறோம். எங்கள் பிரார்த்தனையைத் தள்ளிவிடாதே'' என்று பரதன் கண்களில் நீர் ததும்பக் கூறினான்.

பரதனைத் தழுவியெடுத்த இராமன் சொல்கிறான்: ''அப்பனே! நாம் நற்குலத்தில் பிறந்தோம். நல்ல முறையில் வளர்க்கப்பட்டோம். நாம் தவறு செய்ய மாட்டோம், துக்கப்பட வேண்டாம். உன் பேரில் யாதொரு குற்றமும் இல்லை. நீ அரச பதவியை ஏற்றுக் கொள். நான் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யத் தான் வேண்டும். நாம் அரசன் ஆணையை நிறைவேற்ற வேண்டும்'' என்றான் இராமன்.

''தந்தையின் சொல்லை நான் புறக்கணிக்க முடியாது. வீணாக முயற்சி செய்யாதே'' என்று இராமன் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டான்.

## ஜாபாலியின் நாஸ்திகவாதம்

பரதனுடன் வந்த புரோகித கூட்டத்தில் ஒருவராகிய ஜாபாலி இந்தச் சமயத்தில் நடுவில் புகுந்து இராமனுக்கு

நாஸ்திகம் உபதேசித்தார். "தந்தையின் ஆணை என்று திரும்பத் திரும்ப ஏதோ சொல்லுகிறாய். தசரதன் என்பது ஓர் உடல். அது பஞ்ச தத்துவம் அடைந்து விட்டது. ஐம்பெரும் பூதங்களோடு கலந்து போய் விட்டது. முடிந்துபோன அந்த உருவத்திற்கும் உனக்கும் இப்போது ஏதோ சமபந்தம் இருப்பதுபோல் பேசுகிறாய். இது அறியாமை. கண்ணெதிரிலுள்ள சுகங்களை விட்டு விட்டுத் தரும்ம் என்றும் பரலோகம் என்றும் மூடர்களுடைய பேச்சே நீயும் பேசுகிறாய். துயரத்தில் மூழ்கிக் கிடக்கிறது அயோத்தி நகரம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. போய் முடிசூட்டிக்கொண்டு சுகங்களை அனுபவி பரதன் சொல்வதைக் கேள். தந்தையின் கட்டளை என்று சொல்லிக்கொண்டு செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருக்கிறாய்" என்று கூறினார்.

ஜாபாலி சொன்னது இராமனுக்கு மிகுந்த அதிருப்தியை உண்டாக்கிற்று. "சத்தியத்தை நீர் பொருளாக மதிக்கவில்லை போலும். நீர் சொல்வது சரியாக இல்லை. நாஸ்திகம் பேசுகிறீர். சத்தியத்தை விட மேலான ஒரு பொருள் உலகத்தில் இல்லை" என்றான் இராமன்.

வசிஷ்டர் சமாதானம் செய்யலானார். "இராமா! ஜாபாலி நாஸ்திகர் அல்லர். உன்னை எப்படியாவது அயோத்திக்கு அழைத்துப் போக வேண்டுமென்பதும் பரதனுடைய துன்பத்தை அகற்ற வேண்டுமென்பதும் அவருடைய கருத்து. அவர் மேல் கோபம் வேண்டாம். அரச பதவியை ஏற்றுக்கொள்வது உன் குல தர்மம். பரதனுடைய விண்ணப்பத்தை மறுக்காதே. தஞ்சமடைந்தவர்களைக் கைவிடுவது உனக்கு ஏற்றதன்று" என்று இணக்கமாகக் கூறினார்.

இராமன் இசைவதாகக் காணப்படவில்லை. அப்போது வசிஷ்டர் பரதனைப் பார்த்து, "இராமனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு, அவனுக்காக நீ அரசாட்சி

செய். அப்படிச் செய்வதால் பழியும் இல்லை; சத்தியமும் காக்கப்படும்'' என்றார்.

பரதனைத் தன் மடிமேல் உட்காரவைத்து இராமன், ''தம்பி, நான் தந்த இராஜ்யமாகவே கருதி நீ ஒப்புக் கொண்டு, தந்தை சொற்படி நட'' என்று தன் அன்பின் சக்தியை எல்லாம் செலுத்திக் கேட்டுக் கொண்டான்.

''அண்ணா! நீயே என் தந்தை. என் தெய்வம். நீ சொல்கிறபடியே செய்கிறேன் உன் மிதியடியை(பாதுகை) எனக்குத் தந்தாயானால் உனக்குப் பதிலாக அதை வைத்துக்கொண்டு நான் பதினான்கு ஆண்டுகள் முடியும் வரையில் நகரத்திற்கு வெளியே இருந்து கொண்டு உனக்காக அரச காரியங்களைச் செய்து, உன் பாதுகைக்கு என் பணியைச் சமர்ப்பிப்பேன். பதினைந்தாவது வருஷ ஆரம்பத்தில் நீ நகரத்திற்கு வந்து அரச பதவியை ஒப்புக் கொள்வீராக'' என்று பரதன் வேண்டி நின்றான்.

இராமன் 'அப்படியே ஆகுக' என்றான். தன் கால்களை அன்புடன் பாதுகை மேல் வைத்து எடுத்துப் பரதனிடம் தந்தான். பரதன் வணங்கிப் பெற்றுக் கொண்டு, தன் தலைமேல் வைத்துக்கொண்டான்.

பரதனும் பரிவாரமும் அயோத்தியை நோக்கிச் சென்றார்கள். வழியில் பாரத்வாஜ முனிவரைக் கண்டு நடந்தவற்றைக் கூறினர். முனிவர் பரதனுடைய நற்குண நற்செய்கைகளைப் பாராட்டி வாழ்த்தினார். அவ்விடமிருந்து குகனுடைய இருப்பிடத்திற்குச் சென்று, கங்கையைத் தாண்டி அயோத்தியை அடைந்தார்கள்.

''என் துக்கம் பெரிது. அதை நந்திக் கிராமத்திலிருந்து சகித்துக்கொண்டு நான் இராமனிடம் வாக்குக் கொடுத்த படி அரச காரியங்களை அங்கிருந்து கொண்டே கவனிப்பேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்றான், பரதன்.

## பாதுகா பட்டாபிஷேகம்

அவ்வாறே செய்யப்பட்டு, சபைகூட்டி, "இந்த இராஜ்யம் இராமனுடையது. தற்காலிகமாக என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அண்ணனுக்குப் பதிலாக அவனுடைய பாதுகையை ஆசனத்தில் அமர்த்தியிருக்கிறேன். அதன் அடிமையாக நான் அரசாங்கம் நடத்தி வருகிறேன்," என்று பரதன் அரச சபையில் சபதம் செய்தான்.

அப்படியே அரசாட்சியை மந்திரிகளின் உதவியைக் கொண்டு சிறந்த முறையில் பரதன் நந்திக் கிராமத்தில் இருந்து கொண்டு இராமனுடைய வனவாசம் முடிந்து திரும்பும் வரையில் ஒரு தவமாகக் கருதி நடத்தி வந்தான்.

## இராம கீதை

பரதன் இராமனைச் சித்திரகூடத்தில் சந்தித்தபோது இராமன் பரதனுக்கு உபதேசித்த பொன்மொழிகள் வருமாறு:

1 மனிதனது விருப்பப்படி எந்தக் காரியமும் நடைபெறாது. மனிதனை ஆட்டிப்படைப்பவன் இறைவன்.

2. செல்வம் யாவும் அழியக்கூடியவை; உயர்வு உண்டெனில் தாழ்வும் உண்டு. எவ்வளவுக்கு எவ்வளவு நெருங்கிப் பழகுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு பிரிவு நிச்சயம் எத்தகைய வாழ்க்கையும் மரணத்தை முடிவாகக் கொண்டது.

3 மரத்தில் தோன்றிய பழம் பழுத்து நிலத்தில் விழுவது எவ்வளவு நிச்சயமோ அதுபோல் மனிதன் பிறந்து இறப்பது நிச்சயம். இருப்பது நிச்சயமல்ல.

4. எவ்வளவு உறுதியாக வீட்டைக் கட்டினாலும் காலப் போக்கில் வீடு இடிந்து அழிவது போல மனிதனும் வயது முதிர்ந்து இறந்து விடுகிறான்.

5. கழிந்த இரவு திரும்ப வருவதில்லை. கடலை அடைந்த யமுனா நதி திரும்ப வருவதில்லை. அது போலவே கழிந்த இளமை மீண்டும் வருவதில்லை.

6. எல்லாப் பிராணிகளுக்கும் இரவும் பகலும் கழிந்த படியே உள்ளன. கோடைக் காலத்தில் நீர் வற்றிக் குறைவது போலவே பிராணிகளுக்கும் ஆயுள் விரைவில் குறைந்து கொண்டே போகிறது.

7. நீ உன் நிலையை எண்ணி வருந்தாமல் பிறரைப் பற்றி ஏன் வருந்துகிறாய்? நீ நிற்கும் காலத்திலும் போகும் காலத்திலும் ஆயுள் குறைந்து கொண்டே போகிறது.

8. நீ செல்லுகிற காலத்திலும் உட்காருகிற காலத்திலும் வெகு தூரம் சென்று திரும்பும் காலத்திலும் யமன் அதே வழியில் உன்னுடன் சென்று கூடவே திரும்பி வருகிறான்.

9. உடலெங்கும் தசை சுருங்கி விடுகிறது. தலை மயிர் நரைத்து விடுகிறது. முதுமையால் உடல் தளர்ச்சி யடைகிறது. என்ன செய்தால் இவற்றை அகற்ற முடியும்?

10. சூரியன் உதித்த காலத்திலும் மறைந்த காலத்திலும் மனிதன் மகிழ்ச்சியடைகிறான். ஆனால் தன் வாழ்நாளில் ஒரு நாள் குறைந்ததை அவன் அறிவதில்லை.

11. புதிது புதிதான ருதுக்களின் ஆரம்ப காலத்தைக் கண்டு மனிதன் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் ருதுக்களின் கழிவால் தன் ஆயுட் காலம் கழிவதை அவன் அறிவதில்லை.

12. கடலில் வெவ்வேறான இடங்களில் மிதந்து கொண்டிருந்த கட்டைகள் ஒரு காலத்தில் ஒன்று கூடுகின்றன. கூடியிருந்த கட்டைகள் ஒரு காலத்தில் பிரிந்து விடுகின்றன. அதுபோலவே மனைவி மக்கள் தாயாதிகள் செல்வம் யாவும் ஒன்று சேரவேண்டிய காலத்தில் பிரிந்து

விடுகின்றனர். சேர்க்கை எப்படி நிச்சயமோ அவ்வாறே பிரிவும் நிச்சயம்.

13. பிராணிகள் தோன்றியபடி இருப்பதில்லை. முதுமையில் இறந்து விடுகின்றன. இறந்ததை எண்ணி வருந்தலாமே தவிர திரும்பிக் கொண்டு வர எவராலும் இயலாது.

14. வழியில் நடந்து செல்கிறவனைப் பார்த்த வழிப் போக்கன், "நானும் உன்னுடன் வருகிறேன்" என்று கூறித் தொடர்ந்து வருவது போல, தந்தை பாட்டன் சென்ற வழியில் நாமும் செல்வது நிச்சயம். மீண்டு வருவது என்பது இயலாது. ஆகையால் பிரிவால் வருந்து வதில் பயன் என்ன?

15. போகிற வெள்ளத்தை நிறுத்த முடியாதது போல, வயது முதிர்ச்சியால் இறைவனைத் தடுக்க முடியாது. கிடைத்ததைக் கொண்டு மகிழ்கிறவர்களே சுகத்தை அடைந்தவர் ஆவர்.

## முடிவுரை

இராமன் பரதனுடைய மனக் கலக்கத்தை உணர்ந்து கொண்டு அவனுக்கு அளிக்கும் இந்த உத்தரமே இராம கீதை எனப்படும். துக்கத்துடனும் சோகத்துடனும் அருச்சுனனைப் பார்த்துக் கண்ணன் தேற்றிக் கூற ஆரம் பிக்கிறான் என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது போலவே நல்லொழுக்கமும் தைரியமும் உள்ள இராமன் துக்கித்து மனம் கலங்கி அழுது கொண்டிருக்கும் பரதனை அன்பு மொழிகளால் தேற்றுவதாக இராம கீதை அமைந் துள்ளது.

குறிப்பு:— இராம கீதை காலத்தில் முந்தியது. பகவத் கீதை காலத்தால் பிந்தியது.

# 3. ஆரணிய காண்டம்

## தண்டகாரண்யம்

தினக்காக இல்லாமலும் வேறு எவ்வித பற்றும் இல்லாமலும் பகவானுடைய பாதங்களில் பலனைச் சமர்ப்பித்து, உலக நன்மையை முன்னிட்டுக் கடமை களைச் சரிவரச் செய்து வருவதும் தவம் ஆகும். இராமன் காட்டில் வனவாசம் செய்த பதினான்கு ஆண்டு காலம் வரை பரதன் அயோத்தியில் நந்திக் கிராம வாசியாகத் தவம் செய்து வந்தான் என்பதாம்.

சித்திரக் கூடத்திலிருந்த முனிவர்கள் அரக்கர்களின் தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் வேறு இடத்திற்குச் செல்ல முடிவு செய்தார்கள். இராமன் சமாதானம் சொல்லியும் கேட்காமல் வேறு இடம் போய்விட்டார்கள். பரதன் திரும்பிப் போனது முதல், இராமனுக்குச் சித்திரக் கூடத்தில் மனம் நிம்மதியில்லை. அந்த நினைவினால் துக்கம் நீடித்தது. ஆகவே, இவர்களும் சித்திரக் கூடத்தை விட்டு வேறு இடம் செல்ல முடிவு செய்தனர்.

அத்திரி மகரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்று, அவரை வணங்கித் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். சீதை முனி பத்தினியாகிய அனுசூயையை வணங்கி அவளுடைய ஆசியைப் பெற்றாள். அனுசூயை மகா புண்ணியவதி. அவள் கொடுத்த ஆடை ஆபரணங்கள் சீதைக்கு மன நிம்மதியை அளித்தன. பிறகு போக வேண்டிய வழி கேட்டுத் தெரிந்து கொண்டு மூவரும் சென்றார்கள்.

**விராதன்**

மூவரும் தண்டகாரண்யப் பெருங் காட்டினுள் நடந்து சென்றனர். ஓரிடத்தில் முனிவர்கள் வாசம் செய்த அடையாளங்கள் தென்பட்டன. அந்த இடம் வளமுடைய தாகவும் முனிவர்கள் தங்கியிருப்பதற்கேற்ற சாந்த முடையதாகவும் இருந்தது. முனிவர்கள் இவர்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். தங்க இடம் கொடுத்து உபசரித்தார்கள். மறுநாட் காலையில் முனிவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள். கொடிய விலங்குகளும் பறவைகளும் நிறைந்த வனம் அது.

சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே சென்றார்கள். திடீரென்று ஒரு பெரிய உருவம் தென்பட்டது. நர மாமிசம் தின்னும் அரக்கன் போல் கர்ஜனை செய் தான், புலித் தோலை உடுத்துப் பெரிய சூலாயுதத்தை ஏந்தி நின்றான். "ஏமாற்றித் திரியும் வஞ்சகர்களே; நான் யார் தெரியுமா? நான்தான் விராதன்; முனிவர்களைக் கொன்று தின்பவன்" என்று கர்ஜனை செய்து சீதையைத் தூக்கினான்.

இராமன் அமைதியை இழந்து கதறினான். இலட்சுமணன் கொதித்தெழுந்தான். "நீங்கள் யார்?" என்று விராதன் கேட்டான்.

"நாங்கள் தசரதச் சக்கரவர்த்தியின் மக்கள். வனவாசம் செய்ய வந்திருக்கிறோம். நீ யார் சொல்?" என்றான் இராமன். "அப்படியா! தசரத குமாரனே கேள். சொல்கிறேன். நான் விராதன். உங்களுடைய ஆயுதங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. பிரம்மாவிடம் வரம் பெற்றிருக்கிறேன். பெண்ணை விட்டு விட்டு ஓடுங்கள்" என்று விரட்டினான் அந்த அரக்கன்.

இராமன் கடுங்கோபங் கொண்டு, வில்லை வளைத்து, கூரிய அம்பொன்றை எய்தான். அம்பு அவன் உடலைத்

துளைத்தது. சீதையைக் கீழே வைத்துவிட்டுச் சூலத்தை எடுத்துக் கொண்டு இராம இலக்குவர் மேல் பாய்ந்தான். அவர்களைத் தோளின் மேல் தூக்கிக் கொண்டான். அவன் சாகா வரம் பெற்றிருந்தமையால குழி தோண்டி அவனைப் புதைத்தார்கள். அரக்கனும் கந்தர்வர்களுக்குரிய மேலுலகம் எய்தினான்.

### சரபங்கர்

பிறகு இராம இலக்குவர்கள் தனியேயிருந்த சீதையை அழைத்துக் கொண்டு சரபங்க ரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றார்கள். முனிவரை வணங்கினார்கள். அவர் வயது முதிர்ந்தவர். "உனக்காகத்தான் காத்திருந்தேன். இப்போது என் விருப்பம் பூர்த்தியாயிற்று. என் புண்ணிய பலன்களை உனக்குத் தந்தேன்" என்றார்.

முனிவர், அவதார விஷயத்தை அறிந்தவராகையால், "சுதீஷ்சண முனிவரைக் கேட்டு இந்த வனத்தில் எங்கே வசிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்" என்றார். அதன் பிறகு சரபங்கர் தீ வளர்த்து அதில் பிரவேசித்தார். தீயிலிருந்து திவ்விய ஒளியோடு மேலுலகம் சென்றார்.

விராதன் மடிந்ததைப் பற்றி கேள்விப்பட்டு, அங்கிருந்த முனிவர்கள் ஒன்று கூடி இராமனிடம் சரணடைந்தார்கள்.

"தைரியமாக இருங்கள்" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, இராம இலட்சுமணர்கள் சீதையுடன் சுதீஷ்சண முனிவர் ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்கள்.

### சுதீட்சண முனிவர்

இராமன், முனிவரைக் கண்டு வணங்கித் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். பிறகு, "என்னை ஆசிர்

-வதிக்க வேண்டும்'' என்று வேண்டி நின்றான். வீரனைக் கண்டதும் முனிவர் எழுந்து ஆலிங்கனம் செய்து கொண்டார்.

''தருமத்தைக் காக்கும் சிரேஷ்டனே! உனக்கு நல்வரவு. நான் உன் வரவுக்காகத்தான் காத்திருந்தேன். என் புண்ணியம் அனைத்தும் உன்னைச் சேரும்'' என்று வாழ்த்தினார். அன்றிரவு முனிவருடைய ஆசிரமத்தில் அதிதிகளாகத் தங்கியிருந்தார்கள்.

மறுநாட் காலையில் மூவரும் எழுந்து நீராடி ஓமம் செய்தனர். முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப் பட்டார்கள்.

## வனவாசம்

ஆரண்ய காண்டம் ஆரம்பிக்கிறது. சீதைக்கு ஏற்படப் போகும் விபத்துக்குக் கவி நம்மை ஆயத்தப் படுத்துகிறார். தண்டகாரண்யத்தில் இராமபிரானுக்கு ஒரு புதுக் கடமை ஏற்பட்டு விட்டது. ரிஷிகளைத் துன்புறுத்தும் அரக்கர்களைக் கொல்லும் கடமை. வரப் போகும் கஷ்டத்தின் அறிகுறியாகச் சீதையின் மனத்தில் ஒரு பயம் தோன்றிற்று. மழைக்கு முன்வரும் காற்றைப் போல் நடக்கப் போகும் அனர்த்தங்களுக்குச் சூசனை யாகக் கவி பல பாடல்களைப் பாடுகிறார். தண்டகாரண் யத்தில் ரிஷிகளினிடையே பத்து வருஷங்கள் இம் மூவரும் யாதொரு துன்பமும் இல்லாமல் கழித்தார்கள்.

வனத்தின் அழகு சொல்லுந்தரமன்று. மான் கூட்டங் கள், காட்டு எருமைகள், வராகங்கள், யானைகள், பறவைகள், அழகிய மரங்கள், செடிகள், கொடிகள், கண்ணைக் கவரும் நீலோற்பல, தாமரைத் தடாகங்கள், நீர்ப் பறவைகள் இவற்றையெல்லாம் கவி வர்ணித்திருக் கிறார். ரிஷிகளிடையில் வாசம் செய்வதில் உண்டான சத்சங்க மகிழ்ச்சியைப் பத்தாண்டு இராமன் அனுபவித்

தான். இப்படிப் பத்து ஆண்டுகள் கழித்து, வனவாச விரதத்தின் காலவரை அநேகமாகத் தீர்ந்து போனதாக எண்ணும் சமயத்தில் அகஸ்திய முனிவரைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசை இராமனுக்கு உண்டாயிற்று.

## அகத்தியர்

அகத்தியர் திருமால் அளந்த உலகையெல்லாம் செந்தமிழால் அளந்தவர். மாய வினையால் மாதவர் பலரைக் கொன்று தின்ற வாதாபி, இல்வலன் என்னும் அசுரர்களை அழித்தவர் சூரிய சந்திரர் முதலிய கிரகங்கள் செல்லும் வானவீதியைத் தடை செய்து வளர்ந்த விந்திய மலை தன் செருக்கு அடங்குமாறு-பாதாளத்தை அடைந்து குறுகுமாறு- செய்தவர். அரவு சூடிய சிவபெருமான் கட்டளையை மேற்கொண்டு தென்திசை சென்று பொதிய மலையில் ஈசனுக்கு நிகராக இருந்து உலகம் சமநிலை அடையச் செய்தவர். சிவபெருமான் உபதேசித்த தமிழ் இலக்கணங்களை ஆராய்ந்து தென்னாட்டவர்க்கு வழங்கிய பெருமை உடையவர். இவரைக் குறுமுனி என்றும் கூறுவர். கடலை உள்ளங்கையில் முகந்து குடித்தவர் என்று புராணங்கள் கூறும்.

மூவரும் அகத்திய முனிவருடைய ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தனர். முனிவர் எழுந்து வந்து இராமனை வரவேற்றார். உபசார வார்த்தைகள் கூறினார். "நீங்கள் சித்திரக் கூடம் வந்த செய்தி தெரிந்தது இங்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வந்தது நல்லதாயிற்று. இவ்விடம் நீங்கள் சுகமாக இருக்கலாம். இங்கே அரக்கர்கள் தொந்தரவு இல்லை" என்றார்.

"தங்களுடைய ஆசி பெற்றேன். பாக்கியவான் ஆனேன். நான் தண்டகாரண்ய முனிவர்களுக்கு வாக்குத் தந்திருக்கிறேன். அதன்படி திரும்ப வேண்டும்," என்றான் இராமன். பிறகு அகத்தியர் இராமபிரானுக்கு, மகா

விஷ்ணுவுக்காக விசுவகர்மா செய்த வில்லும், என்றும் குறையாத அம்பறாத் தூணியும், கத்தியும் தந்தார். மகா விஷ்ணுவைப் போல அரக்கர்களை அழிப்பாயாக'' என்று ஆசிர்வாதம் செய்தார்.

பஞ்ச வடியில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு அங்கே எஞ்சியுள்ள வனவாச காலத்தைக் கழிப்பது என்று இராமபிரான் தீர்மானித்தான். அகத்திய முனிவர் மூவருக்கும் ஆறுதலான வார்த்தைகளைக் கூறிப் பஞ்ச வடிக்கு அனுப்பினார்.

## ஜடாயு

இராஜ குமாரர்களும் சீதையும் அகத்தியர் சொன்ன வழியைப் பின்பற்றிப் பஞ்சவடிக்குச் சென்றார்கள். போகும் வழியில் ஒரு பெரிய கழுகைக் கண்டார்கள். அந்தப் பெருகு 'அரக்கனைப் போல் காட்சியளித்தது. "நீ யார்?'' என்று இராமன் கேட்டான். அந்தக் கழுகு மிகுந்த அன்புடன், ''குழந்தாய்! நான் உங்கள் தந்தையின் நண்பன்'' என்றது. பின்பு அது தன் குல முறையை விவரித்தது. ''சம்பாதியின் தம்பி நான். என் பெயர் ஜடாயு!'' என்றது

இராம இலக்குவர்கள், காட்டில் தமக்கு ஒரு பெருந் துணை கிடைத்தது என்று மகிழ்ந்தார்கள். ''வாய்மை யைக் காத்த தந்தை சுவர்க்கம் சென்று விட்டார்'' என்று இராமன் சொல்லக் கேட்டதும் ஜடாயு துயரப்பட்டு, மூர்ச்சையடைந்தது பிறகு ஒருவாறு மூர்ச்சை தெளிந்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லிற்று.

## பஞ்சவடி

இராமபிரான் அயோத்தியை விட்டுக் காட்டுக்கு வந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. தண்ட காரண்யம் என்ற பெருங்காட்டில் பஞ்சவடி என்பது ஓர்

அழகான இடம். ஐந்து ஆலமரங்கள் உள்ள இடம் என்பது அதன் பொருள். தற்போது 'நாசிக்' என்று வழங்கப்படும் இடம்தான் அது. அந்தச் சூழ்நிலை காட்டின் இடையே அவர்களுக்கு அழகிய வாழ்விடமாக அமைந்தது.

கோதாவரி நதி பக்கத்தில் பாய்கிறது. தெளிந்த நீர்ப் பெருக்கு. சான்றோர்களது கவியைப் போலத் தெளிந்த நீர் என்று கம்பர் பாடுகிறார்.

''நானும் நீயும் சீதையும் இந்த இடத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு எவ்வளவு காலமேனும் சந்தோஷ மாக இருக்கலாம். மலைகளைப் பார். அதிக தூரத்திலும் இல்லை. அதிக அண்மையிலும் இல்லை. மான் கூட்டங் களைப் பார். மரங்களும் மரங்களில் விளையாடும் பறவைகளின் இனிய நாதங்களும் புஷ்பங்களும் தண்ணீரும் நீர்ப்பறவைகளும் மணலும் எல்லாம் எவ்வளவு ரமணீய மாக இருக்கின்றன. இங்கே நீ ஒரு சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து ஆசிரமம் அமைப்பாய்'' என்று இராமன் தன் தம்பியிடம் கூறினான்.

இலக்குவன் ஓர் இடத்தைக் கண்டு, சுவர் எழுப்பி, அதன் மீது கூரை பரப்பி, மிகச் சாமார்த்தியமாக ஆசிரமம் கட்டி முடித்தான்.

இராமன் கண்டு தம்பியைப் பாராட்டினான். பஞ்சவடி பர்ணசாலையில் இராமனும் சீதையும், இலட்சுமணனுடைய அன்புப் பணியைப் பெற்றுச் சுக மாகக் காலங்கழித்தார்கள். அது மார்கழி மாதம். மூவரும் அதிகாலையில் கோதாவரி நதிக்கரையை நோக்கிச் சென்றனர். நீராடி, காலை வந்தனம் செய்துவிட்டு நீர் எடுத்துச் சென்றார்கள். அந்தப் பருவத்தின் சிறப்புக் களைப் பற்றிப் பேசிக்கொண்டே போனார்கள்.

பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் பண்ணி விட்டுச் சூரிய நமஸ்காரம் செய்தான்; மகாதேவனைப்

போல் காட்சியளித்த இராமபிரான் தம்பியோடும் மனைவியோடும் பர்ணசாலைக்குத் திரும்பினான்.

## சூர்ப்பனகை

சூர்ப்பனகை இராவணனது தங்கை. அவன் குலத்தோடும் அழிவதற்குக் காரணமாயிருந்தவள். காமவல்லி என்னும் பெயரினள். அரக்கியே யாயினும் அழகிய பெண்ணுருவம் தாங்கி இராமனிடம் சென்றவள். மண மாகாதவள். இந்தக் காவியத்தில் இவள் இரண்டாவது எதிர்முகம். மந்தரை முதல் எதிர்முகம் என்று முன்பு கூறினோம். இவள் இல்லாவிடில் காவியத்தின் போக்கு வேறுவிதமாய் இருந்திருக்கும்.

வால்மீகி தன் இராமாயணத்தில் சூர்ப்பனகையின் கதையை மிகச் சுருக்கமாகச் சொல்லிவிட்டார். அவள் அரக்கி உருவிலேயே வந்து அவர்களுடன் உரையாடிய தாகக் காட்டுகிறார். தோட்டத்தில் மேயவந்த கழுதை யைத் தடியால் அடித்து ஓட்டியதைப் போல் சூர்ப்பனகை யைத் துரத்திவிட்டார்கள் என்று முடிக்கிறார்.

கம்பருடைய இராமாயணத்தில், காதல் கொண்ட சூர்ப்பனகை ஓர் அழகிய மானிடப் பெண்ணின் வடிவங் கொண்டு இராமனை விரும்பியதாக வைத்து அதன் பேரில் நிகழ்ச்சிகள் தனிப்போக்கில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. கம்ப இராமாயணத்தில் இஃதோர் அழகான கட்டம்.

அன்று மாலை சூர்ப்பனகை அங்கு வந்து சேர்ந்தாள். அரக்கியே யாயினும் அழகிய பெண்ணுருவம் தாங்கி வந்திருந்தாள். இராமனைக் கண்டாள். அவனது கை, தோள், மார்பு, முகம், தலவடிவு, பாதம், வாய், இடை, முடி முதலியவற்றின் அழகில் ஈடுபட்ட சூர்ப்பனகை இராமனிடம் காமவசப்பட்டுக் கலங்கினாள்; திகைத்தாள்; வாய் உலர்ந்தாள்; மனம் வாடினாள். நெஞ்சம் புழுங்

கினாள். விரக தாபத்தால் வேதனைப் பட்டாள். அவன் தோள்களைக் கண்டவள் நிலைத்து நின்றாள்.

இப்படி இராம பிரானது அழகில் ஈடுபட்ட சூர்ப்பனகை விரக தாபம் மேலிட்டு அவனைச் சேரக் கருதினாள். அழகிய உருவத்தை எடுக்க மந்திரம் ஜெபித்தாள். அழகிய பெண்ணுருவம் பெற்றாள். அவள் இராமன் முன் தோன்றிய விதத்தைக் கம்பர் கூறும் திறம் காண்மின் : செம்பஞ்சுக் குழம்பு பூசிய பாதத்துடனும், தளிர் விரல்களுடனும், மயிலைப்போல் சாயலையும் அன்னம் போன்ற நடையையும் பெற்ற விஷம் போன்ற சூர்ப்பனகை இராமன் எதிரில் வந்தாள்.

## இராமனிடம்

இராமனுடைய பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள். பிறகு சிறிது நாணத்தோடு எட்டி நின்றாள். "உன் வரவு நல்வரவாகுக! உம் ஊர் எது? உம் பெயர் என்ன? உம் உறவினர் யார்?" என்று இராமன் கேட்டான். "நான் பிரம்மாவின் பேரனுக்குப் புதல்வி. குபேரனுடைய தங்கை. வெள்ளி மலையை எடுத்த இராவணனுக்கு உடன் பிறந்தவள். காமவல்லி என்ற கன்னி" என்று கூறினாள்.

"நீ என்ன காரியத்தை உத்தேசித்து இங்கே வந்தாய்?" என்றான். "பெண்கள் தங்களுடைய கஷ்டத்தைச் சொல்லிக் கொள்வதற்கில்லை! ஆயினும் நான் சொல்கிறேன். காமதேவன் என் உள்ளத்தைத் துன்புறுத்துகிறான். நீ என்னைக் காக்க வேண்டும்" என்றாள்.

"என்னைக் கந்தர்வ முறையில் மணவியாக்கிக் கொள்வாய். நீ என்னை மணந்து கொண்டால் உனக்கு அபாயம் எதுவும் இராது" என்று மேலும் சொன்னாள். இராமன் பெருஞ்சிரிப்புச் சிரித்தான். சீதை வந்து கொண்

டிருந்ததைச் சூர்ப்பனகை பார்த்தாள். சீதையின் அழகைக் கண்டு வியந்தாள். காமத்தால் பீடிக்கப்பட்ட அரக்கிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. சீதை இராமனுடைய தோள்களைத் தழுவிக் கொண்டாள்.

இராமன் சூர்ப்பனகையைப் பார்த்து, "நங்காய்! இனி நிறுத்து. என் தம்பி இருக்கிறான். அவன் கோபக்காரன். திரும்பிப் போ" என்றான். இதைச் சொல்லிவிட்டு இராமனும் சீதையும் பர்ணசாலைக்குப் போய் விட்டார்கள்.

## இலக்குவனிடம்

இதற்குப் பிறகு அரக்கிக்குக் காதல் வெறி அதிகமாகி விட்டது. எப்படியோ இரவு கழிந்தது மறுநாட் காலை சீதையைத் தூக்கிச் செல்ல எத்தனித்தாள். சத்தம் கேட்டு இலக்குவன் பாய்ந்தான். அரக்கியின் மயிரைப் பிடித்து வாளை உருவினான். அங்க ஈனம் செய்து விட்டு, "துஷ்டை ஜாக்கிரதை" என்று எச்சரித்துப் "போ" என்று துரத்திவிட்டான்.

சூர்ப்பனகை அப்போது தன் உண்மை உருவத்தோடு இரத்தப் பெருக்குடன் ஓடித் தன் இனத்தாரைப் பெயரிட்டுச் சொல்லிப் பலமாகப் புலம்பினாள்.

## கரதூஷணர்

ஜனஸ்தானத்திலிருந்து கரனுடைய பதினான்கு சேனைத் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு சூர்ப்பனகை இராமனுடைய பர்ணசாலைக்கு வந்தாள். பழி வாங்கி, அரச குமாரர்களைக் கொன்று அவர்களுடைய குருதியைக் குடிக்க வந்தாள். யுத்தம் ஆரம்பமாயிற்று, இராமனுடைய பாணங்கள் அரக்கர்களைக் கொல்ல அதிகநேரம் பிடிக்கவில்லை. அனைவரும் மாண்டார்கள்.

மறுபடியும் சூர்ப்பனகை கரனிடம் சென்று புலம்பினாள். "நீ பதினான்கு வீரர்களை அனுப்பினாய். அவர்கள் அனைவரும் பிணங்களாகக் கிடக்கிறார்கள். நீ ஒருவனாகப் போகாதே. சேனையைத் திரட்டிக் கொண்டு போ" என்றாள்.

பெருஞ்சேனை தூஷணன் தலைமையில் சென்றது. பின்னால் கரனும் தேரில் சென்றான். போகும்போது அரக்கன் அப சகுனங்களைக் கண்டான். சேனை வரும் ஓசையைக் கேட்ட இராம இலக்குவர்கள் யுத்தத்திற்குத் தயாரானார்கள். இராமன் கவசம் பூண்டு ஆயுத பாணியானான். இலட்சுமணன் இராமன் சொன்ன வண்ணம் சீதையை அழைத்துக் கொண்டு மலைக்குச் சென்று விட்டான். ஆகாயத்தில் தேவர்களும் கந்தர்வ சித்த சாரண கணங்களும் யுத்தத்தைப் பார்க்க வந்து விட்டார்கள். இராமனுடைய விஜயத்தை விரும்பி அவர்களும் சுவஸ்தி சொன்னார்கள்.

இராமன் வில்லைப் பிடித்து நாணேற்றி நின்றான். ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் சூழ்வன போல் அரக்கர் சேனை இராமனைச் சூழ்ந்தது. யுத்தம் மிகக் கோரமாக நடந்தது. இராமனுடைய பாணங்களுக்கு ஆயிரக் கணக்கான அரக்க வீரர்கள் இரையானார்கள். தேர்கள், யானைகள், குதிரை முதலான வாகன விலங்குகள் பூமியில் விழுந்து மாண்டன. அரக்கருடைய சேனை நிர்மூலமாயிற்று. இராமன் காலாந்த ருத்திரனைப்போல் நின்றான். தூஷணன் இருகைகளும் அறுபட்டுத தரையில் பெரிய யானையைப்போல் விழுந்து மாண்டான்.

இவ்வாறு கரனுடைய சேனை முற்றிலும் மாண்டது. கரன், திரிசிரஸ் இருவருமே மிஞ்சினார்கள். முடிவில் திரிசிரஸ் ரத்தம் கக்கித் தரையில் விழுந்து மாண்டான். கரனுக்கும், இராமனுக்கும் கடும்போர் நடந்தது. இராமன் இந்திர பாணத்தை விடுத்து அரக்கனுடைய மார்பைப் பிளந்தான். கரன் மாண்டான்.

தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். சீதையும் இலட்சுமணனும் மலையினின்று திரும்பினார்கள். இவ்வாறு தனி ஒருவனாகவே நின்று இராமன் வெற்றி பெற்றுப் பர்ணசாலைக்குத் திரும்பினான். இலக்குவனும் சீதையும் வணங்கினார்கள். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். சீதை இராமனை இறுகத் தழுவிக் கொண்டாள். இதற்கு வியாக்யான கர்த்தா கூறும் விளக்கம் மகிழ்தற்குரியது.

பதினான்காயிரம் இராக்கதர்களையும் காந்தர்வ அஸ்திரத்தினால் அழித்து, மேனி எல்லாம் அரக்கரது அம்புகள் விளைத்த புண்களுடனும் புண்களிலிருந்து சொரிந்த ரத்தத்துடனும் தனியாகப் பர்ண சாலைக்குள் வந்த கணவனைப் பிராட்டி மகிழ்ச்சியால் மார்புறத் தழுவினாள். இப்படித் தழுவியது இராமனுக்கு மிகவும் இதமாயிருந்தது. இராமன் உடல் புண்களுக்குத் தனது மார்பகத்தால் ஒத்தடம் கொடுத்தாள் பிராட்டி என்பதாம்.

## இலங்கையில்

இப்படிக் கரதூஷண வதத்தால் இராமனும் இலக்குவனும் சீதையும் இன்புற்றிருக்க, வேதனை யடைந்த சூர்ப்பனகை இலங்கையை நோக்கி ஓடினாள். அடுத்த படியாக இராமனைப் பழிவாங்குவதே அவளது நோக்கமாய் இருந்தது. பெரிய அரக்கர் சேனையோடு கரன் மடிந்த செய்தியை மறந்தாள். இராமபிரானது உருண்டு திரண்ட தோள்களின் மீது உண்டான ஆசை அவள் மனத்தை வருத்தியது. காமம் மீதூரப் பெற்று இலங்கையை அடைந்தாள்.

அப்போது இராவணன் கொலு மண்டபத்தில் இருந்தான். வடக்குக் கோபுர வாயிலாகச் சூர்ப்பனகை இலங்கையுள் நுழைந்து கொலுமண்டபத்திற்கு வந்து அலங்கோலமாக இராவணன் பாதங்களில் விழுந்தாள்.

அப்போது அபசகுனங்கள் தோன்றின. பின்னால் நேரப் போகும் பேராபத்துக்கு இந்நிகழ்ச்சி அடிகோலுவதா யிருந்தது.

தசகண்டன் தங்கையைப் பார்த்தான். பெருஞ்சீற்றம் கொண்டான்; பதறினான்; பெருமூச்செறிந்தான். பற் களை நறநெறவென்று கடித்தான். பேரிடிபோல் கர்ஜித் தான். "இதைச் செய்தவர் யார்?" என்று கேட்டான். "என்னை இப்படி உருக்குலைத்தவர்கள் மன்மதன் போன்ற அழகுடையவர்கள். மேருமலை போன்ற வலிமை உடையவர். வில்லின் வலிமையால் ஏழு உலகங் களையும் அழிக்கவல்லவர். அவர்களுக்கு ஒப்பாக வல்லவர் எவருமிலர்!" என்று இவ்வாறு இராம இலக்குவர்களின் புகழை வர்ணித்தாள் சூர்ப்பனகை.

"தங்கையே! உன்னுடைய காதுகளையும் மூக்கையும் அவர்கள் வலிந்து கொய்யுமாறு நீ என்ன குற்றம் செய் தாய்?" என்று கேட்டான் இலங்கை வேந்தன். இதற்கு மிகச் சாதுர்யமாகப் பதிலளித்தாள் சூர்ப்பனகை. "திருமகள் போன்ற அழகுடைய நங்கை நல்லாள் ஒருத்தி யின் காரணமாக எனக்கு இந்த அவக்கேடு நேர்ந்தது" என்று சீதையின் அழகைக்கூறி, இராவணனுக்குக் காமத் தீயை மூட்டினாள். "சீதையை உனக்காக எடுக்கப் போன போது இவ்வாறு அவமானப்பட்டேன்." என்று முறை யிட்டாள்.

சூர்ப்பனகையின் வருணனையைக்கேட்ட இராவணன், சீதையின் மேல் கொண்ட காமவெறியைக் கம்பர் பல படியாக வருணிக்கின்றார். வேதனைக் குள்ளாகி, சிம்மாசனத்திலிருந்து எழுந்து தன் அறைக்குச் சென்றான். காமத்தீயால் பலவாறு துன்புற்றுப் பிதற்றினான். தாபம் தணியவில்லை. உருவெளித் தோற்றத்தில் சீதையைக் கண்டான். "இவள் தானே சீதை" என்று தங்கையைக் கேட்டான்.

"இல்லை, இல்லை, இது இராமன்!" என்றாள் சூர்ப்பனகை. அவள் கண்ணுக்கு அவ்வாறு தோன்றியது. காமவெறி கொண்டவர்களின் மதிமயக்கம் நகைப்புக்குரியது. பிறகு ஒருவாறு தெளிந்து, சூர்ப்பனகை சிதையைத் தூக்கி வருமாறு உபதேசித்தாள்.

## இலங்கை வேந்தன்

அரிய பெரிய இலங்கைத் திருநகரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் இராவணன். இவன் முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற பெருந்தவமும் உடையவன். மூவுலகத்தையும் வென்றவன். "எவராலும் வெல்லப்படமாட்டாய்" என்று இறைவனால் கொடுக்கப்பட்ட வரத்தையும் உடையவன். வெள்ளியங்கிரியை வேரோடு விண்தொட எடுத்தவன். எட்டு யானைகளின் கொம்புகள் மார்பில் பட்டு அழுந்த அவற்றை ஒடித்து, உள்ளேயே இற்ற கொம்புகளை இருக்குமாறு செய்தவன். யாழ்க்கொடி ஏற்றி அகத்தியருடன் இசையில் போட்டியிட்ட இசைக்கலைஞன். சாமவேதப் பிரியன். சிறந்த சிவபக்தன்; பகைவனான இராமனாலேயே போற்றப்படுகின்ற பெருவீரன்.

இத்துணைச் சிறப்புடைய இராவணன் ஊழ்வினையால் தன் தங்கை சூர்ப்பனகையின் சொற்கேட்டு, மிதிலைச் செல்வியைச் சிறையெடுத்துப் பெரும் பழிக்கு ஆளானான். அடாத செயலைச் செய்ததனால் இலங்கை அழிந்ததுடன், அனைத்தையும் இழந்து, தன்னையும் தானே அழித்துக் கொள்கிறான். காம வேட்கையால் மானம் இழந்து, அரியணை இழந்து, தன்னுடன் சேர்ந்த அனைவரையும் இழந்து, பரிதாப நிலையை அடைந்தான்.

## மாரீசன்

இராவணன் சூர்ப்பனகை சொன்னதைக் கேட்டு, பித்துக்கொண்டவன் போல் தேரேறி மாரீசன் ஆசிரமத்

திற்குச் சென்றான். மாரீசன் இலங்கை வேந்தனை வர வேற்று உபசரித்தான். "என்ன விசேஷம்" என்று விசாரித் தான்.

"பிரிய மாரீசனே! என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். ஜனஸ்தானம் அழிந்துவிட்டது. நம்முடைய சேனை நிர்மூலமாய் விட்டது. இவையெல்லாம் தசரதன் மகன் இராமன் என்பவனுடைய காரியம். அற்புதமாகத் தான் இருக்கிறது. பழிவாங்க அவனுடைய மனைவியை நான் தூக்கிவர நிச்சயித்திருக்கிறேன். அதற்கு உன் யோசனையும் உதவியும் வேண்டும். அதன்றியும் என் தங்கை சூர்ப்பனகையின் மூக்கையும் காதையும் அறுத்து நம் குலத்துக்குப் பெருத்த அவமானம் இழைத்திருக் கிறான்.

"சௌர்யம், பலம், யுக்தி, மாயைகள் இவற்றில் உன்னைப் போல் உலகத்தில் வேறு யார்? உன்னிடம் நான் இதற்காகத்தான் வந்தேன். நீ மறுக்கக்கூடாது. நான் சொல்வதைக் கேள். நீ ஒரு பொன் மானாக வேண்டும். சுவர்ணமும் வெள்ளிப் புள்ளிகளும் கண்ணைக் கவரும் படியாக இருக்க வேண்டும். இராமனுடைய பர்ண சாலைக்கருகில் நீ சஞ்சாரம் செய்ய வேண்டும். பெண் களின் இயல்புப்படி சீதை, 'இந்த மானைப் பிடித்துத்தர வேண்டும்' என்று அடம் பிடிப்பாள். அவளை விட்டு, அவர்கள் விலகி, அவள் தனியாக இருக்கும் சமயத்தில், நான் சுலபமாக அவளைப் பிடித்து எடுத்து வந்து விடுவேன்.

"சீதை பேரழகி. மனைவியை இழந்த இராமன் மனம் உடைந்து பலவீனமடைவான். அந்த நிலையில் அவனைத் தாக்கிப் பழிவாங்கித் திருப்தியடைவேன்" என்றான் இலங்கை வேந்தன்.

இதைக் கேட்ட மாரீசன் கலக்கங் கொண்டான். இராமனுடைய பராக்கிரமத்தை அவன் நன்கு அறிவான்.

இராவணனுடைய திட்டத்தைக் கேட்டுப்பயந்து போனான். விதி வலிது என்பதை மாரீசன் தெரிந்து கொண்டான். இராவணனுடைய நன்மையைக் கருதி மாரீசன் வெகுநேரம் பேசினான். பயனில்லை.

"இவன் யமன் வீட்டிற்குப் போவதற்கு அவசரப் படுகிறான். காமத்தால் தூண்டப்பட்டு மாள்வது இவன் விதியாக இருக்கிறது. இவனால் கொல்லப்பட்டு என் உயர் போவதைவிட இராமனாலேயே கொல்லப்படுவது நலம். பகைவனால் கொல்லப்பட்டால் தோஷமில்லை." என்று தனக்குள் சொல்லிக்கொண்டு மாரீசன் இராவணன் சொன்னதைச் செய்ய ஒப்புக்கொண்டான். இராவணன் மகிழ்ச்சியடைந்து மாரீசனைத் தழுவிக்கொண்டான்.

## பர்ண சாலை

இருவரும் ரதம் ஏறித் தண்டகாரண்யம் வந்து சேர்ந் தனர். தேர் தரையில் இறங்கியது. "அதோ இராம னுடைய ஆசிரமம் இருக்கிறது. நான் சொன்னபடி செய் வாயாக" என்றான் இலங்கை வேந்தன். உடனே மாரீசன் தன் சரீரத்தை மாற்றிக் கொண்டு மான் உருவம் தரித்து விட்டான். மானின் அழகே அழகு. கண்ணைக் கவரும் விதத்தில் அந்த மான் விளங்கிற்று.

அந்த மாயமான் ஆசிரமத்திற்கு முன் இங்கு மங்கும் நடந்தது; படுத்தது; எழுந்து துள்ளிக் குதித்தது. சீதை இந்த மானைக் கண் கொட்டாமல் பார்த்து நின்றாள். இராமனையும் இலக்குவனையும் அழைத்தாள். அவர்கள் இந்த விசித்திரமானைப் பார்த்தார்கள். இலக்குவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. இது மாயமான் என்று தெரிந்து கொண்டான். "இதை எப்படியாவது பிடித்துத் தாருங்கள்" என்று சீதை வேண்டினாள்.

இளையவனுக்கு விஷயம் பிடிக்கவில்லை என்று அறிந்து, சீதை இராமனை வற்புறுத்தினாள்.

இலட்சுமணனுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, "வில்லும் அம்பும் கொண்டு வா" என்றான் இராமன். இலட்சுமணனுக்குச் சம்மதமில்லை. ஆயினும் இராமன் வில்லும் கையுமாக மானைத் தொடர்ந்து சென்றான்.

"ஜாக்கிரதை! சீதையைப் பார்த்துக்கொள். எந்தச் சமயத்தில் எது நேருமோ!- அலட்சியமாக இருக்காதே!" என்று போகும்போது சொல்லிவிட்டுப் போனான்.

இராவணனுக்குப் போதிய அவகாசமும் சந்தர்ப்பமும் தருவதற்காக மாயமான் இராமனை வெகு தூரத்திற்கு இழுத்துக் கொண்டு போய் விட்டது. தொடர்ந்தது போதும் என்று சலித்துப் போய் இராமன் வில்லை வளைத்து அம்பைச் செலுத்தினான். மாரீசன், "ஐயோ சீதா! ஐயோ இலட்சுமணா!" என்று இராமன் குரலில் உரக்கக் கத்திவிட்டு மாண்டான். மாளும் சமயம் நிஜவடிவம் வந்துவிட்டது. மலைபோன்ற உடம்புடன் மாரீசன் ரத்தம் பெருகப் பூமியில் விழுந்து புரண்டு இறந்தான்.

"ஐயோ சீதா, ஐயோ இலட்சுமணா!" என்று மாரீசன் கூறியதைக் கேட்ட சீதை, அது இராமன் கதறியதே என்று எண்ணி விட்டாள். நடுங்கிப் பதை பதைத்து, "இலட்சுமணா அதோ அண்ணன் குரல் தெரிய வில்லையா? ஓடு ஓடு" என்றாள்.

"வைதேகி! பயப்படாதே! அண்ணனுக்கு ஒரு தீங்கும் நேராது!" என்று எவ்வளவோ சமாதானம் சொல்லியும் சீதை கேட்டவில்லை. சீதை கோபமடைந்து சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொன்னாள்; வயிற்றில் அடித்துக் கொண்டு, கதறி அழுதாள்.

"இதோ போகிறேன்" என்று இலக்குவன் சொல்லி விட்டுச் சென்றான். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான்.

## இராவண சந்நியாசி

பர்ணசாலையின் வாயில் சீதை தனியளாக நின்று கொண்டிருந்தாள். இராமன் வருவானா என்று வனத்தைப் பார்த்த வண்ணமாக நின்றாள். இராவணன் சீதையைப் பார்த்தான். ஆசை உள்ளத்தில் பதிந்து விட்டது. எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்று நீசன் தீர்மானித்து விட்டான்.

காஷாயம் தரித்து, கமண்டலமும் திரிதண்டமுமாக ஆசிரமத்தின் முன்வந்து நின்றான் இராவண சந்நியாசி. ஆசார முறைப்படி சீதை அவனுக்கு உபசாரம் செய்தாள். ஆசனம் அமைத்து, பழமும் கிழங்கும் படைத்தாள். அது அக்காலப் பண்பாடு. ஆசனத்தில் அமர்ந்து சீதையைப் பார்த்தான். ஆசை அதிகரித்தது, முற்றிப் போயிற்று. இலை முன் அமர்ந்து கூச்சமில்லாமல் சீதையின் அழகைப் புகழ ஆரம்பித்தான். அவன் கேட்ட கேள்விகளுக்குச் சீதை பதிலளித்தாள். இலங்கை வேந்தன் தன்னைப் புகழ்ந்தும் இராமனைத் தாழ்த்தியும் பேசலானான். ''எனக்கு மனைவியாவாய்; இலங்கையில் சுகமாக இருப்போம், போவோம்!'' என்று முடித்தான்.

சீதை தைரியமடைந்து, ''நீசனே! துஷ்டனே! உன் விநாசம் நெருங்கிற்று! நீ மடிவாய், விலகிப்போ!'' என்று சீறினாள். அரக்கனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. வேடத்தை நீக்கிவிட்டுத் தன் சுயரூபத்தில் நின்றான். அவள் தலை மயிரை ஒரு கையில் பற்றி, மற்றொரு கையால் அவளைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வனத்துக்குள் வேகமாகச் சென்று தயாராக இருந்த தேரில் சீதையைத் தூக்கியவாறு ஏறி ஆகாயத்தில் கிளம்பி விட்டான்.

இது (வால்மீகி இராமாயணத்தில் கண்ட செய்தி. கம்பர் தமிழ்நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்றவாறு பர்ணசாலையோடு பெயர்த்துச் சென்றான் என்று கூறி

யுள்ளார். தமிழ்நாட்டில் கம்பர் கால முதல் இராமனையும் சீதையையும் வழிபடும் தெய்வங்களாகவே மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது.)

''நாதா! இராமா! இலட்சுமணா!'' என்று கதறி அழுதாள். அரக்கன் அவளை அசையாமல் அழுத்திப் பிடித்துத் தேரை வேகமாகச் செலுத்தினான். கீழே காட்டிலுள்ள செடிகளையும் மரங்களையும் கூவி. ''இராமனிடம் சொல்லுங்கள்'' என்று சீதை கதறினாள்,

## ஜடாயு

அப்போது ஒரு மரத்தின் மேல் அரைத் தூக்கத்திலிருந்த ஜடாயு ரதத்தைப் பார்த்தது. சீதையின் குரலைக் கேட்டு, யார் என்று தெரிந்து கொண்டது. சீதையும் ஜடாயுவைக் கண்டாள். ''இச் செய்தியை இராமனிடம் சொல்'' என்று அழுதாள்.

''ஏ! இலங்கேசனே!, நான் ஜடாயு. கழுகு ராஜன். நானும் அரசனாக வாழ்ந்தவன்தான். தகாத காரியத்தைச் செய்யாதே. நில். அழிந்து போவாய். ஜாக்கிரதை! உடனே அவளை விட்டு விடு. துஷ்டனாக நடந்து கொள்ளாதே. உன் தலைகள் பனம் பழம் போல் உதிரப் போகின்றன. ஓடாதே நில்'' என்றது.

இராவணன் சினங்கொண்டு ஜடாயுவைத் தாக்கினான். ஜடாயு அவனுடைய உடலைக் கீறி, கிழித்தது. அவன் கூரிய அம்புகளை அதன் மீது விடுத்தான். துன்பப் பட்டது. அவனுடைய முடியையும் வில்லையும் ஒடித்துத் தள்ளியது. அதன் பின்னர் ஜடாயு அவனுடைய தேரை முறியடித்தது. ஜடாயு களைப்படைந்தது. பின்னர் இருவருக்கும் இடையே கோர யுத்தம் நடந்தது. பிறகு இராவணன் தன் கத்தியை எடுத்து ஜடாயுவின் சிறகுகளையும் கால்களையும் கருணையின்றி வெட்டினான். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாமல் அது தரையில் குற்றுயிராக விழுந்தது.

'பின்னர் இராவணன் சீதையைப் பலாத்காரமாகத் தூக்கி எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் கிளம்பினான். சூரியன் மறைந்தது, இருள் சூழ்ந்தது, சர்வ பூதங்களும் புலம்பின. 'தர்மம் அழிந்தது; சத்தியம் மறைந்தது; நீதி, நெறி, கருணை எல்லாம் ஒழிந்தன' என்று பிரலாபித்தன.

சீதை இராவணனைப் பார்த்துத் தைரியமாய்ச் சொன்னாள்: ''நீசனே! இராமன் இல்லாத சமயம் பார்த்து, வெட்கமில்லாமல் திருட்டு வேலை செய்தாய். உன் குலத்துக்கே அவமானம் இழைத்தாய். தப்பிப் பிழைத்தோம் என்று எண்ணாதே. என் நாதன் கை அம்பால் நீ மாளத்தான் போகிறாய்'' என்றாள்.

தன் ஆபரணங்களை ஒரு துணியில் முடிந்து கீழே போட்டாள். கீழேயிருந்த வானரங்கள் அதைப் பார்த்தன.

### சிறைவாசம்

பம்பையைத் தாண்டிப் பிறகு கடலையும் கடந்து இராவணன் இலங்காபுரியில் பிரவேசித்தான். அந்தப்புரம் சென்றான்: ''சீதையை அடைந்து விட்டேன்!'' என்று மூர்க்கன் எண்ணினான். 'இவளைக் கவனமாய்க் காவல் காக்க வேண்டும்' என்று அரக்கியர்களுக்கு ஆணையிட்டான். சீதைக்கு ஓர் ஆறுதல் கிடைத்தது. எப்படியும் தன் நாதன் வந்து, மீட்டுச் செல்வார் என்று நம்பினாள்.

''பன்னிரண்டு மாதம் உனக்கு கெடுவு தருகிறேன். நீ என்னை மணந்தால் நல்லது. இல்லையென்றால் அந்தத் தவணை முடிந்ததும் என் சமையல்காரர்கள் உன் உடலைச் சமைத்து என் காலை உணவாகப் பரிமாறி விடுவார்கள்.'' இவ்வாறு இராவணன் சீதையை எச்சரித்தான்.

''அசோகவனத்தில் இவளைத் தனியாக வைத்துப் பயத்தாலும் நயத்தாலும் சாமர்த்தியமாகத் திருத்துங்கள்!''

என்று உத்தரவிட்டான். சீதையை அரக்கிகள் அசோக வனத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அஃதோர் அழகான நந்தவனம். இயற்கை வளங்களோடு கூடியது. சீதை அங்குத் துயரக் கடலில் மூழ்கியிருந்தாள். தன் நாதன் வருவான் என ஏக்கமாய் இருந்தாள். இவ்வாறு பல மாதங்கள் கடந்தன.

## துயரக் கடல்

மீண்டும் நாம் பர்ணசாலை இருந்த இடத்திற்குச் செல்வோம். மாரீசன் மாண்டதும் இதில் ஏதோ சூது நேர்ந்திருக்கிறது என்ற எண்ணத்துடன் இராமன் ஆசிரமத்தை நோக்கிச் சென்றான்.

(மாரீசன் அரக்கனென்றும் அவனால் துன்பம் நேரும் என்றும் திருமாலின் அம்சமாகிய இராமனுக்குத் தெரியாதா என்று வாசகர்கள் நினைக்கலாம். இராமாவதாரம் முழுவதிலும் மனித சுபாவத்தோடு அதாவது பின்னால் வரப் போவதை முன்னால் அறிய முடியாமல் மறைக்கப்பட்டிருக்கும் மனிதப் பிறவியாகவே இராமன் செயல்பட்டான் என்பதாகும்.)

எதிரே இலட்சுமணன் வந்து கொண்டிருந்தான். ''ஐயோ! நான் நினைத்தவாறே ஆயிற்று''' என்று இராமன் கத்தினான். பசியாலும், தாகத்தாலும், துக்கத்தாலும் கோபத்தாலும் வாட்டப்பட்ட இராமன் பலவாறு கத்தினான். இலட்சுமணன் நீர் பெருகக் கூறலானான்: "சீதை வற்புறுத்தியதால்தான் நான் வந்தேன். நான் எவ்வளவோ சமாதானம் கூறியும் அவள் ஒப்புக்கொள்ள வில்லையே! நான் என்ன செய்வேன்?'' என்றான். இருவரும் வேகமாக ஆசிரமத்தை நோக்கி நடந்தார்கள்.

வழியில் அபசகுனங்கள் தோன்றின. ஆசிரமம் வெறிச்சோடிக் கிடந்தது. இராமனுடைய இதயம் உடைந்து போயிற்று. மான் தோலும் தர்ப்பையும் புல்பாயும் சிதறிக்

கிடந்தன. இராமன் விம்மி விம்மி அழுதான். சீதையை எங்கும் காணவில்லை. இராமனுடைய துயரம் வரவரக் கடல்போல் பெருகிற்று. செடி, கொடி, மரம் ஒவ்வொன் றையும் கேட்டுக் கொண்டே உன்மத்தனாக அதாவது வனமெல்லாம் கேட்டுக் கொண்டே அலைந்தான். இளையவன் ஆறுதல் கூறினான். இருவரும் காடு, மலை, ஆறு, தடாகம் இப்படி ஓர் இடம் விடாமல் தேடி னார்கள்.

## மீண்டும் ஜடாயு

அண்ணனும் தம்பியும் சீதையைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்றார்கள். ஓரிடத்தில் புஷ்பங்கள் சிதறிக் கிடந்தன. பூமியில் அரக்கனுடைய பெருங் காலடிச் சுவடுகளும், சீதையின் காலடிக் குறிப்புகளும் இருந்தன. தேரின் உடைந்த பாகங்கள் சிதறிக் கிடந்தன. யுத்தம் நடந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன.

இராமனுடைய மனக் குழப்பத்தையும் ஆற்றாமை யையும் கண்டு தம்பி இலட்சுமணன் தைரியம் சொல்லிக் கொண்டே வந்தான். கொஞ்ச தூரம் சென்றதும் தரையில் அசைவற்றுக் குற்றுயிராய்க் கிடந்த ஜடாயுவைக் கண்டார்கள். சிறகுகள் வெட்டப்பட்டு உயிர் போகும் நிலையில் கிடந்த பறவையைக் கண்டார்கள்.

''அப்பனே! இராமனே! என் உயிர் இன்னும் ஒரு கணம்தான் இருக்கும். சீதை இராவணனால் தூக்கிப் போகப்பட்டாள். எதிர்த்துப் போராடிய என்னையும் இக்கதிக்கு ஆளாக்கி விட்டான்'' என்றது ஜடாயு. இதைக் கேட்டதும் இராமனுடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. பறவையைக் கட்டியணைத்துக் கொண்டான். கோவென்று இருவரும் பூமியில் புரண் டார்கள். ஜடாயு, ''பயப்படாதே இராமா! சீதையை நீ மீண்டும் அடைவாய். அவளுக்கு ஒரு சேதமும் ஏற் படாது. இழந்த செல்வத்தை மறுபடியும் பெற்றுப் பெரு

மகிழ்ச்சியை அடைவாய்!'' என்று சொல்லிவிட்டு வாயில் இரத்தமும் மாமிசமும் கக்கி உயிர் நீத்தது.

ஜடாயுவைத் தங்கள் தந்தைக்குச் சமானமாகப் பாவித்து, அதற்கு உத்தரகிரியைகளைச் செய்தார்கள்.

## கவந்தன்

சகோதரர்கள் இருவரும் காட்டில் போய்க்கொண்டிருந்த போது எதிர்பாராவிதமாய் ஒரு கோர உருவம் கொண்ட அரக்கனுடைய வாயில் அகப்பட்டுக் கொண்டார்கள். அவனுக்குத் தலையுமில்லை, கால்களும் இல்லை. பெரிய வயிறும் நீண்ட இரு கைகளும் மட்டும் இருந்தன. பெரிய வாய்; மார்பில் ஒரு கண். இருந்த இடத்திலிருந்தே கிடைக்கும் உணவை உண்டு வந்தான்.

அரச குமாரர்கள் இருவரும் கொஞ்சநேரம் திகைத்தனர். பிறகு இருவரும் இரண்டு கைகளை வெட்டித் தள்ளினர். அவன் பெயர் கவந்தன். ''நீங்கள் தசரத புத்திரர்கள் என்று நினைக்கிறேன். சாபவிமோசனம் பெற்றேன். என் உடலைத் தகனம் செய்தால் என் சொந்த உருவப் பெறுவேன்'' என்று முறையிட்டான்.

இராஜ குமாரர்கள் கவந்தனை எரித்தார்கள். தீயிலிருந்து ஒரு திவ்விய மங்கள சொருபம் வெளிப்பட்டு, சுவர்க்கம் சென்றது. ''நீங்கள் சீதையை அடைவீர்கள். பம்பா தீரத்திற்குச் செல்லுங்கள். அங்கே ரிஷ்யமுக பர்வதத்தில் வசித்துவரும் சுக்ரீவன் என்ற வானர அரசனுடைய நட்பைப் பெற்றால் உங்கள் காரியம் நிறைவேறும்'' என்று சொல்லி மறைந்தான். அரச குமாரர்கள் இருவரும் பம்பா நதியை நோக்கிச் சென்றார்கள்.

## சபரிமோட்சம்

அந்த அழகிய பிரதேசத்தில் மதங்கமுனிவரின் சிஷ்யை யான சபரி என்ற விருத்த சந்நியாசி அம்மையைக் கண்டனர். அவளுடைய உபசாரத்தைப் பெற்றார்கள். சபரி பெரிய ஞானி இராமன் திருமாலின் அவதாரம் என்பதை அறிந்தவள். தான் தேடி வைத்திருந்த ருசியான பழங்களை இருவருக்கும் தந்து உபசரித்தாள்.

பிறகு சபரி அப்பிரதேசத்தின் மகிமைகளை யெல்லாம் அவர்களுக்குச் சொன்னாள். பிறகு தீ மூட்டி அதில் பிரவேசித்து உடலை நீத்து மேலுலகம் சென்றாள். சபரி யைச் சந்தித்து, பமபா நதியில் நீராடியபின் இராம இலக்குவர்கள் தைரியமடைந்தார்கள்.

# 4. கிஷ்கிந்தா காண்டம்

## பம்பை

பம்பை என்ற பெயரில் ஒரு நதியும், அதன் பக்கத்தில் ஒரு குளமும் இருந்தன. அந்த இடம் இராம இலக்குவர் களுக்கு ஆறுதலாய் இருந்தது. ஆறு, குளம், காடு, மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றைக் கண்டபோது சீதை அருகில் இல்லையே என்று இராமன் வருந்தினான். பிரிவுத் துன்பத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. சில சமயங்களில் மனங்கலங்கி அழ ஆரம்பித் தான். ஊண் உறக்கமின்றியும் வாடினான். பித்துப் பிடித்தவன் போல் அலைந்தான்.

ஆதிசேஷ அவதாரமாகிய இலக்குவன் அண்ணனுக்கு ஆறுதல் கூறினான். ''சீதை எங்கிருந்தாலும் நாம் கண்டு பிடித்துவிடலாம். இராவணன் நம் வில்லுக்கும் அம்புக்கும் தப்பிப்போக முடியாது. அவனை அழித்துவிடலாம்; சீதையை நாம் மீட்டுவிடலாம்; தைரியமாய் இருங்கள்!'' என்றான்.

''நீ சொன்னவை யெல்லாம் சரி, ஏற்றுக் கொள்ளு கிறேன். அவைகளுக்காக நான் அஞ்சவும் இல்லை; வருந்தவும் இல்லை. சீதை அருகில் இல்லையே, இளமைப் பருவம் வீணாகக் கழிந்து போகிறதே! அதற்காகத்தான் வருந்துகிறேன்!'' என்று இராமன் கூறுவதாக வியாக்யான கர்த்தா விளக்கம் தருகிறார்,

## ரிஷ்யமுக பர்வதம்

இராமன் ரிஷ்யமுக வனம் வந்து, இங்குமங்கும் வில் பிடித்துத் திரிவதைப் பார்த்துச் சுக்ரீவனுக்கும் அவன் கூட்டத்துக்கும் பயம் பிடித்துக்கொண்டது. வாலியால் துரத்தியடிக்கப்பட்ட சுக்ரீவன், வாலி பிரவேசிக்க முடியாத இடம் என்று இந்த ரிஷ்யமுக பிரதேசத்தில் வாசம் செய்து வந்தான். இங்கும் வாலி மாறு வேடம் தரித்துத் தன்னைக் கொல்ல வந்துவிட்டானோ என்று சுக்ரீவன் பயந்தான். அல்லது இங்கு வந்திருப்பவர்கள் வாலியின் ஆட்களோ என்றும் சந்தேகித்தான். வனத்தி லுள்ள மற்ற வானரங்கள் கிலி பிடித்து இங்குமங்கும் ஓடின.

## அனுமன்

அனுமன் சுக்ரீவனுடைய முக்கிய மந்திரி. அவன் சுக்ரீவனுக்குத் தைரியம் கூறினான். "இவன் வாலியல்லன். இவர்கள் வாலியின் நண்பர்களும் அல்லர். பயப்பட வேண்டிய காரணமில்லை. நான் போய்ப் பேசித் தெரிந்து கொண்டு வருகிறேன்" என்றான். "அப்படியே செய். ஜாக்கிரதையாய் போய் விஷயத்தைத் தெரிந்துகொண்டு வா. எனக்கு மிகச் சந்தேகமாக இருக்கிறது" என்று பயத்துடன் கூறினான் சுக்ரீவன்.

அனுமன் ஓர் அந்தண வடிவந்தாங்கி, இராம இலக் குவர்கள் இருந்த இடத்திற்குச் சென்றான். அனுமன் எதையும் மறைக்காமல் தன்னைப் பற்றியும் வானர ராஜனைப் பற்றியும் உண்மை யாவையும் விவரமாகக் கூறினான்.

"இராஜ ரிஷிகளே! தேவர்களைப் போல் விளங்கு கிறீர்கள்; நீங்கள் யார்? ஜடையும் மரவுரியும் தரித்து வில்லும் அம்புமாக வந்திருக்கிறீர்கள்" என்று அனுமன் ஆரம்பித்தான். அவர்கள் இருவரும் ஒன்றும் பேசாமல்

இருந்தார்கள். ஆகவே அனுமன் தொடர்ந்து பேசலானான்.

"இங்கே சுக்ரீவன் என்ற வானரத் தலைவன் தன் அண்ணன் வாலியால் நாட்டிலிருந்து துரத்தப்பட்டு, இங்குமங்கும் அலைந்தும், மறைந்தும், காலங்கழித்து வருகிறான். அவனுடைய மந்திரி நான். என் பெயர் அனுமன். நான் வாயுவின் புத்திரன். அரசன் உத்தரவுப் படி பிராமண உருவில் வந்திருக்கிறேன்" என்று அனுமன் வணக்கமாகச் சொன்னான்.

இவ்வாறு அனுமன் மிக வணக்கமாகச் சொன்ன மொழிகளைக் கேட்டு, இராமபிரான் தம் தம்பிக்குக் கூறுகின்றான்: "தம்பி, இந்த அனுமன் பேசியதைக் கேட்டு, இவனிடம் எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இவனுடைய பேச்சின் அழகைப் பார். எவ்வளவு தெளிவுடனும் வினயமாகவும் பேசுகிறான். வேதங்கள் முழுவதும் அத்தியயனம் செய்து வியாகரணம் கற்றவனைப் போல் பேசுகிறான். இவனல்லவோ தூதன். இந்த அரசனுக்கு ஒரு குறையுமில்லை. நாம் யாரைத் தேடிவந்தோமோ அவனே நம்மைத் தேடி வந்திருக்கிறான். இவனுக்கு நல்வரவு சொல்லி நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பாய்" என்றான்.

இராமன் அனுமனைச் சொல்லின் செல்வன் என்று புகழ்ந்தான். இவன் பிரமனோ, சிவபெருமானோ என்றும் ஐயுற்றான். இலக்குவன் அனுமனை நோக்கிக் கூறுகின்றான்: "என் தமையனாகிய இராமன் தசரதச் சக்கரவர்த்தியின் மூத்த மகன்; ராஜ்யத்தை விட்டு வனவாசம் செய்கிறான். உன் அரசனான சுக்ரீவனிடம் தன் காரியத்தை நிறைவேற்றுவதற்காக உதவியை நாடி வந்திருக்கிறான். 'உங்களுடைய உதவியைப் பெற்றால் அரக்கன் வஞ்சனையாகக் கவர்ந்து சென்ற சீதாதேவியை அடைவீர்கள் என்று' கவந்தன் சொன்னான். அவன் கூறியபடி

இங்கே வந்திருக்கிறோம். உன்னுடைய அரசனுடைய நட்பைத் தேடி வந்திருக்கிறோம்'' என்றான் இலக்குவன்.

''சுக்ரீவன் வாலியால் பீடிக்கப்பட்டு, அரசையும் மனைவியையும் இழந்தான். இரண்டையும் மறுபடியும் அடைவான் என்பது இப்போது உறுதியாயிற்று. உங்கள் நட்பை என் அரசன் அடைந்து அவனும் பயனடைவான். உங்களுடைய காரியமும் அவன் உதவியினால் நிறைவேறும்'' என்றான் அனுமன்.

பிறகு மூவரும் மகிழ்ச்சியுடன் சுக்ரீவனிடம் சென்றார்கள். இந்த நட்பு பகவானுடைய சங்கற்பம். அனுமனுடைய பக்தியையும் சேவையையும் இராமபிரான் அடைய வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டிருந்தது. பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

## சந்திப்பு

அனுமன் இராம இலக்குவர்களை ஓரிடத்தில் இருக்கச் செய்து விட்டுச் சுக்ரீவனிடம் சென்றான். ''இவர்கள் தசரத குமாரர்கள். பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்வதற்காக வனவாசம் செய்கிறார்கள். இவர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் சீதையை இராவணன் தூக்கிச் சென்றான். அவளைத் தேடிக் கண்டு பிடித்துத் தர இராமன் உன் உதவியை நாடி வந்திருக்கிறான். இவர்கள் உம்முடைய நட்பைப் பெறும் தகுதியுடையவர்கள். இவர்களுடைய நட்பைப் பெற்றால் நீயும் பெரும் பயன் அடைவாய்!'' என்றான் அனுமான்.

சுக்ரீவன் அழகிய மானிட உருவம் தாங்கி அரச குமாரர்களிடம் பேசினான். இராமனை நோக்கிக் கை நீட்டி, இராஜ குமாரனே!வானரனான என் நட்பை நீ விரும்புவாயாகில் இதோ என் கை; அங்கீகரிப்பாயாக! உன் குணங்களையும் மகிமையையும் பற்றி அனுமன் கூறினான்'' என்றான். இராமன் சுக்ரீவனுடைய நீட்டிய

கையை அங்கீகரித்து, அவனை ஆலிங்கனம் செய்து கொண்டான்.

உடனே அனுமன் குச்சிகளைக் கொண்டு வந்து தீ மூட்டினான். இராமனும் சுக்ரீவனும் தீ வலம் வந்து நட்புச் சபதம் செய்தார்கள். "இருவருடைய சுகத்திலும் இருவரும் சமபங்கு கொள்வோம். நம்முடைய நட்பு என்றும் நிலைத்திருப்பதாக" என்று பிரமாணம் செய் தார்கள்.

பின்னர் ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சுக்ரீவன் தன் கஷ்டங்களைச் சொல்லலுற்றான். "வாலியின் பயத்தால் வனத்தில் இங்கு மங்கும் திரிந்து கொண்டும் இந்த மலையில் மறைந் திருந்தும் காலங்கழித்து வருகிறேன். நீ வாலியைக் கொன்று என் துக்கத்தைத் தீர்த்து, அரசும் மனைவியும் நான் மறுபடி பெற்று அனுபவிக்கும்படி செய்வாயோ?" என்றான்.

"நிச்சயமாக! இதோ இந்த அம்புக்கு வாலி இரையா வான். சந்தேகமில்லை." என்று பதிலளித்தான் இராம பிரான். இப்படிச் சுக்ரீவனும் இராமனும் பேசிக் கொண் டிருந்தபோது அசோகவனத்திலிருந்த சீதையின் இடக்கண் மங்கல சூசகமாகத் துடித்தது. அரக்கர்களின் அரசன் இராவணனுடைய இடக்கண்ணும் துடித்தது. அது அவனுக்கு அபசகுனமாகும்.

## ஆபரணங்களைக் காணுதல்

சீதையை இழந்ததனால் இராமன் படும் துக்கத்தைப் பார்த்துச் சுக்ரீவன் அவனுக்குப் பலவிதமாகத் தைரியம் சொன்னான். "ஆகாய மார்க்கமாய் ஒரு மாதினை அரக்கன் எடுத்துப் போனதை நாங்கள் பார்த்தோம். அவள் அழுது கொண்டே 'இராமா, இலட்சுமணா' என்று கூக்குரல் இட்டதைக் கண்டோம். எங்களை அவளும்

கண்டாள். துணியில் நகைகளை முடிந்து போட்டாள். அதை எடுத்து வைத்திருக்கிறோம். இதோ பார்!'' என்று அந்த முடிச்சைக் கொண்டு வந்து கொடுத்தான்.

அந்தத் துணியைப் பார்த்த உடனே இராமனுடைய துக்கம் மேலிட்டது. ''இலட்சுமணா! இந்த மூட்டையை அவிழ்த்துப்பார். என்னால் பார்க்க முடியவில்லை'' என்றான். அவ்வாறே இலக்குவன் துணி முடிப்பை அவிழ்த்துப் பார்த்து, ''இவை சீதையின் ஆபரணங்களே சந்தேகமில்லை'' என்றான். இராமன் நகைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். ''சீதையைத் தூக்கிப் போன அரக்கனையும் அவன் குலத்தையும் இப்போதே அழிப்பேன்'' என்று வெகுண்டெழுந்தான்.

## சுக்ரீவன் கதை

சுக்ரீவன், தனக்கும் தன் சகோதரன் வாலிக்கும் உண்டான விரோதத்தின் கதையை இராமனிடம் விவரமாகச் சொன்னான். அது வருமாறு.

''என் அண்ணன் வாலி வானர ராஜ்யப் பட்டாபிஷேகம் பெற்றுக் கிஷ்கிந்தையில் அரசு புரிந்து வந்தான். மகா பராக்கிரமசாலி. அவனிடம் பக்தியும் அன்பும் கொண்டு நான் இளவரசனாக இருந்தேன். வாலிக்கும் மாயாவிக்கும் பழைய விரோதம். ஒருநாள் இரவு அந்த அசுரன் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைப் போருக்கு அழைத்தான்.

''நாங்கள் இருவரும் வருவதை அறிந்து மாயாவி ஓடி ஒரு குகைக்குள் நுழைந்தான். வாலி அவனைத் துரத்திக் கொண்டு குகைக்குள் புகுந்தான். நான் குகைவாயிலில் காத்து நின்றேன். உள்ளே சென்றவன் பல நாட்களாகியும் திரும்பி வரவில்லை. ஒரு பெரும் பாறாங் கல்லைக் குகை வாயிலில் வைத்து மூடி விட்டேன். நானே அரச காரியங்களைக் கவனித்து வந்தேன்.

''சில காலம் கழித்து, மாயாவியைக் கொன்று விட்டு, வாலி திரும்பினான். கற்பாறையை உதைத்துத் தள்ளி விட்டுக் கிஷ்கிந்தைக்குள் பிரவேசித்தான். அடங்காச் சினங்கொண்டு என்னைப் பலவாறாகத் திட்டினான். நான் என்ன சமாதானம் சொல்லியும் அவன் கோபம் தணியவில்லை. என்னை நகரத்திலிருந்து துரத்தி விட்டான். 'திரும்பி வந்தால் கொன்றுவிடுவேன்' என்று விரட்டினான்.

''அது முதல் காடும் மலையுமாக மறைந்து திரிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன். அந்த வாலியை வதம் செய்து என்னைக் காப்பாற்றுவாய்'' என்றான் சுக்ரீவன்.

சுக்ரீவனுடைய பரிதாப நிலையை இராமன் கண்டு கருணை மேலிட்டு, ''உனக்கு நான் தந்த சபதம் உறுதி. பயப்படாதே. வாலியைக் கொன்று உன் கவலையை நீக்குவேன்'' என்று இராமன் ஆறுதல் கூறினான்.

## வாலி வதம்

திருமால் எடுத்த அவதாரங்கள் பத்து. அவற்றுள் காப்பியச் சிறப்பு உடையவை, இராமாவதாரமும் கிஷ்ணாவதாரமும் ஆகும். இந்த இரண்டு அவதாரங் களின் குறிக்கோள் ஒன்றுதான். அதாவது அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலை நாட்டுவதாகும். ஆயினும், அந்த உயர்ந்த குறிக்கோளுக்கு வெற்றி தேடுவதற்குக் கடைப்பிடித்த நடைமுறைகளில் இராமனுக்கும் கிருஷ்ண னுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு காணப்படு கிறது. கிருஷ்ணாவதாரத்தில் அதர்மத்தை அழிப்ப தென்ற நல்ல கொள்கைக்காக யுத்த தருமத்திற்கு மாறு பட்ட முறைகளை யெல்லாம் கடைப்பிடிக்கக் காண் கிறோம். இராமாவதாரத்தில் கொள்கையைப் போலவே நடைமுறையும் தருமத்திற்கு ஒத்ததாய் இருக்கிறது.

இராமன் ஒழுக்கத்திற் சிறந்தவன் உயர் குணங்கள் நிறைந்தவன். உயிர்கள் அனைத்திடமும் சமமாக அன்பு செலுத்தியவன். பகைவனிடமும் கருணை காட்டிய பண்பாளன். புவியாளும் பொறுப்பைப் பெரிதாக மதியாதவன். இன்ப துன்பங்களைச் சமமாக எண்ணியவன். இவ்வளவு சிறந்த மகாபுருஷனைத் தலைவனாகக் கொண்ட இராமாயணத்தில் 'வாலி வதைப் படலம்' போக்க முடியாத ஒரு களங்கம். இப்படலம் இராமன் புகழுக்கு ஒரு சிறு களங்கமாயினும் அதுவும் அவனுடைய பெருமைக்கு அழகு செய்கிறது. சந்திரனிலுள்ள களங்கம் போன்றது என்றும் கூறலாம்.

## மராமரங்களை வீழ்த்தியது

வாலியும் சுக்ரீவனும் ஒருதாய் வயிற்று மக்கள். எனினும் வாலி இந்திரன் அம்சமாய்த் தோன்றியவன். சுக்ரீவன் சூரியன் அம்சமாய்த் தோன்றியவன். வாலியினுடைய உடல் இரும்பைப் போன்றது. அவனை இராமன் எப்படிக் கொல்லப் போகிறான் என்பது சுக்ரீவனுடைய சந்தேகம். இராமனுடைய பலத்தைப் பரீட்சை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான்.

வாலி துந்துபி என்ற அசுரனுடன் போரிட்டதையும் அவனுடைய எலும்புக்கூடு அங்குள்ளதையும் காட்டினார்கள். சுக்ரீவனுடைய பக்தியையும், சரணடைந்து விட்ட நிலையையும் வாலியை நினைத்துப் பயப்படுவதையும் பார்த்த இராமன் அவனுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்வதே சரி என்று எண்ணினான். தன் கால் கட்டை விரலால் துந்துபியின் எலும்புக் கூட்டை நெம்பி விளையாட்டாகத் தூக்கி எறிந்தான்.

பிறகு அதுவும போதாதென்று, இராமன் தன் வில்லைக் காதுவரை இழுத்து வளைத்து ஒரு சரத்தை விட்டான். சுக்ரீவன் காட்டிய ஏழு மராமரங்களையும் துளைத்துத் திரும்பி இராமனுடைய தூணியில் வந்து

சேர்ந்தது. அந்த ஏழு மரங்களும் ஒரே நேர்க்கோட்டில் இல்லாமல் வெவ்வேறு இடங்களில் இருந்தனவாகச் சொல்லப்படுறது. (மராமரம்—ஆச்சா, அரசு, கடம்பு.)

## முதல் சுற்றுப் போர்

இதைக் கண்ட சுக்ரீவன் பரவசமடைந்தான். வாலியின் வலிய உடல் இராமனுடைய அம்பால் பிளக்கப்படும் என்று நிச்சயமடைந்தான். அனைவரும் கிஷ்கிந்தைக்குச் சென்றார்கள். சுக்ரீவன் முந்திச் சென்றான். இராமன் பின்னால் சென்று அடர்ந்த காட்டில் ஒரு மரத்திற்குப்பின் நின்றான். சுக்ரீவன் ஒரு பெருங்கூச்சலிட்டான். அதைக் கேட்ட வாலி பெருங்கோபத்துடன் மலைக்கோட்டையிலிருந்து வெளியே வந்தான். இருவரும் கச்சை இழுத்துக் கட்டிக்கொண்டு கைகலந்தார்கள். உக்கிரமான யுத்தம் நடந்தது.

மறைந்து நின்ற இராமன் திகைத்தான். யார் சுக்ரீவன்—யார் வாலி என்று அவனால் பிரித்தறிய முடியவில்லை. இருவரும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டார்கள். சுக்ரீவன் அடிபட்டு,இராமன் உதவிசெய்யவில்லையே என்று ஏமாற்றமடைந்து, உயிருக்கு அஞ்சி ஓட்டமாக ஓடினான். இராம இலக்குவர்கள் சுக்ரீவனிடம் சென்றார்கள். சொன்ன சொல்லைத் தவறினான் என்பது சுக்ரீவனது கோபம்.

இராமன் சுக்ரீவனுக்கு ஆறுதல் சொல்லித் தன் இயலாமையை விளக்கினான். சுக்ரீவன் கழுத்தில் பூங்கொடியைக் கட்டினான். ஒருவரையொருவர் பிரித்தறிவதற்கு இது உதவும் என்று விளக்கம் கூறி மறுபடியும் போருக்கு அனுப்பினான். சுக்ரீவன் சமாதான மடைந்து மறுபடியும் கிஷ்கிந்தைக்குச் சென்றான்.

## இரண்டாம் சுற்றுப் போர்

மாலை நேரம்; மறுபடியும் சுக்ரீவன் பெருங்குரல் எழுப்பி வாலியை யுத்தத்துக்கு அறைகூவி அழைத்தான். வாலி புறப்பட ஆயத்தமானான். தாரை அவனைத் தடுத்து, ''இன்று வேண்டாம், நாளை பார்த்துக்கொள்ளலாம்'' என்றாள். ''இதைப் பற்றித் தீர ஆலோசிக்க வேண்டும். ஏதோ மோசமும் அபாயமும் உள்ளன. யாரோ சகாயத்திற்கு வந்திருக்கிறார்கள். என் பேச்சைத் தட்டாதீர்கள். அயோத்தியிலிருந்து பெருவீரர்கள் வந்துள்ளனராம்'' என்றாள்.

இந்தப் பேச்சு வாலிக்குப் பிடிக்கவில்லை. ''நீ இராமனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவன் தர்மத்தை அறிந்தவன். பாபத்துக்குப் பயந்தவன். அவன் நீதி தவறி நடக்க மாட்டான். நீ என்னைத் தடுக்காதே. திரும்பிப்போ, பயப்பட வேண்டாம். மங்கள மொழி சொல்லி என்னை அனுப்பு— தடுக்காதே!'' என்றான். தாரை பெருந்துன்பத்துடன் அந்தப்புரம் திரும்பினாள்.

பெருங்கோபத்துடன் சென்ற வாலி, தம்பி தைரியமாக நிற்பதைக் கண்டான். இருவரும் கச்சையை இழுத்துக் கட்டிக் கொண்டனர். யுத்தம் ஆரம்பித்தது. இருவரும் அடிமேல் அடி அடித்துக் குருதி வெள்ளம் பெருகிற்று. மரங்களை வேரோடு பிடுங்கி அடித்தனர். இருவரும் சம பலம் கொண்டவர்கள். வெகுநேரம் கோர யுத்தம் நடந்தது. சுக்ரீவன் பலம் குறைய ஆரம்பித்தது.

இதைக் கண்ணுற்ற இராமன், இனிச் சுக்ரீவன் தாங்க மாட்டான் என்று கருதி, வில்லை வளைத்துக் கொல்லும் பாணத்தை விட்டான். அது நேராகச் சென்று வாலியின் வலிய மாா்பைத் துளைத்தது. வாலி கீழே சாய்ந்தான். மரணக் காயமடைந்து கீழே கிடந்தாலும் வாலியின் அழகும் காந்தியும் குறையவில்லை. இந்திரன் அளித்த தங்கமாலை கழுத்தில் மின்னியது. தன் மார்பில் தைத்த

அம்பு யாருடையது என்று அறிதற் பொருட்டுக் கையால் இழுத்தான். வரவில்லை. கைகளோடு இரண்டு கால் களையும் பற்றி எடுக்க முயன்றான். அப்போதும் அம்பு பெயரவில்லை.

அதற்கு மேல் வாலி பலம் கொண்டு இழுத்தான். மார்பில் தைத்த அம்பைப் பறித்தெடுத்த வாலி அதில் பொறிக்கப்பட்டிருந்த 'இராமன்' என்ற சொல்லைப் பார்த்தான். 'இராமன்' என்ற சொல்லை உலகங்களுக் கெல்லாம் மூலமந்திரம் என்றும் இறைவன் அடியார் களுக்கு அளிக்கும் பரமபதம் என்றும், பிறவித் துன்பத் தைப் போக்கும் மருந்தென்றும் கவிக் கூற்றாகக் கம்பர் கூறுகின்றார்.

அந்த நேரத்தில் இராமனும் இலக்குவனும் வாலியின் முன்வந்து நின்றனர். வாலியின் எதிர் நின்று, போர் செய்யும் பகைவர், தம்முடைய பலத்தில் பாதியை வாலி யிடம் பறி கொடுப்பர் என்ற செய்தியை இராமன், அனுமன் மூலம் அறிந்திருந்தான். ஆதலின் வாலியின் பார்வையில் படாமல் மறைந்திருந்து அம்பு விட்டான்.

பாணத்தில் பொறித்திருந்த பெயர் கண்டு வாலி வியந்தான். இராமனது அறம் பிறழ்ந்த நிலையைக் கண்டு, வெட்கமும் வேதனையும் அடைந்தான். தன் எதிரே வந்து நின்ற இராமனை வாலி கண்ணுற்றான். "எங்கு வந்தாய்? என்ன காரியம் செய்தாய்?" என்று கேட்டான். பின்னர் ஏசலுற்றான்.

## வாலியின் குற்றச்சாட்டு

"'இராமனே! தசரதச் சக்கரவர்த்தியின் மகனே! பரதனுக்கு முன் பிறந்தவனே! உத்தம குலத்தில் பிறந்த நீ, பெரும் புகழும் அடைந்த நீ, ஏன் இப்படிச் செய்தாய்? உன் நற்குணங்களும் ஒழுக்கமும் உலகம் அறிந்த விஷயம். நான் என் தம்பியுடன் யுத்தம் செய்து கொண்டு, அதில்

மனம் ஈடுபட்டிருந்த சமயத்தில் என் கண்களுக்குத் தென்படாமல் மறைந்து நின்று, என்மேல் பாணம் விட்டு என்னைக் கொன்றாய்.' என்னைக் கொன்று நீ என்ன லாபம் பெறுவாய்?

"யோசிக்காமல் இந்த அதர்ம காரியம் செய்தாய். நல்ல அரச குலத்தில் பிறந்து பெரும் பாவத்தைச் செய்தாய். சுக்ரீவனுக்காக என்னைக் கொன்றாயே! என்னிடம் சொல்லியிருந்தால் இராவணனைக் கொன்று சீதையை உன்னிடம் ஒப்புவித்திருப்பேனே. பிறந்தவர்கள் இறந்தே ஆகவேண்டும். எனினும் நீ முறை தவறி என்னைக் கொன்றாய். இது பெருங்குற்றம்" என்று வாலி இராமனைக் கண்டித்தான்.

## இராமனின் பதிலுரை

வாலியின் குற்றச்சாட்டுகளுக்குத் தேவியைப் பிரிந்த தால் திகைப்புற்ற இராமன் அடியிற்கண்டவாறு பதிலளித் தான். "உன் தம்பி குற்றமற்றவன் என்பது தெரிந் திருந்தும் அவனைக் கொல்ல முயன்றாய். அவன் மன்னிப்பு கேட்டபோதும் நீ இரக்கம் காட்டவில்லை. அவனை விரட்டி அடித்தாய். அதனுடன் அவன் மனைவியையும் அபகரித்துப் புணர்ந்தாய். இத்தகைய குற்றங்களாலும் உன் தம்பி சுக்ரீவன் பால் எனக்குள்ள அன்பினாலும் எளியோரைக் காக்க வேண்டிய கடமை எனக்கு இருப்பதாலும் உன்னைத் தண்டிக்கத் துணிந்தேன் உன் வீர நெறியும், ஈர நெஞ்சும், வானரப் பண்பும், தம்பியினுடைய தாரத்தை அபகரித்துப் புணர்வது தானோ?' என்று பதிலுரை இறுத்தான்.

"ஐயனே! உங்களைப் போன்ற கற்பு நெறிக்குரிய மனித குலத்தவராக எம்மைப் படைக்கவில்லை பிரமன். நாங்கள் எங்கள் மங்கையரை வேதநெறியில் மணப்பதும் இல்லை. உங்களுக்குரிய உயர் குணங்கள் குரங்கினத்தவ

ராகிய எங்களுக்கில்லை. உணர்ச்சி எப்படிச் செல்கிறதோ அதன் வழி சென்று கிடைத்ததை அனுபவிப்பதுதான் எங்கள் வழி'' என்று வாலி கூறினான்.

இதைக்கேட்ட இராமன் மறுத்துக் கூறுவானாய், ''வாலியே! நீ தோற்றத்தால் மிருக வர்க்கத்தைச் சேர்ந்தவனாயினும் அறிவால் மனிதரினும் உயர்ந்த தேவனாகத் தெரிகின்றாய். ஆகவே நீ விலங்கினத்தான் அல்லன். அறிவு உடலோடு உறவுடையது அல்ல; இந்த உண்மை உணர்ந்த நீ பிழை செய்தது பெருமையோ?'' என்று கூறித் தனது செயல் தருமத்தின் பாற்பட்டதே என்றான்.

இதற்குமேல் இராமனுடன் தான் நடத்தும் வாதப் போருக்கு ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகிறான் வாலி. ''என்னை நீ கொன்றது நீதியின் பால் பட்டதாகவே இருப்பினும் நேரில் வந்து போர் செய்யாமல் மறைந்திருந்து அம்பு எய்தது ஏன்?'' என்று கேட்டான் வாலி. இதற்கு இராமன் பதிலளிக்கவில்லை. இலக்குவன் முந்திக் கொண்டு பதில் கூறலானான்:

''இராமன் முதன் முதலாகச் சுக்ரீவனைச் சந்தித்த போது அவனுடைய எதிரி யார் என்பதையும், பகையேற்படக் காரணம் என்ன என்பதையும் புரிந்துகொள்ளாமல், இராமன் சுக்ரீவனுக்கு அடைக்கலம் தந்து அவனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டான். இப்போது இராமன் உன் எதிர் நின்று போர் செய்திருந்தால் நீயும் அடைக்கலம் புகுந்திருப்பாய். அப்போது சுக்ரீவனுக்குத் தந்த உறுதிமொழியை நிறைவேற்ற இயலாது. அதனால்தான் இராமன் மறைந்திருந்து அம்பு எய்தான்'' என்பது இலக்குவன் கூறிய சமாதானம்.

## வாலியின் முறையீடு

இத்துடன் வாலி—இராமன் வாதப்போர் முடிகிறது. வாலி இராமனிடம் சரண் புகுந்தான். சுக்ரீவனால் அடி

பட்டு உடம்பெல்லாம் ரணகாயங்கள். அதன் மேல் இராமபாணத்தால் உண்டான மரண அவஸ்தை. இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு கடைசியாக வாலி இவ்வாறு கூறலுற்றான்.

"ஓவியம் போன்ற உருவம் உடையவனே! நாயேன் ஒரு வரம் வேண்டுகிறேன். என் தம்பி கள்குடித்து அறிவு அழிந்திருக்கும் போது ஏதேனும் தவறு செய்துவிடக்கூடும். அப்போது அவன் பால் சீற்றங்கொண்டு, இப்போது என் மீது விட்ட அம்பை அவன் மீதும் விடுவதில்லை என்று உறுதிமொழி தருவாயாக.

"வானினும் உயர்ந்த தோள்களை உடையாய்! அனுமனை உன் கையிலுள்ள வில்லென நினைப்பாயாக. அதனோடு என் தம்பியை உன் தம்பியாக நினைப்பாயாக. உன்னைக் காட்டிலும் அவர்களுக்கு வேறு துணைவர் இல்லை. அதன் பிறகு சீதையைத் தேடும் பணியை நீ மேற்கொள்வாயாக!" என்றான்.

## தம்பிக்கு அறவுரை

பின்னர் வாலி தன் தம்பியைத் தழுவிக்கொண்டான். "அன்புத் தம்பியே! நான் கூறுவதைக் கேள். அதை உறுதிப்பொருள் என்று நினை. வருந்த வேண்டாம். வேதங்களும் முனிவர்களும் பிரமனும் போற்றுகின்றவனும் வலிய வில்லைத் தாங்கி வந்திருப்பவனுமாகிய இந்த இராமன் தருமத்தை நிலைநாட்டுவதற்காக வந்துள்ள தலைவனாகும். ஐயமற இதை உணர்வாயாக. நிலையான பரமபதத்தை அடைவதற்காக முயல்வோர் எல்லாம் கற்கின்றது 'இராமன்' என்னும் இவன் நாமத்தைத்தான். போற்றித் துதிப்பதும் இவனையேதான். பொதுவாக நோக்குமிடத்து என்னைக் கொன்ற இவனது வீரமே போதுமானது. வேறு காரணங்கள் தேவையில்லை.

''அரசியல் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மகிழ்ச்சியினால் இவனது தாமரை மலர் போன்ற பாதங்களை மறந்துவிடாமல் வாழ்வாயாக. மன்னர்கள் தீயைப் போன்றவர்கள். அவன் குறிப்பு அறிந்து ஏவல் செய்வாயாக. குற்றத்தைப் பொறுப்பார்கள் என்று தவறாக எண்ணிவிடாதே!'' இவ்வாறு சுக்ரீவனுக்கு உறுதியான வற்றைக் கூறிய பின்னர், இராமனை நோக்கி, ''சக்கரவர்த்தித் திருமகனே! சுக்ரீவனையும் அவன் சுற்றத்தாரையும் உனக்கு அடைக்கலமாகத் தந்தேன்!'' என்று உச்சிமேல் கை கூப்பினான்.

வாலி தன் மைந்தன் அங்கதனை இராமனிடம் ஒப்படைத்து அவன் பாதங்களில் விழுந்து வணங்கினான். தாமரை மலர் போன்ற கண்களையுடைய இராமனும் தனது வாளை நீட்டி, ''நீ இதைப் பொறுத்துக் கொள்வாயாக'' என்றனன். அப்போது ஏழு உலகங்களும் துதித்தன. வாலியின் உயிர் நீங்கி, வானுலகடைந்தது.

## கார் காலம்

வாலி இறந்த செய்தியை வானரர்கள் ஓடிப்போய்த் தாரையிடம் சொன்னார்கள். வாலி இறந்து கிடக்கும் இடத்திற்கு வந்தாள். துக்கத்தை அடக்க முடியவில்லை. கதறி அழுதாள். வாலியின் மீது விழுந்து புரண்டாள்; கதறினாள்; அங்கதனும் வந்தான். தன்னால் இந்தத் துன்பம் நேர்ந்ததே என்று சுக்ரீவன் வருந்தினான். அனுமன் தாரைக்கு ஆறுதல் கூறினான். வாலிக்கு இறுதிக் கடன்கள் சிறப்பாக நடைபெற்றன. சுக்ரீவனுக்கு முடி சூட்டப்பட்டது. அங்கதனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார்கள்.

மழைக் காலம் ஆரம்பித்தது. சுக்ரீவனும் பரிவாரங்களும் மகிழ்ச்சியுடன் கிஷ்கிந்தையில் காலங்கழித்தனர். இராம இலக்குவர்கள் அருகிலிருந்த ஒரு மலைக்குகையில்

காலங்கழித்தனர். மழை பெய்து எங்கும் வெள்ளம். வழி துறை புலப்படாமையால் சீதையைத் தேடும் வேலை தடைப்பட்டு நின்றது. சீதையின் நிலை குறித்து இராமன் வருந்தினான். இலக்குவன் ஆறுதல் கூறினான். மாரிக் காலம் முழுவதும் காத்திருக்க வேண்டியதாயிற்று.

கார் காலம் முடிந்தது. வானம் மேகங்கள் இல்லாமல் வெண்மையாகிவிட்டது. பறவைகளும் மகிழ்ச்சியாய்க் காணப்பட்டன. அனுமன் அரசனிடம் சென்றான். சுக்ரீவன் அரச காரியங்களை அமைச்சர்களிடம் ஒப்பு வித்துவிட்டு அந்தப்புரத்தில் மயங்கிக் கிடந்தான். கடமை களை மறந்தான். கார் காலம் முடிந்ததும் இராமனிடம் செல்ல வேண்டுமென்ற நினைவு இல்லை.

## மது மயக்கம்

அனுமன் சுக்ரீவனிடம் சென்றான். ''அரசே! உன் அரசைப் பெற்றுவிட்டாய். புகழ் பெற்றாய். உன்னு டைய அதிகாரம் நிலைத்துவிட்டது. நட்பைப் பலப் படுத்திக்கொள்ள வேண்டும். கொடுத்த வாக்கை நிறை வேற்ற வேண்டும். இராமன் நமக்குச்சொன்ன செய்தியை மறக்கக்கூடாது. கார் காலம் முடிந்துவிட்டது. இனித் தாமதிக்கலாகாது. சீதையைத் தேட ஆரம்பிக்க வேண் டும்'' என்று வினயமாகக் கூறினான். சுக்ரீவன், அனுமன் கூறிய ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டான். ''சீதை யைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என்றான்.

இராமனுக்குச் சீதையைப்பற்றிய கவலை அதிகரித்தது. ''இலட்சுமணா! உலகமெல்லாம் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந் திருக்கிறது. சுக்ரீவன் மதுபானத்தில் மூழ்கி அந்தப் புரத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறான். தந்த வாக்கை மறந்துவிட்டான். நீ உடனே கிஷ்கிந்தைக்குப் போய் வானர ராஜனைக் கண்டு சொல்; செய்ந்நன்றி மறந்தவன்

அழிந்து போவான். நண்பனை ஏமாற்றப் பார்ப்பவன் கதி அதோகதிதான். இராமனுடைய வில்லும் அம்பும் தயாராக இருக்கின்றன என்று அவனுக்குப் புத்தி புகட்டு'' என்று இராமன் கூறினான்.

மழைக்காலம் நான்கு மாதங்களும் இராமனுக்கு நான்கு யுகங்கள் போல் கழிந்தன. தம்பியைச் சுக்ரீவ னிடம் அனுப்பினான். அப்போது இராமன் சொன்ன வார்த்தைகள் வருமாறு: ''சுக்ரீவனிடம் என் கோபத்தைச் சொல்லும்போது கடுஞ்சொற்களை உபயோகிக்காதே. நாம் அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டோம். அவனு டைய தவறுகளை, நயமாக எடுத்துக் காட்டினால் போது மானது. அவனுடைய உதவி நமக்குத் தேவையாக இருக் கிறது'' என்றான்.

அரண்மனையை நெருங்கும்போது இலக்குவனுக்குக் கோபம் வந்துவிட்டது காவலர்கள் ஓடிப்போய் மன்ன னிடம் இலககுவன் வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். அவன் கள்ளுண்டு மங்கையருடன் மயங்கிக் கிடந்தான். அவ்வானரர்கள் கூறியது அவன் காதில் ஏறவில்லை. தடைகளைக் கடந்து இலக்குவன் உள்ளே பிரவேசித்தான். அங்கதனைக் கண்டான். அங்கதன் ஓடிச்சென்று சுக்ரீவனிடம் மிகப் பணிவாய் இலக்குவன் வந்திருப்பதைத் தெரிவித்தான். அப்போதும் அவன் மயக்கம் தெளிய வில்லை.

## இலக்குவன் சீற்றம்

''சூரியன் மைந்தனாகிய சுக்ரீவன் தானும் சேனையும் தேடிச் சீதையைத் தருவேன் என்று இராமனிடம் சொன்ன சொல்லை மறந்துவிட்டான்; அதன்படி வந்தான் இலன். இராமனுடைய ஆற்றல் எத்தகையது என்று தெரிவிக்க இரக்கம் காரணமாக வந்துள்ளேன்!'' என்று இலக்குவன் தான் வந்த செய்தியைத் தெரிவித்தான்.

''சுக்ரீவன் இலக்குவன் நாணிலிருந்து எழுந்த பேரொலியைக் கேட்டு நடுங்கினான். தாரையிடம் சென்று, "நீ முன்னதாகச் சென்று இலட்சுமணனைச் சமாதானப் படுத்து!'' என்று வேண்டினான். அவ்வாறே தாரை இலக்குவனிடம் சென்றாள்.

**தாரை**

தாரையின் விதவைக் கோலத்தைக் கண்டதும் இலக்குவனுக்குக் கண்ணீர் பெருகிற்று. தந்தை இறந்து தன் தாயாகிய சுமித்திரை விதவைக் கோலம் பூண்டு அங்கு வந்துள்ளதாகவே அவன் கருதினான். அவள் இலக்குவனை நோக்கி, ''ஐயனே!' சுக்ரீவன் இவ்வளவு நாள் பட்ட துன்பத்தை மறந்து அரச போகத்தை அனுபவிக்கிறான். அதுவும் நீங்கள் கொடுத்த பிச்சைதான். அவன் மேல் கோபம் கொள்ளாதீர்கள். பொறுத்துக் கொள்ளுங்கள். மன்னித்து விடுங்கள். அவன் உங்களுக்குச் செய்ய வேண்டியதை மறந்துவிடவில்லை. சீதையைத் தேட வீரர்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அரசனைப் பார்க்க உள்ளே வாருங்கள்'' என்று சாமார்த்தியமாகவும் நயமாகவும் கூறினாள்.

இலக்குவன் கோபம் தணிந்து உள்ளே சென்றான். சுக்ரீவன் ஆசனத்திலிருந்து இறங்கி வணங்கினான். ''நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். உங்கள் உதவியினால்தான் இந்த அரச பதவி எனக்குக் கிடைத்தது உங்கள் உதவியை நான் என்றும் மறவேன். தாமதத்தை மன்னிப்பீர்களாக'' என்று வேண்டினான்.

இதைக் கேட்டு இளையவன் மகிழ்ந்தான். ''நீ நேரில் வந்து இராமனைக் கண்டு அவன் துயரத்தைத் தணிப்பாயாக'' என்று சுக்ரீவனிடம் சொன்னான். இருவரும் சிவிகை யேறி இராமனிடம் சென்று,செய்தியை சொல்லி, அவனைச் சாந்தப்படுத்தினார்கள். இராமன் மகிழ்ந்து நன்றி தெரிவித்தான்.

**படையிருதல்**

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது பெருங்கூட்டமாக வானர வீரர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். சுக்ரீவன் சேனாதிபதிகளை நியமித்து எட்டுத் திக்குகளிலும் போக்கினான். அவர்கள் தங்களுடைய சேனைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர்

''இராமா! இவ்வளவு பெரிய சேனை உன்னுடையது. உன் கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடந்து கொள்வார்கள்'' என்றான் சுக்ரீவன். இதைக் கேட்டு இராமன் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

எல்லா இடங்களிலும் தேடிப் பார்க்க வேண்டுமென்று சுக்ரீவன், வானர சேனைகளுக்கு உத்திரவிட்டான். அனுமனைத் தனியாக அழைத்து, ''வாயு மைந்த! உன்னால்தான் இந்த வேலை ஆக வேண்டும். உன்னை நான் பெரிதாக நம்பியிருக்கிறேன். பலம்,புத்தி, வீரம், உபாயம், அறிவு அனைத்தும் உன்னிடம் உள்ளன. நீ சீதையைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். நீ இதற்குப் பொறுப்பு'' என்றான்.

'அனுமன்தான் இதைச் செய்து முடிப்பான்' என்று இராமன் உணர்ந்தான். இராமன் அனுமனிடம் தன் மோதிரத்தைக் கொடுத்து, ''இதை அடையாளப் பொருளாக வைத்துக்கொள். இதைச் சீதையிடம் கொடுத்தால், 'நீ இராம தூதன்' என்று நம்புவாள்'' என்றான். மேலும் சீதையைப் பற்றிச் சில அடையாளங்களும் சொல்லி அனுப்பினான். வாயு புத்திரனும் கணையாழியைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டான். இராமனை வணங்கி விடைபெற்றுக் கொண்டான்.

இலங்கை, தென் திசையில் உள்ளது என்பதனால் அனுமானைத் தென் திசையில் சென்று பார்க்குமாறு சுக்ரீவன் அனுப்பினான். இலங்கைக்குச் செல்லும் வழியை

யும் தென்னாட்டின் சிறப்பையும் பல பாடல்களில் கம்ப நாட்டாழ்வார் பாடி மகிழ்கிறார். விஷ்ந்தை என்பது கோதாவரி, கிருஷ்ணா முதலிய ஆறுகள் பாயும் ஆந்திரப் பிரதேசத்தின் வட பகுதியாகக் கொள்ளலாம். அப்பாடல்களுள் ஒன்றின் பொருளைக் காண்போம்.

"நீ போகும் வழியில் தென்தமிழ்நாடு உள்ளது. அங்குள்ள அகன்ற பொதிய மலையில் அகத்திய முனிவரது தமிழ்ச் சங்கம் உள்ளது. அங்கு நீ செல்வாயானால் அந்த இடத்தை விட்டு அப்பால் போக மனம் வராது. அகத்திய முனிவர் அங்கு இருப்பதனால் அது அவரது உறைவிடமாக உள்ளது. ஆகையால் நீ அங்குச் செல்லாமல் மனத்தில் துதித்துவிட்டுச் செல்வாயாக. அதன் பிறகு பொன் கொழிக்கும் ஆன்பொருநை நதியைக் காண்பாய். அதையும் கடந்து சென்றால் நாக மரங்கள் வளர்ந்துள்ள பெரிய சாரலையுடைய மகேந்திரமென்னும் உயர்ந்த மலையையும் கடலையும் காண்பாய்."

வடக்கு நோக்கிச் சதபலியும், கிழக்கு நோக்கி வினதனும், மேற்கு நோக்கி சுஷேணனும் சென்றார்கள். தென்திசை நீங்கலாக மற்ற மூன்று திசைகளிலும் சென்றவர்கள் ஒரு மாதம் தேடிப்பார்த்துச் சீதையைக் காணவில்லையென்று திரும்பிவிட்டனர். சீதையைத் தென் திசையாக அரக்கன் தூக்கிச் சென்றான் என்று கேள்விப் பட்டிருந்தமையால் இவர்கள் சொன்னவற்றைச் சரியென்று இராமன் ஏற்றுக்கொண்டான்.

அனுமன், அங்கதன் ஆகியோர் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்தனர். வழியில் சீதையைத் தேடிக் கொண்டே சென்றனர். பல நாட்கள் கழிந்தன. 'சீதையைக் காணவில்லையே' என்று தைரியமிழந்தனர். ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டே தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

**சம்பாதி**

குறித்த ஒரு மாதம் கடந்து, வசந்த காலம் ஆரம்பித்து விட்டதே என்று கலங்கினர். மலை மீதிருந்த சம்பாதி என்ற கழுகரசன் இவர்கள் தூரத்தில் வருவதை பார்த்து, தனக்கு நல்ல உணவு கிடைத்தது என்று உள்ளூர மகிழ்ச்சி யடைந்தது. வானர வீரர்கள், இராமன் காட்டிற்கு வந்தது, இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றது, அப்போது சடாயு அவனிடம் சண்டையிட்டு உயிர் துறந்தது முதலிய செய்திகளைப்பற்றிப் பேசிக்கொண்டி ருந்தனர்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த சம்பாதி, ''என்ன என் அருமைத் தம்பி சடாயு இறந்து போனானா?'' என்று தெரிந்துகொள்ள முயன்றது. அது ஒரு கிழப் பறவை. கருடனும் அருணனும் சகோதரர்கள். சடாயுவும் சம்பாதி யும் கருடனுடைய குமாரர்கள். அது பறக்க முடியாமல் கிடந்தது.

வானர வீரர்களைக் கொண்டு இராமனைப் பற்றியும் தன் தம்பி சடாயுவைப் பற்றியும் கேட்டறிந்தது. சம்பாதிக்குக் கண்பார்வை மங்காமல் இருந்தது. இலங்கை யில் சீதை சிறையிருப்பதை அதனால் காண முடிந்தது. அந்தக் காட்சியை அவர்களுக்கு விளக்கமாக சொல்லிற்று. வானரர்கள் இவைகளை உற்சாகத்தோடு கேட்டு மகிழ்ந் தனர். இராம கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது முன்பு சூரிய வெப்பத்தால் தீய்ந்து போன சம்பாதி யின் இறகுகள் முளைத்தன. சம்பாதி மகிழ்ந்தது. தம்பி சடாயுவுக்குச் சமுத்திரத்தில் நீர்க்கடன்களைச் செய்தது.

**குறிப்பு**

வாசகர்களுக்கு இங்கு ஒன்று சொல்ல வேண்டும். சடாயுவும் சம்பாதியும் பறவைகள், வாலியும் அனுமனும் வானரர்கள். ஜாம்புவான் கரடி, விபீஷணன் அரக்கன்,

குகன் வேடுவன் இவர்கள் யாவரும் அறிவின் எல்லைக்கே நம்மை அழைத்துச் சென்று நியாயம் கற்பிக்கிறார்கள். இவர்களைக் கற்றறிந்தவர்களாகவே வால்மீகியும் கம்பரும் சித்திரிக்கிறார்கள்.

## மகேந்திரமலை

சீதை சிறையிருக்கும் இடத்தையும் அரக்கன் வாழும் இடத்தையும் பற்றிச் சம்பாதி கூறக் கேட்ட வானர வீரர்கள் பெரு மகிழ்வெய்தினர். 'கடலைத் தாண்டிச் சென்றால் அல்லவா சீதையைக் காண முடியும்' என்று அங்கதன் திகைத்தான். "நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் தாண்ட முடியும்? சொல்லுங்கள்" என்று அங்கதன் கேட்டான். ஒவ்வொருவரும் தங்களால் இயன்றதைக் கூறினார்கள்.

ஜாம்பவான் சொன்னான்: "அதோ மவுனமாக அமர்ந்திருக்கிறானே வாயு புத்திரன், அவனால்தான் இந்தக் காரியம் முடியும். அதற்கு வேண்டிய திறமையும் சக்தியும் அவனிடம் உள்ளன!" என்று கூறி அனுமனை அழைத்து வந்தான். "வீரனே! ஏன் மவுனமாய் இருக்கிறாய்? உலகத்தில் உனக்குச் சமமானவர் எவரும் இல்லை. நீ வாயு புத்திரன். இந்தக் காரியத்தை நீ எளிதில் செய்து முடிக்கலாம். தாமதியாதே. உன்னுடைய உண்மை பலத்தை அறிந்து உடனே கிளம்பு. திருவிக்ரமனைப் போல் ஒரே தாவலில் இந்தக் கடலைக் கடக்கலாம். நம்முடைய துயரம் நீங்கும்," இவ்வாறு வயது முதிர்ந்த ஜாம்பவான் என்ற கரடி அனுமனுக்குத் தைரியமூட்டியது.

உடனே அனுமன் பேருருக் கொண்டான். சுடரொளி வீசியது. "நான் இந்தக் கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்று, விரைவில் திரும்பி வருவேன். அதுவரையில் இங்கே நீங்கள் கவலையின்றி இருங்கள், விடை கொடுங்

கள்'' என்று அனுமன் கூறினான். அவர்களும் மகிழ்ந்து வாழ்த்தினர். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். மகேந்திரமலை உச்சிக்குச் சென்றான்.

ஒப்பற்ற கடலைத் தாவுவதற்கு எண்ணிய அனுமன் முன்பு மூவுலகங்களை மூவடியால் அளந்த திருவிக்கிர மனது உயர்ந்த பாதத்தைப்போல் பேருருக் கொண்டான். சிறிய திருவடி என்னும் பெயரைப் பெற்று, யாவரும் காணுமாறு உயர்ந்து நின்றான்.

திருமாலைத் தனது தோளின் மீது சுமந்து செல்லும் கருடனைப் பெரிய திருவடியென்றும், இராமாவதாரத்தில் இராமனைத் தனது தோளின் மீது சுமந்த அனுமனைச் சிறிய திருவடி என்றுங் கூறுவர்.

## 5. சுந்தர காண்டம்

### பெயர்க் காரணம்

சுந்தரம் என்றால் அழகு. அழகு மூன்று வகைப்படும் என்பர். அவை முறையே ரூப சௌந்தர்யம், ஞான சௌந்தர்யம், குண சௌந்தர்யம் எனப்படும். அதாவது உருவ அழகு, அறிவழகு, பண்பழகு என்னும் இம் மூன்றுவகை அழகுகளும் ஆஞ்சநேயர்பால் அமைந்துள்ளன. ஆதலின் அனுமனுக்குச் சுந்தரன் என்ற பெயரும் உண்டு. இராமாயணத்தில் மிகவும் சிறந்த பகுதி சுந்தர காண்டமே. அன்பர்கள் பலர் அதனை நித்திய பாராயணம் செய்வதுண்டு. ஆஞ்சநேயர் ஆகிய சுந்தரன் பற்றிய அரும் பெரும் செயல்களும் செய்திகளுமே இதில் மிகுதியாக இடம் பெற்றிருத்தலும் ஒரு காரணமாகும்.

### கடல் தாவுதல்

மகேந்திர மலையில் ஏறி விஸ்வரூபம் எடுத்த அனுமன் தெற்கு நோக்கினான். வெகு தூரத்தில் இலங்கை நகர் காட்சியளித்தது. அது பழமையான நகரம்; காவலையுடைய சோலைகள் அதனை அழகு செய்தன. உயர்ந்த மதிற் சுவர்கள், வெற்றி பொருந்திய நகர வாயில்; உயர்ந்த மாடங்கள் வீதியை அலங்கரித்தன. இவைகளைக் கண்டதும் அனுமனுக்கு ஓர் உற்சாகம் பிறந்தது. ''எப்படியும் இலங்கை சென்று சீதையைக் கண்டறிவேன்'' என்று திடசங்கற்பம் செய்து கொண்டான். பூமியும் திசைகளும் நடுங்குமாறு தோள்களைக் கொட்டி ஆரவாரம் செய்தான்.

மலையைக் கால்களால் உதைத்து உந்து விசையுடன் தாவினான். அனுமன் எழுந்து ஊழிக்காற்றைப் போலச் சென்ற வேகத்தினால் மலை மீதுள்ள மரங்களும் உடன் இழுக்கப்பட்டு, அனுமனைப் பின் தொடர்ந்து போய், இழுக்கும் சக்தி குறையக் குறைய அங்கங்கே விழுந்து கடலைத் தூர்த்தன. ஆழ்கடல் கலங்கியது. நீர்வாழ் இனங்கள் உயிரிழந்து மிதந்தன. அனுமன் எதிரில் மைநாகமலை எழுந்தது. அம்மலை விருந்தளிக்க விரும்பியது. ''இராமன் பணியை முடித்துத் திரும்பும்போது விருந்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி மேலும் சென்றான்.

அனுமன் புயல் காற்றைப் போல ஆகாயத்தில் போய்க் கொண்டிருந்தான். அவனை எதிர்க்க வந்த சுரசை என்னும் அரக்கியை வென்று மேலும் சென்றான். எமதர்மன் போல் அங்காரதாரை என்ற இராட்சசி குறுக்கிட்டாள். அவளையும் விலக்கிச் சென்றான். தூரத்தில் இலங்கை தென்பட்டது.

## சீதையைத் தேடுதல்

மாலை நேரம். அனுமன் இலங்கையில் வந்து இறங்கினான். பவள மலையில் பாய்ந்து அந்நகரின் வளப்பங்களையும் மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கண்ணுற்றான். மூன்று உலகங்களிலும் உள்ள போகப் பொருள்கள் எல்லாம் இலங்கையில் நிரம்பியிருந்தன.

அனுமன் தன் விஸ்வரூபத்தைச் சுருக்கிக் கொண்டு மதில் வாசலை அடைந்தான், எதிர்ப்பட்ட இலங்கிணி என்னும் காவல் தெய்வத்தை வீழ்த்தினான். மதிலைத் தாண்டி நகரினுள் புகுந்தான். மாட்டுத் தொழுவங்கள், குதிரை லாயங்கள், யானைக் கொட்டகைகள் முதலிய எல்லா இடங்களிலும் சீதையைத் தேடிக் கொண்டே போனான்.

பெண்கள் தங்கியிருக்கும் இடங்களில் எல்லாம் சிறிய உருவில் சென்று பார்த்தான். கும்பகர்ணன் தூங்கிக் கொண்டிருந்த மாளிகையிலும் தேடிப் பார்த்தான். தேவாலயங்கள், பட்டி மண்டபங்கள் முதலிய இடங்களிலும் பார்த்தாயிற்று. விடணன் தூங்கிக் கொண்டிருந்தான். அந்தத் தூய மாளிகையிலும் தேடி ஆயிற்று. அதன் பின்னர் இந்திரஜித்தின் மாளிகை. காவலைக் கடந்து அங்கும் தேடிப் பார்த்தான். இலங்கை வேந்தனின் அரண்மனைக்கு வந்தான். அழகிய மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்தான் இராவணேஸ்வரன். அனுமன் அவனை அழிக்க முற்பட்டான். சிறிது நேரத்தில் வந்த வேலையை நினைத்து, கோபம் தணிந்தான்.

சீதையை எங்கும் காணாமையால் மனம் சலித்துத் தற்கொலை செய்து கொள்ளலாமா என்றும் அனுமன் நினைத்தான்.

**சீதையைக் காணுதல்**

கடைசியாக அனுமன் அசோக வனத்திற்கு வந்து சேர்ந்தான். அவ்வனத்தில் சீதை மேகத்தில் தோன்றும் மின்னலைப்போல் கருநிற அரக்கியர் நடுவில் சோகச் சித்திரமாகக் காணப்பட்டாள். அவளைக் கண்டதும் அனுமன் மகிழ்ச்சியால் ஆடினான்; பாடினான்; ஈண்டும் ஈண்டும் பாய்ந்து ஓடினான். உலாவினான்; உவகைத் தேனுண்டான்.

இராமனின் பிரிவுத் துயரால் சீதை கண்ணுறங்கவில்லை. மறுவில்லாத பூர்ணச் சந்திரன் போன்ற திருமுகமுள்ள சீதை, வெயிலில் ஏற்றி வைத்த விளக்கைப் போல சோபை இழந்திருந்தாள். கொடிய புலிக் கூட்டத்தின் மத்தியில் அகப்பட்ட இளம் பெண்மான்போல் தத்தளித்தாள். இராமனை நினைத்து அவள் இருந்த

திசை நோக்கி வணங்குதல், விழுதல், புலம்புதல், அஞ்சுதல், மனக்கலங்குதல், பரிதவித்தல், தளர்தல், தவிர வேறொன்றையும் அவள் செய்வது அறியாள். ஒற்றை யாடை அணிந்திருந்தாள். கண்ணீரில் நீராடினாள்.

## இராவணன் வருகை

மரக்கிளையில் அனுமன் மறைந்திருந்து சீதையைக் கண்டான். அச்சமயத்தில் இராவணன் தன் பரிவாரங் களுடன் அங்கு வந்து சேர்ந்தான். இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டு அனுமன் மரக்கிளையில் ஒளிந் திருந்தான். இராவணன் சீதையைப் பணிவுடன் அணு கினான். "எனக்கு எப்போது இன்னருள் செய்யப் போகிறாய்? உன் கணவன் ஓர் அற்பமானுடன். அவன் உன்னை வந்து மீட்க முடியாது. நான் உன் அடிமை. மனமிரங்கி அருள் செய்!" என்று வேண்டினான்.

இராவணன் இவ்வாறு தகாத வார்த்தைகளைக் கூறியதும் சீதைக்குக் கோபம் பிறந்தது. அவனைத் துரும்பாக மதித்துப் பேசலானாள். "நீ என் கணவனது வில்லாற்றலை அறியாமல் பேசுகின்றாய்; உன் செயல் இழிவானது, நீ ஒரு கோழை. இராமன் அம்பால் நீயும், உன் குலமும் அழிவது நிச்சயம்" என்று கோபமாகக் கூறினாள். இச் சொற்களைக் கேட்டு இராவணன் கோபங் கொண்டான். சீதையைக் கொல்வதாய்ப் பயமுறுத்தினான். "இரண்டு மாதம் உனக்குத் தவணை தருகிறேன். அதற்குள் நீ உன் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று பயமுறுத்திச் சென்றான்.

## சீதைக்குச் சேதி சொல்லுதல்

சீதை தன் விதியை நொந்து அழுதாள். மரக் கிளை யில் தங்கியிருந்த அனுமன் இதுவே தக்க சமயம் என்று ஒரு மந்திர சக்தியால் அரக்கியரைத் தூங்கச் செய்தான்.

சீதை தனித்திருந்தாள். "நான் உயிரோடிருப்பதைவிட இறந்து படுதலே மேல்" என்ற முடிவுக்கு வந்தவளாய் ஒரு கொடியை மரக்கிளையில் கட்டி, இராமன் திருவடியைத் தியானித்துக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்ள முனைந்தாள். உடனே அனுமன் இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே அவள் முன் குதித்தான். இராம நாமத்தைக் கேட்டதும் சீதை கண் திறந்து பார்த்தாள்.

"அண்டர் நாயகன் அருள் தூதன் நான்" என்று அனுமன் பதிலளித்தான்.

"உயிர்விடும் தருணத்தில் இராம நாமம் சொல்லி என்னைக் காப்பாற்றிய வீர! நீ யாவன்?" என்று வினவினாள்.

## குறிப்பு

இந்நூலின் தலைவனாகிய இராமனை அவன், இவன் என்று ஏக வசனமாகச் சொல்லலாமா? அது தவறு இல்லையா? என்று வாசகர்களுக்கு ஐயம் ஏற்படலாம். தமிழ் இலக்கியங்களில் மன்னர்களையும் தெய்வங்களையும் அவன் என்று ஒருமையிலேயே சுட்டி வழங்கி வருவதைக் காண்கிறோம். தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்ற பக்திப் பாடல்களைப் படிக்கும் போது இந்தச் சந்தேகம் நிவர்த்தியாகி விடும். இதில் தவறு ஒன்றுமில்லை.

தற்காலத்தில் 'அவன்' என்று ஏக வசனத்தில் சுட்டுவது மரியாதைக் குறைவாக இருக்கிறதென்று 'அவர்' என்று அழைக்கிறோம். அவ்வளவுதான் இந்நூலில் இவ்விருவகைச் சுட்டுக்களும் விரவி வருகின்றன.

அன்னையே நான் இராம தூதன். என் பெயர் அனுமன். நான் கிஷ்கிந்தைக்கு அரசனும் இராமனுக்குத்

தோழனுமான சுக்ரீவனின் பணியாளன். இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு மகுடம் சூட்டினார். வானர சேனைகள் தங்களைத் தேடும் பணியில் நான்கு திசைகளிலும் சென்றுள்ளனர். நான் அங்கதனுடன் தென் திசைக்கு வந்துள்ளேன்.

இராமபிரான் உங்கள் நினைவாகவே உள்ளார். உங்களுடைய நகை முடிச்சைப் பார்த்து ஆறுதல் பெற்றார். அவர் சில அடையாளங்களைக் கூறியுள்ளார். அவைகளைக் கூறுகிறேன் கேளுங்கள்.

சுருண்ட கரிய கூந்தலை உடையவளும் மடப்பத்தை உடையவளுமான பிராட்டி! உமது அடியவனான என்னுடைய விண்ணப்பம் யாதெனில் நிறைந்த மணிகள் பதிக்கப் பெற்ற முடியையுடைய ஜனக மகாராஜன் வைத்திருந்த சிவதனுசை முறித்து உம்மை மணம் புரிந்து கொண்டதைத் தெரிந்து கொண்டு, அரசர்களைக் களை வதைப் போல் அழித்த அரிய தவத்தையுடைய பரசுராமன் நடுவழியில் தடுக்க அந்தப் பரசுராமன் கையிலிருந்த விஷ்ணு தனுசை வாங்கி வளைத்து அவனுடைய தவத்தை அழித்ததும் ஓர் அடையாளமாகும். (பாசுரம் 318)

இதேபோல் இன்னும் ஒன்பது பாசுரங்களில் (319—327) இராமன் சொல்லியனுப்பிய அடையாளங்களைச் சீதைக்கு அனுமன் கூறியதாக பெரியாழ்வார் இராமாவ தாரச் சிறப்புக்களைப் பாடி மகிழ்கிறார். அவைகளைப் படித்து மகிழ்க.

"இதோ அவர் கொடுத்தனுப்பிய கணையாழியைப் பாருங்கள்" என்று கூறி மோதிரத்தைச் சீதையிடம் கொடுத்தான் அனுமன். கணையாழியைக் கண்டதும் பிராட்டி பெருமகிழ்வு கொண்டாள். உடல் பூரித்தது. அனுமனை வாய் குளிர அழைத்து அவனது குணநலன் களைப் போற்றினாள்.

இராம தூதனாய் வந்து இகலோக வாழ்க்கையையும் பரலோக வாழ்க்கையையும் புகழ்பெற நல்வியதற்கு

அருணின் வாழ்வே எனக் கொண்டாடினாள். அனுமனின் தூய அன்பை நினைத்து 'அம்மை' என்றும், உயிர் கொடுத்த ஆற்றலை எண்ணி 'அப்பன்' என்றும், அறிவைப் பாராட்டி 'அத்தன்' என்றும் பாராட்டினாள்.

இன்னும் பலவாறு சீதை அனுமனைப் பாராட்டினாள். 'இவன் எப்படிக் கடலைத் தாண்டியிருப்பான்?' என்ற சந்தேகம் பிராட்டிக்கு உண்டாயிற்று. அதைக் குறிப்பால் அறிந்த அனுமன் பேருருக் கொண்டான். இந்த விஸ்வரூபத்தைக் கண்டு சீதை பிரமித்துப் போனாள். ''தம்பி இலக்குவனைத் தவிர இராமனுக்கு வேறு யாரும் துணை இல்லையே என்று மனமுடைந்து போயிருந்தேன். ஆனால் இப்போது நீயே என் நாயகனுக்குத் துணையாய் இருப்பதால் அவன் வெற்றி பெறுவதும் அரக்கர் அழிவதும் திண்ணம்; பயம் நீங்கப் பெற்றேன்'' என்று பாராட்டினாள்.

''தாயே! , நான் திரும்பிப் போய் இராமனிடம் சொல்ல வேண்டிய செய்தி யாது?'' என்று பணிவுடன் விண்ணப்பித்தான் மாருதி. அதற்குச் சீதை, ''நான் இன்னும் ஒரு மாத காலம் உயிர் வைத்திருப்பேன். இதை என் நாயகன் இராமன் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். ஒரு மாதத் தவணைக்குள் இராமன் வந்து என்னை மீட்காவிடில் நான் இறந்து போவது நிச்சயம் என்று கூறுவாய்'' என்றாள்.

இராமனின் கணையாழி தனக்கு நம்பிக்கை தரும் அடையாளமாக வந்து சேர்ந்ததுபோல, இராமனுக்கு நம்பிக்கை உண்டாகுமாறு தன் ஆடையிலிருந்த சூடாமணியை அவனிடம் சேர்ப்பிக்கும்படி அனுமனிடம் கொடுத்தாள். அவன் அதைப் பணிவுடன் பெற்றுக் கொண்டு, தேவியை மும்முறை வலம் வந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டான்.

## அசோக வனம்

சீதையிடம் விடைபெற்றுப் புறப்பட்ட அனுமன், அசோகவனத்தைக் கடந்து செல்லுமுன் ஒரு நினைவுச் சின்னமாக அதை அழிக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டான். சீதையை வஞ்சகமாகக் கவர்ந்து வந்த இராவணனுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்பதே அனுமனின் நோக்கமாயிருந்தது. அவ்வாறு அழிக்கும் போது பல அரக்கர்கள் வருவர். அவர்கள் மூலம் இராவணனைச் சந்தித்து அவனுக்கு, புத்தி புகட்ட அது ஒரு சந்தர்ப்பமாகவும் இருக்குமென்று அனுமன் நம்பினான்.

அசோக வனத்தை அழிப்பதென்ற முடிவுக்கு வந்த வுடன் அனுமான் பேருருக் கொண்டான். மரங்களைக் கைகளால் ஒடித்தும் கால்களால் துகைத்தும் சின்னா பின்னமாக்கினான். வேரோடு விழுந்த மரங்கள் பல. சடசட என்று சரிந்து விழுந்த மிலாறுகள் பல. மளமள வென்று முறிந்து விழுந்த கிளைகள் பல. அறுந்த கொடி கள் பல. உதிர்ந்த பூக்கள் எண்ணிறந்தன. இவ்வாறு உருத்தெரியாமல் அசோக வனம் எங்கும் அழிய நேர்ந்தது.

மிருகங்கள் பயத்தால் கதறி நாலா பக்கமும் ஓடின. பறவைகள் கீச்கீச் என்று சத்தமிட்டுக்கொண்டு ஆகா யத்தில் பறந்தன. சீதாபிராட்டி தங்கியிருந்த இடத்தை மட்டும் ஒன்றும் செய்யாமல் விட்டு வைத்தான். இக் காட்சியைக் கம்பர் சித்திரிக்கும் பாடல்கள் பல.

அனுமன் பேருருக் கொண்டு நின்ற காட்சி பதினான்கு உலகங்களையும் திருவடிகளால் அளந்த திருவிக்கிரம மூர்த்தியையும், அரக்கர் கடலைக் குழப்பப் போவதால் திருப்பாற்கடலைக் கடைந்த மந்தர மலையையும், அசோக வனத்தை உருத்தெரியாமல் நாசப்படுத்தியதால் ஊழிக்காலத்தில் உலகத்தை அழித்து நிற்கும் உருத்திர மூர்த்தியையும் ஒத்திருந்தது.

## அரக்கர் வருகை

இந்தப் பேரிரைச்சலைக் கேட்டு அரக்கர்கள் விழித்தெழுந்தனர். அசோக வனத்திற்கு ஓடிவந்தனர். உயர்ந்து நின்ற குரங்கைக் கண்டு திடுக்கிட்டனர். சிதறி ஓடினர். அனுமன் மலைச் சிகரத்தைப் பெயர்த்து எடுத்து மாட மாளிகைகள் மீது வீசி எறிந்தான். அவை தரைமட்டமாயின. அசோக வனத்தைக் காத்துவந்த காவலர்கள் ஓடிச்சென்று இராவணனிடம் கூறினார்கள். அதே சமயத்தில் அனுமன் செய்த கர்ஜனையும் அங்குக் கேட்டது. உடனே இலங்கை வேந்தன் பெருங் கோபங்கொண்டு கிங்கரர்களை அழைத்துக் குரங்கைப் பிடித்துவரக் கட்டளையிட்டான்.

கிங்கரர்கள் பலசாலிகள்; அஞ்சா நெஞ்சினர். இவர்கள் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு குரங்கைப் பிடிக்க முயன்றனர். ஆர்ப்பாட்டத்துடன் சென்று அனுமனை வளைத்துக் கொண்டனர். ஆயுதங்களைச் சரமாரியாகப் பொழிந்தனர். அனுமன் சிறிதும் அஞ்சாமல் மரங்களை வேரோடு பிடுங்கி அவர்களைச் சாடினான். வாலால் சுற்றி வீசினான். அனுமனின் காலில் மிதிபட்டு மடிந்தவர் பலர். தோள்களால் தாக்குண்டு செத்தவர் சிலர். பயத்தால் மாய்ந்தவர் இன்னும் பலர்.

## சம்புமாலியுடன் போர்

கிங்கரர்கள் இவ்வாறு மாய்ந்தார்கள் என்ற செய்தி இராவணனுக்கு எட்டியது. குதிரைப்படை வீரனான சம்புமாலியை அனுப்பினான். அவன் நால்வகைச் சேனையுடன் குரங்கைப் பிடித்துவரப் புறப்பட்டான். சம்புமாலி வருவதை அனுமன் கண்டான். ஆரவாரம் செய்தான். சம்புமாலி வீராவேசத்துடன் சேனைகளை ஏவினான். கொலைக் கருவிகள் அனுமனைத் தாக்கின. அவைகளை உடனுக்குடன் அனுமன் பிய்த்தெறிந்தான். அம்பு மழை

பெய்தது. அனுமன் சிறிதும் அஞ்சாமல் சம்புமாலியின் தேரை அழித்து அவனையும் கொன்றான். தோரண வாயிலில் ஏறி வெற்றி மகிழ்ச்சியில் திளைத்தான்.

## பஞ்ச சேனாபதிகள்

சம்புமாலி இறந்த செய்தியைக் கேட்டு வேந்தன் பதை பதைத்தான். பஞ்ச சேனாபதிகளை அனுப்பினான். அவர்கள் பயங்கரவாதிகள். சதுரங்க சேனைகளுடன் அனுமனைப் பிடித்து வரப் புறப்பட்டனர். பறைகள் முழங்கின. அனுமன் முன்போல் பேருருக் கொண்டான். பஞ்ச சேனாபதிகள் பாணப் பிரயோகம் செய்தனர். அனுமன் அவைகளைப் பொருட்படுத்தவில்லை. அவை நினைவுக்கு இதமாய் இருந்தன.

அனுமன் இரும்புத் தூணைக் கையில் ஏந்தி வந்தவர்களைத் தாக்கினான். பஞ்ச சேனாபதிகள் அனுமனுடன் போர் புரிந்தனர். ஐந்து சேனைத் தலைவர்களையும் அழித்து ஒழித்தான் அனுமன். பஞ்ச சேனாபதிகளும் பலியாயினர் என்ற சேதியும் இராவணேஸ்வரனுக்கு எட்டியது.

## அட்ச குமாரன்

"நானே சென்று குரங்கைப் பிடித்து வருகிறேன் பார்" என்று கோபித்து எழுந்தான் இலங்கை வேந்தன். அவனுடைய இளைய மகன் அட்ச குமாரன், "தந்தையே! வணக்கம். எனக்கு அனுமதி தாருங்கள். நான் சென்று அந்தக் குரங்கைப் பிடித்து வருகிறேன்" என்று பெரு முழக்கம் செய்தான். தந்தையின் இசைவு பெற்றுத் தனயன் போருக்கு எழுந்தான். அரக்கர்கள் ஆசி கூறினர். முரசங்கள் முழங்கின. வீரர் பலர் புடை சூழ்ந்தனர்.

அட்ச குமாரன் தேர் ஏறிச் சென்றான். தனித்து நின்ற அனுமன் மீது அம்புகளைச் சரமாரியாய் பொழிந்

னான். அனுமன் இரும்புத் தண்டு ஒன்றைக் கையில் ஏந்தி, தன் மீது வரும் அம்புகளைத் தடுத்து நிறுத்தினான். அட்ச குமாரன் ஓர் அம்பெய்து அனுமன் கைத்தண்டைப் பொடி யாக்கினான். அனுமன் கடுங்கோபங் கொண்டு அட்ச குமாரனின் தேர் மீது பாய்ந்து அதைச் சின்னா பின்னப் படுத்தினான். தேரும் சாரதியும் அழிந்தமையின் அரசிளங் குமரன் தன் உடைவாளை உருவி, அனுமனைக் கொல்ல ஓடினான்.

இதைத் தடுக்கவா அனுமனுக்குத் தெரியாது? வாளை லாவகமாய்ப் பிடித்துக் கொண்டு, தன் நீண்ட வாலால் அட்ச குமாரனை மலைப் பாம்பு போல் சுற்றினான். தரையோடு தரையாகத் தேய்த்தான். அரசிளங்குமரன் மாண்ட செய்தியை மன்னனிடம் கூறினர்.

## இந்திரஜித்து

இச்செய்தியை மூத்த குமாரனாகிய இந்திரஜித்து அறிந்தான். தம்பி இறந்தது தமையனுக்குப் பெருந் திகிலை உண்டாக்கிற்று. பழிக்குப் பழி வாங்கத் துடித் தான். கண்கள் சிவந்தன. கர்ஜனை செய்தான். உதட்டை பற்களால் கடித்தான். ஆறாத் துயருடன் தந்தையிடம் சென்றான். ''தம்பி இறந்து போனானே'' என்று கதறி அழுதான். அஞ்சா நெஞ்சம் படைத்த இராவணனும் கண்ணீர் விட்டான்.

''தந்தையே! கடலைக் கடந்து வந்து அசோக வனத்தை அழித்த ஆற்றல் மிக்க குரங்கைப் பிடிக்க என்னையல்லவா அனுப்பியிருக்க வேண்டும்? அரக்கரை அனுப்பி ஆடுகளைப்போல் பலி கொடுத்து விட்டீர்களே! ஐயனே! துக்கப்பட வேண்டாம். நான் சென்று அட்சனைக் கொன்ற அக்குரங்கைப் பிடித்து வருகிறேன்'' என்று வீரம் பேசினான்

போருக்குப் புறப்பட்டான் இந்திரஜித்து. எங்கும் சிதறிய ஆயுதங்கள், பிணக் குவியல். தன் தம்பியின்

பிணத்தைக் கண்டு கதறினான். அனுமனுடன் போர் புரிய நாணைப் பூட்டி ஒலி செய்தான். இந்திரஜித்தைக் கண்டு அனுமன் பெரிய ஆரவாரம் செய்தான். தோள் கொட்டி னான். அனுமனது தலையிலும் மார்பிலும் அம்புகளை எய்தான் இந்திரஜித்து.

அனுமன் கடுங்கோபம் கொண்டான். பேருருக் கொண்டான். தன் கைகளை நீட்டி அரச குமாரன் தொடுக்கும் அம்புகளை யெல்லாம் தடுத்து நின்றான். மரத்தைப் பிடுங்கி மண்டையில் அடித்தான். இனிப் போர் செய்வதில் பயனில்லையென்று இந்திரஜித்து முடிவுக்கு வந்தான். பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். அந்த அஸ்திரம் பாம்பின் வடிவில் அனுமன் தோள்களை இறுகக் கட்டி அவனை வீழ்த்தியது. தன்னைக் கட்டியது பிரம்மாஸ்திரம் என்று அனுமனுக்குப் புரிந்து விட்டது.

இதுவும் நன்மைக்குத்தான் என்று அனுமன் கருதி னான். அரக்கர்கள் அனுமனைக் கட்டி அரண்மனைக்கு இழுத்துச் சென்றார்கள். இராவணன் கோலாகலமாகக் கொலுவீற்றிருந்தான். அனுமனது வீரச் செயல்களை எடுத்துரைத்தான் இந்திரஜித்து.

## தூது உரைத்தல்

இராவணன் அனுமனைப் பார்த்து, ''நீ யார்? வந்த காரணம் யாது?'' என்று கேட்டான். அசோகவனத்தை அழித்து, அரக்கர்களைக் கொன்று குவித்த அனுமனைப் பார்க்கப் பார்க்க இராவணனுக்குக் கோபம் அதிகரித்தது.

''நீ உயிர்களைக் கவரும் எமனோ? வேலேந்திய முருகக் கடவுளோ? திக்குப் பாலகர்களில் ஒருவனோ? இவர்களில் நீ யார்? உன்னை அனுப்பியவர் யார்? உடனே சொல்'' என்று அதட்டினான்.

தனக்குத் தக்க மரியாதை தராததை உணர்ந்த அனுமன் தனது வாலின் மூலமே ஓர் ஆசனம் அமைத்து,

இராவணனுக்குச் சரி சமானமாக அமர்ந்து கொண்டு, பதிலளிக்கத் துவங்கினான்.

"செந்தாமரைக் கண்ணனான இராம பிரானின் தூதன் நான். உனது தேக பலம், வர - பலம், தவ வலிமை, வெற்றிப் பிரதாபம், அரச செல்வம், ஆதிக்க வாழ்வு இவையெல்லாம் இராமன் அம்பு ஒன்றினால் அழிந்து போம். அந்த வீரன் யார் தெரியுமா? அவன் சக்கர வர்த்தித் திருமகன். அவன் பெயர் இராமன். வேதமூர்த்தி; கருணை வள்ளல்.

"படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி களும் கைக்கொண்டிருக்கும் கமண்டலம், சக்கரம், சூலம் இவைகளை விட்டு, கையில் வில்லேந்தி, அம்மூர்த்திகளுக்கு உரிய இடமான தாமரை மலர், ஆலிலை கைலையங்கிரி இவைகளை நீத்து, அயோத்தியில் இராமன் என்ற ஒரு மூர்த்தியாய் அவதரித்தான்.

"மும்மூர்த்திகளின் சேர்க்கையே இராமன். உலகத்தில் தருமத்தை நிலை நிறுத்தி நல்லவர்களைப் பரிபாலித்துக் கெட்டவர்களை அழிப்பதே அவதார நோக்கம். ஆணவத்தால் அழியப் போகும் அரக்கனே! நீ அறிவாயாக" என்றான்.

இப்படி இராமாவதாரத் தத்துவத்தையும் நோக்கத் தையும் அனுமன் விளக்கியதோடு, தான் இலங்கைக்கு வந்த காரணத்தையும் சொல்லலானான். "சீதையைத் தேடித் தெற்கே வந்த வானர சேனைக்குத் தலைவன் வாலி மகன்! நான் அவனது தூதனாய் இலங்கைக்கு வந்தேன்" என்றான்.

வாலி என்ற பெயரைக் கேட்டதும் இராவணன் திடுக் கிட்டான். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "யாரோ எதிரி வந்து அசோகவனத்தை அழித்து அரக்கர்களைக் கொன்றான் என்றல்லவோ, நான்

நினைத்து விட்டேன். என் நண்பன் வாலியின் மகன் விட்ட தூதனாகிய நீதானா இத்தனை ஆர்ப்பாட்டமும் அமர்க்களமும் செய்தாய்? சரி, இருக்கட்டும். என் நண்பன் வாலி சவுக்கியமா? அவனது ஆட்சி சரிவர நடக்கிறதா?'' என்று இலங்கை வேந்தன் அனுமனை விசாரித்தான்.

''இராவணா! பயப்படாதே உன்னை வாலில் கட்டித் தூக்கிச் சென்ற பெருவலி படைத்த வாலி, இராமன் விட்ட அம்பு ஒன்றால் உயிர் விட்டான். இப்போது எங்கள் மன்னன் சுக்ரீவன்'' என்று அனுமன் பதிலளித்தான்.

அனுமன் சொல்லைக் கேட்டுப் பிரமித்துப் போன இராவணன் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''வாலியைக் கொன்ற இராமனுக்குப் பணி செய்வது சரியா? தன் தமையனைக் கொன்ற இராமனிடம் பரிவு காட்டி, உன்னை என்னிடம் அனுப்பிய சுக்ரீவன் எனக்குச் சொல்லியனுப்பிய செய்தி யாது?'' என்றான்.

## அனுமன் பதிலுரை

''நீ தருமத்தைச் சிந்தியாமல், இராம பத்தினி சீதையைப் பலாத்காரமாக கவர்ந்து வந்து சிறை வைத்தாய். அதனால் நீ செய்த தவம் யாவும் வீணாய் விட்டது. அதர்மம் தர்மத்தை வெல்லாது. இந்த உண்மையை நீ உணராமல் காமத்தால் கெட்டழியப் போகிறாய். சிவன் கொடுத்த வரத்தால் நீ இராமனை வென்று விடலாம் என்று நினைக்கிறாய். இது பேதமை. சிவபெருமானது வரம் தவறினாலும் தவறும், இராம பிரானது அம்பு உன்னைக் கொல்லத் தவறாது. ஆகையால் நீ சீதையை இராமனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதே தகுதி என்று சுக்ரீவன் சொல்லியனுப்பினான்'' என்றான் அனுமன்.

இதைக் கேட்ட இராவணன் மனம் தாளாமல், "குன்றில் வாழும் குரங்கா எனக்குப் புத்தி புகட்டுகிறது? இது மிகவும் நன்றாயிருக்கிறது? தூதனாய் வந்த நீ அரக்கனைக் கொன்ற காரணம் யாது?" என்று கேட்டான்.

"உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டேன்; என்னை உன்னிடம் அழைத்து வருபவர் எவரும் இலர். ஆகையால் அசோகவனத்தை அழித்தேன். அரக்கர் என் கருத்தை உணராமல் என்னைக் கொல்ல வந்தனர். தற்காப்புக்காக நான் அவர்களைக் கொல்ல நேர்ந்தது. இப்போது பிரம்மாஸ்திரத்திற்குக் கட்டுப் பட்டு நான் இங்கு வந்ததும் உன்னைப் பார்ப்பதற் காகத்தான்" என்று சமயோசிதமாகப் பதிலளித்தான் அனுமன்.

"அசோக வனத்தை அழித்து, அரக்கர்களைக் கொன்ற இவன் என் எதிரில் பய பக்தியில்லாமல் கர்வத் துடன் பேசுகிறான். இந்தக் குரங்கைக் கொல்லுங்கள்," என்று கட்டளையிட்டான், இராவணன். சேவர்கள் குரங்கைப் பிடிக்க ஆரம்பித்தனர். "நில்லுங்கள், நில்லுங்கள்" என்று விபீடணன் தடுத்து நிறுத்தினான்.

இராவணனைப் பார்த்து, "அருந்தவம் செய்து வரம் பெற்று மூவுலகங்களையும் ஆட்சி செய்கின்ற மன்னாதி மன்னன், செய்தி சொல்ல வந்த தூதனைக் கொல்லத் துணிவது சரியல்ல; தூது வந்த குரங்கைக் கொன்றால் அது நம் குலத்திற்கு அழியாப் பழியை உண்டாக்கும்" என்று பணிவுடன் கூறினான் விபீடணன்.

இதைக் கேட்ட இராவணன், "அடாத தொழிலைச் செய்த குரங்கின் வாலில் நெருப்பை வைத்துக் கொளுத்தி, அதை நகரின் எல்லைக்கு அப்பால் விரட்டி விடுங்கள்" என்று உத்திரவிட்டான்.

## வாலில் தீ வைத்தது

இராவணன், 'குரங்கின் வாலில் தீயிட்டு விரட்டுங்கள்' என்று உத்திரவிட்டதும் அரக்க வீரர்கள் கருங் கருவாய் கயிறுகள் கொண்டு வந்து அனுமனைக் கட்டி இழுத்துச் சென்றனர். அரண்மனை வாயிலைக் கடந்ததும் அனுமன் வாலில் துணிகளைச் சுற்றி அந்த வாலை எண்ணெயில் தோய்த்தனர். நெருப்பைப் பற்ற வைத்து அண்ட முழுவதும் அதிரும்படி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அனுமன் வாலில் தீ வைத்த செய்தி அசோகவனத்தில் இருந்த சீதைக்கு எட்டியது. இராம நாமதத்தைச் சொல்லித் தன் உயிரை நிலை நிறுத்திய அனுமனைத் தீ சுடக்கூடாதென்று சீதை அக்கினி பகவானைப் பிரார்த்தித்தாள். அப்போதே தீப்பற்றிய வால் குளிர்ந்தது. இத்தன்மை சீதாபிராட்டியின் அருளால் ஏற்பட்டதென்று அனுமன் யூகித்தறிந்தான்; பெருமகிழ்வு கொண்டான்.

அரக்கர் அனுமனை ஊர்த் தெருக்களில் இழுத்துச் சென்றனர். நகரத்தின் அமைப்பைப் பார்த்துக் கொண்ட அனுமன் இடிரென்று திமிறிக் கொண்டு வானத்தில் எழுந்தான். தன்னை அவமதித்த இலங்கை நகர் அழிந்து போகட்டும் என்று அனுமன் இராமனைத் துதித்து, போர்த்திறமுள்ள வாலை ஊர்மேல் செல்ல விட்டான். இலங்கை நகர் எரியுண்டது.

## தீ பரவியது

தொடிப்பொழுதில் ஊரெல்லாம் நெருப்புப் பரவியது. சிங்கார மாளிகைகள் நெருப்பு மயமாய் ஜொலித்தன. பொன்னால் இழைத்த மாடங்கள் புகையால் சூழப் பெற்றன. கண்ணுக்கு எட்டிய தூரம் நெருப்பு மயமான பயங்கரக் காட்சி. எங்கும் தீ, தீ என்ற கூக்குரல், ஐயோ, ஐயோ என்ற அழுகுரல்.

ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் உயிர் பிழைக்க அல்லோல கல்லோலமாய் ஓடினர். பெண்கள் திகைத்தனர். மங்கையர் சூடு தாங்காமல் தண்ணீரில் குதித்தனர் சிலர் புகையால் மூச்சுத்திணறி நெருப்பில் சிக்கி மாண்டனர். மற்றும் சிலர் வைர நகைகளையும் தங்கப் பாத்திரங்களையும் மார்போடு அணைத்துக் கொண்டனர்.

இராவணன் அரண்மனையிலும் தீப்பிடித்துக் கொண்டது. உப்பரிகைகள் தீக்கிரையாகின. இலங்கை வேந்தன் உரிமை மகளிருடன் புஷ்பக விமானமேறி உயிர் தப்பினான். வானவெளியில் பறந்து சென்றபோது மூச்சுத் திணறி, 'இது யுகாந்தகாலமா? இலங்கை எரியக் காரணம் என்ன?' என்று திகைத்தான். கீழிருந்த அரக்கர்கள் ''குரங்கின் வாலில் வைத்த தீதான் இப்படிப் பற்றி எரிகிறது'' என்றனர்.

இராவணனுக்குக் கோபம் மிகுந்தது. அடிமைகளான தேவர்கள் எள்ளி நகையாடுவரே என்று வெட்கம் அடைந்தான். ''குரங்கு தப்பி ஓடுமுன் அதை எப்படியாவது பிடித்து வாருங்கள்'' என்று ஆத்திரமாக அலறினான். ஆணவம் மிகுந்த சேனாதிபதிகள் எழுவர், ''இதோ பற்றி வருகிறோம்'' என்று அனுமனைப் பிடிக்க ஓடினார்கள்.

அனுமன் அவர்களைத் தன் வாலினால் வளைத்து ஒரு மரத்தில் நையப்புடைத்தான். அவர்கள் ரத்தக் களரியில் மூழ்கி உயிர்விட்டனர். மேற்கொண்டு வந்த வீரர்களும் மடிந்து ஒழிந்தனர். அனுமன், 'எண்ணிய கருமம் முடிந்தது' என்று தன் வாலைக் கடலில் தோய்த்து நெருப்பை அணைத்தான்.

### வித்தியாதரர்

அச்சமயம் ஆகாயத்தில் வித்தியாதரர் சென்று கொண்டிருந்தனர். சீதை இருக்குமிடத்தில் நெருப்புப் பரவவில்லையென்று அவர்கள் கூறினர்.

அனுமன் மகிழ்ச்சி பொங்கச் சீதையை அணுகி வார்த்தை எதுவும் பேசாமல் அவளது திருவடிகளில் வணக்கம் செலுத்தினான். சீதை அனுமனைக் கண்டு மகிழ்ச்சியடைய அவன் விடைபெற்று அப்பால் சென்றான். சூரியனும் மேற்குக் கடலில் மறைந்தான்.

## அனுமன் மீண்ட தன்மையைக் கூறுதல்

இலங்கை மாநகரில் உள்ள அசோக வனத்தில் சோகமே உருவினளாயிருந்த தேவியைக்கண்டு, 'விரைவில் வந்து உங்களை மீட்க ஆவன செய்வேன்' என்று சொல்லி மைந்நாகம் என்னும் குன்றை அடைந்தான் அனுமன். பின்னர் மகிழ்ச்சியினால் தோள்கள் விம்ம, இராம பிரானைத் தொழுது விசும்பின் வழியாகக் கடிது சென்றான். மகேந்திரமலையில் குதித்தான். தன் வரவை எதிர்நோக்கி நின்ற வானர வீரர்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தான்.

வானர வீரர்கள், கூட்டில் தாயின் வருகைக்காகக் காத்திருந்த பறவைக் குஞ்சுகள் தாயினைக் கண்டாற் போல, உவகையில் தளிர்த்தனர். சிலர் அழுதனர்; சிலர் தொழுதனர்; சிலர் ஆர்த்தனர். சிலர், "தேனொடு கிழங்கும் காயும், தேடிக்கொண்டு வந்து வைத்துள்ளோம் அண்ணலே! இவற்றை உண்டு உன் மெலிவு தீர்க! உனது ஒளி பொருந்திய முகமே உற்றது கூறிற்று" என்றனர்.

அனுமனது தாள்கள், மார்பு, தோள், தலை, தடக்கை ஆகிய உறுப்புகளில் வேல், வாள், அம்பு இவற்றால் ஆகிய புண்களை முறையே நோக்கி வானர வீரர்கள் மிகவும் நொந்தனர். அனுமன் அங்கதனை முதலில் வணங்கினான். பின்னர் எண்கின் வேந்தனாகிய சாம்பவான் திருவடிகளில் வீழ்ந்தான். பின் முறைப்படி வணங்கத் தக்கவர்களை வணங்கி, மற்றும் அங்கிருந்தோரிடம், "ஞால நாயகன் தேவியாகிய பிராட்டியார் யாவர்க்கும் நன்மை சொல்லினள்" என்றான். இங்ஙனம் அனுமன் கூறிய

அளவில் வானர வீரர்கள் கைகூப்பி வணங்கி, "சென்றது முதலா வந்தது இறுதியாக நிகழ்ந்தனவற்றைக் கூறுக" என்றனர்.

வாயு மைந்தனாகிய அனுமனும், ஆன்ந்தகையின் தேவியின் உள்ளத்து அருந்தவத்து நிலையை அமைதியாகக் கூறிப் பிராட்டியிடமிருந்து அடையாளமாகச் சூளாமணி பெற்றதையும் கூறி, அரக்கர்களோடு போர் செய்ததையும் சொல்லித்தான் பெற்ற வெற்றியை மட்டும் வெட்கம் காரணமாகக் கூறவில்லை. இதனைக் கண்ட வானர வீரர்கள், இவ்வாறு கூறினார்கள்:

"நீ அரக்கர்களுடன் இலங்கையில் பொருத தன்மையை உன் மேனியிலுள்ள புண்களே தெரிவிக்கின்றன. நீ அவர்களை வென்றமையை நீ அங்கிருந்து இங்கு பெருமிதத்துடன் வந்துள்ள செயலே தெரிவிக்கின்றது. நீ அவ்வூரில் தீயிட்டு அழித்ததை அங்கு உயர்ந்தெழுந்த புகையே தெரிவிக்கின்றது. அப்பகைவர்களது பெருமையைப் பிராட்டி உன்னுடன் மீண்டு வராத தன்மையே தெரிவிக்கின்றது. நாங்கள் நன்கு உணர்ந்தோம். இனி நாங்கள் என் செய்யக் கடவோம்?" என்று வினவினார்கள்.

அனுமன், "இனி என்ன வேண்டுவது ஒன்றும் இல்லை. சேவகன் தேவியைக் கண்டதை அண்ணலிடம் கூறி, அவன் உள்ளத்து அருந்துயர் அகற்ற வேண்டும். எனவே இப்போதே புறப்படுதல் வேண்டும்" என்றான். வானர வீரர்கள் அனைவரும் புறப்பட்டனர்.

வானர வீரர்கள் அங்கதனை அடைந்து, "எங்கட்குத் தேன் வேண்டும்" என்றனர். அங்கதனும் அதற்கு நேர்ந்தான். வானர வீரர்கள் கடலும் நடுங்குமாறு பெரிய ஆரவாரத்துடன் தேன் அடைகள் மிகுந்துள்ள செழு வானத்தில் சென்று கிளைகளை ஒடித்துத் தேன் அடைகளையெல்லாம் பிய்த்துத் தின்றனர். தேனுண்ட மயக்கத்தில் திளைத்தனர்.

## இராமனது பிரிவுத் துன்பம்

'திருமகள் போன்ற பிராட்டியைத் தேடி வருக' என மாருதி முதலான குரங்குச் சேனைகளை நாற்றிசையிலும் செல்லுமாறு ஏவிவிட்டுக் கதிரவன் செம்மலாகிய சுக்ரீவன் இராமன் பக்கத்தில் அமர்ந்திருந்தான். அவன் சில சொற்களால் இராமனைத் தேற்றினான். இராமன் பெருமூச்செறிந்தான்.

நெடுந்திசை மூன்றும் சென்றவர்கள் மடந்தையைக் கண்டிலர் என்னும் கட்டுரை தன் உள்ளத்தை ஒறுக்க இராமன் அனுமனைப் பற்றிச் சிந்தித்தான். "குறித்த நாட்கள் கடந்தன. மடந்தையைத் தேடித் தென்திசை சென்றவர்கள் இன்னும் மீண்டிலர். ஒரு வேளை அங்கேயே மாண்டனரோ? அவருக்கு என்ன நேர்ந்ததோ? விளம்புக" என்றான்.

இவ்வாறு இராமன் கூறச் சுக்ரீவன் பாம்பணை அமலனாகிய பரந்தாமனை வணங்கி, "இப்போது மதுவனத்து நிகழ்ந்த போர் பைந்தொடியாளாகிய பிராட்டி மேம்படு கற்பினள் என்னும் உண்மையை உணர்த்துவதாகும். எனவே அப்பிராட்டியை அவர்கள் பாங்குறக் கண்டனர்; இனி அவலம் தீர்க" என்றனன்.

## திருவடி தொழுதல்

இவ்வாறு சுக்ரீவன் இராமனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கையில் தெற்குத் திசையில் சூரியன் உதித்தது போன்று அனுமன் தோன்றலானான். நொடிப்பொழுதில் இராமனிடம் வந்து 'சேர்ந்த அனுமன் சீதாபிராட்டி இருந்த திக்கை நோக்கி வணங்கி எழுந்ததும், தான் சீதையைக் கண்ட நற்செய்தியை அழகுறத் தெரிவித்தான்.

இக்காட்சியைக் கம்பர் பல பாடல்களில் பாடி மகிழ்கிறார். சீர்காழி அருணாசலக் கவிராயரும் அழகிய

கீர்த்தனையாகப் பாடியுள்ளார். அவ்வகனை எழுத இச்சிறு நூல் இடந்தராததால் கருத்தை மட்டும் தெரிவிக் கின்றோம். அனுமன் 'சொல்லின் செல்வன்' என்பதற்கு அப்பாடல்களே சான்றாகும்.

தென்திசை அலைகடலால் சூழப்பெற்ற இலங்கை மாநகரில் கற்பினுக்கு அணியைக் கண்களால் கண்டேன். பண்டுள துயரும் ஐயமும் இனித் தவிர்க. ஐயனே! என் பெருந்தெய்வமாகிய பிராட்டியார் உன் பெருந்தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற தசரதனது மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன் மகள் என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்.

விற்பெருந் தடந்தோள் வீர! இலங்கையில் நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன். இற் பிறப்பு, இரும்பொறை, கற்பு என்னும் பெயருடையன களிநடம் புரியக் கண்டேன். இலங்கை என்னும் நகருள் காலையும் மாலையும் இல்லாக் கற்பகச் சோலையுள் உம்பி புல்லினால் தொடுத்த தூய சாலையில் தவஞ்செய்த தவமாம் தையல் இருந்தனள்.

வானுயர் கற்பினாள்தன் புண்ணிய மேனி தீண்ட அஞ்சி இராவணன் மண்ணோடும் கொண்டு போனான். கருத்திலாள் தொடின் அழிவாய் என்ற சாபமும் அவனுக்கு உண்டு. எனவே இராவணன் அவளைத் தீண்டிலன் என்னும் உண்மையை அறிக.

இலங்கையை முழுவதும் நாடிச் சோலை புகுந்தேன். அங்கு அணங்கு அன்னவளைக் கண்ணின் நீர்க் கடலிற் கண்டேன். அரக்கியர் பலர் நெருக்கிக் காவல் புரிய உன்பால் கொண்ட அன்பே அச்சத்தை நீக்க, இரக்கம் என்ற பண்பே ஒரு பெண் வடிவெடுத்துச் சிறையுற்ற தன்மையளாகித் தனியளாயிருந்தாள்.

அப்போது இலங்கை வேந்தன் அங்கு வந்து இரந்து கூறி இறைஞ்சினான். நங்கை வெய்துரை சொல்ல,

வெகுண்டு அவனைக் கொல்லுமாறு சொல்லிச் சென்றான். அப்போது ஐய! அணங்கின் கற்பும் நின் அருளும் தூய நல் அறனும் அவளைக் காத்து நின்றன. அவளைக் கொல்ல முனைந்த அரக்கியரும் மந்திரத்தில் உறங்கினர். அப்போது, தன் உயிரைப் போக்க எண்ணிக் கொடியைக் கொண்டு கழுத்தைச் சுற்றிய அளவில் உன் பெயர் புகன்றேன்.

உடனே இராமன் பெயர் கூறி என்பால் துறக்கல் தந்தாய் என்றாள். பின்னர் எல்லா அடையாளங்களையும் கூறி வண்ண மோதிரம் காட்டக் கண்டாள். அஃது அவளுக்கு இறுதியில் உயிர் தந்து ஈயும் மருந்து போன்று அமைந்தது. அம் மோதிரத்தை மழைக் கண்ணீரால் நீராட்டினாள். ஒன்றும் இயம்பலள். எய்த்த மேனி வீங்கினள்.

அன்னவளுக்கு அடியேனாகிய நான் இங்கு நிகழ்ந்தன வற்றைக் கூறி நீ இருந்த இடம் அறியாமையால் இத்தனை காலம் தாழ்ந்தது என்பதையும் உனது வருத்தப் பாட்டை யும் உணர்த்தினேன். இங்குள தன்மையெல்லாம் முறையே கேட்டாள். அங்குள்ள தன்மையை எனக்குக் கூறினாள். ''இன்னும் ஒரு திங்கள் இருப்பேன்; அக்காலம் முடிந்தபின் என் உயிர் மங்கும்'' என்றும் கூறினாள். பின்னர் தன் துகிலில் மறைத்து வைத்திருந்த சூளாமணியைக் கொடுத் தனள். ''வித்தக! காண்டி'' என்று கூறி இராமன் கையிற் கொடுத்து வணங்கி நின்றான்.

## சூளாமணி பெற்ற இராமன் நிலை

''வித்தக! காண்டி'' என்று அனுமன் கொடுத்த சூளா மணியை இராமன் பெற்றுக் கொண்டான். உள்ளே தோன்றிய காமம் வளர்ந்து பொங்கி மெய்யுற வெதும்பி, உள்ளம் மெலிவுறும் நிலைமை அடைந்தான். சூளாமணி யைக் கண்ட அளவில் உரோமம் பொடித்தன. கண்ணீர் பொழிந்தன. மார்பும் தோளும் துடித்தன. உடலில்

வியர்வின் துளிகள் துடித்தன. மணிவாய் மடித்தது. ஆவி வருவது போலவதாகி மேனி தடித்தது.

## வானர வீரர்கள் போருக்கு எழுதல்

இராமன் அனுமன் கொடுத்த சூளாமணியைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த நிலையில் அங்கதன் முதலானவர்கள் கவியின் வேந்தனும் வீரனுமான சுக்ரீவனை வணங்கினர். தாங்கள் மேற்கொண்ட செயல் இனிது நிறைவேறியது என்ற மகிழ்ச்சியினால் முழுமதியம் போன்ற திகழ்தரும் முகத்தரானார். அப்போது சுக்ரீவன், "ஐயா! பிராட்டியார் நம்மால் காண்டற்கு எளியள் ஆனாள். இனிக் காலம் தாழ்த்துதல் நலன் அன்று; எம் படைகள் புறப்படுக!" என்றான்.

இவ்வாறு ஏவிய அளவில் எங்கும் வள்ளுவ முது மகன் முரசம் மூலம் செய்தி அறிவித்தான். படை வீரர்கள் அலைகள் போல வந்து கூடினர். இராமன் நீலனை நெடிது நோக்கி, "நம் சேனைகளைப் பகைவர் வந்தெதிர்த்து அழிக்காதவாறு முன்னர்ச் சென்று நெறிகளை யெல்லாம் திருத்தி அமைப்பாயாக!" என்று கூறினான்.

மாருதி இருகை கூப்பி, "என்னைப் புன் தொழில் குரங்கு என இகழாமல் என் தோள் மீது ஏறிக் கொள்!" என்று கூறி இராமன் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். அண்ணலும் அதற்கு இசைவு தந்தான்.

உடனே அங்கதன் இலக்குவனை வணங்கி, "நிமல! நீ என் தோள் மேல் ஏறுதி" என்று சொல்லி வேண்டிக் கொள்ள, இலக்குவனும், 'நன்று' என அவனது தோள் மேல் ஏறிக் கொண்டான். சேனைகள் நெறிவழியே சென்றன.

கருடன் மீதும், விடையின் மீதும் முறையே தோன்றும் திருமாலைப் போலவும், சிவபெருமானைப்

போலவும் இராம இலக்குவர்கள் இருவர் தோள் மீதும் ஏறிச் சென்றனர். வானவர்கள் வாழ்த்திப் பூமாரி பொழிந்தனர். நிலத்தின் வழியே சென்றால் அப்படை களைக் கண்டு வையக மக்கள் அஞ்சுவர் என்று மலை வழியே அப்படைகள் சென்றன.

இலங்கையில் உள்ள அரக்கர்களின் காவல், பெருமை, அரண் பற்றியெல்லாம் அனுமன் எடுத்துச்சொல்ல நீண்ட வழியில் எளிதில் சென்றனர். இவ்வாறு பன்னிரண்டு நாட்கள் சென்று தென்திசையில் உள்ள கடலை அடைந் தனர். அது பங்குனி மாதம்.

# 6. யுத்த காண்டம்

## கடல் கரணுதல்

பங்குனி மாதம்; உத்தர நட்சத்திரம்; வெற்றி தரும் முகூர்த்தம்; நன்பகல் வானரப்படை தென் கடலை நோக்கிப் புறப்பட்டது. புறப்படும்போது நல்ல சகுனங்களைக் கண்டார்கள். பெருஞ் சேனைக்கு உணவும் தண்ணீரும் கிடைக்கும் இடங்களைப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். காடு, மலை இவைகளை வானரப்படை வேகத்தோடும் உற்சாகத்தோடும் கடந்து சென்றன. நீலனும் குமுதனும் சேனைக்கு வழிவகுத்துச் சென்றார்கள். பேரொலி கடல் அலை போல் கேட்டது. தூசி ஆகாயமெங்கும் பரவியது. மகேந்திர மலையை அடைந்தார்கள்.

இராமன் மலைமேல் ஏறி நின்று தென்கடலைப் பார்த்தான். கடலைக் கடக்க என்ன செய்யலாம் என்று தீர்மானிக்கும் வரையில் சேனை அங்கேயே தங்கியிருக்க முடிவு செய்தனர். கடலோரத்திலிருந்த ஒரு வனத்தில் வானர சேனை தங்கிற்று.

## மந்திராலோசனை

இராமன் தம்பியோடும் வானர வீரருடனும் இனிச் செய்ய வேண்டியது என்னவென்று வடகரையில் யோசித்துக் கொண்டிருக்கையில், தென் கரையில் இராவணன் பெரிய சபை கூட்டினான். அனுமனால் இலங்கையில் ஏற்பட்ட நாசத்தைப் பற்றிச் சொல்லி

மனம் வருந்தினான். தன் அரசாட்சி ஒரு அற்பக் குரங்கினால் அழிந்ததே என்று மனம் நொந்தான்.

குரங்கு வைத்த தீயினால் இலங்கா நகரம் அழிந்தது. சுற்றத்தினரும் நண்பரும் இறந்தனர். குரங்கினால் நேர்ந்த பரிபவச் செய்தி பாரெங்கும் பரவி விட்டது. அவமானம்! அவமானம்! சேனாதிபதிகள் போருக்குப் போகலாம் என்று போட்டி போட்டனர்.

அப்போது இராவணனுடைய தம்பியாகிய கும்பகர்ணன் எழுந்து, ''அண்ணா, நீ பிரம குலத்தில் பிறந்து, சாம வேதப் பொருளை நன்கு உணர்ந்தவன். ஆனால் இராமன் மனைவியைக் காதலிப்பது அடாத காரியம் என்று நீ எண்ணவில்லை. அதன் விளைவாகக் குரங்கு இலங்கையைச் சுட்டெரித்தது. நாம் பெருமையுடன் மானத்தைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் செய்வதோ மானக்கேடான காரியம். இப்படிப் பேச்சும் செயலும் வேறுபட்டிருந்ததால் மானிடருக்குப் பயப்பட நேர்ந்தது!

''சீதையைச் சிறையினின்று விடுவித்தலே தகுதி. ஆனால் அவளை இப்போது விடுவித்தால் பிறர் நம்மை நகையாடுவர். அதனால் தாமதமன்னியில் எதிரியுடன் போரிடுவதே தக்கது'' என்றான்.

இந்திரஜித்து, ''கூனுள்ள குரங்கை ஏவிய இராம இலக்குவரைக் கொன்று வர எனக்கு விடை தாருங்கள்!'' என்று மன்றாடினான்.

அப்போது விபீடணன் இராவணனை நோக்கி, ''புகழும் உயர்குலப் பிறப்பும் குறைய பழியும் கீழ்மையும் மேற்பட, சுற்றத்தினருடன் முற்றும் அழிந்தொழிந்து போகாமல் இருக்க நீ விரும்புவாய் ஆயின், சீதையை இராமன்பால் ஒப்படைத்து விடுவதே முறைமையாகும்'! என்று பல நீதிகளை எடுத்துக் கூறி, திருத்த முயன்றான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கம்பர், இரணியன் வதைப் படலம் என்ற ஒரு பகுதியைச் சேர்த்துள்ளார். வால்மீகி இராமாயணத்தில் இப்பகுதியில்லை. கதைக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. என்றாலும் கம்பர் விபீஷண னைக் கொண்டு இக்கதையை இராவணனுக்குக் கூறுமாறு செய்கிறார்.

இதைக் கேட்டதும் இராவணன் கடுங்கோபம் கொண் டான். ''நீ தம்பியாய் இருந்தும் என்னிடம் உட்பகை கொண்டு மனிதரே தஞ்சம் என்று சொல்லுகிறாய். என் எதிரில் நில்லாமல் விரைவில் ஓடிப் போ'' என்று சீறினான். அதனால் விபீஷணன் தன் அண்ணனின் அழிவிற்காக மிகவும் வருந்தி, வேறு வழியின்றி அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் நான்கு துணைவர் களுடன் இலங்கையை விட்டு நீங்கினான்.

## விபீஷண சரணாகதி

இராவணனைத் துறந்து வந்த விபீஷணனைச் சக்கர வர்த்தித் திருமகன் தன் படைக்குள் சேர்த்துக் கொண்ட கட்டமானது வைஷ்ணவ சம்பிரதாயத் தலைவர்களுக்குப் பாரதத்தில் கீதையைப் போலவே ஒரு சிறந்த சாஸ்திர மாய் வழங்கி வருகிறது.

விபீஷணன் எல்லையில்லாத பெருங்குணங்களை யுடைய இராமனது பாதங்களைப் பணிந்து, இப்பிறவித் துன்பத்தைப் போக்கிக் கொள்வோம் என்று இராமன் தங்கியிருந்த இடத்தை அடைந்தான். இராமன் இந்தியா வின் தென்கோடியில் கடற்கரையில் தங்கியிருந்தான். விபீஷணன், ''எந்தையே! இராகவ சரணம்'' என்று தூர நின்று பணிந்து கூவினான். இராமன் அது கேட்டுப் பக்க நின்ற வானரத் தலைவர்களைப் பார்த்து, ''இவனை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? வேண்டாமா?'' என்று கேட்டான்.

சுக்ரீவன், ஜாம்பவான், நீலன் முதலியோர், 'இவன் அரக்கன்; இராவணன் தம்பி; இவனை ஏற்றுக் கொள்ளுதல் தகாது'' என்றனர். பின்னர் இராமன் அனுமனது கருத்தைப் பெற விரும்பினான்.

## அனுமனது பரிந்துரை

அனுமன், ''ஐயனே, விபீடணன் அரக்கர் குலத்தில் பிறந்தவன் எனினும் தீயவன் அல்லன்; இராவணன் என்னைப் பிடித்துக் கொல்லுமாறு ஏவலர்களுக்கு ஆணை யிட்டபோது இவன் ஒருவனே எனக்கு ஆதரவாகக் கூறினான். தூதரைக் கொல்லுதல் தகாது என்று எடுத்துரைத்தான். இரக்கம் மிக்கவன், இனிய பண்பாளன்; இவன் இல்லம் தூயது. கள்ளும் ஊனும் காணப்படவில்லை. தானமும் தருமமும் வந்தனை நீதியும் மாண்பமைந்து அந்தணர் இல்லம் போல அழகுற்றுத் திகழ்ந்தது. இவன் மிகவும் நல்லவன். இவனை நம்பி நாம் ஏற்றுக் கொள்ளலாம்'' என்று இனிது எடுத்து இயம்பினான்.

மாருதியின் சொற்களைக் கேட்ட இராமபிரான், ''அடைக்கலமாக வந்தவனுக்கு அபயமளித்து, அவனை ஏற்றுக் கொள்ளுதல்தான் முறை. இதனால் தீது நேர்ந்தாலும் பாதகமில்லை. வருவது வரட்டும்!'' என்று கூறினான். சுக்ரீவனை அனுப்பி விபீடணனை அழைத்து வரச் செய்தான். சுக்ரீவனும் விபீடணனும் ஒருவரையொருவர் அன்புடன் தழுவி நட்புப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## சரணாகதி

சுக்ரீவன் விபீடணனை இராமனிடம் அழைத்துச் சென்றான். ''சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனின் தம்பியாகிய என்னையும் இராமபிரான் வருக என்று அருள் செய்தானோ? என்னையும் தன் அடைக்கலப்

பொருளாக ஏற்றுக்கொள்ளத் திருவுளம் பற்றினானோ? கொடியதாகிய ஆலகாலம் என்னும் நஞ்சினையும் சிவபெருமான் விரும்பி உண்டாற்போல மிகவும் இழிந்த என்னையும் இராமபிரான் ஏற்றுக்கொள்ள இசைந்த னனோ? தீயவர்கள் எவ்வளவு தீங்கு செய்தாலும் பேர் அருளாளர்கள் தம் செய்கையால் பிழை புரியமாட் டார்கள். திருப்பாற் கடலானது மந்தர மலையை நாட்டித் தன்னை நெருப்பெழக் கலக்கினாலும் தேவர் களுக்கு அமுதத்தையே அளித்தது. அதுபோல இராம பிரான் என்னை ஏற்றுக்கொண்டு அருளினன் போலும்'' என்று சொல்லிப் பெரிதும் மகிழ்ந்தான்.

## அருள் பாலித்தல்

விபீடணன் இராமனது பாதங்களில் விழுந்து வணங் கினான். இராமபிரான் அருள் சுரந்து ''பதினான்கு உலகங்களும் என்னுடைய பெயரும் எவ்வளவு காலம் நிலைத்து நிற்குமோ அதுவரையில் இலங்கைச் செல்வம் முழுவதையும் உனக்கே யான் அளித்துவிட்டேன்'' என்று இன்மொழி கூறினான்.

''வீடணனே! அயோத்தியில் இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் என்னும் நாங்கள் நால்வர் மட்டும் சகோதரர்களாக இருந்து வந்தோம். நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்ததில் குகனுடன் ஐவர் ஆனோம். கிஷ்கிந்தையில் சுக்ரீவனைச் சந்தித்தபோது அறுவர் ஆனோம். இப்போது எம்மிடம் அன்புடன் போந்துள்ள உன்னைச் சேர்த்து நாம் சகோதரர்கள் எழுவராகி விட்டோம். என்னுடைய தந்தையாகிய தசரதர் எனக்குக் காட்டைக் கொடுத்து,அதன் பயனாகப் பல புதல்வர்களை அடைந்து சிறப்புற்றார்'' என்று இராமபிரான் வீடணனுக்குப் பல இனிய மொழிகளை இயம்பிச் சிறப் பித்தான். இவ்வாறு இராமபிரான் விபீடணனை நண்ப

னாகவும் சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டு அடைக்கலம் அளித்த சிறப்பினைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர்.

தேவர்கள் வாழ்த்திப் பூமழை பொழிந்தனர். விபீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்ததும் பிரம தேவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. "என் குலத்து உதித்த இராவணனால் குலத்திற்கே பெரும்பழி வந்துவிட்டது இந்த விபீடணன் செயலால் அப்புன்மை தீர்ந்தது" என்று மகிழ்ந்தான். தருமமும் மகிழ்ந்தது.

## சேதுபந்தனம்

இலங்கைக்குச் செல்லவேண்டுமானால் கடலைத் தாண்டிப் போகவேண்டும். ஆகவே கடலில் அணை கட்ட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது இராமன் சமுத்திர ராஜனைத் தியானித்தான். அவனும் அவ்வாறே இராமன் முன் தோன்றிப் பணிந்து நின்றான்.

"வானரங்களைக் கொண்டு கற்பாறைகளையும், காட்டு மரங்களையும் போட்டு அணை கட்டச் சொல் லுங்கள். என்னால் இயன்ற உதவியைச் செய்கிறேன். விஸ்வகர்மாவின் மகன் நளன் இருக்கிறான் அவன் திறமையாக இதைச் செய்து முடிப்பான். வெற்றி உண் டாவதாக!" என்று வாழ்த்திச் சென்றான்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கட்டப் பட்டுள்ள இராமர் அணை சுமார் இருபத்திரண்டு கல் நீளமுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் இந்த பாக்ஜல சந்தியை வங்காளவீரன் மெகர்சின் என்பவன் நீந்தி வெற்றி கண்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமனுடைய ஏவலின் பேரில் சேதுபந்தன வேலை ஆரம்பமாயிற்று. வானர வீரர்கள் பெருத்த ஆரவாரத் தோடு ஐந்து நாட்களில் இவ்வேலையைச் செய்து முடித் தனர். நளன் மேற்பார்வையில் திறமையாகவே அணை கட்டி முடித்தது. எழுபது வெள்ளம் கொண்ட வானரப்

படை கடலைக் கடந்து சென்றது. அனுமன் தோள் மீது இராமனும், அங்கதன் தோள் மீது இலக்குவனும் ஏறிச் சென்றார்கள்.

கடலைக் கடந்து வானர சேனை இலங்கையில் பிரவேசித்ததை மால்யவான் என்னும் அரக்கன் இராவணனிடம் கூறினான். சேனையின் பலத்தைக் கூறி, சமாதானம் செய்து கொள்வதே நல்லது என்றான். இந்த அறவுரை இராவணன் காதுகளில் ஏறவில்லை.

இராவணன் மனிதர்களைக் கண்டு அஞ்சவில்லை. போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யலானான். இலங்கையின் நான்கு வாயில்களுக்கும் பெருவீரர்களைக் காவல் வைத்தான். சேனைத் தலைவர்களுக்கு உத்திர விட்டான். தான் வெற்றி பெறுவது நிச்சயம் என்று திருப்தியடைந்தான்.

இச்செய்திகளை ஒற்றர்கள் மூலம் வீபீடணன் அறிந்து இராமனுக்குக் கூறினான். இராமன் அன்றிரவு சுவேலை மலை மேல் தங்கியிருந்தான். மறுநாட் காலை இலங்கா நகரம் திரிகூட மலை மேல் பிரகாசமாகக் காட்சியளிப்பதைக் கண்டான். 'ஐயோ, இராவணனுடைய தகாத காரியத்தால் இப்பெருநகரம் அழியப் போகிறதே' என்று வருந்தினான்.

இலங்கையின் கிழ்க்கடற்கரையில் திருக்கோண மலை இருக்கிறது. இது ஓர் இயற்கைத் துறைமுகம். ஜப்பான் படையெடுப்பின்போது ஆங்கிலேய கடற்படையின் தளமாக அது விளங்கியது. மலையின் மீது திருக்கோணீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. மலைக்கோட்டையும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## மகுட பங்கம்

இலங்கை சேர்ந்ததும் இராம இலக்குவர் ஊர் புறத்தைக் காண, பரிவாரத்துடன் சுவேல மலை உச்சியில்

ஏறினர். விபீடணன் எதிர் குன்றிலிருந்த அரக்க வீரர்களை இன்னார் இன்னார் என்று இராமனுக்குச் சுட்டிக் காட்டினான். மங்கையர் குழாத்துடன் கோபுரத்திலேறி நிற்பவன் புன்தொழில் இராவணன் என்றனன். சுக்ரீவன் திடீரென்று இராவணன் மேல் தாவிப் பாய்ந்தான்.

சுக்ரீவனும் இராவணனும் குத்துச் சண்டையில் ஆரம்பித்தனர். மல்யுத்தத்தில் ஈடுபட்டனர். சுக்ரீவன் இராவணனுடைய கிரீடத்திலிருந்த ரத்தினங்களை வலியப் பறித்துக் கொண்டு இராமனிடம் திரும்பி வந்தான். கவர்ந்து வந்த செய்தி அருமையானதாய் இருந்தும் தன் பணி அனுமன் செய்த பணிக்குத் தொஞ்சமும் ஈடில்லை என்றான் சுக்ரீவன்.

''சுக்ரீவனே! இவ்வாறு நீ செய்தது தவறு. முறைப்படி போரிட வேண்டுமே தவிர, எதிர்பாரா விதமாப் போய் எதிரியைத் தாக்கக்கூடாது'' என்று இராமன் புத்திமதி கூறினான். பிறகு வானரசேனை இராமனின் கட்டளைப் படி இலங்கா நகரைச் சூழ்ந்து கொண்டது.

## அங்கதன் தூது

''தூதுவன் ஒருவனை அனுப்பி மாதினை விடுதியோ என்று கூற, இராவணன் மறுத்தால் போர் செய்யலாம்'' என்று இராமன் சொன்னதைக் கேட்ட விபீடணன் அழகிற்றேயாகும் என்றான். சுக்ரீவன் 'அரசர்க்கு ஏற்றது இதுவே' என்றான். ஆனால் இலக்குவன், ''இராவணன் பால் இரக்கம் காட்டுதல் இழுக்காகும். இனி அம்பு எய்து போரிடுதலே தக்கது'' என்று தக்க காரணங் காட்டிக் கூறினான்.

இவர்கள் கூறிய கருத்துக்களைக் கேட்ட இராமன், ''மாருதியே மீண்டும் சென்றால் இந்த அனுமன் அன்றி வேறு எவரும் இங்கில்லை என்பது சாரும். ஆதலின் அங்கதனை அனுப்பலாம். பகைவர்கள் வீரமே வினைப்

பினும் தீதின்றி மீளவல்லான் அவனே யாவன்!'' என்று சொலி அங்கதனை அழைத்தான். தூதுரைக்க வேண்டிய செய்திகளைக் கூறினான்.

இராமன் கூறியவற்றைக் கேட்ட அங்கதன் மகிழ்ந்து, இராமனை வணங்கி, இலங்கை நோக்கிச் சென்றான். இலங்கை எய்தி அரக்கனாகிய இராவணனது இருக்கை புகுந்தான். இராவணனைக் கண்டான். அங்கதன் இராவணனைக் குறுகி நின்ற அளவில், இராவணன் அவனை நெருப்பெழ நோக்கி, ''நீ யார்? வந்த காரியம் யாது? இவர்கள் உன்னைக் கொன்று தின்பதற்கு முன் விளங்கக் கூறு,'' என்றான்.

அதைக் கேட்டு அங்கதன் நகைத்து, ''நான் இராம தூதன்; அவன் உலகநாயகன். அவன் உன்னிடம் கூறுமாறு எனக்கு ஆணையிட்டருளிய சொற்களைச் சொல்லவதற்கு யான் வந்துள்ளேன்'' என்றான்.

இராவணன், ''உலகோர் சிவபெருமான், நான்முகன், திருமால் ஆகியோரையே முழு முதற் கடவுள் என்பர்; அம்முழு முதற் கடவுளர் அன்றிக் குரங்குகளைத் துணையாகக் கொண்டு, இக்கடலுக்கு அணை கட்டிக் கடந்து வந்து, உன்னை ஏவிய நரன்கொலோ உலக நாயகன்?'' என்று ஏளனமாகக் கூறினான். பின் அங்கதனை நோக்கி, ''நீ யார்?'' என்று கேட்டான். அதற்கு விடையாக அங்கதன் கூறியவற்றைக் காண்பின் :

''முன்னொரு நாள் இராவணன் என்று சொல்லிக் கொண்ட யாரோ ஒருவனைத் தன் வாலினால் இறுகக் கட்டித் தோளோடு அழகுறச் சுற்றி நான்கு திசைகளிலும் உள்ள மலைகளிற் பாய்ந்து திரிந்தவனும், தேவர்களுக்காகப் பாற்கடலைக் கடைந்தவனும் இந்திரன் புதல்வனுமாகிய வாலி என்பானது மகனே யான்; என் பெயர் அங்கதன்!'' என்றான்.

உடனே இராவணன் அங்கதனை நோக்கி, "உன் தந்தையாகிய வாலி எனது நண்பனாவான். இங்ஙனம் இருக்கவும் நீ நரகனாகிய இராமனது தூதுவனாக வந்துள்ள இச்செயலைக் காட்டிலும் பழிப்பிற்கு ஏற்ற செயல் வேறு யாதுளது? உனக்கு யானே வானரத் தலைமை அளித்துள்ளேன்; நீயும் தாழாது வந்தனை. நன்மையே செய்தாய்" என்றான்.

மேலும், "தந்தையைக் கொன்றவனாகிய இராமன் பின்னே தலைமேல் இரு கைகளையும் குவித்துக் கொண்டு, கவிழ்ந்த தலையுடன் அறிவிலியாக வாழ்ந்தான் என்று கூறும் பழிச் சொல்லையும் நீ நீங்கப் பெறுவாய். சீதையை அடைந்த நான் உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன். இனி எனக்கு அரிய செயல் யாதுளது? அந்த நரர்கள் இன்றோ நாளையோ அழிவது உறுதி. உன் அரசு உனக்குத் தந்தேன். எனவே பொன்னால் இயன்ற அரியாசனத்தில் தேவர்கள் போற்றித் துதிக்க யானே உனக்கு முடிசூட்டுகின்றேன். இம்முடியைச் சூட்டிக்கொண்டு ஊழிக்காலம் வரை ஆள்க!" என்றான்.

இதைக் கேட்டவுடன் அங்கதன் சிரித்தான். "நீங்கள் அடியோடு மாள்வது உறுதியென்பதை நன்கு உணர்ந்த உன் தம்பி விபீஷணன் உங்களை விட்டுப் பிரிந்து எங்கள் பக்கம் வந்துள்ளான். நீ ஆராயாமல் வாயில் வந்தபடி பிதற்றுகிறாய். வானரத் தலைமையை நீ தர யான் கொள்வது நல்லரசை நாய் கொடுப்பச் சிங்கம் ஏற்றுக் கொள்வது போன்றதாகும்" என்று பெரு நகைப்புச் செய்தான்.

அங்கதன் இராவணனை நோக்கி, "உன்பால் இன்னும் அருள் நீங்காதவனாகிய இராமன் என்னை இன்று அழைத்து நீ போய்த் தன் குல முழுவதும் கொல்லும் பாவியாகியவனும் அமருக்கு அஞ்சி அரணில் புகுந்து பதுங்கியவனுமாகிய உன்னைக் கண்டு, "தேவியை விடுக;

அன்றேல் செருக்களத்து எதிர்த்துத் தன் ஆவியை விடுக'' என்று கூறுமாறு சொன்னான்.

''நீ எல்லாவற்றையும் நன்கு நோக்கி உனக்கு உறுவது ஒன்றைத் தெளிந்து சொல். உனக்கு நன்மை பார்க்கின் துன்றிருங் குழலாள் ஆகிய சீதையை இராமன் பால் விட்டு விட்டு அவனைத் தொழுது வாழ்வாய். அன்றி உன் சுற்றத்தோடும் அழிவதாக முடிவு செய்தால் என் பின்னா லேயே போர் செய்யப் புறப்படு'' என்று கூறினான்.

தூதுச் செய்தியைக் கூறிய அங்கதன் இராவணனிடம் தன் கருத்தாக, ''நீரிலே தோன்றியனவும், நெருப்பிலே தோன்றியனவும், வானப்பரப்பிலே தோன்றியனவும் ஆகிய அனைத்துயிர்களும் அழிந்து போகுமாறு வெற்றி பெற்ற நீ மறைந்து நின்று, ஊருள் புகுந்து கிடந்தாய் என்றால் இதனினும் பழி யாதுளது?'' என்று இராவணன் மனம் உளையுமாறு சொன்னான்.

அங்கதன் மொழி கேட்ட இராவணன் மிக்க சினம் உடையவனாய் அங்கிருந்த நால்வரை நோக்கி;''இவனைப் பிடியுங்கள்; விரைவாகப் பூமியின் மீது மோதுங்கள்'' என்று ஆணையிட்டான்.

அங்கதன் தன்னைப் பிடிக்க வந்த நால்வரையும் தூக்கிக் கொண்டு உயரப் பறந்தான். அவர்கள் தலையை அறுத்துக் கோபுர வாயிலில் போட்டுத் தன் காலால் மிதித்துக் கொண்டே அங்கிருந்தோரை நோக்கி, ''புகையை விடுவனவும் ஒளி விடுவனவுமாகிய இராம பிரானது சுடுசரங்கள் வீழ்வதன் முன்னம் உங்களுக்குப் பாதுகாவலான இடங்களை அடையுங்கள்'' என்று கூறி அந்தரத்திடை ஆர்த்தெழுந்து இலங்கையினின்றும் புறப் பட்டு இராமனை வந்தடைந்தான்.

**போர்க்களம்:** (முதல் நாள் போர்)

அங்கதனுடைய காரியத்தைக் கண்டு ராட்சசக் கூட்டத்துக்குப் பெருந் திகில் உண்டாயிற்று. ஆனால்

தங்களுடைய பயத்தை மறைத்துக் கொண்டார்கள். இராவணன் பெருமூச்சு விட்டான். இந்த நிகழ்ச்சியை ஒரு துர்நிமித்தமாகக் கருதினான்,

அங்கதன் திரும்பி வந்ததும் இராமச்சந்திரன் சேனைகளுக்கு உத்தரவு கொடுத்துவிட்டான். யுத்தம் ஆரம்பமாயிற்று. இராமபிரான் சேனையை அணிவகுத்து இலங்கையை நோக்கினான். "இலட்சுமணா! இந்த நகரத்தின் அழகைப் பார். இப்போது சீதைக்குத் தகவல் கிடைத்திருக்கும் அல்லவா?" என்றான்.

சுகன் என்னும் அரக்கர் தூதன் இராவணனிடம் சென்று, "கரடிகளும் வானரங்களும் கடலைத் தாண்டி வந்து யுத்தத்துக்குத் தயாராய் இலங்கையைச் சூழ்ந்து கொண்டன. யுத்தம் நடக்கப் போகிறது. வேறுவழியில்லை. யோசனை செய்து பாருங்கள். சீதையைத் திருப்பித் தந்துவிட்டால் பிழைக்கலாம்" என்றான்.

இராவணனுக்குக் கோபம் பொங்கிற்று. பகைவரின் படைபலத்தை அறிந்து வர அமைச்சர்களை அனுப்பினான். அவர்களும் அவ்வாறே வானர உருவம் தாங்கிச் சென்று, கண்டு பிடிக்கப்பட்டு, இராமனால் மன்னிக்கப் பட்டுத் திரும்பி வந்தனர்.

அமைச்சர்கள் திரும்பி வந்து, இராவணனை நோக்கி, "ஐயனே! விபீஷணனால் நாங்கள் கண்டுபிடிக்கப் பட்டோம். ஆனால் இராமன் எங்களைக் கொல்லாமல் விட்டு விட்டான். அரசே! நம்முடைய பகைவர்கள் ஒரே உறுதியாக இருக்கிறார்கள். நாம் அவர்களை வெல்வது இயலாத காரியம். அவர்களைப் பகைத்துக் கொள்வது உசிதமல்ல. உடனே சீதையை இராமனிடம் ஒப்புவித்து விடுவது நல்லது" என்றார்கள்.

இராவணன் நல்லதைச் சொன்ன அமைச்சர்களின் மீது சீறினான். "உலகமெல்லாம் எனக்கு விரோதமாக நின்றாலும் நான் அஞ்சப் போவதில்லை. நான் சீதையைத்

திருப்பித்தரப் போவதில்லை. எந்தப் பகைவன் என்னை ஜெயிக்க முடியும்?'' என்றான். இராவணன் கோபம் மேலிட்டு மாளிகை மீது ஏறிப் பார்த்தான். நான்கு பக்கங் களிலும் மரங்களையும் கற்பாறைகளையும் எடுத்துக் கொண்டு சூழ்ந்து நின்ற வானரர்களைக் கண்டான். இவர்களை எப்படி அழிப்பது என்று ஆலோசித்தான்.

இதே போலக் கோட்டைக்கு வெளியே இருந்த இராமன், ''இந்த மதிலுக்குள்ளே சீதை சிறைப்பட்டு வாழ வருந்துகிறாள். கோட்டையைத் தாக்குங்கள். அரக்கர்களைக் கொல்லுங்கள், தயங்க வேண்டாம்!'' என்றான். அவர்களும் உற்சாகமாக யுத்தத்தை ஆரம்பித் தார்கள்.

பெருங்கோஷத்துடன் வானர வீரர்கள் பெரும் பாறைகளை எடுத்து வீசி மதிலைத் தாக்கினார்கள். பெரிய மரங்களை வேரோடு பிடுங்கி அரக்கர்களுடன் மோதினார்கள். இதைக் கண்டு இராவணன் தன் படை களை ஏவி, ''உடனே வெளியே சென்று இந்த வானரங் களை வதம் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டான். உடனே பேரிகை ஓசையும் சங்க நாதமும் அரக்கர்களின் கோஷமும் எழுந்தன. வானரர்களும் அரக்கர்களும் கோர யுத்தம் செய்யத் தொடங்கினர்.

இரு தரப்பிலும் பலர் மாண்டனர். பூமி முழுவதும் ரத்தச் சேறும், வெட்டப்பட்ட உறுப்புக்களும் மாமிசத் துண்டங்களுமாகக் காட்சியளித்தன. இரு தரப்புப் பெருந்தலைவர்களும் போரிட்டனர். இந்திரஜித்தி னுடைய தேரும் குதிரைகளும் நாசமாயின. அங்கதனும் இந்திரஜித்தின் கதாயுதத்தால் அடிபட்டான். இராம இலக்குவர்களும் அம்புமாரி பொழிந்தனர்.

## இந்திரஜித்தின் மாயப் போர்

இந்திரஜித்து மாயப் போரில் இறங்கினான், பிறர் கண்ணுக்குத் தோன்றாமல் நின்று யுத்தம் செய்தான்,

இராம இலக்குவர்கள் அவன் பாணங்களுக்கு இலக்கா னார்கள். சரமாரி பொழிந்து கொண்டேயிருந்தது. இந்திரஜித்து அவர்கள் மீது நாக பாணங்களை எய்தான். அதனால் அவர்கள் செயலற்றுப் பூமியில் விழுந்தார்கள். வானர வீரர்கள் புலம்பினார்கள். இந்திரஜித்து திரும்பிச் சென்று தகப்பனிடம் தனது வீர வெற்றியைப் புகழ்ந்து ரைத்தான். இராவணன் பரவசமடைந்தான். மகனைப் பாராட்டினான்.

குறித்த நேரம் கடந்ததும் நாக பாணத்தின் சக்தி தளர்ந்தது. இராமன் கண் திறந்து பார்த்தான். பக்கத்தில் மயங்கிய நிலையில் இருந்த இலக்குவனைக் கண்டு கதறினான். விபீஷணன் அங்கு வந்து சேர்ந்தான். அப்போது கருடன் ஆகாயத்தில் பறந்தது. அதன் நிழல் இராம இலக்குவர் மேல்பட்டதும் அவர்கள் உடலில் தைத்திருந்த பாணங்கள் கழன்று மறைந்தன. அவை விஷ நாகங்கள். இந்திரஜித்தின் மந்திர பலத்தால் அம்புகளாக வடிவங்கொண்டு அவர்கள் உடலில் பாய்ந்திருந்தன. பாம்புக்குப் பகை கருடன் அல்லவா? ஆகவே அவை புறமுதுகிட்டு ஓடின.

கருடன் அருகில் வந்து இராம இலக்குவர்களைத் தடவிக் கொடுத்தது. காயங்கள் மறைந்தன. சகோ தரர்கள் இருவரும் முன்போல் வீரமும் பலமும் கொண்டு விளங்கினர்.

அரண்மனைக்குள் இருந்த இராவணன் வானரர் களின் கோஷத்தைக் கேட்டான். இராம இலக்குவர்கள் மயக்கம் தெளிந்து எழுந்து விட்டார்கள் என்று சாரணர்கள் மூலம் அறிந்தான். நாக பாணங்கள் பயனற்றுப் போனது அவனுக்குத் திகிலை உண்டாக் கியது. அரக்கர்களை ஏவினான். சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அனுமன் அவர்களைக் கொன்று குவித்தான்.

## இராவணன் போருக்கு எழுதல்

இந்தத் தோல்வியைக் கண்டு இராவணன் வெகுண்டெழுந்தான். 'சேனாதிபதிகளை ஒருவர் பின் ஒருவராகப் போருக்கு அனுப்பினான். முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின தானே தேர் ஏறி யுத்த களம் வந்து சேர்ந்தான். விபீடணன் இராமனைப் பார்த்து, ''இராவணன் இவன் தான்'' என்று சுட்டிக் காட்டினான். இராவணன் பலசாலி என்பதை இராமன் கண்டு வியந்தான்.

இராவணன் பல வானரர்களைத் தாக்கி வீழ்த்தினான். அனுமனுக்கும் இராவணனுக்கும் முஷ்டி யுத்தம் நடந்தது. இருவரும சமபலம் உடையவர்கள். சளைக்காமல் போரிட்டனர். பின்னர் இராமன் அனுமனது தோளின் மேல் ஏறிக்கொண்டு இராவணன் மீது சரமாரி பொழிந்தான். இராவணனது முடி உடைந்தது, தேர் அழிந்தது. ஆயுதம் அழிந்து செயலற்று நின்றான்.

இராமன் இராவணனைப் பார்த்து, ''இன்று தப்பிப் போ. நன்றாக யுத்தம் செய்தாய்; திரும்பிப்போய் இளைப் பாறி, நாளை ஆயுதம் எடுத்துக் கொண்டு மறுபடியும் வா,'' என்று கூறினான். இராவணன் அவமானப்பட்டு இலங்கை நகர் திரும்பிச் சென்றான்.

யானையோடு அஞ்சாது மோதும் மார்பினையும், உமைகேள்வன் உறையும கைலை மலையினையே எடுக்கும் தோளினையும், நாரதமுனிவர்க்கு ஏற்ப இன்னிசை முழங்கும் இனிய நாவினையும், பத்துத் தலைகளிலும் பாங்குறத்தரித்த முடியினையும், சிவன் தந்த வெற்றி வாளையும், தன்னிடத்தே இதுகாறும் நிலைத்திருந்த வீரத்தினையும் போர்க்களத்தே போட்டு விட்டு இராவணன் வெறுங்கையனாய குனித்த தலையோடு சென்றதாகக் கமபர் பாடுகின்றார்.

## கும்பகர்ணன்

கும்பகர்ணன் சிறந்த அறிஞன். நடுவு நிலை உடையவன். அவன் சீதையைக் கொணர்ந்த தன் தமையனை முன்னரே கடிந்து அறிவுரை கூறி, உறங்கச் சென்றான். அவன் விழிப்பதற்குள் இராம இராவணப் போர் தொடங்கி விட்டது. அதனால் இராவணன் அவனை எழுப்பிப் போர்க்கோலம் பூணச் செய்தான் தன் தமையன் தன் சொல்லைக் கேளாமையால் தனக்கும் பிறர்க்கும் அழிவைத் தேடி விட்டான் என்பதை எண்ணி வருந்திய கும்பகர்ணன் மீண்டும் அறிவுரை கூறினான். இராவணன் கேட்கவில்லை. மீண்டும் இறுதியாகச் சில கூறிக் கும்பகர்ணன் போருக்குச் சென்றான். இச் செய்திகளைச் சற்று விரிவாகக் காண்போம்.

முதல் நாள் போரில் இராமனோடு போர் புரிந்த இராவணன் தன் முடியிழந்து தோல்வியுற்று அரண்மனைக்குத் திரும்பினான். அமைச்சர் முதலியவர்களோடு சூழ்ந்து கும்பகர்ணனைப் போருக்கு அனுப்ப முடிவு செய்தான். பணியாளரைப் பார்த்து, ''நீங்கள் விரைந்து சென்று கும்பகர்ணனை எழுப்பி என்பால் அழைத்து வருக'' என்று ஏவினான்.

நான்கு தூதுவர்கள் ஓடிச் சென்று கும்பகர்ணன் அரண்மனையை அடைந்து அவனை எழுப்பினர். உறக்கம் நீங்கி எழுந்த கும்பகர்ணன் இராவணன் அரண்மனையை அடைந்து அண்ணன் அடியில் விழுந்து வணங்கினான். இராவணன் தம்பியை எடுத்து மார்புறத் தழுவி, ''இரண்டு மானிடர் பெரிய குரங்குப் படையோடு வந்து நமது நகரை வளைத்துக் கொண்டு, நேற்று வெற்றியையும் பெற்றுவிட்டனர். ஆகையால் நீ சென்று அவர்களை வென்றி கொள்வாயாக!'' என்று கூறினான்.

இராவணன் கூறியதைக் கேட்ட கும்பகர்ணன், ''நான் அஞ்சியவாறே போரும் மூண்டுவிட்டதோ? ஜானகி

இன்னும் சிறையினின்று நீங்கினான் இல்லையோ? உயர்ந்து ஓங்கிய நமது பெரும் புகழ்கள் யாவும் அழிந் தனவோ? அரக்கர் யாவரும் அழியும் காலம் வந்துவிட் டதோ? யான் சொன்ன சொற்களைக் கொண்டு கற்பின் செல்வியாகிய சீதையை இன்னும் விட்டு விடவில்லையோ? அங்ஙனம் அவளை விடாதவாறு தடுத்தது உனது விதியின் செயலேயாகும்.

''இறுதியாக யான் உனக்குச் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு; அதனை நீ விரும்பி மேற்கொள்வாய் ஆனால் நன்று; இல்லையேல் நீ இறந்தாய் என்றே கொள் வாயாக. நீ சீதையைக் கொண்டு போய் இராமனிடம் விட்டு விட்டு, ''என் குற்றம் பொறுக்க!'' என்று அவனடி களில் விழுந்து வணங்கி, தம்பி வீடணனோடும் நட்புக் கொள்வாயாக. அதனை நீ விரும்பவில்லையானால், நமக்குள்ள வலிமை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரே சமயத்தில் அவர்களைத் தாக்குதலே இப்போது செய்யத்தக்க செயலாகும்'' என்று கூறினான்.

கும்பகர்ணன் கூறியவற்றைக் கேட்ட இராவணன், தம்பியை நோக்கி, ''கும்பகர்ணா! நான் இங்கு உன்னைக் கூப்பிட்டது இனிமேல் நடக்க இருப்பது யாது என்று தெரிந்து கொள்வதற்காக அன்று. அற்பத் தொழில்களை யுடைய மனிதரைச் சென்று கொல்க என்று கூறியனுப்பு வதற்காகத்தான். நீ எனக்கு வாழும் வகை வகுத்துக் கூறுவதற்கு அறிவுத்துறை முற்றிய அமைச்சன் அல்லன்!

''நீ போருக்கு அஞ்சுகின்றாய். உன் வீரம் வீணானது. உன் வீரத்தை விளங்கச் செய்யும் போருக்குப் பின்னிடு கின்றாய். ஊனோடு கள்ளையும் மிகுதியாக உண்டாய். இனிப்போய் இரவும் பகலும் படுத்து உறங்குவாயாக.

''மனிதர் இருவரையும் குரங்கையும் கும்பிட்டு உயிர் வாழ்தல் என்பது உனக்கும் உன் தம்பி வீடணனுக்குமே உரிய செயலாகும். யான் அத்தொழில் செய்யும் ஆற்றல்

இல்லாதவன். நீ இங்கிருந்து எழுக; போய் உறங்குக'' என்று கூறித் தானே போருக்கு எழுந்தான்.

இராவணன் கடிந்து கூறிப் போருக்குப் புறப்படக் கண்ட கும்பகர்ணன் அவனடியில் விழுந்து வணங்கி, ''அண்ணலே! யான் கூறியவற்றைப் பொறுத்தருள்க!'' என்று கூறித் தான் போர்க்களத்துக்குச் செல்ல இசைந்து சூலத்தை வாங்கித் தனது வலத்தோளில் உயர்த்திய வனாய், இராவணனை நோக்கி, ''யான் உனக்குச் சொல்ல வேண்டியது இன்னும் ஒன்று உளது'' என்று கூறி அதனைச் சொல்லத் தொடங்கினான்.

''இலங்கைக் காவல! யான் போர்க்களம் நோக்கிச் செல்கிறேன். நான் அநேகமாக இறந்து விடுவேன். சீதையைக் கொண்டு போய் இராமன் பால் விட்டுவிடுவது உனக்குப் பெரும் பயன் விளைக்கும் தவச் செயலாகும். அண்ணலே! நான் இதுநாள் வரை உனக்கு ஏதேனும் குற்றம் புரிந்திருப்பின் பொறுத்துக்கொள்க. இனி உன் முகத்தில் யான் விழிக்கும் வகை என் வரையில் அற்றுப் போயிற்று. உன்பால் இதோ விடையும் கொண்டேன்!'' என்று கூறித் தேரேறிக் கும்பகர்ணன் போர்க்களம் நோக்கிச் சென்றான்.

### போர்க்களத்தில்

கும்பகர்ணனைக் கண்ட இராமன் விபீடணனை நோக்கி, ''அன்பா! நம் எதிரே தாளாண்மை மிக்க வீரன் ஒருவன் மேருமலையோ என்னும்படி நிற்கின்றானே, அவன் யாவன்?'' என்றான். விபீடணன் இராமனை நோக்கி, ''ஐயா! இவன் இலங்கை வேந்தனின் பின்னவன்; எனக்கு மூத்தவன். கும்பகர்ணன் என்னும் பெயரினன்; பெருந்தவங்களைச் செய்து சிறந்த வரங்களைப் பெற்ற வன். பிறர்மனை நயத்தலாகிய இச்செயல் நல்லதன்று என்ற நீதியை அண்ணனுக்கு எடுத்துக்கூறி அவன் மறுத் தமையால் போருக்கு வந்துள்ளான்'' என்று கூறினான்.

இராமன், கும்பகர்ணனைத் தம் பக்கம் அழைத்து வருமாறு விபீடணனை ஏவினான். அவ்வாறே விபீடணன் சென்று பற்பல நியாயங்களை அவனுக்கு எடுத்துக்கூறி இராமபிரானைச் சரணடையுமாறு வேண்டினான். செய்ந்நன்றி மறவாத தம்பியாகிய கும்பகர்ணன் அதனை மறுத்துப் போர்புரிந்து உயிர்விடத் துணிந்தான். இந்தக் கட்டத்தைக் கம்பர் பல பாடல்களில் சித்திரித்துள்ளார்.

கும்பகர்ணன் தன் அடியில் விழுந்து வணங்கிய விபீடணனை எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டு, "மைந்தா! நீர் மேல் எழுத்துப் போல நிலையற்ற இவ்வுலக வாழ்வை விரும்பி, என்னை நீண்ட காலம் உணவு கொடுத்துக் காப்பாற்றி வளர்த்து வந்து, இப்போது போர்க்கோலமும் புனைவித்துப் போர்க்கு அனுப்பிய தமையனுக்காக உயிர் கொடாமல் அந்த இராமனை அடைய மாட்டேன். நீ என்னுடைய துயரத்தைப் போக்குவதாக இருந்தால் விரைந்து சென்று இராமனை அடைவாயாக.

## போர் புரிதல்

கும்பகர்ணன் இராமனோடு பெருஞ்சீற்றங் கொண்டு கடும் போர் புரிந்தான். அவனது கைகளும் கால்களும் வெட்டுண்டன. இராமனது அம்புகளால் அவனது உடல் துளையுண்டது. கண்களில் இருந்து தீப்பொறிகள் பறந்தன. கும்பகர்ணன் இராமனை நோக்கி, 'ஆதியாய்! என் தம்பி விபீடணன் அரக்கர் குலத்தில் பிறந்தவனாயினும் மறநெறியை அறியாதவன். அவன் உன்னை அடைக்கலமாக அடைந்துள்ளான். அவனைக் கைவிடாது காத்தல் வேண்டும். யான் உன்னை வேண்டுகிறேன்.

"இராவணன் இவனை உடன் பிறந்தவன் ஆயிற்றே என்று இரக்கம் கொள்ள மாட்டான். இவனைக் கண்டாற் கொல்வான்; சிறிதும் இரங்கான்; எனவே 'உன்

தம்பியையும் உன்னையும் இவன் பிரியாதிருக்க அருள்வாயாக. முனிவர்களும் அமரர்களும் மூக்கில்லாத முகம் என்று என் முகத்தைக் கண்டு இகழாதவாறு உனது அம்பினால் எனது கழுத்தை அறுத்துத் தலையைக் கடலில் ஆழ்த்துவாயாக. இவையே யான் வேண்டிக் கொள்வனவாகும்'' என்றான்.

அவன் வேண்டியவாறே இராமன் அவனது தலையைக் கொய்து ஆழ்கடலில் வீழ்த்தினான். செயந்நன்றி மறவாமையாகிய சிறந்த அறத்திற்குக் கும்பகர்ணன் ஓர் எடுத்துக்காட்டு.

## இந்திரஜித்து

கும்பகர்ணன் மாண்டதை அறிந்து இராவணன் துன்பக் கடலில் ஆழ்ந்தான். ''நான் உயிருடன் இருக்கத் தாங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?'' என்றான் இந்திரஜித்து.

இப்படித் தகப்பனுக்குத் தைரியம் சொல்லி விட்டு இந்திரஜித்து சேனையைத் திரட்டிக் கொண்டு யுத்தகளம் சென்றான். வானர சேனையைத் தாக்கி முறியடித்தான்; லட்சக் கணக்கான உயிர்ச் சேதமும் படுகாயங்களும் உண்டாக்கினான். வானர சேனை தோல்வியுற்றுத் தளர்வுற்றது, நாலா பக்கமும் சிதறி ஓடிற்று.

இராம இலக்குவர்களும் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு பிரக்ஞையற்றுக் கிடந்தார்கள். இந்திரஜித்து தந்தையிடம் தனது வெற்றியைத் தெரிவிக்கச் சென்றான். ஜாம்பவான் அனுமனைப் பார்த்து, ''அப்பனே! நீ உடனே புறப்பட வேண்டும். கடலைத் தாண்டி இமயமலைத் தொடருக்குப் போய் அங்குள்ள மருந்துச் செடிகளைக் கொண்டு வந்தால்தான் இராம இலக்குவர்களுக்கும் வானரவீரர்களுக்கும் மயக்கம் தெளியும்'' என்றான்.

### சஞ்சீவி பர்வதம்

உடனே மாருதி குதித்தெழுந்தான். ஆகாய மார்க்கமாகச் சென்று சஞ்சீவி பர்வதத்தை அடைந்தான். மருந்துச் செடிகள் யாவை என்று அனுமனுக்குத் தெரியவில்லை ஆகவே சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்து எடுத்துக்கொண்டு திரும்பினான். மலையின் காற்றுப் பட்டவுடனே இராம இலக்குவர்களும் பாசத்தால் கட்டுண்ட வானர வீரர்களும் மூர்ச்சை தெளிந்து எழுந்தனர். அவர்களின் உடலில் தைத்திருந்த பாணங்கள் தாமாகக் கழன்றன. காயங்களும் ஆறின. என்ன அதிசயம் என்று அனைவரும் வியந்தனர்.

அன்றிரவு சுக்ரீவன் வானர வீரர்களை அழைத்துக் கொண்டு இலங்கை நகருள் பிரவேசித்தான். எல்லாக் கட்டிடங்களுக்கும் அவர்கள் தீ வைத்தார்கள். வீடுகள், மாளிகைகள், கோபுரங்கள், கொத்தளங்கள் யாவும் எரிந்து சாம்பலாயின. யுகாந்த காலத் தீயைப் போல இருந்தது. இராவணன் கடுங்கோபங் கொண்டான். அரக்கர்களை ஏவினான். அவர்கள் கடும்போர் செய்து மாண்டனர்.

மறுநாள் காலை இந்திரஜித்து போருக்கு எழுந்தான். வானத்தில் மறைந்து மாயப்போர் செய்தான். இந்திரஜித்து மாயையினால் சீதை போன்ற உருவைக் கொணர்ந்து அனுமனது கண் எதிரே கொன்றான். அதனைக் கண்டு துயுற்று அனுமன் அசோகவனம் சென்று, பிராட்டியைக் கண்டு இராமனுக்கும் மற்றையோர்க்கும் ஐயத்தைத் தெளிவித்தான்.

### நிகும்பலை யாகம்

இந்திரஜித்து நிகும்பலை என்ற அசுர வேள்வி ஒன்று செய்ய யோசித்தான். அதன் பயனாக வான வெளியில் மறைந்து நின்று கடும் போர் புரிய முடியும். "அந்த

வேள்வி நிறைவேறினால் நம்மால் அவனை வெல்ல முடியாது. ஆகவே அந்த யாகத்தை முற்றுப் பெறாமல் செய்ய வேண்டும்'' என்று விபீடணன் கூறினான்.

உடனே இராம இலக்குவரும் விடணனும் மற்றும் சில வானர வீரரும் யாகம் நடக்கும் இடம் நோக்கிச் சென்றனர். யாகம் நடக்க விடாமல் தடுத்தனர். கை கலந்தது. பெரும் போர் விளைந்தது. இந்திரஜித்தும் இலக்குவனும் விற்போரில் சமபலம் உடையவர்கள். இறுதியில் வீடணன் குறிப்பின்படி இலக்குவன் இந்திர அஸ்திரத்திற்கு மந்திரம் சொல்லி இந்திரஜித்தின் மீது ஏவினான். அது அவன் தலையைக் கொய்து தரையில் வீழ்த்தியது. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

இலக்குவன் உடம்பெல்லாம் ரத்தக்காயத்தோடு இராமனிடம் சென்றான். இராமன் அன்போடு தழுவி ஆறுதல் கூறினான். இந்திரஜித்து மடிந்தான் என்ற செய்தி கேட்டு இராவணன் சொல்லொணாத் துயரமும் கோபமும் கொண்டான். கண்களில் நீர் பெருகியது. பெருமூச்சு விட்டான். பலவாறு பிரலாபித்தான்.

## இராவண வதம்

அன்று அமாவாசை; சதுரங்க சேனையுடன் இராவணன் போருக்குப் புறப்பட்டான். வானரர்கள் கற்பாறைகளையும் மரங்களையும் கொண்டு தாக்கினர். ரத்த வெள்ளம் பெருகிற்று. இராமனுடைய அம்புகள் நெருப்பைக் கக்கின. எண்ணற்ற அரக்கர்கள் மடிந்தனர். அரக்கர் சேனை அழிந்தது. எஞ்சியவர்கள் சிதறி ஓடினர்.

இராவணன் துக்கமும் கோபமும் வெட்கமும் கொண்டான். என்றாலும் தைரியமாகப் போரிட யத்தனித்தான், ரதம் பூமி அதிரச் சென்றது. அரக்க வீரர்கள் பின் தொடர்ந்தனர். துர்ச்சகுனங்கள்

தோன்றின. அவற்றைப் பொருட்படுத்தாமல் இராவணன் சென்றான். முதலில் இலக்குவனுக்கும் இராவணனுக்கும் விற்போர் நடந்தது. இராவணன் எளிதாகப் பாணங் களை விலக்கினான். உடனே இராமன் அங்கு வந்து சேர்ந்தான்.

இராமன் செலுத்தும் பாணங்கள் இராவணனது கவசங்களை ஒன்றும் செய்ய இயலவில்லை. அதேபோல் இராவணன் விட்ட அமபு இராமனது நெற்றியில் பட்டும் அவனுக்கு எந்தவித ஊறுபாடும் நேரவில்லை. இருவரும் வில்லித்தையில் சமபலம் உடையவர்கள். அம்பு மாரி பொழிந்தது. சக்தி அஸ்திரங்கள் தீச்சுவாலையைக் கக்கின பேரொளி பரந்தது.

இராமனுக்கு உதவியாக இந்திரனுடைய தேர் வந்து சேர்நதது. இராமன் தேரேறிப் பாணப் பிரயோகம் செய்தான். இராமன் பிரம்மாஸ்திரத்தை எடுத்து மந்திரப் பிரயோகஞ் செய்து செலுத்தினான். அது இராவணனுடைய மார்பைத் துளைத்தது கையிலிருந்த வில் கீழே விழுந்தது அரக்கன் மாய்ந்தான். உயிரற்றுக் கீழே விழுந்தான். தேவதுந்துபிகள் முழங்கின. ஆகாயத்தி லிருந்து மலர்மாரி பொழிந்தது.

இராம பாணத்தின் வலிமையைக் கம்பர் பல பாடல் களில் பாராட்டுகிறார். உயிரற்றுக் கிடந்த அண்ண னைப் பார்த்து வீடணன் வாய் விட்டு அழுதான். அண்ணனுடைய வெற்றிப் பிரதாபங்களைப் பலவாறு பாராட்டிப் புலம்பினான். இராமன் வீடணனுக்கு ஆறுதல் கூறி, ''இறுதிச் சடங்குகளைச் செய்வாயாக!'' என்றான்.

இராவணன் இறந்த செய்தி கேட்டுப் பெருந்துயர் அடைந்தாள் மண்டோதரி. போர்க்களம் புகுந்தாள். இராவணன் மார்பில் விழுந்து புலம்பி அரற்றினாள்.

—இவ்வாறு இராமாயணப் போர் பதினெட்டு மாதம் நடந்தது— தேவாசுரப் போர் பதினெட்டு ஆண்டுகளும், இராமாயணப் போர் பதினெட்டு மாதங்களும், பாரதப் போர் பதினெட்டு நாட்களும், செங்குட்டுவன் கனக விசயரோடு நிகழ்த்திய போர் பதினெட்டு நாழிகையும் நடந்தது.

### சேரபணம்

அனுமன் வெற்றிச் செய்தியைச் சீதையிடம் குதூகலத்துடன் சொன்னான். தக்க சமயத்தில் தன் உயிரைக் காப்பாற்றிய அனுமன் வாயிலாக இராமனது வெற்றியைக் கேட்ட சீதை உள்ளம் பூரித்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தாள்.

### நாடு திரும்புதல்

இராவணன் மடிந்த பிறகு இராமன் விபீடணனை அழைத்து இராவணனுக்கும் மற்றவர்களுக்கும் உரிய இறுதிக் கடன்களைச் செய்யுமாறு பணித்தான். அதன் பிறகு இலக்குவனை அழைத்து விபீடணனுக்கு முடி சூட்டும்படி கட்டளையிட்டான். முடி சூட்டுவிழா முடிந்தது. விபீடணன் பிராட்டியை அழைத்து வந்து இராமனிடம் ஒப்படைத்தான்.

இராமன், சீதையை அக்கினிப் பிரவேசம் செய்வித்துப் பின்னர் ஏற்றுக் கொண்டான். இதுபற்றி சான்றோர்களின் கருத்து வருமாறு: இந்தப் பரீட்சை இராமனுடைய குணத்துக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை. படிக்கும் போது கஷ்டமாக இருக்கிறது.

சக்கரவர்த்தித் திருமகன் மிதிலையிலிருந்து திரும்பிய போது பரசுராமனுடைய சந்திப்பு நிகழ்ந்தது. அந்தச் சந்திப்புடன் பரசுராமனுடைய விஷ்ணு அவதாரம் முடிந்து போனதாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அப்படியே இராவண சம்காரத்துடன் இராமச்சந்திர

னுடைய விஷ்ணு அவதாரம் முடிந்ததாகவும் வைத்துக் கொள்ளலாம். அதறகுப் பின் இராமன் இட்சுவாகு வம்சத்து அரசனாகத்தான் எஞ்சி நின்றான் இப்படி வைத்துக் கொண்டால் யுத்த காலத்தில் சீதையை நடத்திய முறையும், பிறகு உத்தர காண்டத்தில் சொல்லப் படும் விஷயங்களும் பற்றிய சிக்கல் தீரும். உலக நீதியின் படி அயோத்தி மன்னன் நடந்ததாக வைத்துக் கொள்ளலாம்.

யுத்த காண்டத்தில் அக்கினிச் சோதனைக்கு உள்ளாகிய பிறகும், காட்டுக்கு அனுப்பப் பட்டதாக உத்தர காண்டத்தில் சொல்லப்படுகிறது. பிராட்டியின் துயரமே துயரம். நம்முடைய தாய்க்குலத்தின் சொல்லுக்கு அடங்காத துயரங்கள் இதில் பிரதிபலிக் கின்றன.

துன்பம் என்ன? இன்பம் என்ன? எல்லாம் ஈஸ்வர லீலை. ஆண்டவனே தன் கருணாமூர்த்தியான பிராட்டி யையும் கூட அழைத்துக் கொண்டு, மக்களோடு சமமாக, மானிடர்களாக அவதரிந்து, அந்த இன்ப துன்ப லீலையை முற்றிலும் ஆடிக் காட்டியிருப்பதாக இராமாயணத்தில் காணலாம். பாரதநாட்டுப் பெண்களின் உள்ளத்துக்கு ஒளியும் சாந்தமும் தரும் நந்தா விளக்காக இது அமைகிறது.

புஷ்பக விமானத்தில் இராமன், இலக்குவன், சீதை ஆகியோர் ஏறிச் சேதுக் கரையை அடைந்தனர். இராவணன், கும்பகர்ணன் முதலியோர் பிரம்ம குலத்தில் பிறந்தவர்கள். ஆகையால் அவர்களைக் கொன்றதனால் ஏற்பட்ட பிரம்மகத்தி தோஷம் தன்னைப் பற்றாமல் இருக்கச் சேதுக்கரையில் சிவபெருமானைப் பூஜை செய்ய இராமன் விரும்பினான்.

ஆகவே அனுமனைக் காசிக்கு அனுப்பி, விசுவநாத ரைப் பணிந்து, தனது சிவபூஜைக்குரிய சிவலிங்கத்தைக்

பெற்றுவரச் செய்தான். அனுமன் சென்று வெகுநேரம் ஆகியும் வரவில்லை. பூசைக்கு என்று குறித்த நேரம் தவறி விடும்போல் தோன்றியது. ஆகையால் சீதையைக் கொண்டு மணலால் லிங்கம் செய்வித்துப் பூசையை முடித்தான்.

அதன்பிறகு அனுமன் லிங்கத்தோடு வந்து சேர்ந்தான். அனுமன் கோபித்துக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, அவன் கொண்டு வந்த லிங்கத்தை மணல் லிங்கத்திற்கு வடபுறத்தில் நிறுவினர்கள். பிறகு சேதுவிலிருந்து புறப்பட்ட இராமன் கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்தான். பின் அங்கிருந்து சித்திரகூட பர்வதத்தை அடைந்தனர். பரத்வாஜ முனிவர் அவர்களை வரவேற்று உபசரித்தார்.

### பரதாழ்வார்

அன்றோடு காடுறை வாழ்க்கையாகிய பதினான்கு ஆண்டுகள் முடிவுற்றன. பதினைந்தாவது ஆண்டின் முதல் நாள் ஆரம்பமாயிற்று. நந்திக் கிராமத்தில் பரதன் இராமனை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று சூரிய அஸ்தமனத்திற்குள் இராமன் திரும்பி வராவிடில் அவன் தீயில் இறங்குவதாகச் சபதம் செய்திருந்தான்.

அந்தச் சமயத்தில்தான் இராமன் தன் பரிவாரங்களுடன் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் தங்கியிருந்தான். எனவே அனுமனை அழைத்து, ''நீ உடனே நந்திக் கிராமம் சென்று பரதன் அக்கினிப் பிரவேசம் செய்யாமல் பார்த்துக் கொள். நான் நாளை வந்து சேர்வதாகக் கூறு. இதோ இந்த மோதிரத்தைக் கொண்டு போய் அடையாளமாகக் காட்டு'' என்று பணித்தான்.

## நந்திக் கிராமம்

நந்திக் கிராமத்தில் பரதன் சோகமே உருவாய் அமர்ந் திருந்தான். அந்தி நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. நதிக்கரையில் தீ மூட்டப்பட்டிருந்தது. வசிஷ்டரிடம் தான் அக்கினிப் பிரவேசம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். மக்கள் கதறினர். பரதன் தீயை வலம் வந்தான். அச்சமயத்தில் அனுமன் அங்கு வந்து சேர்ந்தான்.

''ஏ! பரதா! இராமன் வந்து விட்டான். நில் நில்'' என்று கூவினான். மக்கள் ஆரவாரம் செய்தனர். அனுமன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். நடந்த செய்திகளை விவரமாய்க் கூறினான். பரதன் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான் அனுமனை ஆலிங் கனம் செய்து கொண்டான். உணவளித்து உபசரித்தான்.

மறுநாள் நந்திக் கிராமம் விழாக்கோலம் பூண்டது. மக்கள் இராமனின் வருகையை எதிர்நோக்கினர். இராமன் தன் பரிவாரங்களுடன் புஷ்பக விமானத்தில் வந்து இறங்கினான். பரதன் ஓடிச்சென்று, ''அண்ணா! ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று வேண்டினான். இராமன், வசிஷ்டர் முதலான முனிவர் களையும் சுமந்திரரையும் வணங்கி அவர்களுடைய ஆசி களைப் பெற்றான்.

## அயோத்தி

மறுநாட் காலை இராமன் நீராடிப் புத்தாடை தரித்து, அரச கோலத்துடன் நந்திக் கிராமத்திலிருந்து அயோத்திக்குச் சென்றான். வழியெங்கும் மக்கள் ஆரவா ரத்துடன் வரவேற்றனர். இராமன் அயோத்திக்கு வந்ததும் மக்கள் பெருந்திரளாக அரண்மனைக்கு வந்து, காணிக்கைகளைச் செலுத்தி வழிபட்டனர். இராமனின் முடிசூட்டு விழாவுக்கு நாள் குறிக்கப்பட்டது.

அழைப்புகள் அனுப்பப்பட்டன. அயோத்தி நகரம் கோலாகலத்துடன் அலங்கரிக்கப்பட்டது.

## முடிசூட்டுதல்

அனுமன், அங்கதன், நீலன், நளன் முதலிய வானர வீரர்கள் நான்கு சமுத்திரங்களிலிருந்தும், புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் நீராட்டுதற்குரிய தீர்த்த நீரைக் கொண்டு வந்தனர். மகிழ்ச்சி ஆரவாரம் நிறைந்தது. நல்ல வேளையில் முடிசூட்டு விழாவிற்குரிய சுப சடங்குகள் நடைபெற்றன. வசிஷ்டர் இராமனைப் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு நீராட்டினார். இராமன் பட்டு ஆடை உடுத்தி அரச கோலத்துடன் விளங்கினான். மங்கள வாத்தியங்கள் முழங்கின.

சீதையுடன் இராமபிரான் தெய்வீக ஒளியுடன் காட்சி தந்தான். பட்டாபிஷேகம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. தெய்வத் தம்பதிகள் வீற்றிருக்கும் சீரிய சிங்காதனத்தைத் தாங்கி நின்றவன் அனுமன்தான்.

சிங்காதனத்தை அனுமன் தாங்கவும், அங்கதன் உடைவாளைக் கையில் ஏந்தி நிற்கவும், பரதன் வெண் கொற்றக் குடையைப் பிடிக்கவும், இலக்குவனும் சத்ருக்கனனும் வெண்சாமரை வீசவும், சீதை மலர்களால் கூந்தலை அலங்கரித்துக் கொண்டு மகிழ்ந்திருக்கவும் சடையப்ப வள்ளலின் வம்சத்து முன்னோர் மகுடம் கொண்டு வந்து கொடுக்க, அதை வசிஷ்ட முனிவன் வாங்கி இராமனுக்குச் சூட்டினான் என்று இக்காட்சியைக் கம்பர் பாடி மகிழ்கிறார்.

## பரிசளித்தல்

முடிசூட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு இராமன் விழாவிற்கு வந்தவர்களுக்குத் தகுந்த பரிசுகளைக் கொடுத்து மேன்மைப்படுத்தினான். சாம்பவானுக்குப் பட்டா

டையும், சுக்ரீவனுக்கு நவரத்ன மாலையும், அங்க தனுக்கு வீரக் கவசங்களும், விபீஷணனுக்குத் தங்கக் கிரீடமும் பரிசாக அளித்தான். அனுமன் பக்கம் திரும் பினான். தான் அணிந்திருந்த முத்து மாலையைச் சீதை யிடம் கொடுத்து, ''ஜானகி! இந்த மாலையை நீ விரும் பியவருக்கு வழங்கலாம்'' என்றான்.

நாயகன் கருத்தை அறிந்த சீதை, அனுமனை நோக்கி, ''வாயு புத்திரா! எங்களுக்குப் பேருதவி செய்த உனக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? இந்த முத்து மாலையை எங்கள் பரிசாக ஏற்றுக் கொள்!'' என்று கூறி அந்த முத்து மாலையை வழங்கினாள். அனுமன் மாலையைப் பணிவுடன் ஏற்றுக் கண்களில் ஒற்றிக் கொண்டு கரம் குவித்து வணங்கினான்.

இராமன் அனுமனை அழைத்து, ''உலகில் உனக்கு ஒப்பாரும் மிக்காரும் எவரும் இலர். அத்தகைய பேருப காரி நீ! முன்பு நீ அசோகவனத்தில் சீதையைக் கண்டு வந்து நற்செய்தி சொல்லி, சோகத்தில் ஆழ்ந்திருந்த என்னை மகிழ்வித்ததற்கு நான் என்ன பிரதி உபகாரம் செய்யப் போகிறேன். போரில் பேருதவி செய்த திண்ணிய தோளை உடையவனே! என்னை ஆலிங்கனம் செய்து கொள்!'' என்று திருமகளுக்கே உரித்தான தன் மார்பை அனுமனுக்குக் கொடுத்தான். அனுமன் தலைகுனிந்து பணிவுடன் நின்றான். இராமன் அனுமனுக்கு வயிரப் பைம்பூண்களையும் உயர்ந்த மாலைகளையும் பட்டாடை களையும் குதிரைகளையும் பரிசாக வழங்கினான்.

## இராம பக்தி

முடிசூட்டு விழா முடிந்ததும் அனைவரும் தத்தம் ஊருக்குச் செல்ல இராமனிடம் விடைபெற்றுக் கொண் டனர். பல ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் இராமாவ தார நோக்கம் முடிவுற்றதும் இராமன் சராசரங்களை ஏற்றிக் கொண்டு பரமபதம் சென்றான். அனுமன்

மாத்திரம் அங்குப் போக விரும்பவில்லை. இராமசரிதம் உலகில் நடமாடும் வரையில் நான் உயிருடன் இருந்து, இராம கதா காலட்சேபங்களை ஆனந்தமாய்க் கேட்டு அனுபவித்துக் கொண்டிருக்க அனுமதி வேண்டினான். ''அப்படியே ஆகட்டும்'' என்று இராமனும் அருள் செய்தான்.

இராமனிடம் விடைபெற்று அமைதியான சூழ்நிலையில் இராம தியானத்தைச் செய்வதற்காக அனுமன் இமய மலைச் சாரலை அடைந்தான். இன்றும் அனுமான் இராம தியானத்திலும் இராம நாம சங்கீர்த்தனத்திலும் ஆழ்ந்து, ஆனந்தமெய்திச் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அனுமனை மனதில் நினைப்பவர்கள் இம்மையில் சர்வ காரியசித்தி பெற்று, ஆரோக்கிய திடகாத்திரத்துடன் வாழ்வதுடன் மறுமையில் இராமன் அருளால் முக்தியும் பெறுவர் என்பது திண்ணம்.

— ஸ்ரீ ராம ஜெயம் —

# 1. இராமபிரான்

## இராம காவியம்

வடமொழியில் வால்மீகி எழுதிய இந்த இராமாயண இதிகாசம் பல மொழிகளில் பல அறிஞர்களால் எழுதப் பெற்றுக் காணப்படினும், இந்நூல் வேதநெறி விளக்கமாகவே கொள்ளப்படுகிறது. கம்பர் இக்காவியத்தை ஆறு காண்டங்களில் 10,500 விருத்தப் பாடல்களில் பாடியுள்ளார். அவர் இந்நூலுக்கு வைத்த பெயர் 'இராமாவதாரம்' என்பது.

கம்பர் இராமனைத் திருமாலின் பூரண அவதாரம் என்னும் போது இறைவன் இறங்கிவருதல் என்றே பொருள் கூறுகிறார். இரண்டு நோக்கங்களுக்காக இறைவன் இறங்கி வருகிறான் 1. அதருமத்தை அழித்து, தருமத்தை நிலைநிறுத்த வருகின்றான். 2. அடியவா களுக்கு அருள மனித உருவில் இறங்கி வருகின்றான். இவ்விரு நிலையிலும் இராமனைக் காண்கிறோம். இராமனும் அறத்தை நிலை நிறுத்தினான். தனைச் சரணடைந்தவர்களுக்கு வாழ்வளித்தான்.

அவதாரம் என்பதை மறந்து இராமாயணத்தைப் பயின்றாலும் ஓர் இலட்சிய இந்துவாக இராமனைக் கண்டு பாராட்ட முடியும் ஒரு சிறந்த மகனாக, சகோதரனாக, கணவனாக, அரசனாக, வீரனாக, தோழனாக, இன்னும் பல நிலைகளில் அவன் இலட்சிய ஆண்மகனாக விளங்குகிறான். இன்ப துன்ப அனுபவங்களின் போது சமதரிசனம் கைகூடப் பெற்ற ஒரு ஞானியாக விளங்குகிறான்.

சீதையும் ஓர் இலட்சிய பெண்ணாகவே வாழ்கிறாள். நல்ல மகளாக, மருகியாக வாழ்ந்ததோடு கற்பினுக்கு அணியாகவும் வாழ்கிறாள். பெருந்துன்ப காலத்திலும் அவள் கொண்டிருந்த உறுதி, பெரிய முனிவர்கள் கொண்டிருந்த தவத்தை விட உயர்ந்தது.

## இராமாவதார மகிமை

திருமால் எடுத்த அவதாரங்கள் பத்து. அவற்றுள் காப்பியச் சிறப்புடையவை இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் ஆகும். இந்த இரண்டு அவதாரங்களின் குறிக்கோள் ஒன்றுதான். அதாவது அதர்மத்தை நிலைநாட்டுவதாகும். ஆயினும் அந்த உயர்ந்த குறிக்கோளுக்கு வெற்றி தேடுவதற்குக் கடைப்பிடித்த நடைமுறைகளில் இராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு காணப்படுகிறது. கிருஷ்ணாவதாரத்தில் அதர்மத்தை அழிப்பதென்ற நல்ல கொள்கைக்காக யுத்த தருமத்திற்கு மாறுப்பட்ட முறைகளையெல்லாம் கடைப்பிடிக்கக் காண்கிறோம். இராமவதாரத்தில் கொள்கையைப் போலவே நடைமுறையும் தருமத்திற்கு ஒத்ததாய் இருக்கிறது.

இராமன் ஒழுக்கத்திற் சிறந்தவன். உயர் குணங்கள் நிறைந்தவன். உயிர்கள் அனைத்திடமும் சமமாக அன்பு செலுத்தியவன். பகைவனிடமும் கருணை காட்டிய பண்பாளன். புவியாளும் பொறுப்பை பெரிதாக மதித்தவன். இன்ப துன்பங்களைச் சமமாக எண்ணியவன். இவ்வளவு சிறந்த மகா புருஷனைத் தலைவனாகக் கொண்டதுதான் இராமாயணம்.

இராமாவதாரத்தின் சிறந்த அம்சங்களாக உள்ளவை மூன்று. அவையாவன: பிதுர்வாக்கிய பரிபாலனம், ஏகபத்தினி விரதம், சகோதர வாஞ்சை என்பனவாம்.

## அழகுத் தெய்வம்

கம்பன் என்ற கவிச்சிற்பி இயற்றிய இராமாயணத்தை ஏழு பிரகாரங்களோடு அமைந்த காவியப் பூங்கோயில் என்று கூறலாம். இப்பூங்கோயிலுள் எங்கும் பிரசன்னமாய் விளங்கும் தெய்வம் அழகுத் தெய்வம். சிற்பி இயற்றும் திருக்கோயில்களுள் பிரதிஷ்டை செய்த ஓரிடத்தில் தெய்வம் நின்று விளங்க, சுற்றுமுள்ள மற்றை இடங்களில் எல்லாம் அதன் தெய்வ ஒளி பரந்து தெய்வ மணம் பரவிநிற்கும். ஆனால் நம் பெருந்தகை இயற்றிய இந்தக் காவியப் பூங்கோயிலில் அழகுத் தெய்வம் உலவி வாரா நிற்கும். அதன் கண் உள்ள அழகுத் தெய்வத்திற்கு எத்தனை வண்ணங்கள்! எத்தனை நிறங்கள்! எத்தனைக் கோலங்கள்! எத்தனைத் திருவுருவங்கள்! இத்தெய்வத்தின் குண வைபவங்கள் எல்லாம் இக்காவியத்திற் காணப் படுவது போல் வேறு எங்கு காணமுடியும்?

அழகுத் தெய்வம் இடந்தோறும் நர்த்தனம் செய்யும் இக்காவியப் பூங்கோயிலில் அத்தெய்வத்தின் அந்தராத்மாவாய் வீற்றிற்கும் நாயகனது திருப்பெயர் தானும் 'அழகன்' என்ற பொருளையே உட்கொண்டது. இராமனுடைய ரூப சௌந்தர்யம், குண சௌந்தர்யம், வீர சௌந்தர்யம் ஆகிய இம் மூன்றையும் இப்பகுதியில் காண்போம்.

## தொல் புகழ் அமுது

அரக்கர் பாவமும், அரக்கர் அல்லாதவர் செய்த அறமும்தாம், கைகேயியின் மனந்திரியத் தூண்டின. இரக்கம் இல்லாமல் அவள் இராமன் முடி சூடுவதைத் தடுத்ததனால் அல்லவா இராமனுடைய புகழாகிய அமிர்தத்தை இன்று உலகமெலாம் பருகுகின்றன என்பது கவிக்கூற்று. (மந்தரை சூழ்ச்சி படலம்- 78)

கதைப் போக்கையும், பாகுபாடுகளையும் முதல் நூலிற் கண்டவாறே கம்பர் ஆளுகிறார். சிற்சில இடங்

களில் தமிழர் நாகரிகத்திற் கேற்பக் கதையைத் திருத்திச் சிற்சில பாத்திரங்களை மாற்றியிருக்கிறார். அது காரணமாகக் கம்பரது இராமகாதை புதுக் காவியமாகிறது.

## சூரிய மண்டலம்

கம்பர் கண்ட கனா ஒரே பொருள். அப்பொருள் தான் இராமன். அந்த இராமனைக் காவிய லோகத்தின் மத்திய ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். சூரிய மண்டல ஆதிக்கத்தில் சூரியன் இருக்கும் ஸ்தானத்திற்கு அதை ஒப்பிடலாம். அது தன்னுடைய ஆகர்ஷண சக்தியால் கிரகங்களையெல்லாம் தன்வசமே இழுத்துக் கொள்கிறது. அதனால் கிரகங்கள் எல்லாம் சூரியனைச் சுற்றித் தன் வழியே ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் ஓடுகின்றன. சூரிய வெளிச்சமும் வெப்பமும் இல்லையானால் எந்த ஜீவராசியும் பிழைக்காது. புற்பூண்டு விருட்சங்கள் யாவும் தளிர்க்கா. கம்பர் கவிதைப் பாத்திரங்கள் யாவும் இராமனுடைய சக்திக்கு உள்ளாகின்றன. ஆயினும் அவரவர் சுய தரும நெறியில் நடக்கிறார்கள். எல்லாரும் இராமன் பாலுள்ள அன்பினால் பிணிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் சமரசமுடையவர்கள ஆகிறார்கள். இதுதான் காப்பிய ஒற்றுமையின் மர்மம்.

அப்படியாயின் இராமன் தன்மை யாது? இராமன் உத்தம புருஷன். மானிட இலக்கு எனலாம். ஆயினும் மானிடனே! சுக்ரீவன் முதல் முதலாக இராமனைப் பார்த்ததும் என்ன நினைக்கிறான்?

சிவன், பிரமா முதலிய தேவர்களையெல்லாம் வென்றுவிட்டது. இம்மானிடப் பெருமை தான் என்னே! ஆயினும் நம்மைப் போன்ற மானுடன் தான். அம்மானிடனுக்கு நம்மைப்போல் பசி, தாகம் உண்டு. நம்மைப் போல் காமம், வெகுளி, மயக்கம் உண்டு. இன்பம், துன்பம், கவலை, துக்கம் உண்டு. வனவாச

ஜீவியத்தில் பட்ட துயர்தான் என்ன! சீதையை நினைத்து திருமணத்திற்கு முன்னும் பின்னும் பட்ட அவஸ்தைதான் என்ன! வெகுளிதான் என்ன! சீதையைக் காணாத கோபத்தால் கோதாவரி, அதைச் சார்ந்த குன்றுகள், மான் வருக்கம் இவைகளைச் சுட்டெரிக்கும் படியான சினந்தான் என்ன! இச்சினத்தை ஆற்றுபவன் இளையவன். (நட்பு கோட்படலம் - 19)

## தெய்வத் தன்மை

தேவலோகத்திலும் பூவுலகத்திலும் மற்றும் பல உலகங்களிலும் அவ்வுலகங்களில் உள்ளவர்களுடைய பெரிய உள்ளங்களிலும் ரிக்வேதத்திலும் எப்பொழுதும் உள்ளதாகுமென்று யாவரும் உள்ளத்தில் நினைக்கிற தியானப் பொருளே இராமனாக உருவெடுத்துத் தம் கண்முன் தோன்றுவதால் நினைத்து நினைத்து மகிழ்கிறார் தமிழ் முனிவராகிய அகத்தியர். (அகத்திய படலம் பாடல் எண் - 42)

இராமன், உலகங்கள் யாவையும் திறமையாகப் படைத்துக் காத்து அழிக்கின்ற மூத்தேவர்கள் செய்தவைகளையும் திறமையாய்த் திருத்தி அமைக்க வல்லவன் என்று குல குரு வசிஷ்டர் தீர்க்கதரிசனம் கூறுகிறார். (மந்திரப் படலம்- 37)

## தந்தையும் உடன் பிறந்தோரும்

தந்தை தசரதனுக்கு உயிர் இராமன். விசுவாமித்திரர் வசம் இராமனை ஒப்புவித்ததும் பிரிந்த உயிர், பின் மிதிலையில் சந்தித்த போதுதான், உடலோடு வந்து ஒன்றியது என்கிறார். அவன் காட்டுக்கு ஏகினான் என்று கேள்வியுற்ற போது தசரதன் உயிர் துறந்தான்.

இராமனும் இலக்குவனும் ஒருயிர் போன்றவர்கள். இராமனுக்கு இலக்குவன் பால் உள்ள அன்பு எல்லை

வற்றது. இளையவன் இல்லையானால் இராமனுக்கு எவரும் வேண்டியதில்லை. கீர்த்தி, அறிவு, ஆண்மை, அரசு, கேண்மை, விளைவு, வேதம் இவைகள்கூட வேண்டா.

கைகேயி போட்டி காட்டி விட்ட பரதனின் உயிரும் அன்னதேயாம். மிதிலையில் சந்தித்தபோது தசரதனுக்கு இராமன் எப்படியோ அப்படியேதான் இராமனுக்குப் பரதன். பரதனும் இராமனை, "எந்தையும், எம்பிரானும் எம்முனும்" என்றான். பரதன் சேனை, பரிவாரங்களுடன் சித்திரகூடம் சென்று இராமனை அயோத்திக்கு அழைக்கச் சென்றபோது இலக்குவன் பரதனைச் சந்தேகித்தான். இராமனோ, "நீ நினைத்தது தவறு. பரதன் என்னைக் காண்பதற்காகவே வருகிறான்" என்று இலக்குவனை அமைதிப்படுத்தினான்.

## புதிய சகோதரர்கள்

### குகன்

உடன்பிறந்த சகோதரர்கள் அல்லாமல் இராமன் புதிய சகோதரர்களைச் சேர்த்துக் கொண்டான். குகன் ஒரு வேடன்; கங்கையில் ஓடம் ஓட்டுகிறவன், மீன் பிடிப்பவன். ஆயினும், "அற்றம் நீத்த மனத்தினன்; அன்பினன்; தூயவன்; தாயின் நல்லான்" என்று இராமன் அவனைப் பாராட்டினான். இராமன் வனவாசம் போனபோது மீனும் தேனும் எடுத்துக் கொண்டு பார்க்க வந்தான். இராமன் அவைகளை ஏற்றுக் கொண்டு, அவனை உட்காரச் சொல்லியும், அவன் உட்காராமல் நின்று கொண்டிருந்தான். போய்விட்டு மறுநாள் வரச் சொல்லியும் போகவில்லை. ஊழியம் செய்ய, கூடவே இருக்க வேண்டுமென்று விரும்பினான். தீராக் காதலனாகும் என்று நட்புக்கொண்டு இராமனும் அவனைத் தன்னோடு இருக்கும்படி ஏற்றுக் கொண்டான். கங்கையைக் கடந்த

பின்னரும் தானும் உடன் வருவதாகக் குகன் வற்புறுத்தினான்.

அதற்கு இராமன் அடியிற்கண்டவாறு குகனுக்கு ஆறுதல் கூறி அனுப்பினான். "நீ என்னுடைய உயிர்; இலக்குவன் உனக்குத் தம்பி; சீதை உனக்கு அண்ணி; என்னுடைய ராஜ்யமெல்லாம் உன்னுடையது. உன் தொழிலும் எனக்குச் சொந்தமாகிவிட்டது" (கங்கைப் படலம் -68)

இதுவன்றோ சகோதரத்துவம்! வெறும் அனுதாபம் அல்ல. பிறனும் தானும் ஒன்று என்ற உணர்ச்சியே உண்மையான சகோதரத்துவம். இராமன் குகனைத் தன் உடன் பிறந்தானாகவே ஏற்றுக் கொண்டான்.

### சுக்ரீவன்

சீதையை இராவணன் தூக்கிச் செல்ல இராம லக்குமணர் காடுகளில் எங்கும் தேடி அலைந்தார்கள். சுக்ரீவனைக் கண்டு தங்கள் துயரம் நீக்கிக் கொள்ளக் கருதி வந்ததாகத் தெரிவித்தார்கள். சுக்ரீவன் வாலியால் தனக்கு நேரிட்ட ஆபத்தைத் தெரிவித்து அடைக்கலம் கேட்டான்.

சுக்ரீவனை இன்னுயிர் துணைவன் என்றும், அவன் கிளையைத் தன் சுற்றமென்றும், அவன் இன்ப துன்பங் களையெல்லாம் தன்னுடையன என்றும் சொல்லுவ தெல்லாம் சரியே. ஆனால், "மண்ணில் உன்னைச் செற்றவர் சென்றார்" என்றும், "தீயரே எனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்" என்றும் கூறுவது ஆட்சேபத்திற்கு இடமாகிறது. ஒருவாறு ஆபத் தாகவே முடிந்தது. வர்லி வதம் ஒரு கால் அவசியமான தீமையென்று கொள்ளலாம். ஆனால் அவனோடு செய்த ப்போர் முறை நேரான வழியல்ல. ஒரு கால் இராமனே அதை உணர்ந்ததுபோல் கம்பரும் காட்டுகிறார். (அரசியற் படலம்-43.)

வாலியை மறைந்து நின்று கொன்றது வில் அறம் துறந்ததாயிற்று. அத்தீமையைப் போக்க நோன்பு செய்வது அவசியமாய் தோன்றிற்றுப் போலும். இது எவ்வாறு இருப்பினும் பகைமையை மேற்கொண்ட வாலி மனம் திரும்பச் செய்தது கவனிக்கற்பாலது. சுக்ரீவன் பாலுள்ள கோபமெல்லாம் ஆறி, அவனுக்காக இராம னிடம் பரிந்து பேசவும் ஆரம்பித்து விட்டான்.

வாலிக்குத் தன் தம்பியின் பலவீனம் தெரியும். தம்பி மது பானத்தால் மாறுபட்டபோதும், இராமன் அவன் பால் பொறுமை காட்ட வேண்டும்; தன் மேற் போட்ட பாணத்தை அவன் மேல் போட்டு விடக்கூடாது. இது மட்டுமா? அண்ணனைக் கொன்று தான் வாழ்ந்தா னென்று தன் தம்பியை, இராமன் தம்பியர் இகழக் கூடாது; என்று கேட்டுக் கொண்டான்.

சற்றுமுன்னே சுக்ரீவன் உயிரை வாங்க நினைத்த வாலிக்கு இப்போது தம்பியின் உயிரைப் பற்றி மட்டுமல்ல, மானத்தைப் பற்றியும்கூட என்ன என்ன கவலைகள் எல்லாம் வந்து விட்டன! இதுவன்றோ உண்மையான சகோதரத்துவம்! வாலி மகன் அங்கதனும் தன் தந்தையைக் கொல்லக் காரணமாயிருந்த சிற்றப் பனோடு உறவாடுகின்றான்.

## விபீஷணன்

விபீஷணன் இராவணனுடைய தம்பி. அவனுக்கு, சீதையைக் கவர்ந்துவந்த தன் அண்ணனுடைய நடத்தை பிடிக்கவில்லை. சீதையை விட்டு விடுவதே வெற்றியாகும் என்றெல்லாம் அண்ணனோடு வாதாடினான். அண்ணன் கேட்கும் வழியாக இல்லை. ஆகவே விபீஷணன் இராமனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். இராம னுடைய ஆலோசனையாருள் அனுமன் நீங்கலாக மற்ற யாவரும் விபீஷணனைச் சேர்க்கலாகதென்று வாதாடி னார்கள். ஆனால் இராமன் ஏற்றுக் கொண்டான்.

அடைக்கலம் மட்டுமல்ல சகோதரனாகவே ஏற்றுக் கொண்டான். (வீடணன் அடைக்கலப் படலம்-146)

விபீஷணனுக்கும் தசரதன் தந்தை. மக்கட்பேறு இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த தசரதன் மக்களைப் பெற்று, கானகத்தில் இழந்தான். ஆனால் கானகத்திற்குப் போனது யோகமாகி விட்டது. நான்கு புதல்வர்களை யுடைய அவன் ஏழு புதல்வர்களை அடைந்தான். குகனொடு நால்வர் ஐவராயினர். சுக்ரீவனோடு அறுவராயினர். இப்போது தன் மனையாளைத் தூக்கிச் சென்ற அரக்கன் தம்பியோடு எழுவராயினர் என்று இராமன் கூறும் திறம் காண்மின்.

## கும்பகர்ணன்

இராவணன் தம்பியர்களுள் கும்பகர்ணன் வீராதி வீரன்; மகா யோக்கியன்; சிறந்த அறிவாளி. இலங்கையை அனுமன் சுட்டெரித்து விட்டானென்று, அவமானத்தால் புழுங்கிக் கொண்டிருந்த அண்ணனைப் பார்த்து, "பிறனில் விழைவானுக்கு மானமேது?" என்று இடித் துரைத்தான்.

இலங்கையில், 'வானமும் வையமும் வளர்ந்த வான் புகழ்' சீதை பொருட்டால் போகிறதே என்று கவலைப் பட்டான். என்றாலும் அண்ணன் பால் உள்ள அபிமானத் தால் இராமனோடு சண்டைக்கு எழுந்தான். கும்ப கர்ணனின் உண்மையான மனப்பான்மையைத் தெரிந்து, இராமன் விபீஷணனை அனுப்பி அழைத்துவரச் செய் தான். கும்பகர்ணன் இசையவில்லை. தன்னை வளர்த்த அண்ணனுக்காகத் தன் உயிரையும் கொடுக்க வேண்டும். விபீஷணன் இராமனோடு சேர்ந்தது நலம். அது விபீஷணனுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் நலம். இவ்வாறு சொல்லி விபீஷணனை அனுப்பிவிட்டு, இராமனோடு போர் புரிந்தான். தோல்வியடைந்தான்.

மரணம் சமீபித்தது; விபீஷணனைப் பற்றிய கவலை மேலிட்டது. இராமனிடம் தம்பிக்காக தானும் அடைக் கலம் வேண்டினான். இராவணன் உடன் பிறப்பு என்ற பயன் ஓராதவன். விபீஷணனைக் காணில் கொல்வான். ஆதலால் தம்பியைக் காப்பாற்றுமாறு வேண்டினான்.

## இராமனின் அன்பு

இவ்வாறாக, கம்பரது, காவிய லோகத்தில் இராமன் அன்பெனும் ஆகர்ஷண சக்தியால் யாவரையும் இழுத்துக் கொண்டான். அச்சக்திக்குள் அகப்படாதவர்கள் பரகதி யடைகிறார்கள். இருக்கிறவாகள் யாவரும் சமரசமாய் இராமனுக்குள் ஒன்று படுகிறார்கள். இவ்வுண்மையை அடிப்படையாய்க் கொண்டு காவியம் அமைந்திருக்கிறது. இராமன் நேராகச் சம்பந்தப்படாத இடத்திலும் கூட இராமனுடைய ஒளியே வேலை செய்வதாகக் கம்பர் வர்ணித்துள்ளார்.

சுந்தர காண்டம் முழுவதிலும் இராமனுடைய செய்கை இல்லை. ஆனால் சீதை நினைப்பதெல்லாம் இராமனைத்தான். அனுமனது வீரச் செயல்களுக்கெல் லாம் காரணம் உள்ளுறையும் அழகனே. ஆகவே கதா நாயகனுடைய சிறப்பு எக்காவியத்திலும் அமையாத வண்ணம் அமைந்திருக்கிறது.

## பரதன்

இதற்குச் சில ஆட்சேபங்கள் எழலாம். பரதனைக் குகன், ''ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ?'' என்றும், கோசலா தேவியார், ''எண்ணில் கோடி இராமர் நிகராவரோ?'' என்றும் சொல்லியிருப்பது கதாநாயகன் சிறப்புக்கு முரண்பாடாகத் தோன்றலாம். பரதனுடைய தியாகம், இராமனுடைய சிறப்புக்கு அடிப்படையாக இருந்த போதிலும், பரதன் இராமனுக்கு உட்பட்டவன்.

பரதனுடைய தியாகத்திற்கெல்லாம் காரணம் இராமன் பாலுள்ள அன்பே. பதினான்கு ஆண்டுகள் கழிந்து இராமன் அயோத்திக்கு வருகிறான் என்று கேள்விப்பட்ட வுடனே பரதன் நிலைமை என்ன?

வேதியர் தமைத்தொழும் வேந்தரைத் தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் றுணர்குறாது இருக்கும் நிற்குமால்
காதலென் றதுவுமோர் கள்ளின் தோற்றமே

—மீட்சிப் படலம்- 253

## அனுமன்

இராமன் அனுமனை, "என்றுமுள்ள வேதங்களாலும் குற்றமற்ற ஞானத்தாலும் அறியப்படாத வார்த்தைதான் குரங்கு உருவாகியிருக்கிறது. அவன் உலகுக்கெல்லாம் ஆணி. வேதக்கடலின் காட்சி" என்று புகழ்ந்துள்ளான். ஆயினும் அவனுக்குள் உறைந்து வேலை செய்வது இராமனேயாம். (அனுமப் படலம்- 36)

## முடிவுரை

கம்பர் தமிழர் நாகரிகத்தையும், ஆரிய நாகரிகத்தை யும் சமரசப் படுத்துகிறார். தேவர்களை மானிடம் வெல்லும் முறையாக அவர் கண்டது அன்பும், உயிரையும் பிறருக்கு ஈயும் ஊழியமும் ஆம்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழும் தேவர்கள் ஆகுவார்.

—அகத்தியப் படலம்- 21

# 2. சீதா பிராட்டி

## வாழ்க்கைத் துணை

பூமியில் சிறந்த அறத்தை நிலைநாட்ட இராமன் தோன்றினான் என்பர். அங்ஙனம் அறத்தை நிலை நாட்டுவதற்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைதல் இன்றி யமையாததொன்று. அவ்வறநெறியில் இராமன் சென்று வெற்றி பெறப் பெருந்துணை செய்தது சீதையின் ஆற்றலேயாகும். பாற்கடலினின்று திருவும் சீதா தேவி யாக அவதாரம் செய்து இராமனை அடைந்தது அவனை அறவழியில் நிறுத்துதற்கே என்கிறார் கம்பர். (நகர் நீங்கு படலம்- 223).

சிறையிருந்த செல்வியின் ஏற்றம் கூறுவது ஸ்ரீராமா யணம் என ஆன்றோர் கூறுகின்றனர். எனவே இராமாயணம் சீதையின் பெருமையை விளக்குகிறது என்று ஏற்படுகின்றது.

## குணமும் அழகும்

சீதை இராமது தகுதிக்கு ஒத்த குணமும் அழகும் வாய்ந்து விளங்கினாள். 'இவள் பிறந்தபின் மற்றையோர் அழகுகள் பொலி விழந்தன. நற்குணங்கள் எல்லாம் இவளை நாடிவந்து அடைந்துள்ளன. அழகோ இவளைத் தவஞ்செய்து பெற்றது' என்று சதானந்த முனிவர் சீதையின் குணநலத்தை வருணிக்கின்றார்.

இவளது அழகின் ஏற்றத்தையும் குணத்தின் மேன்மை யையும் வேறு சில இடத்தும் கம்பர் நமக்குக் காட்டு

கின்றார். ஆரண்யத்தில் சூர்ப்பனகை சீதையைக் கண்ட காலத்து, 'திருமகள் தாமரையினின்றும் நீங்கி இங்கே வந்து விட்டாளோ' என்று திகைத்தாள். சீதையின் சௌந்தர்யம் சூர்ப்பனகையைத் திகைக்கச் செய்து விட்டது.

இலங்கையில் அசோக வனத்திடை சீதையைக் கண்ட அனுமன் அவளது இற்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்க நலனையும் பொறுமை குணத்தையும் கண்டு அளவிலா ஆனந்த முற்றான். இராமனிடம், தான் சீதையைக் கண்டு வந்த செய்தியைத் தெரிவிக்குமிடத்து அவளது குணநலத்தையே தான் கண்டதாகப் பன்னி உரைக்கின்றான். (திருவடி தொழுத படலம் - 62) அனுமன் காட்சியில் பிராட்டி குணக்குன்றாய் இலங்குகின்றாள்.

## தெய்வீகக் காதல்

இங்ஙனம் அழகும் குணமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற சீதை குணமும் அழகும் நிரம்பிய இராகவனை அடைந்தது ஒரு தெய்வீகக் காதலேயாகும். இராமனோ ஆடவரும் விரும்பும் படியான அழகு படைத்திருந்தான். யாவரும் விரும்பும் படியான குணநலம் வாய்க்கப் பெற்றுத் திகழ்ந்தான். இத்தகைய நம்பியும் நங்கையும் எல்லாவகையாலும் ஒத்திருந்தனர். இவ்விருவரது அழகையும் குணத்தையும் கண்ட மிதிலை நகர மக்கள் போற்றினர். (கார்முகப் படலம் - 43)

## காதல் வாழ்க்கை

சீதையும் இராமனும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டனர். 'இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினார்' என்று கம்பர் கூறியவாறு இருவரும உளத்தால் ஒருவராயினர். தெய்வீகக் காதலால் இராமன் சிவனது வில்லினை ஒடித்துச் சீதையை மணந்தான். சீதையும் நாயகன் சொல்வழி நின்று இல்லறம் நடத்தினாள்.

## விளையாட்டு

குண நலம் வாய்க்கப் பெற்ற நங்கை பெண்களுக்குரிய இயற்கையான விளையாட்டுகளிலும் பெரும் பற்றுள்ள வளாய் இருந்தாள். கிளி, பூவை முதலியவற்றை மிகவும் போற்றி வளர்த்தாள். இத்தகைய விளையாட்டில் மிகப் பிரியம் வைத்த தன்மையினால்தான் ஆரணியத்தில் சுமந் திரனிடம் கிளியையும் பூவையையும் போற்றுமாறு தன் தங்கையர்க்குச் சொல்லிவிட்டாள். மாயமானக மாரீசன் வந்தபோது அந்த மானைப் பிடித்துத் தரவேண்டும் என்று வற்புறுத்தினாள். இதனைப் பிடித்துத் தருவாய் ஆயின் என்னுடைய துன்பம் நீங்குவதற்கு ஒரு வழியாகும் என்று வேண்டினாள். மானையும் விரைவில் பிடித்துத் தர வேண்டும் என்றாள். இச்சொற்கள் பெண்களுக்கு இயல்பான குணத்தால் ஏற்பட்டன அன்றி வேறன்று.

## கணவனே தெய்வம்

'கற்புடைய மங்கையர்க்குக் கணவனே தெய்வம்' என்ற உயர்ந்த கொள்கையைச் சீதை மனத்துட் கொண் டவள். இன்பத்திலும் துன்பத்திலும் கணவனைப் பிரி யாது அவற்றில் தானும் பங்கு கொள்ள வேண்டும் என்பதைச் சீதை தன்னுடைய வாழ்க்கையிலேயே காட்டி யுள்ளாள். இராமன் தன் பெற்றோர் ஏவலால் தம்பி பரதனுக்கு அரசுரிமையை ஈந்து தான் கானகம் புக ஒருப்பட்டான். ''தாயும் தந்தையும் இட்ட ஆணையால் அரசைத் துறந்து கானகம் சென்று மீள்வேன்; நீ வருந்தாதே,'' என்று சீதையை நோக்கி மொழிந்தான். 'நீ வருந்தலை' என்ற நாயகனுடைய சொல் சீதையின் செவியையே சுட்டு விட்டது.

''வெம்மையான கானகத்தில் உன் பாதம் நடந்து செல்லப் பெறாது; நீ இங்கிருத்தலே தக்கது'' என்று இராமன் சொன்னபோது நங்கை, ''உம்மைப் பிரிந்திருத்

வினும் வெம்மையான காடு ஒன்று உண்டோ? உம்பிரிவை விடவும் அந்தக் காடு சுடுமோ?'' என்று வினவினாள்.

இங்ஙனம் சீதை உரைத்து வீட்டினுள் சென்று இராமனது கட்டளையின்றியே தன் கணவனைப் போலத் தானும் மரவுரி அணிந்து கணவன் பக்கம் வந்து நின்றாள். சீதையின் அசையாத மனத்தைக் கண்ட இராமன் அவளையும் உடனழைத்துச் செல்ல ஒருப்பட்டான். ஆரணிய வாழ்க்கையில் தன் கணவனுக்குத் தொண்டு செய்து அவனை மகிழ்வித்தாள். அரண்மனையிலேயே உயரிய வாழ்க்கை வாழ்ந்து வந்த சீதை கணவனது துன்ப காலத்திலும் பங்கு கொண்டு மங்கையர்க்கு ஒரு கட்டளைக்கல் எனத் திகழ்ந்தாள்.

## கருணை உள்ளம்

கருணா மூர்த்தியான இராகவனுக்கும் மேலான கருணை படைத்தவளாயுள்ளாள் சீதை. இராம இராவண யுத்தத்தின் பின் சீதையைச் சிறையினின்றும் அழைத்துச் சென்ற அனுமன் பிராட்டியிடம், ''அன்னையே, உனக்கு இவ்வரக்கியர் எவ்வளவு துன்பம் இழைத்தனர். திரிசடை ஒழிந்த அரக்கியரை என் வள்ளுகிரால் பிளப்பேன். ஆணை தந்தருள்க'' என்று வேண்டினான். அரக்கியர் அனைவரும் அஞ்சி அன்னை பாதமே சரணமென்றனர். அப்போது அன்னை மாருதியை நோக்கி, ''இவர் எனக்குத் தீமை செய்தார் என்று எண்ணாதே. இராவணன் ஏவலை யன்றோ இவர் செய்தனர்? இவ்வரக்கியர்க்குத் துன்பம் செய்யாதே'' என்றாள். தனக்குத் துன்பம் இழைத்தார்க்கும் இன்பம் செய்யும் அருள் நிறைந்த உள்ளம் சீதையிடம் இருந்ததென்பது நமக்கு இங்கே புலனாகின்றது.

## வீர உள்ளம்

அருள் பொதிந்த உள்ளம் படைத்த நங்கை, தன்னை எதிர்த்து வந்த பகையைக் கண்டு அஞ்சி ஒடுங்காது

எதிர்த்து நின்று தாக்கவல்ல வீர உள்ளமும் படைத்திருந் தாள். மாயத் துறவு வேடங் கொண்ட இராவணன் இலங்கை நகரில் சில பகல் உறைய விரும்பினேன் என் றான். இராவணன் முதலிய தீய அரக்கர் பால் மாதவ ராகிய நீர் உறைதற்கு ஏது என்ன என்று நங்கை வினவி னாள். ''அரக்கரே எமக்குத் துணைவர்'' என்று மாய வேடம் பூண்ட இராவணன் அவரை உயர்த்திக் கூறிய போது சீதை, ''அறந்தரு வள்ளல் இராமன் இக்கான கத்தில் தவஞ்செய்யும் நாட்களுக்குள் அரக்கர் அனைவரும் முடிவர், உலகத்திற்கு இடர் இல்லை'' என்று மொழிந் தாள். அப்போது இராவணன் கோபம் பொங்க, ''மானிடர் அரக்கரை வெல்வரோ?'' என்றான். அதைக் கேட்ட சீதை ''நீர் சில பகல் உறைந்ததாகக் கூறிய அவ்விலங்கை அரக்கரும் நாளையே ஒழிவதைக் காண்பீர்'' என்றாள்.

பின், இராவணன் தன் இயற்கை உருவங்கொண்டு சீதைபால் தகாத மொழி பல பகர்ந்தான். உணர்ந்த சீதை இராவணன் வஞ்சத்தை நினைந்து மனங்குலைந் தாள். ஆனால் அஞ்சினாள் இலள். அரக்கனை எதிர்த்து ''இத்தகாத சொல்லைச் சொன்ன நீ இராகவன் கணை விரவுமுன் ஓடு'' என்று சீறி மொழிந்தாள்.

நிலத்தொடு இராவணன் அகழ்ந்து தன்னைத் தேர் மீது எடுத்துச் செல்லும் போதும் அவனை எதிர்த்து நின்று பேசினாள். ''வீரன் ஆனால் இராகவன் முன்னிலையில் எதிர்த்து நின்று யுத்தம் செய்யவேண்டும். அரக்கரைக் குலம் நாசம் செய்யும் வள்ளலின் பெருமையைக் கேட்டே நீ இந்த வஞ்சம் செய்தாய். இது உன் அச்சத்தையல்லவா காட்டுகிறது? வீரன் என்றால் இராமன் இருக்கும்போது அல்லவா வந்திருக்க வேண்டும்?'' என்று எதிர்த்து மொழிந்தாள். பகையை எதிர்த்து நின்று தாக்கவல்ல ஆற்றல் படைத்த அவளது வீரநெஞ்சம் நமக்குப் புலனா கின்றது.

பின் இராவணன் அசோகவனத்தில் அன்னை சீதையைச் சிறை வைத்தான். பல இரக்கமற்ற அரக்கியரைக் காவல் வைத்து அவளுக்கு மிகுந்த துன்பத்தை உண்டாக்கினான். சிறையிருந்த சீதையிடம் இராவணன் தன் குறையைக்கூறி அவள் முன் வணங்கி வேண்டவும் செய்தான். அவனது தீய சொற்களைக்கேட்ட சீதை, நீ குல மங்கையர்க்கு அடாத சொற்களைச் சொன்னாய்'' என்று கனன்று அவனைப் பலவாறு நிந்தித்தாள். சீதை கூறிய நிந்தனை மொழி ஒவ்வொன்றும் அவளது அசையாத வீர உள்ளத்தை நமக்குக் காட்டுகின்றது.

## தன்னிலையில் தாழாமை

பேரிடர் வந்த காலத்தும் தன்னிலையில் தாழாதிருத்தலே மிகச்சிறந்த செய்கை. சீதைக்கு வந்த பேரிடர்களோ பலப் பல. இராவணன் சீதையை அச்சுறுத்த எண்ணி அயோத்தியிலுள்ள பரதன் முதலியவர்களையும் மிதிலை மன்னனாகிய ஜனகனையும் கொன்று வஞ்சினம் தீர்ப்பதாக அவள்முன் கூறிச் சென்றான். அன்றியும் மாயையால் ஓர் அரக்கனை ஜனகனைப் போல மாற்றி, ஜனகனைச் சிறைப்பிடித்து, அவனைப் பாசத்தாற் கட்டி வந்ததாகச் சொல்லி அவள் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தினான். தன் தந்தைக்கு நேர்ந்த பேரிடர் கண்டு சீதை மனம் வருந்தினாள்.

மாயா ஜனகன் சீதையை நோக்கி இராவணன் பால் விருப்பம் கொள்ளுமாறு வேண்டினான். சீதை தந்தையை நோக்கி, ''முறை கெட வாழ்தல் தகாது; மானமே பெரிது'' எனத் தெருட்டி அவனை இகழ்ந்துரைத்தாள். இதன் மூலம் பிராட்டியின் உள்ளம் நன்கு விளங்குகின்றது.

மேலும் இராவணன் ஜனகனைக் கொன்று உயிர் குடிப்பேன் என்று மிரட்டினான். அப்போதும் சீதை தன்னிலையினின்று தாழ்ந்தாள் இலள். ஜனகனை

மட்டும் அல்ல; என்னை வேண்டுமானாலும் கொல். நான் உயிர் நீங்கிக் கெடாப் புகழே எய்துவேன். யார் இறந்தாலும் இருந்தாலும் நீயும் உன் சுற்றமும் இராமன் அம்பிற்குப் பிழைக்க மாட்டீர்கள்'' என்று கூறினாள். இதன் மூலம் பெருந்துன்பத்திலும் அசையாத சீதையின் உள்ளம் புலனாதல் காணலாம்.

## மனவுறுதி

இராமன் முதலியோர் பிரமாஸ்த்திரத்தால் மயங்கிக் கிடந்தனர். ''இராமன் உள்ளிட்ட அனைவரும் மாண்டார்; நாம் வென்றோம்'' என்று இராவணன் மனங்களித்தான். சீதையை அழைத்துச் சென்று இராமன் முதலியோர் மயங்கிக் கிடந்த களத்தைக் காட்டுமாறு அரக்கியர்க்கு இராவணன் பணித்தான். களத்திலே மயங்கிக் கிடந்த நாயகனையும் மற்றையோரையும் கண்ட சீதை அனைவரும் இறந்தார் என்று எண்ணி அழுது அரற்றினாள். தனது விதியை நினைத்து நொந்தாள். தனது நாயகன் மேல் விழுந்து உயிர் துறக்கத் துணிந் தாள். இது அவளது அசையாத உள்ளத்தையே நமக்குத் தெளிவுறுத்துகின்றது.

## கணவர் புகழைக் காத்தல்

எத்தகைய துன்பம் வந்த போதிலும் தன் நிலையில் தாழ்தல் தகாது என்ற உயரிய தன்மையைச் சீதை உலகத் திற்குக் காட்டினாள். இதுபோன்ற மங்கையர் தம் கணவரது புகழ் கெடவரும் செயல்களைச் செய்தல் கூடாது என்பதும் சீதையின் சரித்திரப் பகுதியில் காணக் கிடக்கிறது. கணவனது புகழை விரும்பிய பெண்டிரை அடையாத ஆடவர் உலகத்தில் தலை நிமிர்ந்து நடக்க இயலாதென்கிறார் வள்ளுவர்.

> புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை. — திருக்குறள் 59

என்பது வள்ளுவர் வாக்கு.

அசோக வனத்தில் பிராட்டியைக் கண்டு செய்தி உரைத்த அனுமன் தன்னுடைய தோளில் சீதா தேவியை ஏற்றி இராமனிடத்திற்குக் கொண்டு செல்வதாகச் சொல்லி பிராட்டியைத் தோளின் மேல் ஏறுக என்று வேண்டினான். அப்போது பிராட்டி அனுமனது மனம் வருந்தாவகை கூறி, இது இராமன் புகழுக்கு மாசுண்டாகும் என்று மறுமொழி பகர்ந்தாள். இது பிராட்டியின் மனநிலையைத் தெள்ளத் தெளிய காட்டுகின்றது.

இராம இராவண யுத்தம் முடிந்த பின் இராகவன் சீதையைச் சிறையினின்று அழைத்துவர அனுமனை ஏவிப் பின் விபீஷணனிடமும் தேவியைச் சீரோடும் அழைத்து வருக என்றான். விபீஷணன் அன்னை சீதையை வணங்கி "அன்னையே, வருத்தம் நீங்கிக் கோலம் பூண்டு இராமனிடத்திற்கு எழுந்தருள்க" என்று வேண்டினான். அது கேட்ட அன்னை, 'கோலங் கோடல் விழுமியது அன்று' என மறுத்து உரைத்தாள். விபீஷணன் இராமன் பணியின் குறிப்பு இது என்று சொன்ன பின்புதான் அன்னை கோலம் பூணுதற்கு ஒருப்பட்டாள். களத்தில் இராமனைச் சென்று கண்டாள்.

## பெருஞ் சோதனை

இங்கே ஒரு பெருஞ் சோதனை அன்னைக்கு ஏற்பட்டது. இராகவன் அன்னை பால் சீற்றங் கொண்டு பலப்பல மொழிந்தான். "உன்னை மீட்பதற்கல்ல நான் கடல் கடந்து வந்தது; என் பிழையை மீட்பதற்கே வந்தேன்; பெண்மை, பெருமை, கற்பு முதலியன யாவும் நீ தோன்றியதால் மாய்ந்து ஒழிந்தன. பழிவரின் தோகைமார் உயிரொடு துடைப்பர். நீ இன்னும் உயிர் தாங்கி நிற்பது என்ன?" என்று சீறினான். தேவர்களும் மற்றவர்களும் இராமனது கோபங்கண்டு திகைத்தார்கள். சீதா பிராட்டி வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல வருந்தினாள்.

"என் குற்றமற்ற தவத்தை எங்ஙனம் கூறிக் காட்டுவேன்! இறத்தலே தக்கது" என்று துணிந்து கூறினாள். இராமன் பணியால் பிராட்டி தீயில் மூழ்கி எழுந்தாள். சீதையின் கற்புத் தீக்கு, ஆற்றாது தீயானது தீய்ந்தது. அக்கினி தேவனே இராமனிடம் வந்து இதைக் கூறினான். (மீட்சி படலம்- 91)

தேவர்களும் இராமனது சீற்றத்தைத் தணித்தனர். சீதை தன் மாசிலாக் கற்பை உலகத்தாருக்குக் காட்டினாள். இங்ஙனம் பொற்பும் கற்பும் பொருந்தி மாசற்ற வாழ்க்கை வாழ்ந்து மங்கையர்க்குத் திலகம் போன்று சீதை விளங்கினாள் என்று கம்பர் புகழ்ந்து பாடியுள்ளார். (மீட்சி படலம்- 60)

பிராட்டி கற்பினுக்கு அரசியாய் விளங்கினாள். பெண்மையைக் காத்தாள். அழகினுக்கு அழகு செய்தாள். அருள் நிறை செல்வியாய்த் தருமம் தாங்கினாள். புகழின் வாழ்க்கை வாழ்ந்தாள். இத்தகைய ஓர் இலட்சியப் பெண்ணாகக் கம்பனது கதாநாயகி நமக்குக் காட்சி தருகின்றாள். சீதா பிராட்டியின் வாழ்க்கை மங்கையர்க்கு ஓர் எடுத்துக்காட்டு எனக் கூறவும் வேண்டுமோ?

# 3. இலக்குவன்

இராமனின் தம்பியர் மூவர். அவருள் மிக்கோன் இலக்குவன். வில்லாளர் பலருள் ஒருவன் இலக்குவன். ஆண்மையும் அடக்கமும் அடிமைத்தனமும் உடையவன். தியாகமும் திட்சண்யமும் உடைய திறலோன். தனக்கென வாழாது தமையனுக்காக வாழ்ந்தவன். உண்ணாமல் உறங்காமல் அண்ணனுக்காக வாழ்ந்தவன். தொண்டே பெரிதெனக் கருதிய தூயோன். தியாகத்தின் கொடிமுடி இலக்குவன்.

குறிப்பு :—வனவாச காலத்தில் இலக்குவன் தூங்காமலே இருந்தான் என்பதுபற்றி வால்மீகி இராமாயணத்தில் குறிப்பு இல்லை என்று கூறுகிறார்கள்.

## பண்பு நலன்கள்

இராமனும் இலக்குவனும் இளமை முதலே ஒன்றி வாழ்கின்றனர். திருமாலின் பள்ளியாகிய ஆதிசேடனே இலக்குவன் என்பது வைணவ மரபு. வைகுண்டத்தில் பிரியாமல் ஒன்றி வாழ்ந்தது போல் இங்கும் வாழ்கின்றனர். அரச வாழ்வைத் துறந்த இராமன் சீதையுடன் கானகம் சென்றபோது இலக்குவனும் உடன் சென்றான். அப்போது அவனுடைய தாயாகிய சுமித்திரை இலக்குவனை அழைத்து, ''இலக்குவா, போய்வா. ஆனால் தம்பி என்னும் படிக்கன்று; அடியாரைப் போல ஏவல் செய்'' என்று கூறி, இறுதியில், 'இராமன் நாடு திரும்பினால் நீயும் வா; இன்றேல் அவனுக்கு முன்னம் முடி' என்று ஆசி கூறி, அனுப்பினாள். இத்தாய்க் குரலையே தன் கானக

வாழ்க்கையின் தாரக மந்திரமாகக் கடைப்பிடித்தான் இலக்குவன். இராமனின் தம்பி என்பதை மறந்து அக்கரிய செம்மலின் அடிமையாகவே தன்னைக் கருதி வாழ்ந்தான்.

காளிந்தி யாற்றினைக் கடப்பதற்கு அன்புடன் புணை செய்து கொடுத்தான். பஞ்சவடியில் இராமனும் சீதையும் தங்குவதற்குப் பண்புடன் பர்ணசாலை அமைத்தான். கண்ணுள் இமையென அவ்விருவரையும் காவல் காத்தான். கல்லும் முள்ளும் நிறைந்த கானக வாழ்வில் இவ்விருவரும் உண்ணக் காயும், கனியும், கிழங்கும் தேடிக் கொணர்ந்தான். சீதையை மீட்க அவன் பல துன்பங்களை அடைந்தான். இவைகளையெல்லாம் நோக்கும் போது 'அடியாரைப் போல் ஏவல் செய்' என்ற தாயின் வாக்கை எவ்வாறு இலக்குவன் கடைப்பிடித்தான் என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

இராமனிடம் பேசும் போதும், பழகும் போதும் தன்னை அடிமையாகவே இலக்குவன் கருதினான். அயோமுகி என்னும் அரக்கி காமம் காரணமாக இலக்குவனையே காமன் என்று கருதி எடுத்துச் சென்றாள். தம்பியைக் காணாது கலங்கினான் இராமன். அச்சமயம் அயோமுகியை வென்று திரும்பினான் இலக்குவன். இராமனின் துன்பத்தைப் போக்கினான். நான் வந்து விட்டேன் என்று சொல்லாமல் 'அடியனேன் வந்தனன்' என்று சொன்னது நோக்கத் தக்கது.

இலங்கையில் போர் தொடங்கியது. இந்திரஜித்தும் இலக்குவனும் சந்தித்தனர். வில்லில் விளையாடுமுன் இருவரும் சொல்லில் விளையாடினர். அப்போது இலக்குவன் வஞ்சினம் கூறினான். 'இராமனுக்கு நான் அடிமையென்றால் என் சரம் உன் தலையைக் கொய்யட்டும். என் சரம் உன் தலையைக் கொய்தால் தான் எனது அடிமை வாழ்வு புகழுடைத்தாகும்' என்று பேசினான். அது மட்டுமன்று.

இராமனுக்கு மட்டும அடிமையாக வாழவில்லை, இலக்குவன். அத்திருமகனின் உணர்வோடு உணர்வாய், உள்ளத்தோடு உள்ளமாய் ஒன்றி வாழ்ந்த சீதைக்கும் அடிமையாகவே வாழ்ந்தான். மாயமான், 'இராமனுக்கு அபாயம்' என விளிக்க, சீதை மயங்க, இலக்குவன் திகைக்க, அந்நிலையில் அண்ணலுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சிய சீதை சீறிச் சினக்க முதலில் மறுத்த இலக்குவன் பின்னர் இணங்கி, இராமன் இருக்கு மிடம் தேடிச் சென்றான்.

இங்ஙனம் இராமனுக்கு அடிமையாகத் தன் கானக வாழ்வைக் கழித்த பெருமை இலக்குவனுக்கு உண்டு. என்னதான் 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என நெஞ்சுகந்து புகழ்ந்தாலும், 'தம்பி, தம்பி' என்று வாயார அழைத்தாலும், 'ஆருயிர்', 'தெவ்வர் தொழும் வீரன்', 'பேரா இடர் வந்தன போக்க வல்லாய்' என்றெல்லாம் பேசினாலும், இலக்குவன் தன்னை அடிமையாகவே கருதி, இறுதிவரை வாழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் அடிமையாய் வாழ்ந்த இலக்குவன், இராமனைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பையும் எடுத்துக் கொண்டான். தன்னைத் தியாகம் செய்தே அவனைப் பாதுகாத்தான். தூங்காமல் பாதுகாத்த இலக்குவனின் தூய அன்பு குகனின் உள்ளத்தை ஈர்த்தது. அந்த அன்பு உள்ளத்தில் நெஞ்சைப் பறிகொடுத்தான். அண்ணனைக் காண வந்த பரதனிடம் இராமனும் சீதை யும் தங்கிய இடத்தை விளக்கும் போது குகனுக்கு இலக்குவனின் அஞ்சா நிலையே நெஞ்சில் தோன்றுகிறது.

இராமனும் சீதையும் தூங்க, இலக்குவன் வில்லை ஊன்றிய கையோடும், வெய்துயிர்ப்போடும் நின்ற காட்சியைப் பரதனுக்கு எடுத்துக் கூறினான். இலக்கு வனின் இந்நிலையினைக் கானகத் தலைவன் குகன் உணர்ந்ததைப் போன்று இராமனும் அறிவானா என்ற கேள்வி நம் உள்ளத்தே தோன்றுகின்றது. நன்றாக

அறிவான். அதனாலன்றோ விடணனுக்கு முடிசூட்டும் போது "துஞ்சலில் நயனந்துறைய சூட்டுதி மகுடம்" என அன்புக் கட்டளை இடுகின்றான்.

உறக்கத்திற்கும் உணவிற்கும் மிகுந்த உறவுண்டு. 'உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு' என்பது இந்நாட்டின் நெடுமொழி. இலக்குவனும் இராமனுக்குத் தொண்டன் தானே! உண்டால் தன்னையும் உறக்கம் கவ்விக் கொள்ளும் என்று கருதி இலக்குவன் உண்பதையே விட்டு விட்டான். இராமனுக்கு அடிமையாக வாழ வேண்டி உறங்காது காவல் காத்தான் உறக்கத்தைப் போக்க உணவைத் துறந்தான். பதினான்கு ஆண்டுகள் இவ்வாறு உறக்கத்தையும் உணவையும் துறந்து வாழும் நிலையினை இராமன் உணர்ந்திருந்தான்.

இந்திரஜித்துவின் பிரம்மாஸ்திரத்தால் மயங்கிக் கிடந்த இளவலைப் பார்த்து இராமன கதறியழுதது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு உண்ணாது உறங்காது தன்னலம் துறந்து வாழ்ந்தவன் குறிப்புணரும் ஆற்றலும் சிந்திக்கும் திறனும் உடையவனாகக் காணப்படுகிறான்.

மாரீசனாகிய மாயமானை அரக்கர் செய் வஞ்சத்தில் ஒன்றென இலக்குவன் முதலிலேயே உணர்ந்தான். மாய மானின் அவலக்குரலைப் பொய்ம்மையென்றே புகன்றான். சீதை உணரவில்லை. சென்றாள் அண்ணலை நாடி. சீதையைத் தூக்கிச் செல்ல வந்த பலர் சடாயுவோடு பொருது இருக்கலாம் என்று இராமன் நினைத்தான். ஆனால் இலக்குவனோ, 'பொருதவர் பலர் அல்லர் ஒருவனே; அதுவும் இராவணனே' என்று கூறினான்.

இராமன், தான் வாலியைக் கொன்றதற்குப் பல காரணங்களைக் கூறினான். மறைந்து நின்று கொன்ற தற்கு இலக்குவனே காரணம் கூறினான். இவ்வாறு பின் வருவனவற்றை முன்னமேயே சிந்திக்கின்ற சிறப்பினை இலக்குவனிடம் காண்கிறோம்.

இவற்றையெல்லாம் விஞ்சித் திகழ்வது இவனது அஞ்சாமையும் வீரமும் ஆகும். மாயை வல்ல விராதனை வீழ்த்தியும் ஆற்றல்வல்ல அதிகாயனை அழித்ததும் இவனுடைய வீரவாழ்வுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இலங்கைப் போரில் இந்திரஜித்தனே இலக்குவனைப் போற்றியுள்ளான்.

"குலம்செய்த பாவத் தாலே
கொடும்பகை தேடிக் கொண்டோம்
சலம்செயின் உலகை மூன்றும்
இலக்குவன் முடிப்பன் தானே"

என வீரத்தின் பான்மை தீர்ப்பானாகிய இந்திரஜித்தே இலக்குவனின் வீர ஆற்றலைப் போற்றுவது பாராட்டத் தக்கது வீரத்தையே வீரம் போற்றும் நிகழ்ச்சியை இங்கே காண்கிறோம். எனவே, தொண்டில் சிறந்த இலக்குவன் வீரத்திலும் சிறந்து விளங்கினான் என்ற உண்மையினை நாம் உணரலாம்.

# 4. ஆஞ்சநேயர்

***சிறப்புக்கள்***

ஆஞ்சநேய சுவாமியின் விசேஷமே சிலாக்கியமானது. அவர் பக்தர்களுக்கு என்னென்ன அனுக்கிரகம் செய்கிறார் என்பதைப் பார்த்தால் அவருக்கு என்ன 'விசேஷம் என்று தெரியும். புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்குவன்மை இத்தனையும் தருகிறார் அவர்.

ஆஞ்சநேயர் தேகபலம், புத்திபலம் இவற்றைப் போலவே விநயம், பக்தி இவற்றிலும் முதலாக நின்றார். மகாசக்திமானாக இருந்தும் அத்தனை சக்தியும் இராமன் போட்ட பிச்சை என்ற அடக்கத்தோடு, தனக்கு ஒரு பதவியும் கேளாமல் இராமதாசனாக இருந்தார். அப்படி அடிமையாக இருந்ததாலேயே நிறைந்து இருந்தார். ஆஞ்சநேயன் இராமச்சந்திர மூர்த்தியின் பரம பக்தராக இருக்கும்போதே பரம ஞானியாகவும் இருந்தார்.

தட்சணாமூர்த்தி சனகாதி முனிவர்களை முன்னிட்டு உபதேசம் செய்ததைப் போல இராமபிரான் ஆஞ்சநேயரை முன்னால் வைத்துக் கொண்டு ஞானோபதேசம் செய்கிறார். அர்ச்சுனனின் தேர்க் கொடியில் இருந்து கொண்டு கீதோபதேசத்தை நேரிலேயே கேட்டவர் அவர். பைசாச பாஷையில் கீதைக்குத் தத்துவமயமான ஒரு பாஷ்யம் இருப்பதாகவும் அது ஆஞ்சநேயர் செய்தது என்றும் சொல்லுவார்கள்.

ஒன்பது வியாகரணமும் தெரிந்த 'நவ வியாகரண வேதா' என்று இராமரே அவரைப் புகழ்கிற அளவுக்குப்

பெரிய கல்விமான். ஆனாலும் புத்திப் பிரகாசம், சக்திப் பிரபாவம் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு பக்தியிலேயே பரமானந்தம் அனுபவிப்பார்.

பக்தி என்பதால் உலக காரியத்தைக் கவனிக்காதவர் அல்லர். மகா வீரத்தோடு போராடி அபலைகளை ரட்சித்தவர்களில அவருக்கு இணையில்லை. உலக சேவைக்கு அவரே உதாரணம. ஞானததில் உச்சநிலை; பலத்தில உச்சநிலை; வீரத்தில் உச்சநிலை; கீர்த்தியில் உச்சநிலை; சேவையில் உச்சநிலை; வினயத்தில் உச்ச நிலை. இப்படியெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்ற சொரூபம் ஒன்று உண்டு என்றால் அது ஆஞ்சநேய சுவாமிதான்.

இவை யெல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய பிரமசரியத்தைச் சொல்ல வேண்டும். ஒரு கணம் கூட காமம் என்ற நினைப்பே வராத மகா பரிசுத்த மூர்த்தி அவர். தனக்கென்று எதுவுமே நினைக்காதவர். இராமனுக்குச் சேவை செய்தே நிறைந்து விட்டார்.

அவரைத் தமிழ்நாட்டில் பொதுவாக அனுமார் என்போம். கன்னட நாட்டில் அவரே அனுமந்தையா. சித்தூருக்கு வடக்கே போய்விட்டால் ஆந்திரா முழுவதும் ஆஞ்சநேயலு என்பார்கள் மகாராஷ்டிரம் முழுக்க மாருதி என்று கொண்டாடுவார்கள். அதற்கு வடக்கில் மகாவீர் என்றே சொல்வார்கள்.

ஆஞ்சநேயருக்கு ஈடு கிடையாது. அவரைத் தியானித்த மாத்திரத்தில் தைரியம் வரும்; பயம் நிவர்த்தியாகும் புத்தி வரும்; பக்திவரும்; ஞானம் வரும்; காமம் நசித்துவிடும் பரம வினயத்தோடு பகவத் கைங்கரியம் செய்து கொண்டு எல்லார்க்கும் நல்லது செய்வோம்.

'ராம் ராம்' என்று எங்கே சொல்லிக் கொண்டிருந்தாலும், ரகுநாத கீர்த்தனம் எங்கே நடந்தாலும் அங்கெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயர் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்று

கேட்கிறார். இந்தக் காலத்தில் நமக்கு மற்ற எல்லா அனுக்கிரகங்களோடு, முக்கியமாக அடக்கமாக இருக்கிற பண்பு ரொம்பவும் அவசியமாகிறது. எத்தனை வந்தாலும் போதாமல் இப்போது மேலும் மேலும் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போகிறோம். இதனால் புதுப் புது அதிருப்திகளை குறைகளைத்தான் உண்டாக்கிக் கொள்கிறோம். அடங்கியிருந்தால்தான் ஈஸ்வரப் பிரசாதம் கிடைக்கும். அதுதான் நிறைந்த நிறைவு. அதை நமக்கு ஆஞ்சநேயர் அனுக்கிரகம் பண்ண வேண்டும்.

## பிரார்த்தனை

அவரைப் பிரார்த்திப்பவர்களுக்கு ஒரு குறையும் இல்லை உலகம் முழுவதிலும் தர்மம் பரவியிருக்க அவரையே பிரார்த்தனை பண்ணுவோம் அவருடைய சகாயத்தாலேயே இராவணாதிகள் தோற்று இராம ராஜ்யம் ஏற்பட்டது. அர்ச்சுனனின் தேர்க் கொடியில் அவர் இருந்த விசேஷத்தில் பிறகு தர்ம ராஜ்யம் ஏற்பட்டது.

பிற்காலத்தில் நம் தர்மம், பக்தி எல்லாம் நசித்த போது ஆஞ்சநேய அவதாரமாக சமர்த்த ராமதாஸ் சுவாமி தோன்றித்தான் சிவாஜி மூலம் மறுபடி தர்ம ஸ்தாபனம் செய்தார். இன்றும் சகல தேசங்களிலும் தர்மமும் பக்தியும் ஏற்பட அவர் அனுக்கிரகம் வேணும். நாம் மனமுருகிப் பிரார்த்தித்தால் இந்த அனுக்கிரகத்தைச் செய்வார் இவர் சிரஞ்சீவி பதம் பெற்றவர்.

## கம்பன் காட்டும் அனுமான் - சொல்லின் செல்வன்

கிஷ்கிந்தையில் இராமனும் இலட்சுமணனும் சீதையைத் தேடிக் கொண்டு அலைந்து கொண்டிருந்தனர். அப்போது சுக்ரீவனின் அமைச்சனாகிய ஆஞ்சநேயன் பிராமண உருவத்தில் அங்கு வந்து அவர்களை வணங்கி

நின்றான். முதன் முதலாகக் கண்ட மாத்திரத்திலேயே இராமபிரான் ஆஞ்சநேயரின் உயர்வற உயர்ந்த பண்புகளையெல்லாம் உன்னித்து உணர்ந்து கொண்டு வியந்து மகிழ்ந்தார்.

ஆஞ்சநேயர் தமக்கு நல்வரவு கூறித் தன்னை அறிமுகம் செய்து கொண்ட இனிய உரைகளைக் கேட்ட இராமபிரான் மிகவும் மகிழ்ந்து, இலக்குவனை நோக்கி, "உலகத்தில் இவன் கற்காத கலைகளும், வேதக் கடல்களும் இல்லையென்பது இவனுடைய சொற்களாலேயே தெரிகின்றதன்றோ? சொல்லின் செல்வன் எனத் திகழும் இவன் யாரோ? ஒருகால் இவன் பிரமனாக இருப்பானோ அன்றி விடையேறும உருத்திரன் தான் இவ்வுருவில் வந்துள்ளானோ?" என்று வியந்து பாராட்டி மகிழ்கின்றார். அப்பாடலைப் பாருங்கள்.

இல்லாத உலகத் தெங்கும்
 ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
 கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
 யார்கொல்இச் சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளைய வீர
 விரிஞ்சனோ விடைவல் லானோ!

— அனுமப் படலம் - 20

**அந்தரன்**

அழகு என்பது சிறப்பாக மூன்று வகைப்படும் என்பர். அவைகள் முறையே ரூப சௌந்தர்யம், ஞான சௌந்தர்யம், குண சௌந்தர்யம் எனப்படும். உருவ அழகு, அறிவழகு, பண்பழகு என்னும் இம்மூன்று வகை அழகுகளும் ஆஞ்சநேயர்பால் அமைந்துள்ளன. ஆதலின்

அவருக்குச் சுந்தரன் என்றும் ஒரு பெயர் உண்டு. இராமாயணத்தில் மிகவும் சிறந்த ஒரு பகுதி சுந்தர காண்டம் என்பது. அன்பர்கள் பலர் அதனை நித்திய பாராயணம் செய்வது உண்டு. சுந்தரகாண்டம் எனப் பெயர் அமைந்ததற்குரிய காரணங்கள் பலவற்றுள் ஆஞ்சநேயர் ஆகிய சுந்தரன் பற்றிய அரும் பெருஞ் செயல்களும் செய்திகளுமே மிகுதியாக இடம் பெற்றிருத்தலும் ஒரு காரணம் ஆகும்.

## கலையனைத்தும் கற்றோன்

ஆஞ்சநேயர் சூரியன்பால் சகல கலைகளையும் தகவுறக் கற்றுத் தேர்ந்தவர். ஒரு நிலையில் நில்லாமல் உலகமெல்லாம் எப்போதும் ஓடிச் சுற்றிச் சுழன்று திரிந்து செல்லும் சூரியன்பால் அவனது வேகத்திற்குப் பின்னிடாமல் தானும் தொடர்ந்து பின் சென்று கலைகளெல்லாம் கற்று தேர்ந்தவர் ஆஞ்சநேயர். மாணவர்கள் பல கலைகளையும் பயின்று கொள்ளுதலில் எத்தகைய வேகமும் அறிவின் திறனும் உழைப்பும் உடையவர்களாக விளங்குதல் வேண்டுமென்பதனை ஆஞ்சநேயரின் வரலாறு வழிகாட்டுகிறது.

## சிறிய திருவடி

ஆஞ்சநேயருக்குச் சிறிய திருவடி என்றும் ஒரு பெயர் உண்டு. இராமனிடம் போர் புரிய இராவணன் தேர் ஏறி வந்தான். அவனை நோக்கி இராமபிரான் நடந்து செல்லுவதை ஆஞ்சநேயர் கண்டார். 'இராவணன் தேரின் மேல் இருக்கத் தாங்கள் நிலத்தில் கீழே நிற்பது கூடாது' என்று கூறி, ''மெல்லியன் எனினும் ஏறு நீ ஐய என்னுடைத் தோளின் மேல்' என்று வேண்டி, அங்ஙனமே இராமபிரானைத் தம்முடைய தோள்களினால் தாங்கப் பெற்றார் ஆஞ்சநேயர் (முதற்போர் படலம்-218)

ஆஞ்சநேயர்க்குச் சிறிய திருவடி என்ற பெயர் வரக் காரணம் யாதெனின், திருமாலைத் தன்னுடைய தோள்களின் மேல் என்றும் சுமக்கும் பேற்றினை முன்னமே தனக்குக் காணியாட்சியாகப் பெற்றிருப்பவர் கருடாழ்வார். ஆதலின், அவருக்குப் பெரிய திருவடி என்றும், அவரை நோக்கப் பின்னே இராமாவதாரத்தில் அப்பேற்றினைப் 'பெற்ற இளையவர் ஆகிய ஆஞ்சநேயர்க்குச் சிறிய திருவடி என்றும் பெயர்கள் வழங்குவன ஆயின.

## தெய்விகப் புருஷர்

ஆஞ்சநேயர் திருமணம் செய்து கொள்ளாமல் பிரமசரிய விரதம் கடைப்பிடிப்பவர். இராமபிரானை இமைப்பொழுதும் மறவாமல், அவர் தம் திருநாமத்தினை இடைவிடாது செபித்துக் கொண்டே இருப்பவர். இவர் பிரம்மாஸ்திரத்தினால் கட்டப் பெற்று மயங்கி யிருந்த நிலையிலும் இராமன் நாமம் மறந்திலர். இலங்கைக்குச் செல்ல, இராமபிரான் கடலில் அணை கட்டியே கடலைக் கடக்க வேண்டியிருந்தது ஆனால் ஆஞ்சநேயர் இராம நாமத்தை உச்சரித்தே கடலைத் தாண்டிச் சென்றார். இராமனைவிட இராம நாமத்திற்கு மகிமை அதிகம் போலும். இராம கதை எங்கெங்கே படிக்கப் பெறுகின்றதோ அங்கெல்லாம் எழுந்தருளியிருந்து கேட்டு மகிழ்பவர். இராமபிரானால் மிகவும் மதிக்கப் பெற்றவர். பரமபதம் அளிக்கப் பெற்றவர்.

ஆஞ்சநேயர் ஒரு சிறந்த தெய்வீக புருஷர். ஒப்புயர்வற்ற அருளாளர். தவ ஒழுக்கமும் பக்தி நலமும் சான்றவர். அறிவும் கல்வியும் ஆற்றலும் மிக்கவர். இணையற்ற பிரமசரிய விரதத்தினர். அன்பர்களுக்கு எளிய வந்து இன்னருள் புரியும் இயல்பினர். அவரை அன்புடன் வழிபடுபவர்களுக்கு அவரைப் போன்றே

வீரம், தீரம், ஞானம், பக்தி, ஒழுக்கம், பண்பு நலம் முதலியன விளையும் என்பதில் ஐயமில்லை.

கம்பராமாயணத்தில் ஆஞ்சநேயரைப் பற்றிய காப்புச் செய்யுள் வருமாறு :

**அஞ்சிலே ஒன்று பெற்றான்**
**அஞ்சிலே ஒன்றைத் தாவி**
**அஞ்சிலே ஒன்று ஆறாக**
**ஆரியற் காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற**
**அணங்கைக்கண் டயலார் ஊரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான்**
**அவனெம்மை அளித்துக் காப்பான்.**

ஐம்பூதங்களில் ஒன்றாகிய வாயுதேவன் தனது மைந்தனாகப் பெற்றெடுத்தவனும், ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீர் நிரம்பிய கடலைத் தாண்டி, ஐம்பூதங்களில் ஒன்றாகிய வானம் தனக்கு வழியாக அமைய, இராமனாகிய மேலோன் பொருட்டுச் சென்று, ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலம் தன்னிடத்துப் பெற்ற சீதாபிராட்டியைக் கண்டறிந்து, பகைவர்களின் ஊராகிய ஐம்பூதங்களில் ஒன்றாகிய நெருப்பை வைத்து எரித்தவனுமாகிய ஆஞ்சநேயர் அன்பர்களாகிய நமக்குப் பல நலன்களையும் கொடுத்து நம்மைக் காப்பாற்றுவார்.

# 5. இராவணன்

(Villain — எதிர்முகம்)

## இலங்கைப் பெருநகர்

கவிச்சக்கரவர்த்தி கம்பர், நாம் களிக்கின்ற அளவுக்கு கற்பனை வளமும், கவிநயமும், கருத்தாழமும் செறிந்த காவியத்தை நமக்கு அளித்துள்ளார். தமது காவியத்தில் அவர் படைத்த பல நகர்களுள் தன்னிகரில்லாப் பொன்னகராய், நன்னகராய், வண்மைமிகு தண் நகராய் விளங்குவது இலங்கைப் பெருநகர். அப்பெருநகரின் வளத்தையும், ஆங்கு வாழ்ந்த மக்களின் நலத்தையும், அதை ஆண்டு வந்த பெருவீரன் இராவணனின் பலத்தையும், அவனை அழித்த இராகவனது திறத்தையும் நமக்குக் காட்டுகின்றார்.

கடலின் கண் முத்தாக விளங்கும் இலங்கைப் பெருநகர் இன்று இயற்கை அன்னையின் எழில் குன்றா நாடாகக் காட்சியளிக்கின்றது. அன்றும் இப்பெருநகர் இதைவிடப் பன்மடங்கு சிறப்புப் பெற்றதாகக் கம்பர் கூறுகின்றார்.

## இலங்கையர் கோன்

இவ்வரிய பெரிய இலங்கைத் திருநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் இராவணன். இலன் முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற பெருந்தவமும் உடையவன்; மூவுலகத்தையும் வென்றவன். 'எவராலும் வெல்லப்படமாட்டாய்' என்று இறைவனால் கொடுக்கப்

பட்ட வரத்தையும் உடையவன். வெள்ளியங்கிரியை வேரோடு விண்தொட எடுத்தவன்; எட்டு யானைகளின் கொம்புகள் மார்பில் பட்டு அழுந்த அவற்றை ஒடித்து உள்ளேயே இற்ற கொம்புகளை நுருக்குமாறு செய்தவன். யாழ்க்கொடி ஏற்றி அகத்தியருடன் இசையில் போட்டி யிட்ட இசைக் கலைஞன். சிறந்த சிவபக்தன் பகைவ னான இராகவனாலேயே போற்றப்படுகின்ற பெருவீரன்.

''ஆயிரக்கணக்கான மறைகளையும், அம்மறைகளின் பொருள்களையும் நன்கு உணர்ந்தவன்; உணர்ந்த அளவுடன் நில்லாமல் வாழ்க்கையில் அவற்றைப் பயன் படுத்தி அமைதி நிலையை அடைந்தவன்; அறிவு பெற்றுத் தெளிவு அடைந்தவன்'' என்று கும்பகர்ணன் கூறு கின்றான்.

''ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றார் அலால் கவல் கின்றார் ஒருவரைக் காணேன்'' என்று கம்பர் பாடுகின்ற அளவிற்கு நாட்டை வளமுடன் ஆண்ட வீரன். நித்தம் உழைப்பவரும், உத்தமரும், யோகியரும், மத்த மதவெங் களிறும், பித்தரும் மன அமைதியுடன் உறங்கும் வண்ணம் செங்கோல் ஆட்சி செய்தவன்; தன்னம்பிக்கையுடைய வீரன்; எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் உள்ளவன்; முன் வைத்த காலைப் பின் வைக்காமல் மூவுலகையும் வென்று பெரும்புகழ் கொண்டவன்.

ஆனால், இத்துணைச் சிறப்புடைய இராவணன் ஊழ்வினையால் தன் தங்கையான சூர்ப்பனகையின் சொற் கேட்டு, மிதிலைச் செல்வியைச் சிறையெடுத்துப் பெரும் பழிக்கு ஆளாகின்றான். அடாத செயலைச் செய்ததனால் இலங்கை அழிந்ததுடன் அனைத்தையும் இழந்து தன்னையும் தானே அழித்துக் கொள்கின்றான். காம வேட்கையால் மானமிழந்து, அரியணை இழந்து, தன்னுடன் சேர்ந்த அனைவரையும் இழந்து பரிதாப நிலையை அடைகின்றான்.

## அறங்கூறிய மறவர்

தவவலியும் உடல்வலியும் உடைய இராவணன் பிறர்க்கு உரியவளான சீதையை விரும்பிச் சிறையெடுத்து குலப்பெருமையைக் கெடுத்ததை அறிந்த அவனது தம்பியர் வீடணனும் கும்பகர்ணனும் அவனது மகன் மேகநாதனும் (இந்திரஜித்து) இராவணனுக்கு அறவுரைகள் பல கூறி, பழியையும் போரையும் தடுக்க முனைகின்றனர். ஆனால் அளவு கடந்த தன்னம்பிக்கையும் செருக்கும் உடைய இராவணன் அவர்களது சொற்களுக்குச் செவி சாய்க்க வில்லை.

### 1, கும்பகர்ணன்

கும்பகர்ணன் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதற்காக தான் செய்யத் தகாதது என்று தன் உள்ளம் கூறிய செயலைக் கூடச் செய்யத் துணித்தவன். இராவணன் அறநெறியினின்றும் வழுவியதை யறிந்தும் அவனை விட்டகலாது அவனுக்காக இறக்கின்றான். ஆனால் போர்க்களம் நோக்கிச் செல்வதற்கு முன் தன் தமைய னுக்குச் சில நல்லுரைகளைச் சொல்லிச் செல்கின்றான்.

இராவணனை நோக்கி, ''ஆயிரம் மறைப்பொருளை உணர்ந்த அறிவுடையானே! என்று பிறன் மனைவியை விரும்பிச் சிறை வைத்தாயோ, அன்றே அரக்கர் புகழ் மாய்ந்துவிட்டது. குலப் பெருமையை அழித்ததுடன் உன் புகழையும் அழித்துவிட்டாய். மானம் இழந்த பின்னும் உயிர்வாழ விரும்புகின்றாயா? அனைவர்க்கும் அழிவைத் தருகின்ற செய்கையைப் பெருந்தவமுடைய நீ செய்ய லாமா?'' என்று பலவாறு கேட்கின்றான். ஆனால் இராவணனது உள்ளம் மாறாததைக் கண்டு இறுதியில், ''கெடுத்தனை நின்பெருங் கிளையும் நின்னையும்'' என்று கூறிவிட்டுப் போர்க்களம் சென்று வீரமரணம் எய்து கின்றான்.

## 2. மேகநாதன்

"வில்லாளரை எண்ணில் வீரற்கு முன்னிற்கும் வீரன்" என்றே மேகநாதனைக் கம்பர் அழைக்கின்றார். மேகநாதனும் இராவணனைப் போலவே சிறந்த வீரன். தன் தந்தை செய்த குற்றத்தையுணர்ந்த இவனும் அவனது உள்ளத்தை மாற்ற முயலுகின்றான். அதற்கு முன்னர் தன் தந்தைக்குத் துரோகம் செய்த சிற்றப்பனையே ஒழித்துவிடலாமோ என்று கூட நினைக்கின்றான். ஆனால் அவன் குலம் பழியை வெறுப்பதாகலின் அச்செய்கையைச் செய்ய எளிதில் மனம் துணியவில்லை. முதல்நாள் போரில் எதையும் செய்யும் ஆற்றல் அற்ற நிலையை அடைந்த தன் தந்தையிடம் சென்று போரை நிறுத்த வேண்டுகிறான்.

மேகநாதன் இராவணனை நோக்கி, "தந்தையே, உம் தம்பியாகிய வீடணன் செய்த சூழ்ச்சியால் இலக்குவன் வேள்வியை அழித்துத் தாழ்விலாப் படைகள் மூன்றையும் பயனற்றவையாக்கி விட்டான். நான் விட்ட மூன்று படைகளும் இலக்குவனை வலஞ் செய்து போய்விட்டன" என்றும், "குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டோம்" என்றும் கூறினான். மேலும், "உலகம் அழியுமென்று பயந்து பிரமாத்திரத்தை அவர்கள் பயன் படுத்தவில்லை. ஆதலால் உயிர் பிழைத்து நின்பால் வந்தேன்" என்று கூறினான்.

இவ்வாறு பகைவரின் வலிமையை அறிந்த மேகநாதன் கூறியதையும் இராவணன் கேட்கவில்லை. பிறகு மேகநாதன் போர்க்களம் சென்று வீரப் போரிட்டு மாண்டான்.

## 3. வீடணன்

அறத்தைக் காப்பதற்காகப் பெரும் பழியைத் தேடிக் கொண்டவன் வீடணன். இவன் நல்ல அரசியல் அறிவும்,

வருவது உணரும் ஆற்றலும் உடையவன். பகைவரது படைபலத்தைப் பற்றிச் சிந்திக்காது போர் புரியத் திட்டமிட்ட இராவணனது அறியாமையைக் கண்டு அஞ்சாது எடுத்துரைத்த வீரன் இவன். இராவணனைத் தெய்வமாக வணங்கியவன் வீடணன். இவன் முதலிலேயே தமையனின் நேர்மையற்ற செயலைக் கண்டித்தவன்.

இராவணனை நோக்கி, "அண்ணலே! உனது பகைவர்களின் படை வலிமையைப் பற்றி எண்ணிப் பார்த்தாயா? கோசிகன், நான்முகன் போன்றவர்கள் தந்த படைக்கலன்களை யுடையவர்கள் உன் பகைவர்கள்; திருமாலின் அரிய வில்லையும், இறைவன் திரிபுரம் எரித்த வில்லையும் உடையவர்கள். இராகவனை நீ மதிக்கா விட்டாலும், அவனது படைக்கலங்களைப் பற்றியாவது வீரனாகிய நீ அறிந்திருக்க வேண்டும். அவ்வீரர்களின் அம்பறாத் தூணியில் உள்ள பகழிகள் உலகத்தையே தீண்டி அழிக்கும் அரவம் போன்றவை; ஆலகால விஷத்தை ஒத்த விஷத்தைக் கக்குபவை. நல்லோர்க்கு அழிவு செய்யும் தீயோரை அழித்து அவரை இரையாக்கிக் கொள்வதன்றி வேறு உணவு பெறாதவை.

"அவ்வம்புகளின் திறனை நீ அறியவில்லை போலும். தேவர்களாலும் அசுரர்களாலும் கடைய முடியாத பாற் கடலைக் கடைந்த வாலியின் மார்பைப் பிளந்தவை அவ்வம்புகள். அது மட்டுமா? உலகையே கலக்கிய விராதன், கரன் ஆகியோரின் மலைகளை ஒத்த சிரங்கள் கீழே உருண்டதும் அவற்றால்தான். இவற்றையெல்லாம் அறிந்த பிறகு இராகவனுக்குப் பகைவர் என்று இனித் தோன்றுகிறவர் விண்ணையே அடைவர் என்று கூறவும் வேண்டுமோ?" என்றான். ஆனால் இராவணன் கேட்டான் இல்லை. இறுதியில் 'பித்தா' என்று பழித்துரைத்து விட்டு அறத்தின் திருவுருவாய் அல்லையாண்டமைந்த மேனி அழகனை அடைந்தான் வீடணன்.

## இராவணன் வீழ்ச்சி

அன்புத் தம்பியரும் தனது அருமை மகனும் கூறிய வற்றைக் கேட்காத இராவணன் இறுதியில் பரிதாபத்திற் குரிய நிலையை அடைகின்றான். தானே போர்க்கோலம் பூண்டு களம் நோக்கிச் செல்லுகின்றான். முதற் போரி லேயே இராகவனை நேரில் சந்திக்கின்றான். தேவர்களும் அஞ்சத்தக்க அருஞ்சமர் நடந்தது. இறுதியில் இராகவன் பல கணைகளால் இராவணனது தேர், வில் முதலிய வற்றை அழித்து, அவனது மணி முடியையும் தரையில் உருளச் செய்தான். முடியும், வில்லும் இழந்த இராவணன் இராகவன் முன் தலைகுனிந்து நின்றான். இந்நிலையைக் கண்ட இராமன் வீரனுக்குரிய பெருந் தன்மையுடன் "இன்று போய் நாளை வா" என்று கூறினான். அனைத்தையும் இழந்த நிலையில் இராவணன் அரண் மனையை நோக்கிச் சென்றான்.

அடுத்த நாளும் போர் ஆரம்பமாகிறது. இராகவனது அம்புகளைத் தடுக்க முடியாத இராவணன் வீழ்ந்து மடிந் தான். "பிறர் மனை நோக்கிய" பெரும் பழியைச் செய்த இராவணன் இந்திரப் பெரும்பதம் இழந்து இறந்தான். பெருந்தவமும் புயவலிமையும் உடைய அரக்கர் கோன் தனது செருக்காலும் அளவு கடந்த தன்னம்பிக்கையாலும் வழி அலா வழி மேற் சென்றதாலும் இறந்ததுடன் என்றும் நீங்காப் பெரும் பழியையும் அடைந்தான்.

அவனது வீழ்ச்சி, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல் தான்தோன்றிகளாகத் திரியும் மக்களுக்கு ஒரு நல்ல படிப் பினை. இதனால்தான் தன் நிலையை மறந்து, தகாதன செய்பவன் அனைவராலும் வெறுக்கப்படுவான் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நம் வள்ளுவப் பெருந்தகை,

> **"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
> **நிலையின் இழிந்தக் கடை"**

என்ற குறளில் மூலம் சொல்லிப் போந்தார்.

# 6. இந்திரசித்து

## தோற்றுவாய்

இராவணனுக்கு மக்கள் மூவர். மக்கள் மூவருள் தக்கோன் இந்திரசித்து. வில்லாளர் பலருள் இந்திரசித்து முதல்வன். ஆண்மையும் ஆற்றலும் ஆணவமும் கொண்டவன். மாயமும் சூழ்ச்சியும் மதிவலியும் உடையவன். குலப்பெருமையைக் குன்றெனக் கருதியவன். வேள்விகள் பல செய்து, வரங்களைப்பெற்று விண்ணாட்டவரையும் எந்நாட்டவரையும் வென்றவன். வீரமே உயிரெனக் கருதி, வீரத்தின் பன்மை தீர்க்கும் வீரர் திலகமாகத் திகழ்ந்தவன். அரக்கர் குலத்தின் அச்சாணி இந்திரசித்து.

## பண்புகள்

தொண்டில் சிறந்த தூயோனாய் வீரச்சிறப்பமைந்த இலக்குவனின் எதிரியாகத் திகழ்ந்தான், இந்திரசித்து. பதினான்கு ஆண்டுகள் உண்ணாதவனும் உறங்காதவனுந்தான் வெல்ல முடியும் என்ற வரத்தினை வாங்கியிருந்தான் இந்திரசித்தன். இதனால்தான் இலக்குவனே இந்திரசித்தனுக்கு எதிரியாக அமைந்தான் போலும். மான உணர்ச்சி, சூழ்ச்சி, வீரம் இவையனைத்தும் உடைய பெருவீரனாகக் காட்சியளிக்கிறான் இந்திரசித்து. சீதையின் காரணமாக ஏற்பட்ட போரில் இவன் வகித்த பங்கு மகத்தானது. தன் தந்தை செய்த தவற்றினால் போர் ஏற்பட்டதே எனப் பலமுறை மனம் புழுங்கினான்.

இலங்கைப் போருக்கு அனுமன் கால்கோள் நடத்தியதை நாம் அறிவோம். அப்போது அவனைப் பிடித்துவர இராவணன் பலரை அனுப்பினான். அனைவரும் மாண்டனர். பின் இந்திரசித்தனின் தம்பி அட்சய குமாரன்

சென்றான். பெருவீரன் அவன். தமையனின் அன்பையும் தந்தையின் ஆசியையும் பெற்றவன். ஆனால் அவனும் அனுமானால் கொல்லப்பட்டான். செய்தி அறிந்த இந்திரசித்தன் குமுறிக் கொதித்து எழுந்தான். நொந்த உள்ளத்தோடு இராவணனிடம் வந்தான். ஆற்றாத சோகமும் அணையாத கோபமும் அவனுள் பொங்கி எழுந்தன.

ஒரு குரங்கின் காரணமாக அரக்கர் பலர் அழிந்த நிலை அவன் நெஞ்சைச் சுட்டது. கடல் கடந்து, அரக்கர் நாடு வந்த ஒரு குரங்கு இங்ஙனம் பல உயிர்களை வாங்கி விட்டதே என விம்மினான். தன் தந்தையே இதற்குக் காரணம் என முடிவு செய்தான். முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற பெருந்தவமும் உடைய இலங்கேஸ்வரன் கொலுவீற்றிருந்த இடம் அணுகிய இந்திரசித்தன் துணிந்து பேசினான்: "தந்தையே! அரக்கர்களையெல் லாம் குரங்கா கொன்றது? இல்லையே! நீதான் கொன் றாய். உன் ஆணவம் கொன்றது" என்ற கருத்தில், "கொன்றனை நீயே யன்றோ அரக்கர் தம் குழுவையெல் லாம்" எனத் துணிந்து கூறினான்.

இலங்கைப் போரில் அடுத்தடுத்துப் பல அவலங்கள் ஏற்பட்டன. வலிமிகுந்த கும்பகர்ணனும் அஞ்சா நெஞ்சன் அதிகாயனும் களத்தில் மாண்டனர். அரக்கர் அனைவரும் கவலையுள் ஆழ்ந்தனர். இதையறிந்த இந்திரசித்தன் தந்தையிடம் வந்தான். "கேவலம் மனிதர் களா அவர்களைக் கொன்றார்கள்? இல்லையே! நீ கொன்றாய்" என்ற கருத்தில், "கொன்றார் அவரோ கொலைசூழ்கென நீ கெடுத்தாய்" என இங்கும் தந்தை யிடம் துணிந்து பேசினான்.

அது மட்டுமன்று; கடல் கடந்து வந்து, பெருவீரர் பலரை அழித்த மனிதர்களின் வன்மையை இராவணன் இன்னும் உணரவில்லையே எனவும் வருந்துகிறான். அம் மானிடர் வலிமை அறிந்தும் நீ வாளாயிருந்தாய்; என்னை

ஏன் முன்பே போருக்கு அனுப்பவில்லை என்ற பொருளில், ''வன் தானை மானிடர் வன்மையறிந்தும் மன்னா எனை தானும் எனச்செல ஏவலை'' எனப் பேசும் போது இந்திர சித்தன் மொழிகளில் அனுடைய துணிவையும் தன் முனைப்பையும் நாம் காண்கிறோம்.

மான உணர்விலும், இலங்கையின் புகழிலும், இராவணனின் சிறப்பிலும் மிகுந்த அக்கறைகொண்டவன் இந்திரசித்தன். தந்தையின் புகழோ இலங்கையின் புகழோ குறைவதற்கு அவன் மனம் சற்றும் இடம் கொடுக்க வில்லை. அனுமானால் அட்சய குமாரன் மடிந்ததை உணர்ந்த இந்திரசித்தன் மனம் என்ன வெல்லாமோ நினைத்தது. ''என் தம்பி அக்கனா மடிந்தான்; இல்லை; இல்லை; என் தந்தையின் புகழல்லவா மடிந்துவிட்டது'' என்ற கருத்தில்,

தம்பியை யுன்னும் தோறும்
    தாரைநீர் ததும்பும் கண்ணான்
வம்பியல் சிலையை நோக்கி
    வாய்மடித் துருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக்
    குரங்கினாற் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை
    புகழன்றோ தேய்ந்த தென்றான்

—பாசப்படலம்-5.

எனக் கூறும் போது மானம், வீரம், அவலம் ஆகிய முச் சுவைகளும் மோதுகின்றன. தந்தையின் தவற்றினைத் துணிந்து அவனிடமே பேசுகின்ற அதே உள்ளம் இப் போது தந்தையின் புகழுக்கு மாசு வந்துவிட்டதே என்ற மான உணர்வில் வருந்திக் கொதிக்கும் நிலையினையும் நாம் காண்கிறோம்.

இங்ஙனம் துணிவும் மானவுணர்வும் உடைய இந்திர சித்தின் அஞ்சாமை மிக்க வீரர் திலகமாகவும் திகழ்ந்தான்.

இவனைத் தூக்கத்தில் முதல் முதல் கண்ட அறிவு சான்ற அனுமன் அதிசயித்தான்.

இந்திரசித்தன் போர் செய்யக் களம் வந்தபோது விபீடணன் இராமனை நோக்கி, 'இன்று வலிது போர்' என எச்சரிக்கை செய்தான். இராம காவியத்துள் வரும் வீரர் பலருள் இவனே தலை சிறந்தவன். ஆற்றல்மிக்க பலரைக் கொன்ற அனுமனைப் பாசத்தால் பிணித்ததும், அயோத்தி வீரனான இலக்குவனை மயக்கிக் காட்டியதும், குரங்கினத் தலைவர் பலரை வீழ்த்தியதும் இவனது வீரத் திற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இவன் வஞ்சினம் கூறும்போது, ''நான் பகைவர்களை வெல்ல வில்லையெனில், என்னால் வெல்லப்பட்ட இந்திரனிடம் நான் நான்கு முறை தோற்றவன் ஆவேன்'' என்றும், ''நான் இலக்குவனை அழிக்கவில்லை யெனில் என் பகைவர்களாகிய தேவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கட்டும்'' என்றெல்லாம் பேசுவதிலிருந்தும் இவனு டைய வீர உணர்வு புலப்படுகிறது.

அஞ்சாமை மிக்க பெருவீரனாகத் திகழ்ந்த இந்திர சித்தின் பெருமை அவன் வீழ்ந்த போதுதான் வெளிப்படு கிறது. இலக்குவன் இந்திரசித்தைக் கொன்றவுடனேயே இராமன் சீதையைப் பெற்றுவிட்டதாக நினைத்தான். இந்திரசித்து இல்லையெனில் இலங்கை இல்லை. இராவணன் இல்லையென்றே தோன்றுகிறது. இதனால் தானே 'இந்திரசித்தன் மடிந்தான். நாளை இலங்கை வேந்தனும் இத்தகையன் அன்றோ' என மண்டோதரி புலம்பினாள். இனி, 'இலங்கை வேந்தனுக்கு அரசு செல்லாது' எனப் பகைவர்களும் கருதுகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்க இந்திரசித்தன் ஒருவனே ஒப்பற்ற வீரன் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். அவனுடைய வாழ்வில் ஒரு பேரரசின் வாழ்வே அடங்கி யிருந்தால் அவனை நாம் எப்படி அழைக்க முடியும்? இலங்கைப் பேரரசின் ஆணிக்கல்லன்றோ அவன். அவன்

வீர அரசும் வீழ்ந்தது. எனவேதான் கம்பன் இந்திர சித்தனைப் பற்றிப் பேசும்போது 'வீரத்தின் பன்மை சேர்ப்பான்' என்று பேசுகிறார். எதிரியாகிய இலக்குவனே 'இந்திரசித்தன் அழித்தானென்றால் உலகிலேயே அவனோடு ஆண்மையும் ஆற்றலும் அழிந்துவிடும்' என்று கூறினான் என்றால் அவன் ஆண்மையினைப் பற்றி இனி என்ன பேச இருக்கின்றது?

வீரச் சிறப்போடு சூழ்ச்சியிலும் மாயையிலும் இவன் வல்லோன். இந்திரசித்து தன் பிரம்மாஸ்திரத்தால் இலக்குவனையும் ஏனையோரையும் உயிர் ஒடுங்கச் செய்து, வெற்றிச் சங்கு ஊதித் தன் இருப்பிடம் சார்ந்தான். ஆனால் சஞ்சீவி பர்வதத்தின் உதவியால் மயக்கமடைந்தோர் மறுபடியும் எழுந்தனர். இதையறிந்த இந்திரசித்து இனிமேல் இவர்களை விட்டு வைப்பது சரியல்ல என்று கருதி, நிகும்பலை என்ற இடம் சென்று யாகம் செய்து ஆற்றலைப் பெற்று பகைவர்களை அழிக்க வேண்டுமென்று எண்ணினான்.

அந்த யாகத்தைப் பற்றி வீடணன் அறிந்தான் என்றால் காரியம் கெட்டுவிடும் என்று கருதிப் போக்குக் காட்டிப் பகைவரின் உள்ளத்தை வேறுபக்கம் திருப்பினான். சீதை போன்ற உருவம் செய்து அதை அனுமன் முன்னிலையில் கொன்றுவிட்டு, அயோத்தி சென்று இராமன் உற்றார் உறவினரை அழிக்கச் செல்வதாகப் போக்குக் காட்டினான்.

ஆயினும் இதனையறிந்த வீடணன், இந்த மாயையை உணர்ந்து, நிகும்பலை யாகத்தைக் கலைக்க ஏற்பாடு செய்தான். யாகம் முற்றுப் பெறாத காரணத்தால் இந்திரசித்தன் இறுதியில் இலக்குவனால் கொல்லப் பட்டான். இங்ஙனம் துணிவு, மானம், வீரம், சூழ்ச்சி இவையனைத்தும் மிக்க இந்திரசித்தன் போரில் இறந்தான்.

இவ்வாறு இலக்குவன், இந்திரசித்து, இவர் இருவர் தம் பகைமையும் கம்பர் அழகுபடச் சித்தரித்துள்ளான். இலக்குவனின் தன்னலமற்ற தொண்டும் வீரமும் நம்மைக் கவர்கின்றது. இவர்கள் இருவரிடமும் உள்ள பொதுப் பண்பு வீரமே. அவ்வீரமே இவர்களைப் போர்க்களத்தில் சந்திக்கும்படி செய்தது. இலக்குவன் வீரத்தோடு வீடணனது சூழ்ச்சி இணைந்தது. இந்திரசித்தனின் வீரத் தோடு மாயை சேர்ந்தது. இறுதியில் வீரம் வெல்லவில்லை. வெல்ல முடியாது. ஆனால் சூழ்ச்சி மாயையை வென்றது. ஆம்! அதனால் அன்றோ இந்திரசித்தன் மடிந்தபோது 'வீடணன் தந்த வெற்றி இது' என்று இராமனே இதைச் சுட்டிச் சென்றான். அப்பாடல் வருமாறு :—

**ஆடவர் திலக! நின்னால்**
**அன்று; இகல் அனுமன் என்னும்**
**சேடனால் அன்று; வேறோர்**
**தெய்வத்தின் சிறப்பும் அன்று;**
**வீடணன் தந்த வெற்றி**
**ஈதென்ன விளம்பி மெய்ம்மை**
**ஏடவிழ் அலங்கல் மார்பன்**
**இருந்தனன், இனிதின், இப்பால்.**

—இந்திரசித்து வதைப்படலம்-71

ஆடவர் திலக! —இலக்குவனே!
ஏடவிழ் அலங்கல் மார்பன்— இராமன்
ஈதென்ன— ஈது+என்ன

# 7. அகலிகை

## முன்னுரை

கற்புக்கு அரசிகளின் வரிசையில் முக்கியமாக ஐவரைப் புராணங்கள் போற்றுகின்றன. அந்த ஐவருடைய பெயர்களைத் தினசரி மனதினால் நினைத்த மாத்திரத்தில் புண்ணியமென்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

கௌதம முனிவரின் மனைவி அகல்யை (அகலிகை), பாண்டவர்களின் மனைவி திரௌபதி, இராமன் மனைவி சீதை, வாலியின் மனைவி தாரை, இராவணன் மனைவி மண்டோதரி ஆகிய இந்த ஐவருக்கு நிகரான பதிவிரதைகள் வேறு யாருமில்லை என்கிறார் வியாசர். மணமானவர்களாகிய இவர்களைக் கன்னிப் பெண்களாகவே அவர் வர்ணிக்கிறார். கணவன்மார்களைத் தவிர பிற ஆடவர் பார்வையில் இவர்கள் களங்கமற்ற சிறுமிகளைப் போன்றவர்கள் என்பதுதான் இதன் பொருள்.

## மணப் பருவம்

இந்த ஐவரில் முதன்மை வாய்ந்தவள் அகல்யை. இந்திரனால் கற்பழிக்கப்பட்ட அகல்யை, கற்பரசியாகவும் அவர்களில் முதலிடம் பெறுபவளாகவும் கருதப்படுவது எப்படிப் பொருந்தும் என்ற ஐயப்பாடு எழுகிறது. இந்த விடையில்தான் அவருடைய பெருமை தங்கியிருக்கிறது.

அகல்யை பிரம்மாவின் மகள். அழகே உருவாய் அமைந்தவள். அழகிய பெண்ணைப் பெறுவதும் ஆபத்துதான். அவளை பாதுகாப்புடன் வளர்த்து, ஆளாக்கி, ஒருவன் கையில் மனைவியாக ஒப்படைக்கும் வரையில் நிம்மதியிருக்காது. இதற்குப் பிரமதேவரும் விதிவிலக்கல்லர். அந்தப் பெண்ணைத் தாங்களே அடைய வேண்டுமென்று இந்திரனும், தேவர்களும் போட்டியிட்டனர். அவள் திருமணப் பருவத்தை அடைந்ததும் பெண் கேட்டுப் பலர் வந்தனர். பிரம்மாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

## நிபந்தனை

இதற்கு ஒரு நிபந்தனை விதித்தார். அண்டங்கள் அனைத்தையும் யார் மும்முறை சுற்றிவிட்டு முதலில் வருகிறாரோ அவருக்கே அகல்யா மாலையிடுவாள் என்றார். இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் அகல்யாவைப் பெற அண்டங்களைச் சுற்றிவரப் புறப்பட்டனர்.

இது நாரதருக்குத் தெரிந்தது. பிரம்மாவின் புதல்வர்களுள் அவரும் ஒருவர். அவர் தன் தங்கையைக் கௌதமருக்கு மணமுடிக்க எண்ணினார். கௌதமரின் ஆசிரமத்தைத் தேடிச் சென்றார். மெதுவாய் திருமண பேச்சைத் தொடங்கினார். ''இந்த ஆசிரமத்தில் பணிவிடைகள் செய்ய ஒரு பெண் இல்லாதது தங்களுக்கு ஒரு குறையாகத் தெரியவில்லையா? நீங்கள் ஏன் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து, திருமணம் செய்து கொள்ளக் கூடாது? உங்களுடைய நித்திய கர்மாக்களுக்கு எத்தனை உதவியாக இருப்பாள்?'' என்று நாரதர் கௌதமரைக் கேட்டார்.

''உண்மைதான். இருந்தாலும் என்னைப் போன்ற முனிவருக்கு யார் பெண்ணைக் கொடுப்பார்கள்?'' என்று கௌதமர் வினவினார். ''அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள். மிக்க அழகும் குணமும் வாய்ந்த ஒரு பெண்ணைத் தங்களுக்குத் திருமணம் செய்து வைப்பது என் பொறுப்பு. என்னுடன் புறப்படுங்கள்'' என்று சொல்லி அவரைக் கையோடு அழைத்துச் சென்றார் நாரதர்.

## காமதேனு

போகும் வழியில் சொர்க்க லோகத்தில் கற்பக மரத்தின் நிழலில் காமதேனு படுத்துக் கொண்டிருந்தது. அதை மும்முறை சுற்றி வரும்படி கௌதமருக்குச் சொன்னார் நாரதர். காரணம் கேட்காமல் முனிவரும் அதை மும்முறை வலம் வந்தார். அவர்கள் சத்திய லோகத்திற்குச் சென்று பிரம்மாவை வணங்கினார்கள்.

நாரதர் பிரம்மாவிடம், "தந்தையே! அகலிகையை இந்த கௌதமருக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும்" என்றார். விதித்த நிபந்தனைக்கு மாறாகச் செய்ய, பிரம்மாவுக்கு விருப்பமில்லை. நிபந்தனையின்படி இந்திரனும் தேவர்களும் அண்டங்களைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்களே அதன் முடிவு தெரிய வேண்டும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார் பிரம்மதேவன்.

நாரதர் விளக்கம் சொல்ல ஆரம்பித்தார், "தங்கள் நிபந்தனைப்படி அண்டங்களை முதலில் சுற்றி வந்தவர் இவர்தான். ஆகவே அகல்யை இவருக்குத்தான் உரிமையுடையவள்" என்றார். "இது உண்மையா?" என்று பிரமன் கௌதமரைக் கேட்டார்.

"எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்குத் திருமணம் செய்து வைப்பதாகச் சொல்லி நாரதர் தான் என்னை இங்கு அழைத்து வந்தார்" என்றார் கௌதமர்.

"அப்பா! அண்ட சராசரங்களுக்கும் மூலஸ்தானம் காமதேனு என்று வேதங்கள் முறையிடுகின்றன. மும்மூர்த்திகள் கூட காமதேனுவிடம் இருப்பதாகத் தாங்களே கூறியிருக்கிறீர்கள். அந்தக் காமதேனுவைக் கௌதம முனிவர் மும்முறை வலம் வந்து வணங்கி விட்டு வந்திருக்கிறார். இது பிரபஞ்சத்தை மும்முறை வலம் வந்ததற்கு ஒப்பாகும்."

"முன்னொரு சமயம் சர்வத்துக்கும் ஆதாரமான பரமேஸ்வரனையும் பார்வதி தேவியாரையும் வலம்வந்து, பிரபஞ்சத்தைச் சுற்றி வந்து விட்டதாச் சொல்லி மாங்கனியைப் பெற்றார் விநாயகப் பெருமான். இப்போது பரமேஸ்வரனோடு நில்லாமல் மும்மூர்த்திகளையும் தன்னுள் கொண்ட காமதேனுவைக் கௌதமர் மும்முறை வலம் வந்து இருக்கிறார்" என்றார் நாரதர்.

**திருமணம்**

"நாரதா! மதியினால் அகலிகையின் விதியை நீ நிர்ணயித்துவிட்டாய். வேதத்திற்கு நான் கொடுத்த

விளக்கம் பொய்யாகக் கூடாது. இதோ கௌதமருக்கு அகலிகையைக் கொடுத்தேன்" என்று சொல்லித் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார் பிரம்மதேவர்.

பல ஆண்டுகள் கழித்துப் பிரபஞ்சத்தை மும்முறை சுற்றிவிட்டு வந்தான் இந்திரன். அதற்குள் அகல்யாவுக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் பிறந்து விட்டது என்று அறிந்து மிகவும் வருந்தினான்.

## சாபம் பெற்றது

எப்படியும் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று இந்திரன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் நள்ளிரவில் கௌதமரின் ஆசிரமத்திற்கு வெளியே மறைந்திருந்து காகத்தைப் போல் கத்தினான். காக்கை கரைந்ததைக் கேட்ட கௌதமர் விடியற்காலம் வந்து விட்டதென்றெண்ணி, நீராடி, நித்திய கர்மாக்களைச் செய்வதற்காகக் கங்கைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அந்தச் சமயம் பார்த்து இந்திரன் கௌதமரைப் போல உருமாறி ஆசிரமத்துக்குள் நுழைந்தான். இங்கு தான் கவிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு தோன்று கிறது. இராமாயண காவியத்தின் ஆதிகர்த்தாவான வால்மீகி கூறுவது இதுதான்.

தேவர்களுக்கெல்லாம் அதிபனான தேவேந்திரனே தன்னை நேசிக்கிறான் என்பதை உணர்ந்த அகல்யை சற்றே கர்வமடைந்து மதியிழந்து, அவனுக்குக் குதூகலத்துடன் இணங்கினாள் என்கிறார் வால்மீகி.

கம்பர் முதலானோர் வந்திருப்பவன் இந்திரனென்று தெரியாமல் அது தனது கணவர் கௌதமர் தானென்று எண்ணி இந்திரனுடன் கலந்தாள் என்பர். இப்படிக் கருதும் கவிஞர்கள், அகல்யை உண்மையில் இந்திரனைத் தெரிந்துகொள்ளவில்லை யென்றும், உள்ளத்தினால் தெரிந்து கொள்ளாவிட்டாலும் கூட, ஸ்பரிச உணர்ச்சி

யினால் பர புருஷனைத் தெரிந்துகொள்ளாத அகலிகையை உணர்ச்சியற்ற கல்லாகப் போகுமாறு கௌதமர் சபித்தார் என்றும் கூறுவர்.

புராணங்களும் துளசி ராமாயணமும் கம்ப ராமாயணமும் அகலிகை கல்லாகும்படி சபிக்கப்பட்டாளென்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. வால்மீகியோ இப்படிக் கூறவில்லை. இந்திரனை இந்திரன் என்று தெரிந்தே அகலிகை அவனுக்குச் சம்மதித்துப் பாபம் செய்தாள் என்று கூறி, அதற்குத் தகுந்த தண்டனையையும் விதிக்கிறார். ஆகாரம் இல்லாமல் காற்றை மட்டும் புசித்துக் கொண்டு புழுதியிலே கிடந்து நீ புரளக்கடவாய். அத்துடன் மூன்று உலகங்களிலும் உள்ள எவர் கண்களிலும் படாமல் அருவாய், அதாவது பேய் போலக் கிடந்து, புழுங்கி, செய்த பாவத்தை நினைத்து நினைத்துத் தவித்துக்கொண்டே இருப்பாயாக என்று சாபங் கொடுத்தார். ஸ்ரீராமன் இங்கு வந்ததும் அவருடைய தரிசனத்தால் பாவம் நீங்கிப் புனிதமடைந்து திரும்பவும் என்னை வந்தடைவாய் என்று பரிகாரமும் கூறினார்.

மற்றவர்கள் அகலிகை கல்லானாள் என்று கூறும்போது அவள் தன் குற்றத்தை உணர்ந்தாள் என்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. மனிதர்களிலும் தேவர்களிலும் தவறிழைக்காதவர்கள் யாருமில்லை. தவறிழைத்த போதிலும் அதை உணர்ந்து கழிவிரக்கப்பட்டால் அதன் மூலம் பழி பாவங்களை அகற்றிக்கொண்டு திரும்பவும் தூய்மை அடைய முடியும். இந்த உயர்ந்த தத்துவத்தை உணர்த்துவதுதான் அகலிகையின் கதை,

'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்று கம்பர் இறுதியில் வர்ணிக்கின்றார். முறை தவற நேர்ந்தால் விரதம் இருந்து நெஞ்சினால் வருந்திக் கடைத் தேறலாம் என்பதற்கு அகலிகை உதாரணமாக விளங்குகிறாள். அதனால்தான் 'பஞ்ச கன்னிகைகள்' அதாவது ஐந்து பதிவிரதா ரத்தினங்களில் அகலிகை முதலாவதான இடத்தைப் பெற்றிருந்தாள் என்பதாம்.

● ● ●